850

83

இஸ்லாமிய சரிதை

மூன்றும் பாகம்

OFFICE OF THE REGISTRAR
13 AUG 1934
MADRAS

பனீஉமையாக்களின் கிலாபத்.

— BY —

SYED IBRAHIM SAHIB M.A., L.T.,
DEPUTY INSPECTOR OF SCHOOLS,
TINNEVELLY.

ழ7:417
N34.
171600

1934

[அணு 8

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

இஸ்லாமிய சரிதை

இஃது

டில்லி "ஜாமிஆ மில்லிய்யா"வின்

இஸ்லாமிய சரித்திர போதகாசிரியர்

ஜனப், மௌலானா, ஹாபிஸ், முஹம்மத் அஸ்லம் ஸாஹிப்

அவர்களால் எழுதப்பெற்ற

"தாரீகுல் உம்மத்" என்னும் உர்து நூலின்

மொழி பெயர்ப்பு

மூன்றும் பாகம்

மொழிபெயர்ப்பாசிரியர்:

ஜனப், ஸையத் இப்ராஹீம் ஸாஹிப் M.A., L.T.,

டெப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்,

திருநெல்வேலி

1934

Printed at
SINGARAM PRESS
Big Bazaar,
TRICHINOPOLY.

அட்டவணை

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
	முன்னுரை	vi
1	பனீ உமையாக்களின் கிலாபத்	1
2	அமீர் முஆவியா பின் அபீஸுப்யான்	7
	முஸ்லிம்களின் பிரிவுகள்	9
	ஜியாத் (ரலி.)	12
	முகீரா பின் ஷஃபா (ரலி.)	20
	உபைதுல்லாஹ் பின் ஜியாத்	22
	வெற்றிகள்	23
	யஜீதைத் தேர்ந்தெடுத்தல்	27
	கிலாபத்தும், அரசாங்கமும்	35
	தேச வொழுங்கு முறைகள்	38
	முஆவியா(ரலி.) அவர்களின் இல்லம்	39
	மரணம்	,,
3	முந்தின யஜீத்	42
	கிலாபத்	,,
	'கர்பலா'வின் சம்பவம்	43
	ஹுர்ராவின் சம்பவம்	56
	மக்காவின் முற்றுகை	59
	வெற்றிகள்	60
	மனைவி மக்கள்	62
	மரணம்	63
4	இரண்டாவது முஆவியா, மர்வான் பின் ஹகம்	64
	அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.)	,,
	ஷாம் வாசிகள்	68
	மர்வான்	69
5	அப்துல்மலிக் பின் மர்வான்	70
	தௌவாபீன்கள்	71
	முக்தார்	72
	மக்காவின் முற்றுகை	75
	இப்னு ஜுபைர் (ரலி.)	77
	ஹஜ்ஜாஜ்	78

	இப்னு அஷ்அதின் குழப்பம்	83
	கவாரிஜ்கள்	87
	வெற்றிகள்	99
	கஃபாவைக் கட்டல்	100
	ஹஜ்	101
	இளவரசர்	102
	மனைவி மக்கள்	,,
	மரணம்	103
	குணாதிசயங்கள்	,,
6	முந்திய வலீத்	105
	உள் சீர்திருத்தம்	,,
	வெற்றிகள்	108
	முஹம்மத் பின் காஸிம்	,,
	கதீபா பின் முஸ்லிம் பாஹிலீ	110
	மூஸாபின் நஸீர்	114
	முஸ்லிமா பின் அப்துல்மலிக்	116
	ஹஜ்ஜாஜின் மரணம்	,,
	இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்	117
	வலீதின் மரணம்	,,
7	ஸுலைமான் பின் அப்துல்மலிக்	119
	வெற்றிகள்	120
	இளவரசர்	121
	மரணம்	,,
8	ஹஸ்ரத் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.)	122
	கிலாபத்	123
	சீர்திருத்தங்கள்	124
	வெற்றிகள்	128
	கவாரிஜ்கள்	129
	குடும்பத்தவர்	134
	மரணம்	,,
	சொத்து	135
	உமர் (ரஹ்.) அவர்களின் சரிதை	,,
9	இரண்டாவது யஜீத்	138

	இப்னுமுஹல்லபின் குழப்பம்	,,
	வெற்றிகள்	139
	இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்	141
	மரணம்	,,
10	ஹிஷாம் பின் அப்துல்மலிக்	142
	உட்செய்திகள்	,,
	இமாம் ஜைத்	149
	இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்	154
	மரணம்	155
11	இரண்டாவது வலீத்	156
12	மூன்றாவது யஜீத்	158
	இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்	160
	மரணம்	,,
13	இரண்டாவது மர்வான்	161
	கவாரிஜ்கள்	162
	முடிவு	164
14	பனீஉமையாக்களது கிலாபத்தின் அழிவுக்கான மூலக்காரணங்கள்	166
15	பனீஉமையாக்களின் காலத்தில் இஸ்லாமிய நாகரிகம்	173
	கிலாபத்	174
	கலீபாவைத் தேர்ந்தெடுத்தல்	176
	சேனை	,,
	பனீஉமையாக்களின் அதிபர்கள்	180
	தேசங்களின் ஒழுங்குமுறை	181
	அரசாங்க மன்றம்	183
	நீதிமன்றம்	185
	இஸ்லாமிய பிரசாரம்	,,
	அமைதி	187
	கல்வி	188
	போதனை	,,
	பொதுநலம்	189
	நாணயம்	190

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

முன்னுரை

அடியேனால் ஏற்கனவே "இஸ்லாமிய சரிதை" என்னும் நூலில் வெளியிடப்பெற்ற இருபாகங்களையும் நேயர்கள் நன்கே கவனித்தார்கள். அடியேன் ஆதரவு வைத்திருந்த அளவுக்கு மேலாகவே வெகு துரிதத்தில் அப்பகுதிகள் செலவாயின. அவ்விரு பாகங்களையும் ஆதரித்த உலகம் தற்போது வெளிப்போகும் மூன்றும் பாகத்தையும் அவ்வாறே ஆதரிக்குமென நம்புகிறேன். ஒவ்வொரு பாகத்தையும் வெளியிடச் சந்தர்ப்பமேற்படுங்கால், அதை வெளியிடும் பாக்கியத்தையடியேனுக்களித்த எல்லாம் வல்ல இறைவனைத் துதி செய்வதே அடியேனின் முதற் கருமமாம். அவ்விதமே இப்பகுதியை வெளியிடச் சந்தர்ப்பமளித்த இறைவனை முதன் முதலாய்த் துதிப்பதுடன், எனது ஊழியத்தை யாதரித்த உலகத்திற்கு நன்றியும் செலுத்துகிறேன். மேதாவிகளான ஆசிரியர்களைத் தன்னகத்தேகொண்ட உலகத்தில் அடியேன் ஒரு புத்தகத்தை இயற்றுவது, பல பூச்செடிகளைத் தன்னகத்தேகொண்டுள்ள பூங்காவனத்திற்குள் மணமில்லாத காய்ந்த பூமாலையைப் பெருமையாயொருவன் கொண்டுசென்ற மாதிரியேயாம். அடியேனது மொழிபெயர்ப்பில் பல பிழைகள் மலிந்துகிடக்கின்றவாயினும் அடியேன் கைக்கொண்ட மூலநூல் மிகவும் மேதாவியான அறிஞரால் இயற்றப்பெற்றதென்பதொன்றே அடியேனுக்கு அத்தகைய பூங்காவனத்திற்குள் செல்லும் பாக்கியத்தையேனு மளித்தது. இன்றேல் அதற்கருகிலும் யான் செல்லத்தகாதவனே.

அடியேனது மொழிபெயர்ப்பை வாசிக்கும் நேயர்கள் அதன் மூலகிரந்தத்தின் மேன்மையை நன்கறிந்துகொள் வார்கள். மூன்றும் பகுதியும், பனீஉமையாக்களின் இலா பத்தை யெடுத்தோதுவதுமான இந்நூல் ஒரு தனிப்பட்ட சுவையுள்ளதாகவே மிளிர்கின்றது. “சரித்திரத்தை வரைவதில் அவ்வாசிரியன் கிளிப்பிள்ளை பாடமொப்புவிக்கா மல் தனது அபிப்பிராயத்தையும் வெளியிடவேண்டும்” என்னும் தற்காலக் கொள்கையை மேற்கொண்டுள்ள நமது ஆசிரியர், இடையிடையே தமது அபிப்பிராயத்தை யெடுத்துக்காட்டுவது இக்கிரந்தத்திற்குத் தனிச் சுவையை யளிக்கின்றது. பனீஉமையாக்களின் கலீபாக்களுள் எவரேயாயினும் அவரிடம் காணப்பெறும் குற்றங்களை எவ்வளவு சுருக்கமாயும், அழகாயும், எளிதில் விளங்குமாறும் எடுத்துக் காண்பிக்கிறார்! இவ்வளவு சிறிய பாகத்தில் ஒரு நூற்றாண்டின் சரிதையை யெடுத்தோதுவதுடன் தமது அபிப்பிராயத்தையும் இடையிடையே வெளியிட்டிருப்பதை நோக்க எவரும் திகைத்துப்போகவே நேரிடும். ஒரு விஷயத்தை எவ்வளவேனும் விவரித்துக்கொண்டு செல்லலாம். சுருக்கச் சொல்லலென்பது எவராலும் கைக்கொள்ளக்கூடிய காரியமன்று. மிகவும் ஆற்றல் பெற்ற மேதாவிகளாலேயே அஃது முடியக்கூடியதாம். அதில் நமது மூலநூல் முதன்மை பெற்றே விளங்குகின்றது. இறுதியான அத்தியாயத்தை யெடுத்துக்கொண்டால் அதற்குள் இக்கிரந்தத்தின் சாராம் சம் முழுமையும் அடங்கிப்போயிருக்கின்றது. மிகச் சுருக்கத்துடன் ஒன்றுவிடாத முக்கிய விஷயங்களையும் கவனிக்கு மிடத்து அடியேனை திகைக்கச் செய்த இக்கிரந்தம் ஏனையோரையும் திகைக்கச்செய்யு மென்பதே அடியேனது துணிபு.

அடியேனது சக்திக்கு மிகவும் மேம்பட்டதொரு பணியை யடியேன் சிரமேற்கொண்டுவிட்டதாய் ஒவ்வொரு க்ஷணமுமுணர்கிறேன். அநேக விடங்களில் "இக்காரியம் என்னால் முடியாது" என நான் எனது எழுதுகோலை நிறுத்திவிடவும் நேர்ந்ததுண்டு. பிறகும் இறைவனது திருவருளை நம்பி இப்பகுதியையும் முடித்துள்ளேன். ஒரு விதத்திலும் ஆற்றல் பெற்றிராத எனக்கே இவ்வளவு பெரிய காரியத்தை மேற்கொள்ளுந் துணிபேற்படுதல் ஒருவகையில் அதிகப்பிரசங்கித்தனமாயினும் எல்லா ஆற்றல்களையு மடையப்பெற்றிருந்தும் வெறுமனேயிருக்கும் மஹானுபாவர்களுக்கு ஒருவிதத்தில் தூண்டுகோலாயிருக்குமென நம்புகிறேன். அவர்கள் யாவரும் தமது அறிவை உலகத்திற்கு வெளியிட முன்வந்தால் உலகம் இவ்வளவு அந்தகாரத்திற்குள் மூழ்கியிருக்க வழியில்லையன்றோ? அநேகவிடங்களில் எனது மொழிபெயர்ப்பு மூலநூலின் கருத்தை யுள்ளதுள்ளபடியே வெளியிடாதிருக்கலாமென்பதையும், அநேக தவறுகளிருக்கலாமென்பதையும், முன்பின் மாறியிருக்கலாமென்பதையும் என்னால் மறுக்கமுடியாது. இத்துடன் யான் பிரயாணத்திலிருப்போனாதலால் அடிக்கடி அச்சியந்திரசாலைக்குச் சென்று பிழைதிருத்தமுடியாது போயினதால் அச்சுப்பிழைகளும் மலிந்திருக்கலாம். குற்றத்தைவிடுத்துக் குணத்தைக்கொள்ளும் பெரியார்கள் என்னை க்ஷமிப்பதுடன், குறைகளைத் தெரிவிக்கும்படியும் வினதியாய் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். அவ்விதம் அடுத்த பதிப்பில் திருத்திப்பதிப்பித்துக்கொள்வேன்.

இங்ஙனம்,

திருநெல்வேலி,
10—7—1934

ஸையத் இப்ராஹீம்,
Dy. Inspector of Schools

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

எப்புகழும் எமதிறைவன் அல்லாஹு தஆலாவுக்கே.
ஸலவாத்தும், சலாமும் எம்பெருமானார் (ஸல்.)
அவர்கள் மீதும், அன்னார் இனமித்திரர்
மீதும் உண்டாவதாக!

இஸ்லாமிய சரிதை

மூன்றாம் பாகம்

பனீ உமையாக்களின் கிலாபத்

உமையா பின் அப்துஷம்ஸ் பின் அப்து முனாப் இஸ்லாமுக்கு முந்திய நாட்களில் குரைஷ் தலைவர்களுள் தனிச்சிறப்பு பெற்றோராகவும், மேன்மையில் தமது சிறிய தகப்பனார் ஹாஷிம் பின் அப்துமுனாப் அவர்களுக்குச் சமமானோராகவு மிருந்தனர். அவர்களது வியாபாரம் பெரியதாகவிருந்ததுடன், செல்வத்தில் குரைஷ்களிலெவரும் அவர்களுக்குச் சமமாயிருந்ததில்லை. சகோதர சகோதரிகள், மக்கள் இவர்களின் பெருக்கத்தால் அவர்களது மதிப்பு பின்னுமதிகமாகவே

யிருந்தது. உமையா அவர்களுக்கு ஹரப், அபூஹரப், ஸுப்யான், அபூஸுப்யான், அம்ரு, அபூஅம்ரு, ஆஸ், அபுல் ஆஸ், ஈஸ், அபுல்ஈஸ் எனப்பத்து புத்திரர்களிருந்தார்கள். இவர்கள் யாவரும் குரைஷ்களின் தலைவர்களா யிருந்தார்கள். பிஜார் யுத்தத்தில் ஹரப்பின் உமையா குரைஷ் வர்கத்தவர் யாவருக்கும் தலைவரா யிருந்தமையால் அந்தப் பீடைபிடித்த சண்டை அதிகமாய்க்கொண்டே போவதைக்கண்டு, நடைபெற்ற கொலைகள் யாவற்றின் நஷ்டயீட்டையும் தாமே ஏற்றுக்கொண்டு, இத்தொகையைக் கொடுக்கும்வரை தமது புத்திரர் அபூஸுப்யான் என்பாரை அடமானமாகவும் வைத்தார். இதனால் அவரது திருநாமம் உலகப்பிரசித்தி யடைந்தது.

ஹரப் பின் உமையா அவர்களும், அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் அவர்களும் அத்தியந்த நண்பர்களா யிருந்தார்கள். இதே நட்பு இவர்களுக்குப்பிறகு அபூஸுப்யான் பின் ஹரப், அப்பாஸ் பின் அப்துல்முத்தலிப் இவ்விருவருள்ளும் இருந்துவந்தது. சில அறிவிலிகள் கருதுவதே போன்று பனீஹாஷிம், பனீஉமையா இவ்விருவர்க்கத்தாருள்ளும் பகைமை குடிகொண்டிருக்கவில்லை. எப்பொழுதேனும் வம்ச விஷயத்தில் பெரிய குடும்பங்களே போன்று உரோஷம் ஏற்பட்டு வந்ததுண்மையே. குரைஷ்களில் அப்துமுனாப் அவர்கள் மரபிலுதித்த இவ்விருவர்க்கங்களும் தனிச்சிறப்பு பெற்றவையாம். பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்த காலத்தில் பனீஹாஷிம் குலத்தவரிற் சிலர் இஸ்லாமை யங்கீகரித்ததே போன்று பனீஅப்துஷம்ஸ் வர்க்கத்திற் சிலரும் அதையங்கீகரித்தார்கள். எனினும், வம்சாபிமானத்தை முன்னிட்டு பெருமானாரைத்தற்காக்கும் பொறுப்பை பனீஹாஷிம் குலத்தவரே மேற்கொண்டார்கள். இச்சிறப்பு அவர்

களுக்கு மட்டுமே கிடைத்தது. விக்கிரகாராதனைக்காரர்கள் பெருமானாரைக் கொல்லும் விஷயமாய் 'தாருன்னத்வா' வென்னும் ஆலோசனை மண்டபத்தில் ஆலோசித்தபோது குறைஷ் வர்க்கம் முழுமையுமே அதிற்கலந்துகொண்டது. எனினும், பனீ ஹாஷிம் குலத்தில் அபூலஹப் தவிர வேறெவரும் அப்பொழுது பிரசன்னமா யிருக்கவில்லை. ஹிஜ்ரத்திற்குப் பிறகு 'பதர்' யுத்தத்தில் குறைஷ்களில் விக்கிரகாராதனைக்காரர்களுக்கு உத்பா பின் ரபீஆ பின் அப்துஷம்ஸ் என்பான் தலைவனாயிருந்தான். இச்சண்டை யில் மக்காவின் தலைவர்களில் அநேகர் கொல்லப்பட்டுப் போகவே குறைஷ்களுக்கு அபூஸுப்யான் பின் ஹறப் என் பாரே மாபெருந்தலைவராய் நியமிக்கப் பட்டனர். உஹத், அஹ்ஜாப் இவ்விரு யுத்தங்களிலும் அவர்களே விக்கிரகா ராதனைக்காரர்களின் தளகர்த்தராய் விளங்கினார்கள்.

ஹி. 8-ம் ஆண்டு பெருமானார் (ஸல்.) மக்காவை வெற்றிகொள்வதற்காய்ச் சேனையைக்கொண்டு சென்றபோது அபூஸுப்யான் அவர்களை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) தம் முடன் பெருமானாரின் திருச்சமுகத்திற் கொண்டுவந்தார்கள். அப்பொழுதே இவர்கள் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். இவர்கள் பெருமையை விரும்புவோ ராதலால் அப்பாஸ் (ரலி.) அவர்களது வேண்டுகோளின்படி பெருமானார் (ஸல்.) "மஸ்ஜிதே ஹறாம் (கஃபா), அல்லது அபூஸுப்யானின் இல்லம் இவ்விரண்டுக்குள் புகுந்துவிட்டோன் அபயம் பெற்றவனாவன்" எனப் பறையறிவித்தார்கள். இவ்விளம் பரத்தின் மூலம் பெருமானார் (ஸல்.) அடைக்கலவிஷயத்தில் அபூஸுப்யான் (ரலி.) அவர்களது இல்லத்தை கஃபாவுக்குச் சமதையாக்கினதில் அவர்களுக்கு அதிக மதிப்பு கிடைத் தது. குறைஷ்களில் பொதுமக்களும், அன்னாருள் அதிக மாக பனீ உமையா வர்க்கத்தவரும் மக்காவின் வெற்றியின்

போதே இஸ்லாமை யங்கீகரித்தார்கள். இவர்கள் இஸ்லாமை யங்கீகரித்ததால் பெருமானுர் (ஸல்.) மிக்க சந்தோஷமடைந்தார்கள். எப்பொழுதும் இவர்களிடம் முகமலர்ச்சியாகவே நடந்துகொண்டார்கள். மக்காவின் அதிபதியாக பனீ அப்துஷ்ஷம்ஸ் வர்க்கத்தைச்சேர்ந்த வாலிபரான இதாப் பின் உஸைத் (ரவி.) அவர்களையே நியமித்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களது காலத்தில் அதிகமான அரபிகள் மதம் மாறிப் போயினபோதும் குறைஷ் தலைவர்களே தாம் இஸ்லாமை யங்கீகரிப்பதில் பிந்திவிட்டதற்கொரு மகத்தான பிரதிஞையும் செய்ய முன்வந்து, மிகவும் உற்சாகமெடுத்துக்கொண்டு, அரப் தேசம் முழுமைக்கும் இஸ்லாமை மீண்டும் பரவச் செய்தார்கள். ஷாம் தேசத்து யுத்தத்திலும் மிகப் பிரியத்துடன் கலந்துகொண்டு, அதிக தியாகங்களைப் புரிந்ததன்மூலம் துவக்கத்தில் இஸ்லாமிய பிரசாரத்திற்கு இவர்கள் முட்டுக்கட்டை போட்ட குற்றத்திற்கான பிரதிஞையும் செய்தார்கள். ஷாம் தேச வெற்றிகளில் வெளிப்படையான பங்கெடுத்துக் கொண்ட பனீ உமையா வர்க்கத்தவரில் அபூஸுப்யான் (ரலி.) அவர்களும் ஒருவராவர். இவர்கள் அவ்விடத்து அநேக யுத்தங்களிற் கலந்து கொண்டார்கள். தவிர, இவர்களின் புதல்வர் யஜீத் பின் அபீஸுப்யான் (ரலி.) அவர்களை அபூபக்ர் (ரலி.) அவர்கள் ஷாம் தேசத்தின்புறம் அனுப்பி வைத்த நான்கு சேனைகளில் ஒன்றிற்குத் தலைவராய் நியமித்தார்கள். பிறகு 'திமஷ்க்' வெற்றி கொள்ளப்பட்டபோது அதற்கு இவர்களையே அதிபராக்கினுர்கள். ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களது காலத்திலும் இவர்கள் தமது உத்தியோகத்திலேயே யிருந்தார்கள். இவர்களது சகோதரர் முஆவியா பின் ஆபீஸுப்யான் (ரலி.) அவர்களும் ஷாம் தேசத்தில் ஒரு ஜில்லாவுக்கு அதிபராக்கப்பட்டார்கள்.

யஜீத் (ரலி.) பயபக்தி, சற்குணம், வீரம் இவைகள் நிரம்பப்பெற்ற தலைவரா யிருந்தார்கள். 'தாஊனெ அம்வாஸ்' என்னும் வியாதியில் இவர்கள் ஆவிதுறந்த பின்பு ஹஸ்ரத் உமர் (ரலி.) திமஷ்கையும் முஆவியா (ரலி.) அவர்களின் ஆக்கினைக் குட்படுத்தி விட்டார்கள். அமீர் முஆவியா (ரலி.) அவர்களிடம் நிரம்பியிருந்த நேர்மையான யோசனை, அரசுரிமையின் ஆற்றல், நம்பிக்கை இவைகள் காரணமாய் ஹஸ்ரத் உமர் (ரலி.) எப்பொழுதும் இவர்களுடன் சந்தோஷமாயிருந்ததுடன் இவர்களைப் புகழ்ந்துகொண்டுமிருந்தார்கள். ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் காலத்தில் அவர்கள் கைவசம் ஷாம்தேசம் முழுமையுமே வந்துவிட்டது. இம்மாகாணத்தின் அதிபர்கள் யாவரையும் இவர்களே நியமித்துவந்தார்கள். குரைஷ், பனீ அப்துஷம்ஸ் இவ்விருவர்க்கங்களிலும் அனேக தலைவர்கள் இவர்களிடம் வந்து சேர்ந்துவிட்டார்கள். இவர்கள் அவர்களை யுத்தப்பணியிற் சேர்த்துவிட்டு, அவர்களின் உதவியால் சேனைகளையும், பிரஜைகளையும் அடிபணிந்தவர்களாகச் செய்தார்கள். ரூமீகளைப் பல தடவைகளில் வென்று, 'கப்ரஸ்' என்னும் தீவையும் கைப்பற்றினார்கள். சுருங்கக் கூறுமிடத்து, பனீ உமையாக்கள் இஸ்லாமுக்கு முன்பு தனிச் சிறப்பு பெற்றிருந்ததே போன்று இஸ்லாமுக்குப் பிறகும் தமது அரிய காரியாதிகளால் அதே சிறப்பை யடைந்தார்கள். பனீ உமையாக்களின் இருபிரிவுகளுக்குப் பிரசித்தியும், கிலாபத்தும் கிடைத்தன. அவ்விரண்டில் ஒன்று ஹரப் உடையதும், மற்றொன்று அபுல்ஆஸ் உடையதுமாம். ஹரப் உடைய மக்களில் மூன்று கலீபாக்களும், அபுல்ஆஸ் உடைய மக்களில் பத்து கலீபாக்களும் உண்டாயினர். அவர்களின் அட்டவணை வருமாறு :—



உமையா
ஹரப்
அபூஸுப்யான்
(1) முந்திய முஆவியா
(2) முந்திய யஜீத்
(3) 2-வது முஆவியா
அபுல்ஆஸ்
ஹகம்
(4) முந்திய மர்வான்
முஹம்மத்
அப்துல் அஜீஸ்
(5) அப்துல் மலிக்
(13) 2-வது மர்வான்
(8) உமர்
(10) ஹிஷாம்
(9) 2-வது யஜீத்
(7) ஸுலைமான்
(11) 2-வது வலீத்
(6) வலீத்
(12) 3-வது யஜீத்

அமீர் முஆவியா பின் அபீஸுப்யான்

பனீ உமையாக்களின் கிலாபத்திற்கு மூலபுருஷரான அமீர் முஆவியா (ரலி.) ஹிஜ்ரத்திற்குப் பதினைந்தாண்டுகளுக்கு முன்பு மக்காவில் ஜனித்தார்கள். இவர்களது வம்ச பாம்பரையாவது:—"இவர்களது பிதா அபூஸுப்யான், அன்னார் பிதா ஸகர், அன்னார் பிதா ஹாப், அன்னார் பிதா உமையா, அன்னார் பிதா அப்துஷம்ஸ், அன்னார் பிதா அப்து முனுப்" என்பதாம். மக்காவின் வெற்றியின் போது தமது 23-ம் வயதில் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். பிறகு பெருமானருடன் மதீனுவுக்குவந்து வஹீயை வரையும் இலிபி (Clerks)களில் ஒருவராயிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) தமது கிலாபத்தின்போது இவர்களை யஜீத் பின் அபீஸுப்யான் (ரலி.) அவர்களது உதவிக்காக ஒரு சேனையுடன் ஷாம்தேசத்தின்புறம் அனுப்பினார்கள். ஸைதா, அர்கா, ஜுபைல், பேரூத் போன்ற பிரதேசங்களின் வெற்றியில் சேனைகளின் முன்னணி இவர்களின் தலைமையின் கீழேயே யிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் காலத்தில் அர்தன் பிரதேசத்தின் அதிபராய் நியமிக்கப் பட்டார்கள். இவர்களின் சகோதரர் யஜீத் (ரலி.) அவர்கள் 'தாஊனெ அம்வாஸ்' என்னும் தொத்துவியாதியால் மரணமடைந்துபோனபிறகு அர்தனுடன் திமஷ்கின் அதிகாரமும் இவர்களுக்குக் கிடைத்தது. ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் காலத்தில் ஷாம் தேசத்திற்கே பொதுவான தலைவரானார்கள். தரைப்படை, கடற்படை இவ்விரண்டையும் தயாரித்து அத்தேசத்தை இஸ்லாமின் வன்மை பெற்ற பிரதேசமாகச் செய்தார்கள்.

ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் கொல்லப்பட்ட பிறகு மதீனாவில் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இவர்களை நீக்கிவிட்ட கட்டளை கிடைத்தது. "அலீ (ரலி.) அநியாயமாய்க் கொல்லப்பட்ட கலீபா (உத்மான்) அவர்களின் கொலைஞர்களுக்குப் பாதுகாப்பாளராயிருக்கிறார்கள்" எனக்கூறி அவர்களின் கிலாபத்தை இவர்கள் அங்கீகரிக்காமல், ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் கொலைக்குப் பழிக்குப்பழி வாங்கத்தயாரானார்கள். ஷாம் தேசவாசிகளும் இவர்களுடன் சேர்ந்தார்கள். இருபுறத்திலும் சேனைகள் அணிவகுத்தன. நீண்ட நாட்கள் யுத்தத்திற்குப் பிறகு இருதரப்பாரும் குர்ஆனின் திருவாக்கியங்களுக்கிணங்க இச்சண்டையில் தீர்ப்பளிக்கும்படி ஒருபஞ்சாயத்தை நியமித்தார்கள். பஞ்சாயத்தார்கள் தமது தீர்ப்பில் ஹஸ்ரத் அலீ (ரலி.), முஆவியா (ரலி.) இவ்விருவரையும் கிலாபத்தை விட்டும் நீக்கிவிட்டு, "பொதுமக்கள் தமதபிப்பிராயப்படி எவரையேனும் கலீபாவாக நியமிக்கலாம்" எனத் தீர்ப்பளித்தார்கள். ஷாம் தேசவாசிகள் அமீர் முஆவியா (ரலி.) அவர்களைத் தேர்ந்தெடுத்ததால் இவர்கள் ஷாம் தேசத்திற்கு கலீபாவாகவும், ஹஸ்ரத் அலீ (ரலி.) இராக் தேசத்திற்கு கலீபாவாகவும் ஆய்விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களது ஜீவிய காலம் முழுமையும் இந்த உட்சண்டை இருந்துகொண்டேயிருந்தது. அவர்கள் கொல்லப்பட்டபிறகு இவர்களுக்குப் பிறகு இமாம்ஹஸன் (ரலி.) இராக்கில் கலீபாவாக நியமிக்கப்படவே அமீர்முஆவியா (ரலி.) படையெடுத்தார்கள். முதலணியிலேயே இராக்வாசிகள் தோல்வியடைந்து ஓடினார்கள். இதனைக்கண்ட இமாம் ஹஸன் (ரலி.) பொதுமக்களின் நலத்தைக் கருதி பின்னும் சண்டையிடுவதையும், உதிரஞ் சிந்துவதையும் விரும்பாமல் அவர்களுடன் சமா

ஸம் செய்துகொண்டார்கள். ஹி 41-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம், 25-ந்தேதி இவர்கள் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இவர்கள் முஸ்லிம்கள் யாவருடையவும் கலீபாவானார்கள். இவர்கள் பொதுஜனங்கள் யாவராலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மேலும், ஷாம் தேசவாசிகள் தமதிஷ்டப்படி இவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இராக்வாசிகள் தோல்வியடைந்ததால் இவர்களை கலீபாவாக ஏற்றுக்கொண்டார்கள். எனினும், இறுதியாக இந்தத் தோல்வியும் இஷ்டமாகவே மாறிவிட்டது. 'கவாரிஜ்' வகுப்பாரைத் தவிர்த்து ஏனைய முஸ்லிம்கள் யாவராலும் இவர்களது கிலாபத் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது.

முஸ்லிம்களின் பிரிவுகள்

அமீர் முஆவியா (ரலி.) அவர்கள் கிலாபத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டபோது முஸ்லிம்களில் மூன்று அரசியற் பிரிவுகளிருந்தன :— (1) பனீஉமையாவின் கூட்டத்தவர். இவர்களில் ஷாம் வாசிகள் யாவரும், இதர நகரவாசிகளும் இருந்தனர். (2) அலீ (ரலி.) அவர்களின் கூட்டத்தவர். இவர்களில் பெரும்பான்மையோர் இராக்வாசிகளும், சிலர் மிஸ்ர்வாசிகளுமாக விருந்தனர். "கிலாபத்தின் உரிமை ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்கேயிருந்தது. அவர்களுக்குப்பிறகு அவர்களது வம்சத்திற்கே அஃது சொந்தமானது" என்பதே இவர்களின் கொள்கையாம். (3) கவாரிஜ். இவர்கள் முந்திய இருகூட்டத்தவரையும் இஸ்லாமுக்குப் புறம்பானோரெனக் கொண்டு, அவர்களைக் கொல்வதையும் அனுமதித்துவந்தனர். இவர்கள் தமது கொள்கையில் மதம் பிடித்தோராயும், யுத்தத்தில் விருப்பமுடையோராயும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை போன்று அமீர் முஆவியா (ரலி.) அவர்களுக்கும் 'கவாரிஜ்' கூட்டத்தவர்

விஷயத்தில் அநேக இன்னல்கள் குறுக்கிட்டன. இக் குழாத்தினர் தமது கொள்கையில் மதம்பிடித்தோராகவும், அதற்காக ஒவ்வொரு நிமிஷமும் உயிர் கொடுக்கவும் தயாராயிருப்போராகவும் காணப்பட்டனர். கூபாவில் அமீர் முஆவியா (ரலி.) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது பர்வஹ் பின் நௌபல் அஷ்பஹீ என்பான் ஐந்நூறு கவாரிஜ்களுடன் வெளிப்படையாக மாறு செய்யப் புறப்பட்டு 'நகீலா' வென்னுமிடத்தில் தங்கினான். இவனை எதிர்ப்பதற்காக ஷாமிலிருந்துவந்த சேனையும் தோல்வி யடைந்துவிட்டது. அமீர்முஆவியா (ரலி.) கூபாவாசிகளிடம் "இவர்கள் உங்கள் வர்க்கத்தவர்களாகவே யிருப்பதால் நீங்களே சென்று இவர்களுக்குப் போதித்துத் திரும்பக் கூட்டிவாருங்கள் !" எனக்கூறியதற்கேற்ப அவர்கள் சென்று, அவர்களைத் திருப்பியழைத்துவர முயற்சித்ததெல் லாம் வீண்பிரயத்தனமாகவே முடிந்தது. கவாரிஜ்கள் அவர் களிடம் "முஆவியா எமக்கும், உங்களுக்கும் விரோதியே யாவர். எம்மை அவருடன் சண்டையிட அனுமதியுங்கள் ! எங்களுக்கு வெற்றி கிடைத்தால் நம்மிருவருக்கும் விரோதி யானவரொழிந்துபடுவார். இன்றேல், நாங்களே அழிந்து விடுவோம்" எனக் கூறிவிட்டார்கள். 'அஷ்ஜஉ' என்னும் கூட்டத்தவர் 'பர்வஹ்' என்பானைப் பிடித்துக் கட்டித் தம் முடன் கூபாவுக்குக் கொணர்ந்தார்கள். கவாரிஜ்கள் இவனுக் குப் பதிலாய் அப்துல்லாஹ் பின் அபில்ஹௌஸா என்பா னைத் தலைவனாய் நியமித்துக் கொண்டார்கள். கூபாவாசிகள் அவர்களுடன் சண்டை தொடுத்ததில் அப்துல்லாஹ் கொல் லப்பட்டான். அவனுக்குப் பதிலாய் ஹௌதரா அஸதீ என் பான் கவாரிஜ்களின் தலைவனாயினன். அவனுடன் 150 கவாரிஜ்களிருந்தார்கள். அமீர் முஆவியா (ரலி.) ஹௌத ராவின் தந்தையான அபூஹௌதரா என்பாரைத் தமது

புத்திரனுக்கு நற்புத்தி புகட்டுதற்காக அனுப்பினார்கள். அன்னார் சென்று தமது புத்திரனுக்குப் போதித்ததில் ஒரு பயனுமேற்படவில்லை. இறுதியாக அன்னார் "நான் உனது புத்திரனைக் கொண்டுவருகிறேன். அவனது பிரியத்தை முன்னிட்டு, அவனைக் கண்டதும் இந்தச் சதியை விட்டுவிடுவாய்" எனக் கூறியதற்கு அவன் "நல்வழியில் நான் எனது புத்திரனைப் பார்க்கினும் எனது ஈரல் வழியாகச் செல்லும் அம்பையே அதிகமாய் நேசிக்கிறேன். அதன் காயத்தினால் நான் துடிதுடித்து ஆவிதுறப்பதையே மேலானதாகக் கொள்கிறேன்" எனக்கூறிவிட்டான்.

அபூஹௌதரா திரும்பிவந்து இச்செய்திகள் யாவையும் அமீர் முஆவியா (ரலி.) அவர்களிடம் சொன்னபோது "அவனது காரியம் மிதமிஞ்சிவிட்டது" எனக் கூறிவிட்டு, கூபாவிலிருந்து அவனை எதிர்ப்பதற்காக ஒரு சேனையை யனுப்பினார்கள். ஹௌதரா அந்தச் சேனையைப் பார்த்து "அநியாயக் காரர்களா! நேற்றுவரை நீங்கள் முஆவியாவை சதிசெய்பவராகக் கொண்டு அவரை எதிர்ப்பதற்குத் தயாரா யிருந்தீர்கள். இன்று அவரது கிலாபத்திற்காகச் சண்டையிட முன்வந்துவிட்டீர்களா? அல்லாஹ்வே உங்களை யறிந்து கொள்ளட்டும்" எனக் கூறினான். ஹௌதராவை எதிர்ப்பதற்காக அவனது பிதாவே சென்றார்கள். "நீங்கள் வேறுயாரையேனும் எதிர்ப்பதே நன்று" என அவன் அவர்களைப்பார்த்துக் கூறிவிட்டு, இதா கூபாவாசிகளை எதிர்ப்பதற்குச் சென்றுவிட்டான். 'பனீதை' வர்க்கத்திலொருவர் அவனைக்கொன்றுவிட்டார். எனினும், அவனது நெற்றியில் ஸஜ்தா(இறைவனுக்குச் செய்யும் சாஷ்டாங்கம்)வின் அடையாளமிருப்பதைக்கண்டு மிகவும் வருந்தினார். இவ்விதமாக கவாரிஜ் குழாத்தினர் வரிசையாகக் கிளம்பிக்கொண்டே யிருந்தனர். இராக் தேச

முழுமையுமே அவர்களைப்பற்றி நடுங்க வாரம்பித்தது. எனவே, அமீர் முஆவியா (ரலி.) அந்தமாகாணத்திற்கு தமது ஆற்றலால் இத்தியாதி குழப்பங்களையும் அடக்கவல்ல அனுபவசாலிகளை அதிபராக்கக் கருதினார்கள். ஆதலால் முகீரா பின் ஷஃபா (ரலி.), ஜியாத் பின்ஸுமிய்யா (ரலி.) இவ்விருவரையும் தலைவர்களாய் நியமித்தார்கள்.

ஜியாத் (ரலி.)

ஜியாத் (ரலி.) அலீ (ரலி.) அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்திருந்து, பாரிஸ் உடைய அதிபராய் நியமிக்கப்பட்டிருந்தனர். அமீர் முஆவியா (ரலி.) இவர்களது அரசியலாற்றலைக் கண்டு முகீரா (ரலி.) அவர்கள் மூலம் இவர்களுக்கு அபய அறிக்கை யனுப்பினார்கள். இவர்கள் வந்தபோது பாரிஸ் தேசத்தின் கணக்கைக் கேட்டார்கள். அவர்கள் சமர்ப்பித்த கணக்கை ஏற்றுக்கொண்டார்கள். ஹி 44-ம் ஆண்டு அமீர் முஆவியா (ரலி.) ஜியாத் (ரலி.) அவர்களைத் தமது வர்க்கத்திற் சேர்த்துக்கொண்டார்கள். ஜியாத் (ரலி.) உடைய அன்னையார் ஸுமிய்யா என்பாரை இஸ்லாமுக்கு முன்பு அபூஸுப்யான் (ரலி.) மணந்துகொண்டதாயும், இவர்கள் அவர்களது புத்திரரே எனவும் சிலர் அபிப்பிராயப்பட்டதே இதற்குக் காரணமாம். இது தொடுத்து இவர்கள் "ஜியாத்பின் அபீஸுப்யான் = அபூஸுப்யானின் புத்திரரான ஜியாத்" எனவே அழைக்கப்பட்டு வந்தார்கள். எனினும், பெரும்பான்மையோர் இதை யங்கீகரிக்கவில்லை. ஒரு தடவை இன்னார் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களுக் கெழுதிய நிருபத்தில் "அபூஸுப்யானின் புத்திரனான ஜியாத்" எனத் தம்மைக் குறிப்பிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களும் தம்மை அவ்விதமே அழைக்கவேண்டு மென்பதும், இதன் மூலம் இதுவே பிரசித்தியடைந்துபோமென்பதுமே இவர்களது

கருத்தாம். எனினும், அனனுர் எழுதிய பதிலில் "அபூஸுப்யானின் புதல்வர்" எனக் குறிப்பதற்குப் பதிலாய் "எனது புதல்வர்" எனக் குறிப்பிட்டிருந்தனர். ஹி. 49-ம் ஆண்டில் அமீர் முஆவியா (ரலி.) ஜியாத் (ரலி.) அவர்களை பஸராவின் அதிபராக நியமித்தார்கள். இவர்கள் அங்கு சென்றபோது பஸராவாசிகள் பொதுப்படையாக துஷ்டர்களாகவும், பாவிகளாகவுமிருப்பதையும், அவர்களைக் கடுமையாய் நடத்துவது முக்கியமென்பதையும் கண்டு ஜாமிஃமஸ்ஜிதில் ஒரு பெரிய பிரசங்கம் செய்தார்கள். அஃது அல்லாஹ்வின் துதியைக்கொண்டு ஆரம்பிக்கப்படாததால் "குத்பயெ தபரா = பழுதடைந்த பிரசங்கம்" எனக் குறிப்பிடப்படுகின்றது. அதன் சாரமாவது:—

நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்படுவதை விட்டொழித்து, இறுதி நாட்களின் கஷ்டங்களுக்குப் பயப்படாதிருக்கின்றீர்கள். உங்கள் நன்மைகள் குறைவுபட்டும், குறும்புகள் அதிகமாயும் காணப்படுகின்றன. திருடுகின்றீர்கள். ஏனையோரின் பொருட்களை யுபயோகிப்பதையும் அனுமதிக்கிறீர்கள். உங்களில் ஒவ்வொருவனும் தனது இல்லத்தவர், வர்க்கத்தவர் இவர்களைத் தீமையை விட்டும் தடுக்கவேண்டியது முக்கியம். இன்றேல், பாபிகளுக்குப் பிரதியாக பாபிகளல்லாதாருக்கும் தண்டனை விதிப்பேன். ஓடிப்போனவனுக்குப் பதிலாய் இருப்பவனையே பிடிப்பேன். எவனது பொருளும் திருட்டுப்போய்விட்டால் நான் அதற்கு ஜாமினாவேன். பின்னும், இராக்காலங்களில் ஒருவனும் வெளிக்கிளம்பக் கூடாதெனவும், மீறினவர்கள் கொல்லப்படுவார்களெனவும் அறிவிக்கிறேன். ஒருவரின் இல்லத்தைக் கொளுத்துவோனை நான் கொளுத்தி விடுவேன். ஒரு வீட்டைச் சுற்றித் திரிவோனின் உள்ளத்தைப் பிளந்துவிடுவேன். சவக் குழிகளைத் தோண்டி கபன்

(பிரேத ஆடை)களைத் திருடுவோரை அதே சவக்குழியில் புதைத்துவிடுவேன். இஸ்லாமுக்கு முந்திய அறிவீன காலத்து வார்த்தைகளை யாடும் நாக்களைத் துண்டித்து விடுவேன்.

எனது சொற்களை யொப்புக்கொள்ளாதவருடனும் நான் நல்ல விதமாயொழுகுவேன். நான் இங்குள்ளோரிற் சிலர்மீது பகைமை பூண்டிருந்தேன். நான் அதை எனதுள்ளத்தைவிட்டே எடுத்து விட்டேனாதலால் அவர்கள் அதற்காக அஞ்சவேண்டாம். நன்மை செய்வோனுக்கு நான் நன்மை செய்வேன். என்னை நேருக்கு நோாக எதிர்க்க முன்வாராதவரை தனதுள்ளத்தில் என்னதான் பகைமை பூண்டிருந்தாலும் நான் அன்னவனை யொன்றுமே செய்யமாட்டேன். எவரின் சம்பளத்தையும் குறைக்கமாட்டேன். எனது வீட்டுவாயில் எவருக்கும் மூடப்பட் டிராது. தேவையுள்ளவர்கள் யாவரும் அர்த்த ராத்திரியே யாயினும் என்னிடம் வந்தால் நான் அவர்களின் தேவையைப் பூர்த்திசெய்துவைப்பேன்.''

என்பதே. அப்துல்லாஹ் பின் ஹிஸ்ன் அவர்களை நகரத்தின் கொத்துவாலாய் நியமித்தார்கள். 'இஷா'(இரா)த் தொழுகையைப் பிற்படுத்துவார்கள். ஒரு மனிதன் தாமதமாய் திருக்குர்ஆனின் "பகரா" வென்னும் (பெரியதொரு) அத்தியாயத்தைப் படித்து முடித்து நகரத்தின் மதில் சுவர்வரை செல்லும் நேரம் பொறுத்திருந்து, அப்துல்லாஹ் அவர்களுக்கு சிப்பாய்களுடன் நகரத்தைச் சுற்றும்படியும், எதிர்ப்படுவோரைக் கொல்லும்படியும் ஆக்ஞாபிப்பார்கள். ஓரிரவு நகரத்தின் ஒரு மூலையில் தனது ஆடுகளுடன் ஒரு இடையன் நின்றுகொண்டிருந்தான். அப்துல்லாஹ் அவனைப் பிடித்து ஜியாத் (ரலி.) அவர்களிடம் கொணர்ந்தார்கள். இவர்கள் அவனை விளித்து

“இராக்காலங்களில் தெருக்களிற் காணப்படுவோன் கொல்லப்படுவானென்ன அரசாக்கினை பிறப்பிக்கப்பட்டிருப்பது உமக்குத் தெரியாதோ?” வெனக் கடாவினார்கள். அவன் “எனக்குக் கிஞ்சிற்றும் தெரியாது. இரவில் அதிக பாகம் கழிந்துவிட்டதால் வேறுவழியின்றி நான் இங்கு தங்கிவிட்டேன்” எனக் கூறினான். இவர்கள் “உனது வார்த்தைகள் உண்மையாகவே காணப்படினும், உன்னைக் கொல்வதில் மக்களுக்கு நன்மையுண்டு” எனக் கூறி, அவனைக் கொன்றுவிட்டார்கள். ஜியாத் (ரலி.) அவர்களின் இத்தகைய கண்டிப்பான முறையின் காரணமாக நகரத்தில் எப்பொருளேனும் வீழ்ந்துவிட்டாலும் ஒருவனும் அதைத் திரும்பவும் பார்க்காது, சொந்தக்காரனே அதையெடுத்துக் கொள்ளும் நிலைமையும் ஏற்பட்டது. ஜனங்கள் பொதுவாக இராக்காலங்களில் கடைகள், வீடுகள் இவைகளின் வாயிலை அடைப்பதில்லை. திருட்டு, கொள்ளை, சண்டை இவைகள் முற்றுப்பெற்று விட்டன. இவைகள் தவிர, பாட்டைகளைக் காவல்புரிவதற்கும் சேவகர்களை நியமித்திருந்ததால் பிரயாணிகளும் அச்சமின்றியே பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள் தமது பிரசங்கத்திற் குறிப்பிட்டிருந்தபிரகாரம் கவாரிஜ்கள் விஷயத்தில் அன்னார் எதிர்க்க முன்வராதவரை தாமே ஒன்றும் செய்யாது நடந்து கொண்டார்கள். ஒருதினம் ‘பனீஸஅத்’ வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் கவாரிஜ் கூட்டத்தைச் சேர்ந்து போயினதாய்க் கேள்விப்பட்டு அவனைக் கூப்பிட்டனுப்பினார்கள். அவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.), உமர் (ரலி.) இவ்விருவரையும் புகழ்ந்தான். உத்மான் (ரலி.) அவர்களின் பெயரையெடுக்கவில்லை. ஜியாத் (ரலி.) அவனைக் கஷ்டத்துக்குள்ளாக்க எத்தனித்தார்கள். அதற்கு அன்னான் “நம்மை

எதிர்க்க முன்வராதவன் என்னதான் பகைமைபூண்டிருந்தாலும் அவனை ஒன்றுமே செய்யமாட்டோம்' எனத் தாங்கள் வாக்களித்திருக்க இதற்கு மாற்றமாய் எனக்கேன் தண்டனை யளிக்கிறீர்கள் ?" எனக் கேட்டான். இதை ஜியாத் (ரலி.) ஒப்புக்கொண்டு அவனை விடுவித்துவிட்டதுடன் அவனுக்கு வெகுமதியுமளித்தார்கள். ஜியாத் (ரலி.) அங்குள்ள ஜனங்களைத் தம்மிடம் அழைத்து, அவர்களுடன் கலந்துட்கார்ந்து, அவர்களுள்ளங்களைத் தேற்றுவார்கள். ஒருதடவை "அபுல்கைர் என்னும் மனிதர் வீரமும், புத்திசாலித்தனமும் நிரம்பப் பெற்றவர். எனினும், கவராஜ்களின் கொள்கையை யங்கீகரிப்பவர்" என்பதை யறிந்து அவரை யழைத்து, ஜந்திஸாபூருக்கு அதிபராய் நியமித்தனுப்பி, 4,000-திர்ஹம் மாதச்சம்பளமும் ஏற்படுத்தினார்கள். இதற்குப் பிறகு அபுல்கைர் "கவாரிஜகளுடன் சேருவது மிக்க பிழைபட்ட காரியமே" எனக்கூறிக் கொண்டிருந்தார்.

ஹி. 51—ம் ஆண்டில் முகீரா பின் ஷஃபா (ரலி.) மரணமடைந்தபிறகு அமீர் முஆவியா (ரலி.) பஸராவுடன் கூபாவின் அரசுரிமையையும் ஜியாத் (ரலி.) அவர்களுக்கே கொடுத்துவிட்டார்கள். இது தொடுத்து இவர்கள் வருடத்தில் ஆறுமாதங்கள் பஸராவிலும், ஆறுமாதங்கள் கூபாவிலும் இருக்கத் தொடுத்தார்கள். கூபாவாசிகள் அதிகாரிகளை யவமதிப்போராகவும், அரசாங்கத்திற்கு மாறுசெய்வோராகவு மிருந்தார்கள். ஜியாத் (ரலி.) ஜாமிஃமஸ்ஜிதில் தமது சொற்பொழிவை யாரம்பித்தபோது சிலர் இன்னார்மீது கற்களை வீச ஆரம்பித்தார்கள். இன்னார் உடனே தமது பிரசங்கத்தை நிறுத்திவிட்டு, மஸ்ஜிதின் வாயிலை மூடிவிட்டு, ஒரு நாற்காலியைத் தருவித்து, அங்குட்கார்ந்து கொண்டார்கள்.

நாலுநாலு பேராய்க் கூப்பிட்டுத் தாம் கற்களை எறியவில்லையென்பதாய்ச் சத்தியம் செய்யச் சொன்னார்கள். சத்தியம் செய்வோனை விட்டுவிடுவார்கள்; செய்ய மறுப்போனைப் பிடித்துக்கொள்வார்கள். இவ்விதமாக முப்பதுபேர்களைப் பிடித்து, அவர்களின் கரங்களைத் துணித்துவிட்டார்கள். இதற்குப் பிறகு மஸ்ஜிதில் தமக்காக ஒரு அறையைக் கட்டிக்கொண்டார்கள். கூபாவில் அலீ (ரலி.) அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தோரில் ஒரு கூட்டமிருந்தது. அதன் தலைவர்கள் ஹஜர் பின் அதீகிந்தீ, அம்ருபின் ஹம்முக் முதலியோராயிருந்தனர். இவர்கள் கூடி அமீர்முஆவியா (ரலி.) அவர்களையும், அவர்களால் நியமிக்கப்பெற்ற அதிபர்களையும் குறைகூறுவதாய்ச் செவியுற்று ஜியாத் (ரலி.) கூபாவுக்கு வந்து ஜாமிஃமஸ்ஜிதில் தமது சொற்பொழிவை யாரம்பித்து "இத்தகைய குழப்பக்காரர்களை விட்டும் கூபாவைப் பரிசுத்தமாக்கி விடுவேன்" எனக்கூறிவிட்டு, ஹஜரை மஸ்ஜிதுக்கு அழைத்துவரும்படி சிப்பாய்களை யனுப்பினார்கள். அவர் வரமறுத்ததுடன் சிப்பாய்களையும் ஏசினார். இதனைச் செவியுற்ற ஜியாத் (ரலி.) கூபாவாசிகளிடம் "நீங்கள் வழிபடுவதாய் வெளியிட்டுக் கூறுகிறீர்கள். எனினும், உங்களது உள்ளங்கள் ஹஜரின் புறமே சார்ந்திருக்கின்றன. ஒன்று நீங்கள் அவர்களைவிட்டும் விலகிப்போகவேண்டும். இன்றேல் நான் உங்களையும் கூபாவை விட்டுப் போகச் செய்து விடுவேன்" எனக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற ஜனங்கள் "உங்களது வழிபாட்டைத் தவிர்த்து வேறு எத்தகைய எண்ணமும் எங்களுக்குக் கிடையாது" எனக்கூறவே இவர்கள் "அங்ஙனமாயின் நீங்கள் சென்று உங்கள் வர்க்கத்தவரை ஹஜரைவிட்டும் பிரித்துவிடுங்கள்" எனக்கூறினார்கள். ஜனங்கள் இவ்விதமே செய்தார்கள். பிறகு இவர்கள் ஹஜரை அவரது சகாக்களுடன் பிடித்து

வரும்படியும், வரமறுத்தால் கண்டிப்பாய் அழைத்து வரும் படியும் சிப்பாய்களை யனுப்பினார்கள். அவர்களிற் சிலர் ஓடிவிட்டார்கள். எனினும் ஹஜரும், அவரது 13-சகாக் களும் பிடித்துவரப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டார்கள்.

கூபாவாசிகளில் பெரும்பான்மையோர் ஹஜர் கலீபா அவர்களின் விஷயத்தில் தகாத வார்த்தைகளை யுபயோகிப்ப தாயும், சதிசெய்வதற்காய் ஒரு கூட்டத்தைச் சேகரித்திருப் பதாயும், இவர்கள் "கிலாபத் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் மக்களைத் தவிர்த்து மற்றெவருக்கும் சொந்த மன்று. அமீர்முஆவியா அவர்களால் ஏற்பட்ட அதிகாரி கள் யாவரையும் மறுப்பது முக்கியம்" எனக்கூறுவதாயும் சாக்ஷியங் கொடுத்தார்கள். ஜியாத் (ரலி.) இச்சாக்ஷியங்கள் யாவையும்வரைந்து, ஹஜர் முதலியோருடன் திமஷ்கிற் கனுப்பினார்கள். இவர்கள் "மர்ஜெ அதார்" என்னு மிடத்திற் சேர்ந்தபோது ஹஜருட்பட அவர்களில் எண்மர் அமீர்முஆவியா (ரலி.) அவர்களின் ஆக்ஞைப்பிரகாரம் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்தோர்-ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை மறுத்தோர்—விடுதலையடைந்து கூபாவுக்குத் திரும்பினார்கள். உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) ஹஜர் பிடிக்கப்பட்ட செய்தியை யறிந்து அப்துர்ரஹ்மான் பின்ஹாரித் (ரலி.) அவர்களை அமீர் முஆ வியா (ரலி.) அவர்களிடம் ஹஜர் விஷயமாய் சிபாரிஷ் செய்தனுப்பினார்கள். எனினும் இன்னார் திமஷ்கை யடைவ தற்கு முன்பே ஹஜர் கொல்லப்பட்டுப் போய்விட்டார். ஹஜரின் சம்பவத்தைச் செவியுற்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களுக்கு மிகவும் மனவருத்த மேற்பட்டது. அவர் மிகப்பெரிய வணக்கவாளியா யிருந்தார். ஜியாத் (ரலி.) ஹி. 53-ம் ஆண்டில் காலராவினால் இறந்து போயினர்.

ஓடிப்போவோருக்குப் பதிலாய் இருப்போருக்கும், அடிமைக்குப் பதிலாய் எஜமானனுக்கும், பாவிகளுக்குப் பதிலாய் பாவிகளல்லாதாருக்கும் தண்டனை யளிப்பது போன்ற—ஜியாத் (ரலி.) அவர்கள் இராக்கில் கையாண்ட— அரசியல் முறை மார்க்கத்திற்கு மிகவும் முரணனதே. சில கடினசித்தமுடைய அதிகாரிகள் குற்றங்கள் அதிகப் பட்டும், பிரஜைகளின் குணநிசயங்கள் மிக்கசீர்கே டடைந்துமுள்ள காலத்தே இத்தகைய முறைகளை யனுஷ்டானத்திற் கொணர்கிறார்கள். ஜியாத் (ரலி.) அவர்களின் இத்தகைய முறைகளால் கவாரிஜ்கள் ஒடுங்கிப் போயினதும், தேசத்தில் அமைதிநிலவியதும் உண்மையே யெனினும், இதற்காக மார்க்கக் கட்டளைகள் தகர்த்தெறியப்பட்டு, அனுவசியமாக உதிரஞ் சிந்தப் பெற்றது. நீதி நெறி வழுவாது, குழப்பத்தை யொழுங்குபடுத்தும் அரசாங்கமே புகழுக்குரியதாம். ஜியாத் (ரலி.) இத்தியாதி உதிரஞ் சிந்துதலுடனும் இராக் தேசத்தின் அநேக அதிபர்களில் நல்லோராகவே யிருந்தார்கள். அவர்கள் காலத்தில் அமைதி நிலவியது; ஜனங்கள் நந்நிலைமையிலிருந்தார்கள். அவர்கள் சம்பளங்களைச் சமயத்திற் கொடுத்துவிடுவார்கள். தேவையுள்ளவன் எந்தசமயத்திலும் அவர்களைக் காணலாம். அவர்கள் அவனுக்குதவிபுரியத் தயாராயிருந்தார்கள். அவர்களது சத்தியம், உண்மை இவைகள்மீது யாவருக்கும் நம்பிக்கையிருந்தது. எனினும் "இராக் வாசிகள் கடின முறைகளைக் கையாளாதவரையில் ஒழுங்குபடாதோராகவும், இளகிய உள்ளமுடையோனுக்கு மாறுசெய்வோராகவும் இருந்தார்க"ளென்பதை மிகவும் வருத்தத்துடன் சரித்திரம் குறிக்கின்றதென்பதும் கண்டு குறிப்பிடத்தக்கதே.

முகீராபின் ஷஃபா (ரலி)

கூபாவில் ஜியாத் (ரலி.) அவர்களின் ஆட்சிமுறையைக் காட்டினும் முகீராபின் ஷஃபா (ரலி.) அவர்களின் ஆட்சிமுறை இரக்கம் பொருந்தியதாகவேயிருந்தது. ஜனங்கள் அவர்களிடம் அடிக்கடிவந்து "இன்னான் ஷீஆவைச் சேர்ந்திருக்கிறான்; இன்னான் கவாரிஜைச் சேர்ந்துள்ளான்" என முறையிடுவார்கள். இதற்கு அவர்கள் "ஜனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பார்கள்' என அல்லாஹு தஆலா கூறியிருக்கிறான். இவர்களது முரண்பாட்டைப்பற்றி இறுதி தினத்தில் அவனே தீர்ப்பளிப்பான்' எனக் கூறிவிடுவார்கள். இதைச் செவியுற்ற ஜனங்கள் அவர்களுக்குப் பயமற்றுப் போய்விட்டார்கள். கவாரிஜ்கள் தமது கொள்கைப்பிரகாரம் ஏனைய முஸ்லிம்களுடன் யுத்தம் புரிவதில் தாமதிப்பது பாவமெனக் கருதியதால் அதற்கான ஏற்பாடுகளைப்பற்றி ஒருங்குகூடி யாலோசித்தார்கள். இவர்கள் தமது யோசனைப் பிரகாரம் முஸ்தௌரித் பின் அல்கமா என்பானைத் தமக்குத் தலைவனாகக்கொண்டு ஹி. 43-ம் ஆண்டு, ஷவ்வால் மாதம் முதல்தெய்தி (ரம்ஸான்) பெருநாள் தினத்தன்று பொதுவான யுத்தம் துவக்குவதாய் முடிவுசெய்தார்கள். கவாரிஜ்களின் ஒரு கூட்டம் ஹையான் பின் லப்யான் உடைய இல்லத்தில் கூடியிருப்பதாயும், அவர்களது கருத்து ஷவ்வால் மாதம் முதல் தெய்தியன்று சதிசெய்வதே எனவும் முகீரா பின்ஷஃபா (ரலி.) செவியுற்று, சிப்பாய்களை யனுப்பி அவ்வீட்டை முற்றுகையிட்டு, அங்கு கிடைத்தவர்களைக் கைது செய்தார்கள். இதைக் கண்ணுற்ற முஸ்தௌரித் தனது 300—சகாக்களுடன் கூபாவைவிட்டு வெளியேறிவிட்டான்.

முகீரா (ரலி.) ஜனங்களிடம் "அக்கூட்டத்தை எதிர்ப்பதற்கு யாரை யனுப்பவேண்டும்?" யென யோசனை கேட்டதற்கு அதீ பின் ஹாத்திம் (ரலி.) "கூபாவின் தலைவர்கள் யாவரும் அவர்களுக்கு விரோதிகளே யாதலின், தாங்கள் எவரையும் அனுப்பலாம். ஒருவரும் மறுக்கப்போவதில்லை" எனக் கூறினார்கள். மஃகல் பின்கைஸ் என்பாரோ "அவர்களை எதிர்ப்பதற்காக எவரையேனும் அனுப்பவேண்டுமாயின் என்னையே யனுப்புங்கள். நான் அவர்களை மிகவும் விரோதிக்கிறேன். அவர்கள் முஸ்லிம்களுக்கும், பெருமானாரின் குடும்பத்திற்கும் விரோதிகளாயிருக்கிறார்கள்" என விண்ணப்பித்துக் கொண்டனர். முகீரா ஷீஆ வர்க்கத்தில் 3,000—குதிரைவீரர்களை நியமித்து, மஃகல் உடன் அனுப்பிவைத்தார்கள். கவாரிஜ்களுடன் பற்பல யுத்தங்கள் நடைபெற்றன. அவர்கள் 300—பேர்களேயிருப்பினும் ஒவ்வொரு யுத்தத்திலும் அவர்களே வெற்றிபெற்றார்கள். இறுதியாக முஸ்தௌரிதை எதிர்ப்பதற்கு மஃகலே சென்றார்கள். முஸ்தௌரிதின் வாள் இவர்களின் சிரம்மீதும், இவர்களது அம்பு அவன் தலைமீதும் வீழ்ந்தது. இருவரும் கீழே விழுந்து ஆவிதுறந்து விட்டார்கள். இது சமயம் கவாரிஜ்கள் தோல்வியுற்றார்கள். ஐவரைத் தவிர்த்து அவர்கள் யாவரும் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் முகீரா (ரலி.) ஏழுவருஷங்களும், சில மாதங்களும் அதிபராயிருந்தார்கள். இமாம் ஷஃபீ (ரஹ்.) அவர்கள் "இன்னாரைவிட நல்ல அதிபர் வேறெவரும் கூபாவில் ஏற்படவில்லை" என்றபிப்பிராயப்படுகின்றார்கள். அவர்கள் அமைதியை விரும்புபவர்களாகவும், நற்குணசாலியாகவும், முன்னோரின் முன்மாதிரிக்கொரு உவமானமாகவுமிருந்தார்கள். பலர் "அவர்கள் எப்பொழுதும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களையும், ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களைக்

கொன்றேரையும் குறைகூறிக்கொண்டிருந்தார்க”ளென்பதாய்க் குற்றங்காண்கிறார்கள். இவர்களது மரணம் ஹி. 51-ம் ஆண்டில் ஏற்பட்டது.

உபைதுல்லாஹ் பின் ஜியாத்

ஹி. 55-ம் ஆண்டில் அமீர் முஆவியா (ரலி.) உபைதுல்லாஹ் பின் ஜியாத் என்பாரை பஸராவின் அதிபராக நியமித்தார்கள். இவர்கள் கவாரிஜ்கள்மீது மிகவும் கடுமையான முறைகளைக் கையாண்டனர். ஹி. 58-ம் வருஷத்தில் அநேக கவாரிஜ்களைக் கொன்றுவிட்டு, ஓடிவிட்டவர்களுக்குப் பின்னுல் சேனையை யனுப்பினுர்கள். ஒருதடவை குதிரைப் பந்தயத்தில் கலந்திருக்கும்போது உர்வா பின் அதிய்யா என்னும் கவாரிஜ்களைச் சேர்ந்தவனொருவன் இவருடன் கடுமையாக வசனித்தான். இவனுடன் ஏதோவொரு கூட்டமிருக்கவேண்டுமெனவும், இன்றேல் இவன் இவ்வளவு தைரியமாய் வார்த்தையாடமாட்டானெனவும் உபைதுல்லாஹ் எண்ணிக் கொண்டு, குதிரைப்பந்தயத்தை விட்டுவிட்டுத் தமது மாளிகைக்கு வந்தார். உர்வா பயத்தினுல் ஒளிந்து கொண்டிருந்தான். எனினும், சிப்பாய்கள் அவனைப்பிடித்து வந்தார்கள். உபைதுல்லாஹ் அவனது கரத்தையும், காலையும் துணித்துவிட்டு “இப்பொழுதென்ன கூறப்போகிறீர்?” எனக்கேட்டான். அவன் “எனது இகலோக வாழ்வைக் கெடுத்துவிட்டு, உங்களது பரலோக வாழ்வைப் பாழ்படுத்திக்கொண்டீர்கள்” என்றான். பிறகு, உபைதுல்லாஹ் அவனையும், அவனது புத்திரியையும் கொன்றுவிட்டார். உர்வாவின் சகோதரன் மர்தாஸ் என்பான் நாற்பது சதியாளர்களுடன் ‘அஹ்வாஜ்’ புறம் ஓடிவிட்டான். உபைதுல்லாஹ் இப்னு ஹிஸ்ன் தமீமியின் தலைமையின்கீழ் 2,000—பேர்கள் கொண்டதொரு சேனையை யனுப்பியதில் கவாரிஜ்கள் இரண்டாயிரம் பேரையும் தோற்கடித்துவிட்

டார்கள். உபைதுல்லாஹ் அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் மரணம் வரை பஸராவின் அதிபரா யிருந்தார்.

அம்ருபின் ஆஸ் (ரலி.) மிஸ்ரின் அதிபராயிருந்தார்கள். ஹி. 43-ம் ஆண்டில் அவர்கள் மரணமடைந்த பின்பு அவர்கள் திருப்புதல்வர் அப்துல்லாஹ் அதிபராயினுர்கள். ஹிஜாஸின் அதிபர்கள் எப்பொழுதும் பொதுவாக பனீ உமையாக்களாகவும், அன்னுருள் குறிப்பாக மர்வான் பின் ஹகம், ஸஈத் பின் ஆஸ் இவர்களாகவு மிருந்தார்கள். இவர்களில் ஒருவர் மக்காவுக் கதிபராயின், மற்ருெருவர் மதீனுவுக் கதிபராவார். அமீர் முஆவியா (ரலி.) ஹஜ்ஜுக்காக வர மாட்டார்கள். ஆதலால் இந்த அதிபர்களி லொருவரையே தமக்குப் பிரதிநிதியாய் நியமிப்பார்கள். ஹிஜாஸில் பனீ உமையாக்கே அதிபர்களாயிருந்ததற்கு இதுவே காரணமாம்.

வெற்றிகள்

அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் கீழ்த் தேசத்தில் அதிகப்படியான வெற்றிகள் ஏற்படவில்லை. சிற்சில மாகாணங்களிலேற்பட்ட சதிகள் மட்டும் அழிந்து பட்டன. சிந்து தேச எல்லைப்புறத்தில் நியமிக்கப் பெற்ற அப்துல்லாஹ்பின்ஸவா 'கைகான்' மீது மீண்டும் படையெடுத்தனர். மீண்டும் அவ்விடத்து மக்கள் தமக்குதவிக்காக துருக்கிகளை யழைத்தார்கள். அப்துல்லாஹ் சண்டையில் இறந்துவிட்டார்கள். பிறகு அவர்களை முஸ்லிம்களின் பிரசித்தி பெற்ற போர்வீரர் முஹ்லப் பின் அபீஸுப்ரா எதிர்த்து காபல், முல்தான் இவ்விரண்டிற் கிடையேயுள்ள 'நபா' என்னுமிடம்வரை வெற்றிகொண்டார்கள். ஒரு தடவை 18-துருக்கிக் குதிரை வீரர்கள் தனிமையில் முஹ்லப் அவர்களைச் சூழ்ந்து கொண்டதும், அவர்கள் யாவரையும் இவர்கள் கொன்றுவிட்டதும் குறிப்பிடத் தக்கதே. துருக்கிகள் தமது குதிரைகளின் வால்மயிர்களை

எடுத்துவிடுவார்கள். முஹ்லப் இதை விரும்பித் தமது சேனையிலும் இவ்வழக்கத்தைக் கைக்கொண்டார்கள்.

அமீர்முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் அதிகப் படியான கவனம் ரூமீகளின் மீதே செலுத்தப்பட்டது. அவர்களின் வன்மை அதுவரை எஞ்சியிருந்ததே இதற்குக் காரணமாம். அவர்கள் காலத்தில் ரூமிகளில் இருஅரசர் களேற்பட்டார்கள். முதலாவதாக குஸ்துன்தீனில் கி. பி. 641-ம் வருஷம் தொடுத்து 668-ம் வருஷம்வரை ஆட்சி புரிந்துவந்த ஹிர்கல் என்பானும், இரண்டாவதாக 668-ம் வருஷம் தொடுத்து 685-ம் வருஷம் வரை ஆட்சிபுரிந்து வந்த பூகானுதிஸ் என்பானுமாம். இவ்விருவரும் முஸ்லிம் களின் மாகாணங்களை எதிர்த்துவந்தார்கள். அமீர் முஆவியா (ரலி.) இவர்களை எதிர்ப்பதற்காக கடற்படை, தரைப்படை இரண்டையுமே நியமித்தார்கள். அவர்கள் காலத்தில் 1,700-சண்டைக் கப்பல்கள் சகல யுத்ததளவா டங்களுடனும் எப்பொழுதும் சண்டைக்குத் தயாராய் நின்றுகொண்டிருந்தன. கடற்படைகளுக்குத் தலைவர்ஜுனதா பின் அபீஉமையா (ரலி.) என்பாராயிருந்தார்கள். இவர்கள் பலதடவைகளில் ரூமீகளைக் கடலில்வென்று கப்ரஸ், ரூதஸ்போன்ற பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஆலனுடன் முஸ்லிம்கள் சேரவேண்டி தரைப்படையின் சம்பளமும் அதிகமாகவேயிருந்தது. கடற்படையிலும் இருபிரிவுகளிருந்தன. ஷாதியா வென்பது குளிர் காலத் தில் சண்டைக்கனுப்பப்பெறுவதும், ஸாயிபா வென்பது கோடைகாலத்தில் அனுப்பப் பெறுவதுமாம். இவ்வித மாக தரை, கடல் இவ்விரண்டின் மார்க்கமாகவும் சண்டை நடைபெற்றுக் கொண்டேயிருந்தது.

ஹி. 48-ம் வருஷத்தில் அமீர்முஆவியா (ரலி.) ரூமீ களை அவர்களின் தலைநகரமான குஸ்துன் துனிய்யாவிலேயே

எதிர்க்க ஏற்பாடுசெய்தார்கள். இதற்காகப் பெரியதொரு சேனையைச் சேகரித்து ஸுப்யான் பின் ஔப் (ரலி.) அவர்களை யதற்குத் தலைவராகவும், தமது புதல்வர் யஜீதையும் ஒரு பகுதிக்குத் தலைவராகவும் நியமித்தார்கள். "ரூம்தேச நகரத்தைக் கைப்பற்றச் செல்லும் எனது உம்மத்(பின் பற்றியோர்)களில் முதற்படையின் பாவங்கள் மன்னிக்கப் படும்" என எம்பெருமானார் (ஸல்.) கூறியதைக் கொண்டு, பெருமானாரால் வாக்களிக்கப்பெற்ற இந்தப் பாபமன்னிப்பை முன்னிட்டு மதீனாவிலிருந்து பெருமானாரின் தோழர்களிலனேகர் இச்சேனையிற் கலந்துகொண்டார்கள் இவர்களில் முக்கியமானவர்கள் அப்துல்லாஹ்பின் உமர் (ரலி.), அப்துல்லாஹ்பின்ஜுபைர் (ரலி.), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.), அபூ ஐயூப் அன்ஸாரீ (ரலி.) இவர்களுடன் சில சரித்திராசிரியர்கள் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களையும் சேர்த்திருக்கிறார்கள். இச்சேனை கடல்மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் சென்று குஸ்துன்துனிய்யா(கான்ஸ்டான்டிநோபில்)வுக்கும் போய்ச் சேர்ந்து அதைமுற்றுகையிட்டது. பல பயங்கரமான யுத்தங்கள் நடைபெற்றன. அப்துல் அஜீஜ் பின் ஜாரார (ரலி.) மதத்திற்காக ஆவிதுறக்கும் ஆவலுடன் அடிக்கடி முன்வந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். தமது நோக்கம் நிறைவேறாதது கண்டு எதிரிகளின் சேனைகளுள் புகுந்து, தமது நோக்கம் நிறைவேறப் பெற்றார்கள். இதைச் செவியுற்ற அமீர்முஆவியா (ரலி.) அன்னார் பிதா ஜாரார (ரலி.) இடம் "அரப்தேசத்திய வாலிபர் சென்று விட்டார்" என்றார்கள். அன்னார் "எந்த வாலிபர்? எனது குமாரரா; தங்கள் குமாரரா?" எனவே முஆவியா (ரலி.) "உங்கள் குமாரரே. அல்லாஹு தஆலா உங்களுக்கு நற்

கூலி தருவானாக!" எனப்பதிலளித்தார்கள். அன்னார் பொறுமை செய்துகொண்டு பிரார்த்தனை செய்தனர்.

குஸ்துன்துனிய்யாவின் மதில்சுவர் பலமானதாகவும், இயற்கையாகவே கார்மானமானதாகவு மிருந்ததால் முஸ்லிம்கள் அதைக் கைப்பற்றக்கூடாதுபோயினர். ரூமீகள் தீப்பற்றவைத்து முஸ்லிம்களின் அநேக கப்பல்களை எரித்துவிட்டார்கள். இவைகள் தவிர, அத்தேசத்திய குளிரும் அராபிகளால் சகிக்கமுடியாதிருந்தது. எனவே, அநேக இன்னல்களுடன் திரும்பிவந்தார்கள். முற்றுகைக்கிடையே அபூஐயூப் அன்ஸாரீ (ரலி.) மரணமடைந்துவிட்டார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு பெருமானார் (ஸல்.) மதீனாவில் இவர்களிடமே விருந்தாளியாய்த் தங்கினார்கள். இவர்கள் குஸ்துன்துனியாவின் மதில் சுவற்றின் பக்கத்தில் நகருக்கு வெளியே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். உத்மானிய துருக்கியர்கள் இவ்விடத்தை வெற்றிகொண்டபோது இவர்களின் கல்லறையை(மஜாரை)ச் சேர்ந்தாற்போல ஒரு ஜாமிஃமஸ்ஜிதைக் கட்டினார்கள். அஃது நாளிதுவரை "ஜாமியே அபீஐயூப்" என வழங்கிவருகின்றது. இதிலேயே உத்மானிய அரசர்களின் முடிசூட்டும் வைபவம் நடைபெற்றுவருகின்றது.

ஆப்பிரிகாவில் ஹஸ்ரத் அம்ருபின் ஆஸ் (ரலி.) அவர்களின் தலைமையில் 'புர்கா' வென்னுமிடம் வரை முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் வந்திருந்தது. அமீர் முஆவியா (ரலி.) உக்பா பின் நாபிஃ (ரலி.) அவர்களை அவ்விடத்துக்குச் சேனாதிபதியாக்கி, 10,000—சிப்பாய்களை அவர்களுக்குதவிக்காக அனுப்பினார்கள். அவர்கள் காட்டுப்புற ஜனங்களை எதிர்த்து, அவர்களைத் தோற்கடித்தார்கள். அக்காட்டுப்புற மக்கள் தம்மீது படையெடுக்கப்படும் காலத்தில் இஸ்லாமைத் தழுவுவதும், பிறகு சமயம்வாய்த்த

போது மதம் மாறிப்போய் சதிசெய்வதுமாயிருப்பார்கள். இதனுல் அங்கொரு சேனையை நியமிப்பது முக்கியமென உக்பா (ரலி.) கருதினுர்கள். எனவே கைர்வான் என்னும் நகரத்தை நிர்மாணித்தார்கள். ஹி. 55-ம் வருஷத்தில் அஃது முற்றுப்பெற்றது. இதற்கிடையில் ஒவ்வொரு புறமும் சேனைகளை யனுப்பிக்கொண்டிருந்தார்கள். காட்டுப் புறமக்களில் அனேகர் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். சேனை யங்கேயேயிருப்பதால் முஸ்லிம்களுக்கு நிம்மதியும் ஏற்பட்டது. சுற்றுப்புறத்தில் இஸ்லாம் பரவத்தொடுத்தது. மஸ்லமா பின் முகல்லத் என்பார் இக்காலத்தில் மிஸ்ர், ஆப்பிரிகா இவ்விருதேசங்களுக்கும் அமீர்முஆவியா (ரலி.) அவர்களால் நியமிக்கப்பட்ட அதிபராவர். இன்னுர் உக்பா (ரலி.) அவர்களை நீக்கிவிட்டு அபுல்முஹாஜிர் என்னும் தமது அடிமையை சேனுதிபதியாக்கினுர். குறுகிய மனப்பான்மையுடையவர்களே போன்று அபுல்முஹாஜிர் உக்பா (ரலி.) அவர்களை நிந்திக்கத்தொடுத்து, அன்னுரது காரியாதிகள் யாவற்றிலும் குற்றங்கண்டு, அன்னுரது பெயரைக் கெடுத்துக்கொண்டிருந்தார். உக்பா (ரலி.) ஷாமுக்குத் திரும்பிவந்து அமீர்முஆவியா (ரலி.) அவர்களிடம் அபுல்முஹாஜிரைப்பற்றி முறையிடவே, அவர்கள் இன்னுரை மீண்டும் இன்னுரது ஸ்தானத்திற்கனுப்புவதாயும், கொஞ்சநாட்கள் பொறுத்திருக்கும்படியும் வாக்களித்தார்கள்.

யஜீதைத் தேர்ந்தெடுத்தல்

முகீரா பின் ஷுஃபா (ரலி.) ஒரு தடவை திமஷ்கிற்குச் சென்று யஜீதையும் சந்தித்தார்கள். வார்த்தைகளுக்கிடையே "பெரிய ஸஹாபாக்களும், குறைஷ் தலைவர்களும் காலஞ்சென்றுபோயினர். தற்போது அவர்களின் புதவர்களிருக்கின்றுர்கள். நீங்கள் கல்வி, இராஜாங்கமுறைமை, சிறப்பு இவைகளில் யாருக்கும் குறைவுபட்டிருக்கவில்லை.

இங்ஙனமிருக்க, கலீபா அவர்கள் உங்களைத் தமக்குப்பிறகு அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும் இளவரசராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள என்னதான் தடையுளதோவறிகிலேன்" எனக்கூறினார்கள். இதன்மேல் யஜீத் "நான் இவ்விதம் தேர்ந்தெடுக்கப்படக் கூடுமெனக் கருதுகின்றீர்களோ?" வெனக்கேட்க அவர்கள் "சந்தேகமன்றியே" எனக்கூறினார்கள். அமீர்முஆவியா (ரலி.) அவர்களிடம் யஜீத் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்கவும் அன்னார் முகிரா (ரலி.) அவர்களிடம் இவ்விஷயமாய்ச் சம்பாஷித்தனர். அவ்வமயம் முகிரா (ரலி.) "ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் கொல்லப்பட்ட பின்பு ஏற்பட்ட சகல பிரிவுகளும், சண்டைகளும் எனது கண்கள் முன்பு நின்கின்றன. ஆதலால் மக்களுள் குழப்பமும், பிரிவினைகளும் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் தாங்கள் யஜீதை இளவரசராகத் தேர்ந்தெடுக்கச்செய்துவிடுவது உசிதமானதேயாம். இன்றேல் தங்களுக்குப் பிறகும் அதே நிலைமை ஏற்பட்டுவிடும்" எனக் கூறினார்கள். இதன்மேல் முஆவியா (ரலி.) "ஜனங்கள் இவ்விதம் தேர்ந்தெடுப்பார்களென்பதற்கென்ன நம்பிக்கையுளது?" எனக்கேட்க, முகிரா (ரலி.) "கூபாவாசிகள் விஷயத்தில் நான் பொருப்பாளியாயிருக்கிறேன். பஸரா வாசிகளை ஜியாத் (ரலி.) இசையச் செய்துவிடுவார்கள். இங்ஙனம் இராக் தேசவாசிகள் தேர்ந்தெடுத்துவிட்டால் வேறு யாராலும் எதிர்க்கமுடியாது" என்றார்கள். முஆவியா (ரலி.) இதன்பேரில் "நீங்கள் கூபாவுக்குச் சென்று, அவ்விடத்துத் தலைவர்களிடம் இவ்விஷயமாய் யோசனைபுரிந்து எனக்குத் தெரிவியுங்கள்" எனக்கூறியனுப்பினார்கள்.

முகிரா (ரலி.) கூபாவுக்குவந்து அங்குள்ள தலைவர்களிடம் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்கவே அவர்கள் இதற்கிசைந்துவிட்டார்கள். அவர்கள் தமது குமாரர் மூஸா

அவர்களுடன் கூபாவாசிகளின் ஒரு தூதுக்கோஷ்டியை திமிஷ்கிற்கனுப்பினார்கள். அவர்கள் சென்று அமீர் முஆவியா (ரலி.) அவர்களிடம் "யஜீத் இளவரசராகத் தேர்ந்தெடுக்கப்படும் யோசனையை நாங்கள் விரும்புகிறோம்" எனக்கூறினார்கள். முஆவியா (ரலி.) இவர்களையனுப்பிவிட்டு "நீங்கள் உங்கள் அபிப்பிராயத்திலேயேயிருங்கள். சமயத்தில் உங்களிடம் பைஅத் (Vote=வாக்கு) வாங்குகிறோம்" எனக்கூறி யனுப்பினார்கள். கூபாவின் தூதுக்கோஷ்டியால் அமீர்முஆவியா (ரலி.) அவர்களின் அபிப்பிராயத்திற்கு மிக்க வன்மை ஏற்பட்டது. அவர்கள் பஸராவின் அதிபர் ஜியாத் (ரலி.) அவர்களுக்கும் யஜீதை இளவரசராகத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவ்விடத்துத் தலைவர்களைக் கலந்தாலோசிக்கும்படி எழுதினார்கள். ஜியாத் (ரலி.) அவ்விடத்துத் தலைவர்களுள் தனிச்சிறப்புவாய்ந்த உபைத் பின்கஅப்நுமைரீ என்பாரிடம் அமீர்முஆவியா (ரலி.) அவர்களின் திருமுகத்தைக் காண்பித்து "இப்பொழுது இவ்வபிப்பிராயத்தை யொத்திவைக்கும்படியும், யஜீத் எவரையும் பரவச்செய்யாத வாலிபராகவும், இராப்பகலாய் வேட்டையாடுவதிலேயே மூழ்கியிருப்போராகவுமிருப்பதால் எனக்கு ஜனங்கள் அவரை இளவரசராகத் தேர்ந்தெடுக்க முன்பின் யோசிப்பார்களென்னும் பயமிருப்பதாகவும் இதற்குப் பதிலெழுதக் கருதுகிறேன்" எனக் கூறினார்கள்.

உபைத் என்பார் கூறியதாவது:— "எனதபிப்பிராயத்தில் அமீரவர்களின் கருத்து சரியானதெனவே படுகின்றது. நான் திமிஷ்கிற்குச் சென்று, யஜீதைச் சந்தித்து அவரிடம் "நீங்கள் இளவரசராகலாம். எனினும் ஜனங்கள் இராப்பகல் வேட்டையாடுவதிலேயே நீங்கள் வீணே கழிப்பதாய் முறையிடுகின்றார்கள். எனவே, முதலில் நீங்கள்

உங்களைச் சீர்திருத்திக்கொள்வதே நன்று" எனக்கூறுகிறேன். இதன்பயனாய் யஜீதின் நிலைமை சீர்திருத்தமடைந்துவிடும். கலீபா அவர்கள் கருதும் காரியமும் எளிதில் கைகூடும். இதுவே சிறந்த யோசனையாம்" என்பதே. ஜியாத் (ரலி.) இவ்வபிப்பிராயத்தினால் சந்தோஷமடைந்தார். உடனே அவரை திமிஷ்கிற்கனுப்பினார். யஜீத் இவரது போதனையால் தம்மைச் சீர்திருத்திக்கொண்டார். எனவே, அவரிடத்தில் ஜனங்களுக்குக் குற்றங்காண இடமிருக்கவில்லை. மதீனாவின் அதிபர் மர்வான் பின் ஹகம் என்பாருக்கு அமீர் முஆவியா (ரலி.) வரைந்ததாவது:—

"தற்போது எனது வயது அதிகமாய்விட்டது. எலும்புகள் பலவீனமாய் விட்டன. எனக்குப்பிறகு ஜனங்களுள் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுவிடுமோவென்றஞ்சுகிறேன். ஆதலால், எனக்குப்பிறகு கலீபாவாவதற்கு ஒருவரைக் குறித்துவிடக் கருதுகிறேன். எனினும், மதீனாவாசிகளின் அபிப்பிராயமில்லாமல் அவ்விதம் செய்வது நன்றெனக் கருதவில்லை. எனவே, நீங்கள் மதீனாவாசிகள் முன்பு இவ்விஷயத்தைக் கூறுங்கள். அவர்களது பதிலை எனக்குத் தெரிவியுங்கள்!'

என்பதே. மர்வான் மதீனாவின் தலைவர்களைக்கூட்டி, இக்கடிதத்தை வாசித்துக் காண்பித்தார். யாவரும் கலீபாவின் அபிப்பிராயத்தை யங்கீகரித்து "நாங்கள் இதை யாமோதிக்கிறோம். அவர்கள் நன்காலோசித்து, பொதுமக்களின் நன்மையை முன்வைத்து, எவரையேனும் இளவரசராக்கட்டும்" எனக் கூறினார்கள். இந்த பதில் கலீபாவிடம் கிடைத்தபின்பு மீண்டும் கலீபாவிடமிருந்தொரு நிருபம் கிடைக்கப்பெற்றது. அதில் "நாம் தீர்க்காலோசித்து, மக்களின் நலனை யனுசரித்து யஜீதை இளவரசராக்கத் தீர்மானித்துள்ளோம்" என வரையப்பட்டிருந்தது. இந்நிருபத்தை மர்வான் ஜனங்களுக்கு வாசித்துக்காண்பித்த

போது அப்துர்ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி.) அவர்கள் "நீங்கள் முஸ்லிம் பொது மக்களின் நலத்தைக் கருதவில்லை. முஸ்லிம்களின் கிலாபத்தையும் ரூம் தேசத்தரசாங்கமாக்கி, ஒரு ரூமீ அரசன் இறந்துபோயினபோது அவனது புத்திரன் அரசுரிமையை ஏற்றுக்கொள்வதுபோல் செய்துவிடக் கருதுகிறீர்கள்" என்றார்கள். இவர்கள் தவிர இமாம் ஹுஸைன் (ரலி.), அப்துர்ரஹ்மான் பின் உமர் (ரலி.), அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) இவர்களும் இதை யெதிர்த்தார்கள்.

அமீர் முஆவியா (ரலி.) தமது அதிபர்களுக்கு ஜனங்கள் முன்பு யஜீதின் நன்மைகளை எடுத்துரைத்து அந்தந்தப் புறத்துத் தலைவர்களின் தூதுவக் கோஷ்டிகளைத் தம்மிடம் அனுப்பும்படியும், தாம் அவர்களுடன் இவ்விஷயமாய்ச் சம்பாஷிக்க விரும்புவதாயும் எழுதினார்கள். இத்தூதுவக் கோஷ்டிகளில் மதீனாவிலிருந்து முஹம்மத் பின் அம்ருபின் ஹஜம் (ரலி.) அவர்களும், பஸராவிலிருந்து அஹ்னப் பின் கைஸ் (ரலி) அவர்களும் சென்றார்கள். முஹம்மத் பின் அம்ரு அமீர் முஆவியா (ரலி.) அவர்களிடம் "தாங்கள் யஜீதைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இவ்விஷயத்தில் அல்லாஹ்வின் திருச்சமுகத்தில் தாங்கள் பதில் சொல்லக் கட்டுப்பட்டிருப்பதையும் கவனியுங்கள்" எனக் கூறவே அமீர்முஆவியா (ரலி) மௌனமா யிருந்துவிட்டார்கள். இதற்குப் பிறகு ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அதற்கு அதிபர்களையும், தலைவர்களையும், ஒவ்வொரு அந்தஸ்திலுள்ளவர்களையும் அழைத்து தாம் எழுந்து நின்று சொற்பொழி வாற்றினார்கள். அதில் முதலாவதாக இஸ்லாமின் மேன்மையையும், பிறகு கிலாபத்தின் சிறப்பு, கலீபாக்களின் உரிமைகள், அதிபர்களுக்கு வழிபடல், இவ்விஷயத்தில் பொதுமக்களின் கடமைகள் இவைகளை

யும் பற்றிப் பிரசங்கித்தார்கள். பிறகு யஜீதின் நன்மைகள், அவரது வீரம், புத்திநுட்பம், கொடை, இராஜாங்க விஷயங்களின் ஆற்றல் இவைகளை எடுத்துக்காட்டினார்கள். இறுதியாக ஜனங்கள் அவரை இளவரசராகத் தேர்ந்தெடுக்கும்படி வேண்டினார்கள். இவர்களது சொற்பொழிவுக்குப் பிறகு லஹ்ஹாக் பின் கைஸ் பஹ்ரீ என்பார் எழுந்து நின்று

"கலீபா அவர்களே! தங்களுக்குப்பிறகு கலீபாவாக வருவோர் தற்போதே நியமிக்கப்படல் அத்தியாவசியமே. ஒற்றுமையையும், அன்பையும் தவிர்த்து வேறெதுவும் உதிரஞ்சிந்துவதைத் தடுக்காதென்பதை நாங்கள் பரீக்ஷித்துவிட்டோம். பிரஜைகளின் சௌக்கியம், தேசத்து அமைதி, பொதுநலம் இவைகள் யாவும் மக்களுக்கொரே உறைவிடம் இருப்பதையே பொருத்திருக்கின்றது. அதுவே "கலீபா" வென்னும் ஸ்தலமாம். கலீபா அவர்களின் புதல்வர் யஜீத் நற்குணம், புத்திநுட்பம், கல்வி, அமைதி இவைகளில் மேம்பட்டுள்ளார். அரசாங்க விஷயங்களில் அவருக்குள்ள ஆற்றல், புத்திகூர்மை இவைகளை யாவரும் நம்புகின்றனர். இவரது யோசனை சரியானதாகவேயிருக்கின்றது. அவர் எவ்விதத்தாலும் கிலாபத்திற்குப் பாத்தியஸ்தராக விருக்கின்றார். தாங்கள் அவரை இளவரசராகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பதும், தங்களுக்குப் பிறகு அவர் எங்களது உறைவிடமாகவும் அடைக்கலஸ்தலமாகவும் இருக்கவேண்டுமென்பதும், அவரது நிழலின்கீழ் பொதுமக்கள் குழப்பங்களைவிட்டும் காக்கப்படுவார்களென்பதுமே எங்களது ஆவலாம்"

எனக் கூறினார். இவருக்குப் பிறகு மற்றையோரும் இவ்விதமான சொற்பொழிவாற்றினார்கள். அமீர் முஆவியா (ரலி.) அஹ்னப் பின் கைஸ் (ரலி.) அவர்களைப்பார்த்து "நீங்கள் ஏன் ஒன்றுங் கூறாதிருக்கின்றீர்கள்?" எனக் கேட்கவே அவர்கள் "நான் பொய் சொல்ல வேண்டுமாயின் அல்லாஹ்வின் பயமுண்டாகின்றது. உண்மை சொல்ல

வேண்டுமாயின் தங்கள் பயமுண்டாகின்றது. தாங்கள் யஜீதின் நிலைமையை எங்களைப் பார்க்கினும் அதிகமாகவே யறிந்திருக்கிறீர்கள். யஜீதைத் தேர்ந்தெடுப்பது அல்லாஹ்வுடையவும், பொது மக்களுடையவும் விருப்பத்திற்குக் காரணமாயிருக்குமென்பது தங்களெண்ணமாயின் அவ்விதமே செய்யுங்கள். ஆலோசனை கேட்பானேன்? அவர் கிலாபத்திற்குத் தக்கோராயிராதுபோயின் ஏனோ இகலோகத்தைப் பின்றொடர்ந்து பரலோகத்தைப் பாழ்படுத்துகிறீர்கள்?" எனக் கூறினார்கள்.

அமீர் முஆவியா (ரலி.) ஜனங்களுக்கு வெகுமதிகளையளித்துவந்ததால் அவர்கள் யஜீதைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். இதற்குப் பிறகு இராக்குக்குச் சென்று அவ்விடத்து ஜனங்களிடமும் வாக்குவாங்கினார்கள். பிறகு ஆயிரம் குதிரைவீரர்களுடன் ஹிஜாஸின் புறம் பிரயாணமானார்கள். முதலாவதாக மதீனாவுக்குச் சென்றார்கள். இத்தேர்தலுக்கு விரோதமாயிருந்த அப்துல்லாஹ் பின் உமர் (ரலி.), அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.), இமாம் ஹுஸைன் (ரலி.) இவர்கள் இன்னார் வருவதாய்ச் செவியுற்று மக்காவுக்குச் சென்றுவிட்டார்கள். அமீர் முஆவியா (ரலி.) மதீனாவாசிகளின் முன்னிலையும் பிரசங்கித்தார்கள். அதில் "யஜீதைப் பார்க்கினும் வேறு யாரும் கிலாபத்திற்குத் தக்கோர் கிடையாது. சிலர் இதற்கு விரோதமாயிருக்கிறார்கள். இன்னார்மீது கொடுமைகள் புரியப்படும்வரைக்கும், இன்னார் வேருடன்கெல்லியெறியப்படும் வரைக்கும் இன்னார் தமது விரோதப்பான்மையை விடமாட்டார்கள். அந்தோ! எனது அறிக்கையையவர்கள் அறிந்துகொண்டிருக்கவேண்டாமா?" வெனக் கூறினார்கள். பிறகு மக்காவுக்குவந்து, அந்நான்கு பெரியார்களையும் அழைத்தார்கள். அவர்கள்புறத்தால் அப்துல்

லாஹ்பின் ஜுபைர் (ரலி.) சம்பாஷிப்பதற்காய் முன்வந்தார்கள். அவ்விருவருக்கிடையே நடந்த சம்பாஷணை வருமாறு :—

அமீர் முஆவியா :— "தாங்கள் எனது நடத்தையை நன்கறிந்திருக்கிறீர்கள். நான் சொந்தக்காரர்களை நல்ல விதமாய் நடத்துகிறேன்; அவர்களைச் செல்வமாய் வைத்திருக்கிறேன். யஜீத் தங்களின் சகோதரர். தாங்கள் கிலாபத்திற்காக அவரைத்தேர்ந்தெடுத்து அதிபர்களை நியமித்தல், நீக்கல், தீர்வைகளை வசூலித்தல், செலவு செய்தல் போன்ற அவரது காரியங்கள் யாவையும் தாங்கள் தங்கள் கரங்களிலேயே வைத்துக்கொள்வீர்களென விரும்புகிறேன். அவர் எவ்விஷயத்திலும் குறுக்கிடமாட்டார்."

அப்துல்லாஹ்பின்ஜுபைர் :— "நாங்கள் மூன்றுவழிகளைக் கூறுகிறோம். அவைகளில் தாங்கள் விரும்புவதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்!"

அமீர் :— "கூறுங்கள்!"

அப்துல்லாஹ் :— "முந்தியவழி பெருமானார் (ஸல்.) தமக்குப் பிரதிநிதியை நியமிக்காததே போன்று தாங்களும் நியமிக்காமலிருப்பதே."

அமீர் :— "பெருமானாருக்குப்பிறகு அபூபக்ர் (ரலி.) போன்றவர்களிருந்ததால் மக்கள் ஏகோபித்து அவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். தற்போது அங்ஙனம் ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கத்தக்கோர் எவரே யிருக்கின்றார்? எனவே, நான் யாரையேனும் நியமிக்காதிருப்பது மக்களின் பிளவுக்கே காரணமாகும்."

அப்துல்லாஹ் :— "அங்ஙனமாயின், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களை போன்று தமது வர்க்கத்தைச் சேர்ந்திராதவரும், சொந்தக்காரராயிராதவருமான வொருவரை நியமித்துச் செல்லுங்கள்!"

அமீர் :— " ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களைப்போன்றவ ரெவரே நான் நியமிப்பதற்குக் கிடைப்பார்கள் ?"

அப்துல்லாஹ் :— " இதுவும் தங்களுக்குப் பிடித்த மில்லையாயின், ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் வழியைப் பின்பற்றுங்கள்! அவர்கள் அறுவரை நியமித்து, அவர்கள் தமக்குள் எவரையேனும் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார்கள். அவர்களுள் அவர்கள் புதல்வரோ, சகோதரரோ, வர்க்கத்தவரோ ஒருவருமிருக்கவில்லை."

அமீர் :—"இவைகள் தவிர்த்து வேறுவழியே கிடையாதோ ?"

அப்துல்லாஹ்:—"இல்லை."

இதைக்கேட்டு அமீர் முஆவியா (ரலி.) எழுந்து நின்று கொண்டு " தங்களிடம் கூறவேண்டியவைகளைக் கூறிவிட்டேன். நடப்பது நடந்தேதீரும். தாங்கள் ஒப்புக்கொண்டாலும் சரியே, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரியே" எனக் கூறிவிட்டு, மக்காவாசிகளிடம் யஜீதுக்காக வாக்கெடுத்தார்கள். பிறகு மதீனாவுக்குவந்து அங்கும் வாக்கெடுத்தார்கள். மக்காவிலிருந்து அவர்கள் புறப்படும் போது அப்துல்லாஹ் பின் உமர் (ரலி.) இவர்களிடம் " உங்களுக்குப் பிறகு ஜனங்கள் எவரை கலீபாவாக ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவரை நானும் ஒப்புக்கொள்வதாய் வாக்களிக்கத் தயாராயிருக்கிறேன். ஒரு நீக்ரோ அடிமையே யாயினும் ஜனங்கள் அன்னவனை கலீபாவாகத் தேர்ந்தெடுத்தால் நான் மாறு செய்யவும் மாட்டேன்; ஜனங்களைவிட்டுப் பிரிந்து விடவும் மாட்டேன்" எனக் கூறினார்கள்.

கிலாபத்தும், அரசாங்கமும்

அமீர்முஆவியா (ரலி.) அவர்களது அதிகாரகாலத்தைக் கவனிக்குங்கால் அதில் இஸ்லாமிய கிலாபத் சாதாரண அரசாங்கத்தின் கோலத்தைப் பூண்டு விட்டதை நிதரிசனமாய்க்

காணலாம். 'கிலாபத்தே ராஷிதா'வின் காலத்தில் கலீபாவுக்குள்ள உரிமை ஒவ்வொரு மனிதனுக்குமிருந்தது. அவர்களுள் அபிப்பிராயபேதமிருக்கவில்லை. மக்களுக்குள் சமத்துவத்தையும், அன்பையும் போதிக்கும் திருக்குர்ஆனின் திருவசனங்களது கருத்தே மாறுபடுமாறு அதற்குப் பொருள் செய்யப்படவில்லை. எனினும், அமீர் முஆவியா(ரலி.)வின் காலத்தில் இவையாவும் ஏற்பட்டன. மக்களின் சுயேச்சை போய், அடிமைத்தனமென்னும் விலங்கிடப் பெற்றனர். சிறுசிறு குற்றங்களைக் கொண்டும், சில சமயங்களில் குற்றமேயில்லாமலும் உதிரஞ்சிந்தப்பட்டது. பஸராவின் அதிபரான ஜியாத் இராத்திரியில் தனது ஆடுகளுடன் நகரத்தின் ஒரு மூலையில் நின்றிருந்த இடையனை "அவனது வாக்குமூலம் உண்மையானதே" என ஒப்புக்கொண்டும் கொன்றுவிட்டார். காரணமில்லாத இக்கொலைக்கு மாற்றமாய் ஒருவார்த்தையேனும் பேசுவதற்கு ஒருவருக்கும் தைரியங்கிடையாது போயிற்று. ஆனால், அதே பஸராவில் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களிடம் இதர விஷயங்களை போன்று "பிரயாணத்தொழுகையில் ஏன் கஸர் (தொழுகையைக் குறைத்துக் கொள்ளுதல். இங்ஙனம் குறைத்துக்கொள்ள இஸ்லாம் அனுமதிக்கின்றது) செய்யவில்லை?" எனக்கேட்க மதீனாவுக்கே பயணம் புறப்பட்டுச்சென்ற ஜனங்களுமிருந்தனர். பெருமானார் (ஸல்.) மக்களின் நேர்வழிக்கென காட்டிய மிம்பர் (மஸ்ஜிதுகளின் பிரசங்கமேடை) மீது இவ்வுலகத்தை விட்டுவிட்டுத் தனது நாயகனைச் சேர்ந்துவிட்ட ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை வெளிப்படையாக நிந்திக்கப்பட்டது. இஃது பொதுவாக முஸ்லிம்கள் யாவருக்கும், குறிப்பாக அலீ (ரலி.) அவர்களைச் சேர்ந்தோருக்கும் மனவருத்தத்தைத் தருவதாயிருந்துடன், எந்தப் பலனை முன்னிட்டு இதையொரு முக்கியமான

கடமையே போன்று செய்துவிட்டிருந்தார்களென்பதையும் அறியக்கூடவில்லை. இறுதியாக யஜீதை இளவரசாகத் தேர்ந்தெடுத்ததால் இஸ்லாமிய ஜனநாயகத்துவத்தின் அஸ்திவாரமே தகர்த்தெறியப்பட்டது.

"அக்காலத்தில் அரசாங்கம் மிகவும் விஸ்தீரணமாய் விட்டதால் மக்களை ஒருங்கு சேர்ப்பதற்கு வழியிருக்கவில்லை. ஆதலால் கிலாபத்தை விழைந்து நிற்போரின் பெருக்கத்திற்கேற்ப மக்களுள் குழப்பம் மிகுந்துவிடுமென்னும் அச்சமும் அதிகமாக விருந்தது. இத்தகையநிலைமையில் அமீர் முஆவியா (ரலி.) அதையொருவம்சத்திற்கே சொந்தமானதாகச் செய்துவிடல் குற்றமன்று. அக்காலத்து ஜனங்களின் அறிவீனத்தையும், நிலைமையையும் கவனித்துப் பார்க்குங்கால் யாவரின் முன்னேற்றுக்கும் ஒரேபுறத்திலிருப்பதே முக்கியம். அமீர்முஆவியா (ரலி.) அவர்கள் இளவரசரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தை மிகவும் கண்டித்து வந்த ஷீஆக்(ஹஸ்ரத் அலீ (ரலி.) 'அவர்களைச் சேர்ந்தோர்) களும் கிலாபத் ஒரே வம்சத்திற்கே சொந்தமானதெனவும், தகப்பனுக்குப்பிறகு பிள்ளைக்கும், பிள்ளைக்குப்பிறகு பேரனுக்கும் கிடைக்கவேண்டுமெனவுமே கொள்கின்றனரன்றோ?" வெனவும் சிலர் இதற்குக் காரணங்காண்பிக்கின்றனர். எனினும், ஜனநாயகத்துவத்தின் பலாபலன்களையும், அஃதல்லாது வம்சபரம்பரையான அரசுரிமையின் தீமைகளையும் கவனிக்குங்கால் இச்சமாதானம் ஒப்புக்கொள்ளப்படத் தக்கதன்று. இஸ்லாமிய முன்னேற்றத்தின் அஸ்திவாரம் மக்களுக்கு அது கற்பித்த சுயேச்சை, சமத்துவம் இவைகளின் உயிர்ச்சத்தாம். இதனால் ஒவ்வொருவனும் அரசனாகவே யிருந்தான். அமீர்முஆவியா (ரலி.) அவர்களின் இத்தகைய காரியங்களால் மக்கள் யாவரும் அடிமைத்தனத்தினால் பிணிக்கப்பட்டுப் போயினர்.

தேச வொழுங்கு முறைகள்

அமீர்முஆவியா (ரலி.) இளகிய உள்ளமுடையோ ராகவும், அமைதியாளராகவும், சமாதானத்தை விழைந்து நிற்போராகவுமிருந்தனர். அவர்களுக்கிருந்த அரசியலாற்றலை எவராலும் மறுக்கக்கூடவில்லை. அவர்கள் காலத்தில் எல்லா மாகாணங்களிலும் அமைதி நிலவியிருந்தது. இஸ்லாமின் வன்மை அதிகமாயினது. கடற்படையின் காரணமாய் ரூமீகளை வென்றார்கள். அவர்கள் எப்பொழுதும் மிக்க ஜாக்கிரதையுடன் அரசாங்கக்கடமைகளைப் புரிந்து வந்தார்கள். கைப்பற்றப்பட்ட நாடுகள் மிகவும் விஸ்தீரணமாய் விட்டதால் தூரதேசங்களுடன் கடிதப்போக்குவரவுக்கு மிகவும் காலதாமத மேற்பட்டு வந்ததினிமித்தம் அவர்கள் தபால்இலாகாவையும் நிறுவினார்கள். ஒவ்வொரு பன்னிரண்டு மைல்களுக்கொருவிடத்தில் ஒரு குதிரைவீரன் நின்றிருப்பான். கடிதப்பைகள் இவர்கள் மூலமாய்த் தேசத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கும் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தன. அரசாங்க முத்திரையும் அவர்களாலேற்படுத்தப் பெற்றதே. இஃது ஏற்படுவதற்குக் காரணம் இவர்கள் ஒருதடவை அம்ரு பின் ஜுபைர் என்பாருக்கு இலக்ஷம் திர்ஹம் கொடுக்கும்படி எழுதியிருந்தார்கள். அன்னார் அதை இரண்டுலக்ஷமாக்கி கஜானாவில் வசூலித்துக் கொண்டனர். இக்கணக்கு சமிர்ப்பிக்கப்பட்டபோது தாம் ஒருலக்ஷமே கொடுக்க ஆக்ஞாபித்திருப்பதாய்க்கூறி, அம்ரையழைத்துக் கைதுசெய்து, ஒருலக்ஷம் திர்ஹம் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். இஃது தொடுத்து 'அரசாங்கமாளிகையிலிருந்து வெளிவரும் கட்டளைகள் மீதெல்லாம் முத்திரையிடப்படவேண்டு' மெனவும், 'அதற்கு ஒரு நகலெடுத்துக்கொள்ளவேண்டு'மெனவும் விதித்து விட்டார்கள். அவர்கள் காலத்தில் ஷாம் தேசத்துக்கணக்கு

வழக்குகள் ஸுர்யானீபாஷையிலிருந்தன. ஸர்ஜூன் ரூம் தேசத்துத் தலைநகராயிருந்தது.

முஆவியா (ரலி.) அவர்களின் இல்லம்

இவர்களின் முதல் மனைவி மைஸூன் பின்து பஹ்தல் என்பாராயிருந்தார். இன்னாருக்கு யஜீத் ஜனித்தார். இரண்டாவது மனைவி பாக்தாபின்து கர்தா கௌபலீ என்பாருக்கு அப்துர் ரஹ்மான், அப்துல்லாஹ் என்னும் இருபுத்திரர்கள் ஜனித்தார்கள். அப்துர்ரஹ்மான் குழந்தைப்பருவத்திலேயே மரணமடைந்துவிட்டார். பாக்தா மரணமடைந்தபிறகு அவரது சகோதரி கத்வா என்பாரை மணந்துகொண்டார்கள். 'கப்ரஸ்' யுத்தத்தில் அவர்களுடன் இவரிருந்தார். அங்கேயே காலமடைந்துவிட்டார்.

மரணம்

அமீர்முஆவியா (ரலி.) ஜமாதில் ஆகிர் மாதத்தில் வியாதியடைந்தார்கள். ஏதோவொரு முக்கிய காரணத்தை முன்னிட்டு யஜீத் வெளியே சென்றிருந்தார். 'இனி பிழைப்பது துர்லபம்' என்ற நம்பிக்கை ஏற்படவே, லஹ்ஹாக் பின் கைஸ், முஸ்லிம்பின் உக்பா இவ்விருவரையும் கொண்டு யஜீத்துக்காக வஸிய்யத் (மரணவாக்குமூலம்) எழுதுவித்தார்கள். அதன்சாரம் வருமாறு:—

"நான் உனக்காக எல்லாப் பாதைகளையும் ஒழுங்குபடுத்தி, அரபிகளை வழிபடுவோராகவும், எதிரிகளைத் தோல்வியடைந்தோராகவும் செய்துவிட்டேன். ஹிஜாஸ் வாசிகளைக் கவனித்து வரவேண்டும். அதுவே நாம் ஒதுங்குமிடம். இராக்வாசிகள் ஒவ்வொரு தினமும் அதிகாரியை நீக்கிவிடக் கட்டளையிட்டாலும் அதையொப்புக்கொள்ள வேண்டியது. ஒரு அதிகாரியை நீக்கிவிடுவது உனக்கு எதிர்ப்பில் ஒருலக்ஷம்வாட்கள் உறையைவிட்டு வெளிவருவதைவிட மிக்க எளிதானதே. ஷாம்வாசிகளைக் கவனித்தல்வேண்டும். இவர்கள் உனக்கு

உண்மையான உதவியர்களாயிருப்பார்கள். எதிரிகளை எதிர்ப்பதற்கு அவர்களையே நியமிக்கவேண்டும். அவர்களை ஏதோவொரு காரியத்தை முன்னிட்டு வெளியேயனுப்பினால் அஃது முடிந்ததும் ஷாமுக்குக் கூப்பிட்டுக்கொள்ளவேண்டும். இன்றேல் அவர்கள் குணம் மாறிப்போமென்ற கவலையிருக்கின்றது. கிலாபத்தின் விஷயத்தில் நான்குபேரைத் தவிர்த்து உனக்கு எதிர்ப்பில் வேறுயாரும் வருவார்களென நான் கருதவில்லை. அப்துல்லாஹ்பின் உமர் (ரலி.), ஹுஸைன்பின் அலீ (ரலி.), அப்துல்லாஹ்பின் ஜுபைர் (ரலி) அப்துர்ரஹ்மான்பின் அபீபக்ர் (ரலி.) இந்நால்வரே அன்னார். அப்துல்லாஹ்பின் உமர் (ரலி.) இகலோக வாழ்வை வெறுக்கும் தெய்வபக்தர். யாவரும் உன்னைத் தேர்ந்தெடுக்கும்போது பொதுமக்களுக்கு விரோதம் புரிய மாட்டார்கள்; உன்னையே தேர்ந்தெடுத்துவிடுவார்கள். ஹுஸைன்பின் அலீ (ரலி.) அவசரபுத்தி படைத்தோராவர். இராக்வாசிகள் அவசியம் தூண்டிவிட்டு உனக்கெதிர்ப்பில் அவர்களைக் கொண்டுவருவார்கள். இவ்விதமேற்பட்டு, நீ அவர்களை வெற்றிக்கொண்டுவிட்டால் அவர்களை மன்னித்துவிடவேண்டியது. அன்னார் நமக்குச் சொந்தக்காரராயும், பெருமானார் (ஸல்.) அவர்களின் பௌத்திரராயுமிருக்கின்றனர். அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். எனினும், குள்ளநரியைப்போல் தன்னை வெளிக்குக் காட்டிக்கொண்டு, சிங்கத்தைப்போல் எதிர்க்கக்கூடியவர் அப்துல்லாஹ்பின்ஜுபைர் (ரலி.) ஒருவரே. அவரை வெற்றிகொண்டுவிட்டால் அவரது குடலையும் துண்டித்துவிடவேண்டியது. பொதுமக்களின் உதிரம் சிந்தப்படாதிருக்க முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டியது" (N. B.—அப்துர்ரஹ்மான்பின் அபீபக்ர் (ரலி.) முஆவியா (ரலி.) அவர்களுக்கு முன்பே மரணமடைந்துவிட்டனர்.)

இறுதியாக கி. பி. 680-ம் வருஷம், ஏப்ரல் மாதம், 7-ந் தேதிக்குச் சரியான ஹி. 60-ம் ஆண்டு, ரஜப் மாதம், முதல் தெய்தி அவர்கள் மரணமடைந்தார்கள். லஹ்ஹாக்

பின் கைஸ் என்பார் அவர்களது கபனை(நல்லடக்கம் செய்யப்படும் புடவையை)க் கரத்திலெடுத்துக் கொண்டு மிம்பர் மீதேறி, ஜனங்களை முன்னோக்கி

"முஆவியா (ரலி.) அரபிகளின் தலைவராகவும் அரப்தேசத்திற்கே பக்கபலமாகவும், அரபிகள் பெருமையடிக்கத் தக்கோராகவுமிருந்தார்கள். அவர்கள் மூலமாய் மக்களைவிட்டும் குழப்பத்தை அல்லாஹு தஆலா எடுத்துவிட்டான். அல்லாஹ் அவர்களை அதிபராக்கினான்; அவர்கள் கரத்தில் வெற்றியை யளித்தான். இன்று அவர்கள் இவ்வுலகத்தை விட்டும் சென்று விட்டார்கள். எனது கரத்தில் இருப்பது அவர்களின் கபன். இதிலேயே யவர்கள் நல்லடக்கம் செய்யப்படுவார்கள். இப்பொழுது அவர்களும், அவர்களின் கிரியைகளும் அல்லாஹ்வின்புறம் சாட்டப்படுகின்றார்கள்"

எனக்கூறினார். பிறகு லஹ்ஹாக் அவர்களின் ஜனாஸாத் தொழுகையை நடாத்தினார். அவர்கள் திமஷ்கில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். யஜீத் பன்னாட்களுக்குப் பிறகு வந்து அவர்களின் கல்லறை (கப்ர்) மீது ஜனாஸாத் தொழுதார்.

முந்தின யஜீத்.

அமீர் முஆவியா (ரலி.) ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் புறத்தால் ஷாம் தேசம் முழுமைக்குமே அதிபரானபோது ஹி. 26-ம் ஆண்டில் யஜீத் ஜனித்தார். இவரது அன்னையாரின் நாமம் 'மைஸூன் பின்து பஹ்தல்' என்பதாம். யஜீத் அரசாங்கத்தில் பரிபாலிக்கப்பட்டார். துவக்கத்திலிருந்தே அமீர் முஆவியா (ரலி.) இவருக்கு அதிகாரம், அரசுரிமை இவைகளைக் கற்பித்துவந்தார்கள். இரண்டு தடவைகளில் ஹஜ்ஜின் தலைவராய் நியமித்தார்கள். ஒரு தடவை கோடைகாலத்துச் சேனையின் தளகர்த்தராய் நியமித்து ரூமிகளை எதிர்ப்பதற்காய் அனுப்பிவைத்தார்கள். 'குஸ்துன் துனிய்யா'வின் புறம் அனுப்பிவைத்த சேனையிலும் இவர் கலந்திருந்தார். கவி கூறுவதில் திறமையடைந்திருந்தார். யஜீதுக்கு வேட்டை மீதும், வேட்டை நாய்கள் மீதும் பிரியமதிகம். இதை ஜனங்கள் குறை கூறிவந்தார்கள்.

கிலாபத்

அமீர் ஆவியா (ரலி.) தமது வாழ்நாட்களிலேயே தூதுவர்களுடனும், மாகாணத் தலைவர்களுடனும், கலந்தாலோசித்து, யஜீதை இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். எனினும் மதீனாவின் சிறப்புப்பெற்ற தலைவர்களான அப்துல்லாஹ் பின் உமர், அப்துல்லாஹ் பின் ஜுபைர், இமாம் ஹுஸைன், அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி....) இவர்கள் இதை எதிர்த்தார்கள். அமீர் முஆவியா (ரலி.) அவர்களுக்குப் பிறகு யஜீத் கலீபாவானவுடன் தனது முதற் கவனத்தை

இப்பெரியார்களிடம் வாக்குப்பெறுவதிலேயே செலுத்தி, மதீனுவின் அதிபரான வலீத் பின் உத்பாபின் அபீஸுப் யான் என்பாருக்கு "தாமதம் செய்யாமல் இவர்களை யழைத்து வாக்கு வாங்கிக் கொள்ளுங்கள்!" என்றெழுதினுர். வலீத் முதலில் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களை யழைத்து, அவர்களுக்கு யஜீதின் கடிதத்தைக் காண்பித்து வாக்கு கேட்டார். அவர்கள் அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் மரணத்தைச் செவியுற்று "இன்ன லில்லாஹி வஇன்ன இலைஹி ராஜிஊன் (உண்மையாகவே நாம் அல்லாஹ்வுக்கே சொந்தமாயிருக்கிறோம். இன்னும் நிச்சயமாகவே நாம் அவன் புறமே திரும்புவோம்)" எனக்கூறிய பின்பு அவர்கள் நன்மைகளைக் கூறிவிட்டு, அவர்கள் விஷயத்தில் நற்பிரார்த்தனை செய்தார்கள். பிறகு "என் போன்றவன் இரகசியத்தில் வாக்கு (Vote=பைஅத்) கொடுக்கமாட்டான். நீங்கள் யாவரையும் அழைக்கும் போது என்னையும் அழைத்தால் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்" எனக்கூறினுர்கள். அமைதியை விரும்பும் வலீத் இதையொப்புக் கொண்டார். இதையறிந்த அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) மதீனுவிலிருந்து மக்காவுக்குச் சென்று விட்டார்கள். இதற்குப் பிறகு இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும் தமது குடும்பத்துடன் மக்காவுக்குச் சென்று விட்டார்கள். முஹம்மத் ஹனபிய்யா இவர்களுக்கு என்னதான் எடுத்துரைத்தும் இவர்கள் தடைப்படவில்லை. யஜீதுக்கு யாவரும் பைஅத் செய்வதைக்கண்ட அப்துல்லாஹ் பின் உமர் (ரலி.), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) இருவரும் பைஅத் செய்துவிட்டார்கள்.

'கர்பலா'வின் சம்பவம்

இமாம் ஹுஸைன் (ரலி.) மக்காவுக்கு வந்த பின்பு அவர்களிடம் ஒரு கூட்டமிருந்துகொண்டிருந்தது. அப்துல்

லாஹ் பின் ஜுபைர் (ரலி.) பகலெல்லாம் கஃபாவைப் பிர தக்ஷணம் (தவாப் செய்வதிலும், தொழுவதிலும் போக்கு வார்கள். எப்பொழுதாவது இமாம் ஹுஸைன் (ரலி.) அவர் களிடம் சென்று, யோசனையிற் கலந்து கொள்வார்கள். கூபாவாசிகள் அமீர் முஆவியா (ரலி.) இறந்ததையும், யஜீத் கிலாபத்தை ஏற்றுக்கொண்டதையும் செவியுற்று ஸுலை மான் பின் ஸரத் என்பாரின் இல்லத்தில் ஒருங்கு கூடி "யஜீ தின் கிலாபத்தை யங்கீகரிக்கக்கூடாது. மேலும், இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களையழைத்து நமக்கு கலீபாவாக நியமித்துக் கொள்ளவேண்டும்" எனத் தீர்மானித்து, அவர்களுக்கு நிரூபங்கள் விடுக்கத் தொடுத்தார்கள். அவர் கள் ஹுஸைன் (ரலி.) அவர்களை யழைத்து 150-நிரூபங்கள் எழுதவும் இறுதியாக இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள்

"நான் உங்களது கருத்தையறிந்துகொண்டேன். எனது சகோ தரரும், எனது நம்பிக்கைக்கு மிக்க பாத்திரமானவருமான முஸ்லிம் பின் அகீல் என்பாரை யுங்களின் வார்த்தைகளைக் கேட்டு, நிலைமையையறிந்து உண்மையை எனக்குத் தெரிவிப் பதற்காய் உங்களிடம் அனுப்புகிறேன். கூபாவின் தலைவர் களும், யோசனையாளர்களும் நான் கிலாபத்தை ஏற்றுக் கொள்ள விரும்புவதா யன்னார் தெரிவித்தால் நான் வருவேன். திருக்குர்ஆனின்படி யொழுகுவோனும், பெருமானாரின் முன்மாதிரியை நிலைநாட்டுவோனுமே கலீபாவாவா னென்ப துண்மை"

எனப்பதிலளித்தார்கள். பிறகு முஸ்லிம் பின் அகீல் (ரலி.) அவர்களையொரு குறிப்பிட்ட பாதைவழியாய் ஒரு வருக்கும் தெரியாது செல்லவும், அவ்விடத்து ஜனங்கள் கூறுவதேபோல் தம்மை கலீபாவாகத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் ஒற்றுமையுடனிருந்தால் தமக்குத் தெரிவிக்கவும் அனுப்பிவைத்தார்கள். முஸ்லிம் (ரலி.) அங்குசென்ற போது 'ஷீஆ(அலீ (ரலி.) அவர்களைச் சேர்ந்தோர்)'க்கள்

இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு போட்டிப் போட்டுக் கொண்டு முன்வருவதைக்கண்டு இவர்கள் "இவ்விடத்து மக்கள் யாவரும் தாங்கள் கலீபாவாவதை விரும்புகிறார்கள். தாங்கள் உடனே புறப்பட்டுவாருங்கள்" என்றெழுதினார்கள்.

அக்காலத்தில் நுஃமான் பின் பஷீர் (ரலி.) கூபாவின் அதிபராயிருந்தனர். கூபாவாசிகள் முஸ்லிம் (ரலி.) அவர்களின் கரத்தில் பைஅத் செய்வதைச் செவியுற்று, அவர்கள் ஜாமிஃமஸ்ஜிதில் யாவரையுமழைத்து "நீங்கள் மக்களுள் பிளவை யுண்டுசெய்ய முயற்சியாதீர்கள். இதன் பலன் அழிந்துபடுவதே என்பதை நீங்களே யறிவீர்கள்" எனக்கூறினார்கள். இவர்கள் தெய்வபக்தி மிகுந்தோராயும், சமாதானப் பிரியராயு மிருந்ததால் எத்தகைய கஷ்டமும் விளைவிக்க முன்வரவில்லை. மேலும் "ஜனங்கள் சண்டையிட முன்வராதவரை நான் முன் செல்லமாட்டேன்" எனக்கூறிவிட்டார்கள். 'பனீ உமையா' வர்க்கத்தைச் சேர்ந்தோரில் ஒருவன் இவர்களிடம் "தாங்கள் இவ்விதமிருப்பது சரியன்று. இதனால் தாங்கள் பலவீனரா யிருப்பதாகவே அறியக்கிடக்கின்றது" எனவும் இவர்கள் "பாவத்தில் பலவீனமாயிருப்பதால் பாதகமில்லை. இறைவனுக்கு வழிபடுவதிலேயே பலத்துடனிருக்க வேண்டும்" எனக் கூறிவிட்டார்கள். அம்மனிதன் "இங்கு இமாம் ஹுஸைன் (ரலி.) உடையசகோதரர் முஸ்லிம் பின் அகீல் வந்திருக்கிறார். இங்குள்ளோர் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்காக அவர்கரத்தில் பைஅத் செய்கிறார்கள். நீங்கள் கூபாவை யுங்களுக்குச் சொந்தமாய் வைத்திருக்கக் கருதினால் இதைத்தடுக்கக் கூடிய வேறு அதிபரை நியமியுங்கள். நுஃமானால் ஒன்றும் செய்யமுடியாது" என யஜீதுக்கு எழுதினான். யஜீத் நுஃமான் (ரலி.) அவர்களை நீக்கிவிட்டு

அப்துல்லாஹ் பின் ஜியாத் என்பாரை பஸராவுடன் கூபாவுக்கும் அதிபராக்கி "உடனே அங்கு சென்று முஸ்லிமைத் துரத்திவிடுங்கள்! அல்லது கொன்றுவிடுங்கள்!" எனக் கட்டளையிட்டார். அப்துல்லாஹ் கூபாவுக்கு வந்து

"நான் வழிபடுவோர்மீது கிருபை செய்வோனாகவும், குழப்பக்காரர்களுக்குச் சத்துருவாகவுமிருக்கிறேன். ஒவ்வொரு தெருவின் தலைவர்களும் தமது தெருவாசிகள் பெயர்களைத் தெரிவிக்க வேண்டும். அன்னியரோ, சந்தேகப்பட்டவரோ இருந்தால் உடனே என்னிடம் கொண்டுவரவேண்டும். ஒவ்வொருவனும் தன் கூட்டத்திற்குப் பொருப்பாளியாவான். எத்தெருவிலேனும் சதியாளன் கிடைத்தால் அத்தெருவின் தலைவன் தனது வீட்டு வாயற்படியிலேயே தூக்கிலிடப்படுவான்"

எனப் பறையறிவித்தார். இவ்விளம்பரத்தை யறிந்த முஸ்லிம்(ரலி.)ஹானீ பின் உர்வா என்பாரின் இல்லத்தில் அடைக்கலம் புகுந்தனர். அவர் கவனியாமல் அடைக்கலம் கொடுத்துவிட்டார். இதையறிந்த இப்னுஜியாத் (அப்துல்லாஹ்) அவரையழைத்து "உங்களில்லத்தில் ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாயும், சதிசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாயும் கேள்விப்படுகிறேன். நீங்கள் கலீபாவுக்குச் சத்துருவானீர்கள். முஸ்லிமுக்கு அபயமளித்திருக்கிறீர்கள். அவரை எம்மிடம் ஒப்புவித்து விடுங்கள்" எனக் கூறவும் ஹானீ கெட்டபெயர் ஏற்படுவதற்கஞ்சி மறுத்துவிட்டார். இப்னுஜியாத் அவரை யடித்து, கைதுசெய்துவிட்டார்.

இதையறிந்த முஸ்லிம் "யாமன்ஸூர்" எனச் சப்தமிட்டார். அவர் கரத்தில் பைஅத் செய்திருந்த 18,000-ஜனங்களில் 4,000-ஜனங்கள் அப்பொழுது சேர்ந்துவிட்டார்கள். இவர்கள் அரசாங்க மாளிகையைச் சூழ்ந்துகொண்டார்கள். இப்னுஜியாதிடம் அப்பொழுது 30-சிப்பாய்களும், கூபா

வின் தலைவர்களிற் சிலரும் இருந்தார்கள். யாவரும் சேர்ந்து 50-பேருக்குக் குறைவாகவே யிருந்தார்கள். இப்னு ஜியாத் கூபாவின் தலைவர்களிடம் "உங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரில் முஸ்லிம்களைச் சேர்ந்து போயினவர்களுக்குப் போதித்து, இதைவிட்டும்விலகிப்போகச் செய்யுங்கள்!" எனவும் அவர்கள் தமது வர்க்கத்தவரைப் பயமுறுத்தினுர்கள். பிறகு அபயக்கொடி நாட்டினுர்கள், ஜனங்கள் முஸ்லிம் (ரலி.) அவர்களை விட்டுவிலக வாரம்பித்தார்கள். இறுதியாக அவர்களுடன் 30-பேர்களே எஞ்சியிருந்தார்கள். இவர்கள் வியப்புற்றவர்களாய் ஒருவீட்டில் ஒளிந்திருந்தார்கள். இதையறிந்த இப்னுஜியாத் முஹம்மத் பின் அஷ்அத் என்பவரை யனுப்பி முஸ்லிம் (ரலி.) அவர்களைக்கைது செய்யச்சொன்னுர். இன்னுர் சென்ற போது இவர்களிடம் முஸ்லிம் (ரலி.) "நீங்கள் எனக்கு அபயமளிக்கக் கூடாமலிருக்கிறீர்களென்பதை யானறிவேன். எனினும் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு எனது நிலைமையைத் தெரிவித்து, அவர்களை இங்கு வர வேண்டாமெனவும், அவர்கள் புறப்பட்டிருந்தாலும் இடைவழியிலிருந்து திரும்பிவிடும்படியும், கூபாவாசிகள் நம்பிக்கைக்குத் தக்கோரல்லரெனவும், அவர்களை நம்ப வேண்டாமெனவும் தெரிவித்துவிடக் கோருகிறேன். இந்த உதவிட்டும் நீங்கள் செய்யும்படிப் பிரார்த்திக்கிறேன்" எனக் கேட்டுக்கொண்டதை முஹம்மத் அவர்களும் ஒப்புக்கொண்டனர். இப்னுஜியாத் முஸ்லிம் (ரலி.) அவர்களையும், ஹானீ அவர்களையும் கொன்றுவிட்டார்.

இந்தப்புறத்தில் முஸ்லிம் (ரலி.) உடையநிரூபம் கிடைக்கப்பெற்றதும் இமாம் ஹுஸைன் (ரலி.) மக்காவிலிருந்து கூபாவுக்குப் புறப்பட்டு விட்டார்கள். இவர்களின் நலனைக் கருதுவோர் இவர்களைத் தடுத்தனர். யாவருக்கும்

முந்தி அப்துர்ரஹ்மான் பின் ஹாரித் (ரலி.) வந்து "நீங்கள் இராக்குக்குச் செல்வதாய்ப் பிரபலமாயிருக்கின்றது. நீங்கள் அங்கு செல்வது ஆபத்திற்கிடமானதெனவே கருதுகிறேன். அங்கிருக்கும் இராக்தலைவரிடம் பொக்கிஷமும், பட்டாளமுமிருக்கின்றது. ஜனங்கள் செல்வத்திற்கு அடிமைப்பட்டுவிடுவார்களென்பதைத் தாங்களறிவீர்கள். தங்களைக் கூப்பிட்டவர்களே தங்களை எதிர்க்கமுன்வரவும் கூடும்" என விண்ணப்பித்துக் கொண்டார்கள். இமாம் ஹுஸைன் (ரலி.) இவர்களின் நற்போதனைக்காய் நன்றி செலுத்திவிட்டு, இவர்களை யனுப்பிவிட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) அவர்களும் வந்து "தாங்கள் கூபாவுக்குச் செல்ல விரும்புவதாய்க் கேள்விப்படுகின்றேன்" எனவும் இமாம் ஹுஸைன் (ரலி.) "இன்று நாளைக்குள் புறப்பட்டு விடுவேன்" என்றார்கள். அவர்கள் "கூபாவாசிகள் அங்குள்ள தலைவரை நீக்கிவிட்டுத் தமது கைவசத்தில் நகரத்தை வைத்திருக்கிறார்களா?' வெனக் கேட்கிறேன். உங்களை யழைப்போர் சண்டைக்கே யழைக்கின்றனரென்பதுண்மை. அதிபர்களும், உத்தியோகஸ்தர்களுமிருக்க, எவனும் தங்களுக்குதவி செய்ய முன்வர முடியாது. தங்களை யாதரிக்கும் ஜனங்களே தங்களது வாக்குத்தத்தத்திற்கு மாறு செய்து, தங்களையே எதிர்ப்பார்களென்றஞ்சுகிறேன்' என்றார்கள். இமாம் ஹுஸைன் (ரலி.) "நான் அல்லாஹ்விடம் அனுமதி பெற முயற்சிப்பேன்" எனக் கூறிவிட்டார்கள்.

மறுதினம் மீண்டும் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) சென்று "நான் எனதுள்ளத்திற்கு என்னதான் எடுத்தோதினும் பொறுமை ஏற்படவில்லை. 'தாங்கள் கருதிச் சென்ற வழியில் எவ்விதத்தாலும் தங்கள் உயிருடன் திரும்பும் வழியில்லை' யென்றஞ்சுகிறேன். இராக்வாசிகள் வாக்

குறுதியில் ஸ்திரம் பெற்று நிற்காதவர்கள். அவர்களைக் கண்டு ஏமார்ந்து போகவேண்டாம். நீங்கள் செல்லவேண்டுமாயின் "கூபாவின் அதிபரை நீக்கிவிட்டு, சேனையைக் கைவசப்படுத்திக்கொள்ளுங்கள் !" என உங்களை யழைப்போருக்கு எழுதுங்கள். பிறகு செல்லுங்கள். தாங்கள் இராக்குக்குப் பதிலாக எமனுக்குச் செல்வதே நன்றெனக் கொள்கிறேன். அங்கு தங்கள் பிதா அவர்களைச் சேர்ந்தோர் அதிகமாக விருக்கின்றனர். அஃது கோட்டைகளும், மலைகளும் அதிகமுள்ளதும், மிகவும் விஸ்தீரணமானதுமான தேசம். அங்கு சென்று ஒவ்வொரு புறத்திலும் தங்களது பிரசாரகர்களை யனுப்புங்கள் ! தலைவர்களுடன் கடிதப் போக்குவரவு செய்யுங்கள் ! அங்கு வெற்றி கிடைக்குமென அதிகமான நம்பிக்கைக் கிடமிருக்கின்றது. ஹிஜாஸ் வாசிகள் தங்களையே தலைவராய்க் கொள்வதால் இங்கேயே இருந்து விடுவதே சாலவும் சிறந்ததாம்" என்றார்கள். எனினும், ஹுஸைன் (ரலி.) இவர்களின் வார்த்தைகளைக்கவனியாது இராக்குக்குப் பயணமாவதிலேயே ஸ்திரம்பெற்றுவிட்டார்கள். அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) அவர்கள் "தங்களை இந்தப் பிரயாணத்தைவிட்டும் தடுப்பதற்காக நான் தங்கள் ஒட்டகத்தின்முன்பு படுத்துக் கொள்ளவும் இசைகிறேன். எனினும், தாங்கள் அப்பொழுதும் ஒப்புக்கொள்ள மாட்டீர்களென்றே கருதுகிறேன். குறைந்த பக்ஷம் குடும்பத்தையேனும் கூட்டிச் செல்லாதீர்கள் ! 'ஹஸ்ரத் உத்மான் (ரலி.) தமது மக்களுக்கு முன்பு கொல்லப்பட்டதேபோன்று, தங்களது நிலைமையும் ஏற்பட்டுவிடுமோ !' வென்றஞ்சுகிறேன்" என்றார்கள். இமாம் ஹுஸைன் (ரலி.) இவர்களின் எந்த யோசனையையும் ஏற்றுக்கொள்ளாமல் குடும்பத்துடன் கூபாவுக்குப் பிரயாணப்பட்டு விட்டார்கள். இடைவழியில் அரப் தேசத்

4

திய பிரசித்திபெற்ற கவிஞன் பர்ஜதக் சந்தித்தான். அவன் கூபாவிலிருந்து வந்துகொண்டிருந்தான். அவனிடம் கூபாவின் நிலைமையைக் கேட்டதற்கு "கூபாவாசிகளின் உள்ளங்கள் தங்கள்மீதே சார்ந்திருக்கின்றன. எனினும், அவர்களின் ஆயுதங்கள் 'பனீ உமையா'க்களைச் சேர்ந்திருக்கின்றன" வென்றான்.

பின்னும் கொஞ்சம் முன்னேறிச் சென்ற பிறகு மதீனாவிலிருந்து அப்துல்லாஹ் பின் ஜஃபர் (ரலி.) அவர்களின் நிரூபன் ஓடிவந்து அவர்களின் நிரூபத்தைக் கொடுத்தான். அதில் அவர்கள் "அல்லாஹ்வின் சத்தியமாய்த் தாங்கள் திரும்பிவரக் கோருகிறேன்" என்றெழுதியிருந்தார்கள். இத்துடன் மதீனாவின் அதிபரது நிரூபமும் சேர்க்கப்பட்டிருந்தது. அதில் அன்னார் "தாங்கள் மதீனாவுக்கே திரும்பிவிடுங்கள்! இங்கு தங்களுக்குப் பாதுகாப்பிருக்கின்றது" என்றெழுதியிருந்தார். எனினும், ஹுஸைன் (ரலி.) திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார்கள். பின்னுங்கொஞ்சம் சென்ற பின்பு இராக்கிலிருந்து வந்துகொண்டிருந்த அப்துல்லாஹ் பின் முதீஃ (ரலி.) சந்தித்தார்கள். அவர்களும் "நான் அல்லாஹ்வை முன்வைத்துக் கூறுகிறேன். தாங்கள் திரும்பிவிடுங்கள்! இராக்வாசிகளின் வஞ்சக வலையில் வீழ்ந்து விடாதீர்கள்! பனீ உமையாக்களிடமிருந்து தாங்கள் இலாபத்தைப் பெற முயற்சிப்பீர்களாயின், அவர்கள் உண்மையாகவே தங்களைக் கொன்றுவிடுவார்கள். பிறகு எப்போதும் 'ஹாஷிம்' குலத்தவனையோ, அரபியையோ, முஸ்லிமையோ கொல்வதற்கஞ்சமாட்டார்கள். எனவே தாங்களும் அழிந்துபோவதுடன் குரைஷ்களின் மதிப்பு, அரபிகளின் மதிப்பு, இஸ்லாமின் மதிப்பு இவைகளை யழித்துவிடாதீர்கள்!" எனக் கூறினார்கள். எனினும், ஹுஸைன் (ரலி.) இவர்களின்

வார்த்தைகளை யொப்புக்கொள்ளவில்லை. 'தஃலபிய்யா' வென்னுமிடத்தைச் சேர்ந்தபோது முஹம்மத் பின் அஷ் அத் என்பாரின் கிருபமும், முஸ்லிம் பின் அகீல் (ரலி.) அவர்கள் கொல்லப்பட்ட செய்தியும் கிடைத்தது. அப்போது அவர்களுடனிருந்தோரிற் சிலர் "தற்போது செல்வது கூடாது. கூபாவில் எத்தகைய பாதுகாப்பாளரும், உதவியாளரும் இல்லாதுபோயினர். முஸ்லிம் அவர்களுக் கேற்பட்டதே நமக்கும் ஏற்படலாமென்றஞ்சுகிறோம்" எனவும் 'பனீ அகீல்' வம்சத்தைச்சேர்ந்தோர் "யாம் ஒருக் காலும் திரும்ப மாட்டோம். ஒன்று முஸ்லிமுக்காக பழிக் குப்பழி வாங்குவோம். அல்லது அன்னாரைப்போல் உயிரைக் கொடுப்போம்" எனக் கூறிவிட்டார்கள். எனவே, அந்தக்கூட்டம் முன்னேறிச் சென்றது. அன்னிய வர்க் கத்து ஜனங்கள் சிறுகச்சிறுக நீங்கிச் சென்றுவிட்டார்கள். சொந்தக்காரர்களில் ஆவியைத் திரணமாய் மதிப்போர் மட்டும் கூடவிருந்தார்கள்.

'ஷராப்' என்னுமிடத்தைவிட்டுப் புறப்பட்டபோது ஹுர் பின் யஜீத் தமீமீயின் தலைமையின் கீழ் ஓராயிரம் குதிரை வீரர்கள் முன்வந்தார்கள். ஹுஸைன் (ரலி.) "உங்களுக்கு கலீபா இல்லையென நீங்கள் என்னை யழைத்த பின்பே நான் உங்களிடம் வந்தேன். தற்போதும் தாங்கள் அதே வார்த்தையின்மீது ஸ்திரமாயிருந்தீர்களாயின் நான் உங்கள் நகரத்திற்குள் பிரவேசிக்கிறேன். இன்றேல், நான் எங்கிருந்து புறப்பட்டேனே அங்கேயே திரும்பிவிடுகிறேன்" என்றார்கள். அந்த ஜனங்கள் எதும் பதிலளிக்கவில்லை. எனினும் ஹுர் "தங்களுடனேயே யிருந்து, கூபாவில் இப்னுஜியாதின் முன்பு தங்களை யழைத்துச் செல்லும்படி நாங்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்" என்றார். ஹுஸைன் (ரலி.) "அங்ஙனமாயின் அதைவிட இறந்து

விடுவதே நன்று" என்றார்கள். பிறகு தமது சகாக்களை விளித்துத் திரும்பிச் செல்லும்படிக் கட்டளையிட்டார்கள். எனினும் ஹுர் திரும்பிச் செல்லாது தடுத்தார். ஹுஸைன் (ரலி.) வடக்கே சென்று 'நைனவாஸ்' என்னுமிடத்தைச் சேர்ந்தார்கள். அங்கு அம்ருபின்ஸஅதின் தலைமையில் இப்னுஜியாதால் அனுப்பப்பெற்ற மற்றொரு சேனை ஹுஸைன் (ரலி.) அவர்களை எதிர்ப்பதற்கு வந்துசேர்ந்தது. அம்ரு சிலரைபனுப்பி "தாங்கள் என்ன நோக்கத்துடன் இங்கு வந்திருக்கிறீர்கள்?" என ஹுஸைன் (ரலி.) அவர்களைக் கேட்கவும் அவர்கள் "கூபாவாசிகள் பல தடவைகளில் கடிதமெழுதி என்னை யழைத்ததால், நான் இங்கு வந்திருக்கிறேன். நான் வருவதை ஜனங்கள் விரும்பவில்லையாயின் திரும்பிச் சென்றுவிடுகிறேன்" எனப் பதிலளித்தார்கள். அம்ரு இதை இப்னுஜியாதுக்கு எழுதியதற்கு அவன் "நமது கைவசம் அகப்பட்டுக்கொண்ட பின்பு தப்புவது அசாத்தியமே" என்றெழுதிவிட்டான்.

இதற்குப் பிறகு அவன் அம்ருக்கு ஹுஸைன் (ரலி.) அவர்கள் முன்பு யஜீதின் பைஅத்தைப் பிரஸ்தாபிக்கும்படியும், அவர்கள் பைஅத் செய்துவிட்டால் தான் உசிதமெனக் கருதும்ஆணையை எதிர்பார்த்திருக்கும்படியும், இன்றேல் அக்கூட்டத்தவர்களுக்குக் குடிதண்ணீரை நிறுத்திவிடும்படியும் கட்டளையிட்டான். பிறகு ஷமர்தில்ஜௌஷன் என்பானையும் ஒரு சேனையுடன் அனுப்பிவைத்தான். இமாம் ஹுஸைன் (ரலி.) "நாங்கள் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே திரும்பிச் செல்லவிடுங்கள்! அல்லது எதோவொரு எல்லைப்புறத்திற்குச் செல்ல அனுமதியுங்கள்" எனக் கூறிக்கொண்டிருந்தார்கள். எனினும் இப்னுஜியாத் "எனது கட்டளையை யொப்புக்கொள்வதைத் தவிர்த்து வேறு வழியில்லை" என்றெழுதியிருந்தான். இமாம் ஹுஸைன் (ரலி.

எங்ஙனம் இதை யொப்புக்கொள்வார்கள்? இறுதியாக ஹி. 61-ம் ஆண்டு, முஹர்ரம் மாதம், 10-ந் தேதி 'கர்பலா' வின் மைதானத்தில் யுத்தம் நடைபெற்றது. ஒருபுறத்தில் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் 80-சகாக்களது சிறிய கூட்டமிருந்தது. மறுபுறத்தில் ஷாம்வாசிகளோ கலவாத இராக்கின் சேனையிருந்தது. மிகக் குறுகிய காலத்திற்குள் சண்டை முடிந்துவிட்டது. இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும், அவர்களின் 81-சகாக்களும் ஆவி பிரிந்தார்கள். இப்னுஜியாதின் சேனையில் 88-பேர்கள் கொல்லப்பட்டார்கள். இராக்வாசிகள் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் சிரசையும், குடும்பத்தையும் வியாதி யடைந்திருந்த அலீ பின்ஹுஸைன் (ரலி.) அவர்களுடன் இப்னுஜியாதிடம் கொண்டுசென்றார்கள். அவன் அவர்களை ஷமர் முதலிய இராக்வாசிகளுடன் திமஷ்கிற்கனுப்பி விட்டான். யஜீதிடம் இவர்கள் போய்ச் சேர்ந்தபோது அவர் இதைப்பார்த்து மிகவும் கவலையுற்றார். கண்ணீர் வடித்துக்கொண்டு "நீங்கள் யாது செய்தீர்கள்? ஹுஸைன் (ரலி.) அவர்களைக் கொல்லாமலேயே எனக்கு நீங்கள் அடி பணிந்திருந்தால் நான் சம்மதித்திருப்பேன். இப்னுஜியாத் மீது அல்லாஹ்வின் முனி(லஃனத்)வுண்டாவதாக! அவனிடத்தில் நானிருந்திருப்பின் மன்னித்துவிட் டிருப்பேன்" என இராக்வாசிகளைப்பார்த்துக் கூறிவிட்டுப் பிறகு தனது சமுகத்திலிருப்பவர்களை நோக்கி "ஹுஸைன் (ரலி.) ஏன் இக்கதியடைந்தார்களென்பதை யறிவீர்களா? அவர்கள் "எனது பிதா யஜீதின் பிதாவைவிட மேம்பட்டவர். எனது தாய் யஜீதின் தாயைவிட மேம்பட்டவர். எனது பாட்டனார் யஜீதின் பாட்டனாரைவிட மேம்பட்டவர். நான் யஜீதை விட மேம்பட்டவனாயும், கிலாபத்திற்குப் பாத்தியதை யுடையோனாயு மிருக்கிறேன்" எனக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

எனது பிதாவுக்கும், அவரது பிதாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள விவாதத்தில் என்ன முடிவேற்பட்டதென்பதை உலகமே நன்கறியும். அவர்கள் அன்னையார் பாத்திமா (ரலி.) அவர்களோ பெருமானார் (ஸல்.) அவர்களின் திருப்புதல்வியாவர். முஸ்லிம் பெண்மணிகளில் எவரே அவர்களின் பதவியை யடையத் தக்கோராவார்? அவர்களின் பாட்டனார் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் மேலானவர்களென்பதை ஒவ்வொரு முஸ்லிமும் ஒப்புக்கொள்வான். எனினும், நடந்ததெல்லாம் அவர்களின் விளக்கக்குறைவாலேயே நடந்தது. "எவனது பிதாவும், பாட்டனாரும் மேலானவர்களோ அவனே கிலாபத்திற்குத் தகுந்தவனாவான்" என அவர்கள் கொண்டார்களேயல்லாது "தேசங்களின் அதிபதியான அல்லாஹ்வே! நீ கருதியோனுக்குத் தேசத்தை யளிப்பாய்" (அல்—குர்ஆன்) என்னும் திருக்குர்ஆன் வசனத்தைக் கவனிக்கவில்லை" எனக் கூறினார்.

இதற்குப் பிறகு இன்னல்பட்ட ஹுஸைன் (ரலி.) அவர்களின் குடும்பத்தவர்களை யஜீத் தம் மாளிகையில் இருக்கச்செய்தார். அவர் வீட்டின் மாதர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு மூன்று தினங்கள் வரை அழுதுகொண்டிருந்தார்கள். சின்னாட்களுக்குப் பிறகு யஜீத் இவர்களுக்குப் பலவித சௌகரியங்களை யளித்து, மதீனாவுக்கனுப்பிவைத்தார். அவர்களுக்கு நஷ்டமேற்பட்ட பொருட்களுக்கு இரு மடங்கு கொடுத்தார். அவர்கள் புறப்படும் நேரத்தில் ஹுஸைன் (ரலி.) அவர்களின் திருப்புதல்வர் அலீ பின் ஹுஸைன் (ரலி.) அவர்களிடம் "உங்களுக்குத் தேவைப் படுவதை நேருக்குநேராய் எனக்கெழுதுங்கள்! நான் பூர்த்திசெய்தனுப்புகிறேன்" என்றார். இவ்விதமாக இத்துக்ககரமான சம்பவம் முடிவுற்றது.

உண்மையைக் கூறுமிடத்து இராக்வாசிகள் நம்பிக்கைக்குத் தக்கோரல்லர். மதீனாவை விடுத்து கூபாவைத் தமது தலைநகராக்கிக்கொண்ட ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களே இறுதியாக அவர்களின் மாறுபாட்டினால் மனம் வருந்தி "நாயகா! இவர்களைவிட்டும் எனக்கு மரணத்தின் மூலமாகவோ, அல்லது கொல்லப்படுவதன் மூலமாகவோ விடுதலை யளிப்பாய்!" என இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதமே இமாம் ஹஸன் (ரலி.) அவர்களிடமும் இன்னோர் பைஅத் செய்திருந்தார்கள். ஷாம் தேசத்துச் சேனைகளுடன் எதிர்ப்பேற்படவும் முதலெதிர்ப்பிலேயே அவர்களைக் கைவிட்டுவிட்டு, ஓடிவிட்டார்கள். இதனால் அவர்கள் சமரஸம் செய்துகொள்ள நேர்ந்தது. இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும் இன்னோரை நம்பியே மக்காவிலிருந்து கூபாவுக்கு வந்தார்கள். சமீபத்தில் வந்து 'இன்னோரின் வாக்குத்தத்தங்கள் யாவும் பொய்யானவையே' என்பதை யறிந்துகொண்டு திரும்பிவிடக் கருதினார்கள். எனினும், அனியாயக்காரனான இப்னுஜியாத் அவர்களைத் திரும்பிச்செல்ல அனுமதியாது, யஜீதுக்காக பைஅத் செய்யும்படி வற்புறுத்தினான். அதை ஏற்றுக்கொள்ளாததால் வேறு வழியின்றி சண்டையிட நேர்ந்தது. இறுதியாக தீரத்துடன் சண்டையிட்டு ஆவிதுறந்தார்கள். குறைஷ்களின் புத்திமான்களான அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) போன்றோர் கூபாவாசிகளின் வழக்கத்தை நன்கறிந்திருந்ததால் இம்முடிவு ஏற்படுமென்பதை முன்னடியே யறிந்திருந்தார்கள். இதே காரணத்தாலேயே அவர்கள் தம்மாலியன்ற அளவுக்கு ஹுஸைன் (ரலி.) அவர்களைத் தடுத்தார்கள்.

ஹார்ராவின் சம்பவம்

யஜீத் கலீபாவாயினபிறகு மதீனாவாசிகளை மிக்க கண்ணியத்துடன் நடாத்திவந்தார். பெரிய பெரிய சன்மானங்களையும் அவர்களுக்களித்துவந்தார். எனினும், அவ்விடத்து ஜனங்கள் மக்காவில் கிலாபத்திற்காக பைஅத் வாங்கிக்கொண்டிருந்த அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களுடன் சேர்ந்துபோய், அப்துல்லாஹ் பின் ஹன்லலா என்பாரைத் தமக்குத் தலைவராக நியமித்துக்கொண்டு, யஜீதின் பைஅத்தை முறித்துவிட்டு, பகிரங்கமாக எதிர்க்கத் தயாரானார்கள். இதையறிந்த யஜீத் நுஃமான் பின்பஷீர் (ரலி.) அவர்களைத் தமது வர்க்கத்தவருக்குப் போதிப்பதற்காக யனுப்பிவைத்தார். அவர்கள் மதீனாவாசிகளின் நலன்கருதி அவர்களுக்குப் போதிக்க முன்வந்து "நீங்கள் குழப்பத்தை யுண்டாக்கித் திரியாதீர்கள்! பொதுமக்களைப் புறக்கணித்து, இகபரமிரண்டையும் பாழ்படுத்திக்கொள்ளாதீர்கள்! ஷாம்வாசிகளை எதிர்ப்பதற்கு உங்களிடம் வன்மையுங் கிடையாது. பிறகு எந்த நம்பிக்கையில் புரட்சி செய்கிறீர்கள்?" எனக் கூறினார்கள். எனினும், இவர்களின் நற்போதனை பயன்தரவில்லை. இறுதியாக அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள்.

இந்தப்புறம் மதீனாவாசிகள் அங்கிருந்த பனீ உமையாக்களை எதிர்க்கத் தொடுத்து, மர்வான் உடைய இல்லத்தில் ஒருங்குகூடி, அதை முற்றுகை யிட்டார்கள். பனீ உமையாக்கள் நிருபனை அனுப்பி, யஜீதிடம் உதவிதேடியதில் அவர் முஸ்லிம் பின் உக்பா என்பாரின் தலைமையின்கீழ் 12,000-பேர்கள் கொண்டதொரு சேனையை யனுப்பிவைத்து "நீங்கள் சென்று புரட்சியை விட்டுவிடும்படி மதீனாவாசிகளுக்கு மூன்றுதடவை போதித்தல் வேண்டும். இதை

யவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் சண்டையிடத் துவக்கி, மூன்று தினங்கள்வரை சண்டையிடவேண்டும். எனினும், அலீபின் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு எத்தகைய கஷ்டமும் கொடுக்கக்கூடாது. அவர்களிடம் நல்லவிதமாய் நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் இந்தக்குழப்பத்தில் மதீனாவாசிகளுடன் சேரவில்லையெனக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்" எனக் கூறினார். முஸ்லிம் வந்திருக்கும் செய்தியை யறிந்த மதீனாவாசிகள் பனீ உமையாக்களது இல்லத்தின் முற்றுகையை எடுத்துவிட்டு "முஸ்லிம் உடன் சேரவுங்கூடாது; அவருக்கு இங்குள்ள நிலைமையை யறிவிக்கவுங் கூடாது" என்னும் நிபந்தனையின் பேரில் அவர்களை விட்டுவிட்டார்கள். அவர்கள் புறப்பட்டு 'வாதில் குரா' என்னுமிடத்தைச் சேர்ந்தபோது முஸ்லிமைச் சந்தித்தார்கள். அவர் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் சற்புத்திரர் அம்ரு (ரலி.) என்பாரிடம் மதீனாவின் நிலைமையைப் பற்றி விசாரித்தார். அன்னார் "நான் உடன்படிக்கைக்கு மாறுசெய்து ஒன்றுங்கூற மாட்டேன்" எனக் கூறி விட்டனர். இதன் பேரில் முஸ்லிம் "உங்களின் பிதா அவர்களைக் கருதுகிறேன். இன்றேல், உங்கள் கழுத்தை வீசியெறிந்திருப்பேன்" எனக்கூறினார். பிறகு அப்துல் மலிக்பின் மர்வான் என்பாரிடம் கேட்டபோது அவர் மதீனாவின் முழுநிலைமையையும் முஸ்லிமுக்குக் கூறிவிட்டு "இன்று 'தீநக்லா' வென்னுமிடத்தில் தங்கியிருங்கள்! காலையில் வலது புறமாய் மதீனாவையும் கடந்து சென்றுவிடுங்கள். பிறகு 'ஹுர்ரா' யென்னுமிடத்திலிருந்து மேற்குப் புறமாய் மதீனாவின் புறம் திரும்புங்கள்! இவ்விதமாய் ஆதவன் மதீனாவாசிகளின் முன்பும், உங்கள் பின்னும் பிரகாசிக்கும்போது உங்கள் ஆயுதங்களின் பிரகாசம் மதீனாவாசிகளைத் திகைக்கச் செய்வதுடன் அவர்களுள்ளங்

களில் பயத்தையு முண்டாக்கிவிடும்" என்றுமேலோசனையும் கூறினர்.

முஸ்லிம் இவ்விதமே செய்து, மதீனாவுக்குச் சமீபமாகச் சென்று அவ்விடத்துத் தலைவர்களை யழைத்து "கலீபா அவர்கள் "மதீனாவாசிகள் முஸ்லிம்களின் அஸ்திவாரமா யிருப்பதால் அவர்கள் உதிரத்தைச் சிந்தச்செய்தல் எனக்குச் சம்மதமின்று" எனக் கூறியிருப்பதால் மூன்று தினங்கள் தவணை கொடுக்கப்படுகின்றது. இதற்குள் புரட்சியை விட்டுவிடுபவர்கள் ஒன்றுமே செய்யப்படமாட்டார்கள். விடாதவர்கள் என்னைக் குறைகூறக் கூடாது" என்றார். மதீனாவாசிகள் இதைப் பரவாச் செய்யவில்லை யாதலின், மூன்றாம் தினங்களுக்குப் பிறகு யுத்தம் துவக்கப் பட்டதில் அவர்கள் தோல்வியடைந்தார்கள். மதீனாவின் அநேக தலைவர்களும், பெரியாரும் கொல்லப்பட்டனர். மூன்று தினங்கள் வரை பொதுவான கொலைகள் செய்யப் பெற்றன. இதற்குப் பிறகு ஜனங்கள் பைஅத் செய்யவேண்டுமெனவும், மறுப்போன் கொல்லப்படுவானெனவும் முஸ்லிம் பறையறிவித்தார். ஜனங்கள் வந்து பைஅத் செய்தார்கள். யஜீதின் போதனைப் பிரகாரம் அலீ பின் ஹுஸைன் (ரலி.) அவர்களிடம் முஸ்லிம் நல்லவிதமாய் நடந்துகொண்டார். பைஅத்தின் விஷயமாயும் அவர்களுடன் ஒன்றுமே கூறவில்லை. இச் சம்பவம் ஹி. 63-ம் வருஷம், துல்ஹஜ் மாதத்தின் இறுதியில் நடைபெற்றது.

எதிர்ப்பதற்குச் சக்தி படைத்திராதவர்களும், இதர மாகாணவாசிகளைச் சேர்த்துக்கொள்ளாதவர்களு மான மதீனாவாசிகள் பைஅத்தை முறிக்க முன் வந்ததை நினைக்க ஆச்சரியத்திற்கிடமான்றது. இதனால் மதீனாவின் கண்ணியக் குறைவுக்குப் பொறுப் பாளிகள் மதீனாவாசிகளேயாகின்றார்கள். இத்துடன்

முஸ்லிம் தேர்ந்தெடுத்த வழியும் அறிவுடைமை யாகாது. அவர் முற்றுகை யிடுவதோடு மட்டும் நிறுத்திக் கொண்டு, வெளியேயிருந்து மதீனாவுக்கு வரும் ஜலத்தை இரண்டு தினங்களுக்காக நிறுத்தியிருந்தால், அந்த ஜனங்கள் வேறு வழியின்றி இவரது வார்த்தைகளை யொப்புக் கொண்டிருப்பார்கள். பெருமானார் (ஸல்.) அவர்களின் ஹரம் (கொல்வதைத் தடுக்கப்பட்டிருக்கும் சிறப்புக்குரிய ஸ்தலம்) உதிரம் சிந்துவதைவிட்டும் காக்கப்பட்டுமிருக்கும். ஈண்டு சிலர் "மதீனாவாசிகளே சண்டைக்குத் துரிதப்படுத்தினார்கள். தமது தற்காப்புக்காக அவர்கள் தோண்டியிருந்த அகழையுந்தாண்டி முன்சென்று சண்டையிடத் தொடுத்தார்கள்" எனவுங் கூறுகின்றனர். எனினும் மீண்டும் "வெற்றிகொண்ட பின்பு பொதுவான கொலை செய்யப்படுவதற்குக் காரணந்தானென்னவோ? மதீனாவில் இரத்த மோட்டுவதற்கு ஷாம்தேச முஸ்லிம்கள் எவ்விதம் இசைந்தார்கள்?" என்னுங் கேள்வி முஸ்லிம் மீது ஏற்படுகின்றது. புரட்சிப் பைத்தியமும், குழப்ப மயக்கமும் குடிகொண்டு விட்டால் தூரதிருஷ்டி யாங்ஙனம் ஏற்படப்போகின்றது? அல்லாஹு தஆலா நம்மை அதைவிட்டுங் காப்பானாக!

மக்காவின் முற்றுகை

மதீனாவின் விஷயங்களை முடித்துக்கொண்டு முஸ்லிம் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களை எதிர்ப்பதற்காக மக்காவுக்குச் சென்றார். அவர்கள் ஹிஜாஸ்வாசிகளிடம் பைஅத் வாங்கிக்கொண்டு தாம் கிலாபத்தை ஏற்றுக் கொண்டுளதாய்க் கொடியேற்றி யிருந்தார்கள். இடைவழியில் முஸ்லிம் இறந்துவிடவே யஜீதின் ஆணைப் பிரகாரம் ஹஸீன் பின் நுமைர் சேனாதிபதியாயினார். முஹர்ரம் 26-ந் தேதி இச்சேனை மக்கா சேர்ந்தது. அப்துல்லாஹ் (ரலி.) எதிர்ப்பதற்காகப் புறப்பட்டார்கள். எனினும்

தோல்வியடைந்து மக்காவுக்கு வந்துவிட்டார்கள். ஷாம் வாசிகள் முற்றுகையிட்டு நகரத்தின்மீது கல்மாரி பொழிந்தார்கள். இதற்கிடையிலேயே யஜீத் இறந்துவிட்டதாய்ச் செய்தி கிடைக்கவே ஷாம்வாசிகள் முற்றுகையை விட்டு விட்டார்கள்; சண்டையும் முற்றுப்பெற்றது. இம் மூன்று சம்பவங்களால் யஜீதின் பெயர் கெட்டுவிட்டது. சிலர் அவரைச் சபிப்பதுமுண்டு. இவ் விஷயங்களில் யஜீத் இரண்டே வழிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடும்? ஒன்று எதிரிகளுக்காக கிலாபத்தை விட்டுவிடுவது. மற்றொன்று எதிரிகளை எதிர்ப்பது. பொதுவாக முஸ்லிம்கள் அவரைத் தேர்ந்தெடுத்துவிட்டிருந்ததால் இமாம் ஹஸன் (ரலி.) அவர்களை போன்று தனது அரசாங்க ஆசனத்தைத் தியாகம் செய்துவிடல் எளியகாரியமாயிருக்கவில்லை. எனவே, அவர் இரண்டாவது வழியைப் பின்பற்றினர். அவரால் ஏற்படுத்தப்பெற்ற உத்தியோகஸ்தர்கள் தயாளத்துடனும், புத்திசாலித்தனத்துடனும் தமது கடமையை நிறைவேற்றவில்லையென்பதும், அனுவசியமான இன்னல்களை இழைத்தனரென்பதுமுண்மையே. ஆதலால் இச் சம்பவங்களை விவரமாய்க் கவனித்த பின்பு யஜீதை மட்டுமே குற்றவாளியாக்குவது நியாயத்திற்குப் புறம்பானதாகவே காணப்படுகின்றது.

வெற்றிகள்

யஜீத் உக்பா பின் நாபிஃ அவர்களை மீண்டும் ஆப்பிரிக்காவுக்கு அதிபராக்கி, அமீர் முஆவியா (ரலி.) செய்த வாக்குத்தத்தத்தைப் பூர்த்தி செய்தார். உக்பா 'கைர்வான்' போய்ச்சேர்ந்து அபுல்முஹாஜிரைச் சங்கிலியில் பிணித்தனர். பிறகு பெரியதொரு சேனையுடன் 'பாகாபா' என்னுமிடத்திற்குச் சென்றனர். அங்கு ரூமீகள் குழுமியிருந்தார்கள். பெரிய யுத்தத்திற்குப் பிறகு ரூமீகள் தோல்வி

யடைந்து பின்னிடைந்துகொண்டே சென்று நகரத்திற்குள் புகுந்துவிட்டார்கள். உக்பா முற்றுகையிடுவதை அனுவசிய மெனக்கொண்டு 'ஜாப்' பிரதேசத்திற்கு முன்னேறிச் சென்று, அப்பகுதியின் பெரிய நகரமான 'அரபா'வை ரூமிகளின் கைவசத்திலிருந்து பிடுங்கிக்கொண்டனர். பிறகு முன்னேறிச் சென்று, 'தாஹரத்' என்னுமிடத்தில் மீண்டும் யுத்தம் புரிந்தார்கள். ரூமிகள் காட்டுமிராண்டிகளைத் தம்முடன் சேர்த்துக்கொண்டதால் எதிரிகளின் அதிகப்படியான தொகையால் முஸ்லிம்கள் அதிகமான இன்னல்களுக்கிலக்கானார்கள். எனினும், பொறுமையாலும், முயற்சியாலும் அல்லாஹு தஆலா இவர்களுக்கு வெற்றியளித்தான். ரூமிகளும், காட்டுமிராண்டி ஜனங்களும் தோல்வியடைந்தார்கள். எண்ணற்ற ஆயுதங்களும், கொள்ளைப் பொருட்களும் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன. பிறகு, 'தபகா'வின்புறம் முன்னேறிச் சென்றார்கள். அவ்விடத்துத் தலைவனை யலியான் சன்மானங்களை யனுப்பி சமரஸம் செய்துகொண்டான். பிறகு தபகாவுக்கு மேற்குப்புறமுள்ள 'ஸூஸெ அத்னா'வைக் கைப்பற்றிக்கொண்டு, 'ஸூஸெஅக்ஸா' வின் புறம் முன்னேறிச் சென்றார்கள். அங்கு ரூமிகளும், காட்டுமிராண்டிகளும் ஒருங்கு சேர்ந்த கூட்டத்துடன் யுத்தம் நிகழ்ந்தது. யாவரையும் தோற்கடித்துக்கொண்டே கருங்கடல் வரை சென்றுவிட்டார்கள். உக்பா தமது குதிரையை ஜலத்திலிறக்கிவிட்டு 'நாயகனே! சமுத்திரம் குறுக்கிடாவிட்டால் கரை யெல்லாம் உனது பாதையில் யுத்தம் புரிந்துகொண்டே சென்றுவிடுவேன்" எனக் கூறினார்கள்.

பிறகு கைர்வானுக்குத் திரும்பினார்கள். தேசமெல்லாம் வெற்றிகொள்ளப் பட்டுவிட்டதால் பயமிருக்கவில்லை. (சேனைகள் பகுதிபகுதியாய்ப் புறப்பட்டன. உக்பா அவர்

களுடன் சிறிய சேனையே இருந்தது. இடைவழியில் 'நஹ்லா' வென்னுமிடத்தில் ரூமிகள் இச்சிறு சேனையைக்கண்டு எதிர்க்கக் கருதினார்கள். அபுல்முஹாஜிரின் காலத்தில் இஸ்லாமைத்தழுவிய காட்டுமிராண்டி கஸீலா வென்பான் உக்பா அவர்களுடனிருந்தான். உக்பா அபுல்முஹாஜிருக்குக் கொடுத்த இன்னல்களால் அவன் இவர்களுக்கு விரோதியாகவேயிருந்தான். அபுல்முஹாஜிரே பல தடவைகளில் "நான் கஸீலாவை மிகவும் பயப்படுகிறேன். அவனைக் கவனியாதிருந்து விடாதீர்கள்" எனக் கூறியதுமுண்டு. எனினும், உக்பா இதைக்கவனிக்கவில்லை. இச்சமயத்தில் கஸீலா ரூமிகளுடன் சேர்ந்துவிட்டான். பிறகு தனது வர்க்கத்தில் பெரியதொரு கூட்டத்தைத் திரட்டிக்கொண்டுவந்து முஸ்லிம்களை எதிர்த்தான். உக்பா அவர்களுடனிருந்த சேனையில் ஒருவரும் தப்பக்கூடவில்லை. கஸீலா தனது கூட்டத்துடன் கைர்வான் புறம் சென்றான். அங்கு உக்பா அவர்கள் கைஸ்பின் ஜுஹைர் என்பாரைத் தமக்குப் பிரதிநிதியாக நியமித்துச் சென்றிருந்தார்கள். அவர் சண்டையிடவே கருதினார். எனினும், சேனை பலங்குன்றியதா யிருந்ததால் சண்டையிட இசையவில்லை. எனவே, வேறுவழியின்றி முஸ்லிம்கள் 'புர்கா' வென்னுமிடத்திற்கு ஓடிவந்துவிட்டார்கள். கஸீலா கைர்வானையும் கைப்பற்றிக்கொண்டு அங்கு குடும்பத்துடனிருந்துவிட்ட முஸ்லிம்களுக்கு அடைக்கலமளித்தான்.

மனைவி மக்கள்

யஜீத் முதலாவதாக உம்முஹாஷிம் பின்து உத்பாபின் ரபீஆ என்பாரை மணந்ததில் அவருக்கு முஆவியா, காலித் என்னும் இருபுத்திரர்களுண்டாயினர். இரண்டாவதாக அப்துல்லாஹ் பின் ஆமிர் அவர்களின் திருப்புதல்வியார்

உம்முகுல்தூம் என்பாரை மணந்துகொண்டதில் அவருக்கு அரப் தேசத்திலேயே அம்பெறிவதில் நிகரில்லாத அப்துல்லாஹ் ஜனித்தார். இதர மனைவியர்கள் மூலமாக அப்துல்லாஹ் அஸ்கர், உமர், அபூபக்ர், உத்பா, ஹரப், அப்துர் ரஹ்மான் போன்ற பலபுத்திரர்கள் ஜனித்தார்கள்.

மரணம்

கி. பி. 683-ம் வருஷம், நவம்பர் மாதம் 10-ம் தேதிக்குச் சரியான ஹி. 64-ம் வருஷம், ரபீஉல் அவ்வல் மாதம் 14-ந்தேதி ஷாம்தேசத்தைச் சேர்ந்த 'ஹௌரான்' என்னும் நகரத்தில் யஜீத் மரணமடைந்தார். அவரது வயது 39. கிலாபத்தை ஏற்று நடத்தியது மூன்று வருடங்கள் எட்டு மாதங்கள், பதினான்கு தினங்களாம்.

இரண்டாவது முஆவியா மர்வான் பின் ஹகம்

அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.)

யஜீதின் மரணத்திற்குப் பிறகு இரண்டு பைஅத்கள் ஏற்பட்டன. ஒன்று ஷாம் தேசத்தில் முஆவியா பின் யஜீதின் பைஅத். மற்றொன்று ஹிஜாஸில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் பைஅத். முஆவியாவின் வயது 21. ஜனங்கள் அவரைத் தேர்ந்தெடுத்தபோது அவர் ஜனங்களை முன்னோக்கிக் கூறியதாவது:—

"நீங்கள் என்னை கலீபாவாகத் தேர்ந்தெடுத்தீர்கள். எனினும், அதன் கடமைகளை நிறைவேற்றுதற்கு எனக்குச் சக்தியிருப்பதாய் நான் கருதவில்லை. உமர் (ரலி.) அவர்களைப் போன்றொருவர் கிடைத்தால் அவருக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிடலாமெனக் கருதினேன், ஆனால் அங்ஙனம் ஒருவரும் கிடைக்கவில்லை. பிறகு மீண்டும் உமர் (ரலி.) அவர்கள் செய்ததே போன்று சில பெரியார்களை நியமித்து, அவர்களுள் ஒருவரை கலீபாவாகத் தேர்ந்தெடுக்கச் செய்யலாமெனவும் கருதினேன். அத்தகையோரையும் கிடைக்கப்பெற்றிலேன். எனவே, நீங்கள் எவரையேனும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்! நான் அதில் பிரவேசிக்கவே மாட்டேன்"

என்பதே. இதற்குப் பிறகு அவர் தமதில்லத்திற்குச் சென்று விட்டார். மூன்று மாதத்திற்குப்பிறகு ஆவி துறந்த பின்பு அவருடைய சவமே வெளிப்பட்டது. இவ்வாலிபரின் நல்லெண்ணமும், உலகத்தின்மீது பற்றின்மை

யும் முஸ்லிம்களால் பிரியத்துடன் கண்காணிக்கப் பட்டன.

இந்தப்புறத்தில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் நிலைமை எவ்வாறிருந்ததெனின், யஜீதின் மரணத்திற்குப் பிறகு ஹுஸைன் பின் நுமைர் மக்காவை முற்றுகையிடுவதை விடுத்து அவர்களிடம் சென்று, "தற்போது தங்களைத் தவிர்த்து வேறுயாரையும் கிலாபத்திற்குத் தக்கோரென நான் கருதவில்லை. நான் பைஅத் செய்யக் காத்திருக்கிறேன். தாங்கள் ஷாம் தேசத்தின் புறம் செல்லுங்கள்! என்னுடனிருக்கும் சேனையில் அத்தேசத்துத் தலைவர்களும், பெரியார்களும் அதிகமாய்க் கலந்திருக்கிறார்கள். ஆதலால் நாளைக்கு ஷாம்வாசிகள் எத்தகைய அபிப்பிராயபேதமுமன்றியே தங்களைத் தேர்ந்தெடுப்பார்களென நான் நம்புகிறேன். எனினும், தங்களுக்கு விரோதமாகக் கிளம்பியோருக்குப் பொதுவான அபயமளித்து விடுங்கள்! இதனால் அவர்களுள்ளங்கள் தங்கள் விஷயத்தில் நிம்மதியாய் விடும்" எனக் கூறினார். இவ்வார்த்தைகளை இவர் மெதுவாய்க் கூறினார். எனினும் அவர்கள் மாறுபட்டு ஆவேசத்துடன் "நான் ஒருபோதும் மன்னிப் பளிக்க மாட்டேன். எனது ஆட்களில் கொல்லப்பட்டோர் ஒவ்வொருவருக்காகவும் பத்துப்பத்து ஷாம்வாசிகளைக் கொல்வேன்" எனக் கூறினார்கள். இதன் பேரில் ஹுஸைன் "நான் உங்களுக்குப் புத்தியிருப்பதாய்க் கருதினேன். எனினும், அந்தோ! அஃது பிழையெனக் கண்டேன். நான் தங்களுக்கு கிலாபத்தைத் தருகிறேன். தாங்கள் கொலை செய்யக் கங்கணங் கட்டுகிறீர்கள். நான் மெதுவாய்க் கூறுகிறேன். தாங்கள் சப்தமிட்டுக் கூறுகிறீர்கள்" எனக் கூறிவிட்டுத் தனது சேனையுடன் சென்றுவிட்டார்.

5

பஸராவில் யஜீத் இறந்துவிட்ட செய்தி கிடைக்கவும் அப்துல்லாஹ் பின்ஜியாத் அவ்விடத்து ஜனங்களை முன்னோக்கி "பஸரா வாசிகாள்! நான் பிறந்ததும், வளர்ந்ததும் இந்நகரமே. இவ்விடத்துத் தலைவராகவே எனது பிதாவிருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு நான் தலைவனானேன். நான் இம்மாகாணத்தின் அதிகாரத்தை எனது கைக்குள் ஏற்றுக்கோண்டபோது சேனையில் 70,000-பேரிருந்தார்கள். எனினும் தற்போது ஒரு லக்ஷம் பேரிருக்கிறார்கள். அப்பொழுது 90,000-பேரே சம்பளம் பெற்றுவந்தார்கள். இன்று 1,40,000-பேர் ஊதியம் பெறுகிறார்கள். குழப்பக்காரர்களாயும், அமைதிக்குப் பாதகம் செய்வோராயுமுள்ளோர் யாவரும் சிறைச்சாலைகளிலிருக்கின்றனர். நான் எல்லா பயங்களையும் அழித்துவிட்டதால் பொதுவான அமைதி, நந்நிலைமை, முன்னேற்றம் இவைகள் நிலவியுளது. நீங்கள் பயப்படத்தக்க பகைஞனொவனு மிப்போதில்லை. யஜீத் இவ்வுலகத்தைவிட்டுப் பிரித்துவிட்டார். ஷாம்வாசிகள் இதுவரை யொருவரையும் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கவில்லை. இன்று இஸ்லாமிய மாகாணங்கள் யாவற்றிலும் வன்மையாலும், ஜனத்தொகையாலும் இராக்கே முதன்மையானதா யிருக்கின்றது. நீங்கள் எவரை கலீபாவாகத் தேர்ந்தெடுத்தாலும் யாவருக்கு முன்பு நான் அவர் கரத்தில் பைஅத் செய்யத் தயாராயிருக்கிறேன். பிறகு ஒருக்கால் ஷாம்வாசிகள் எவரையேனும் தேர்ந்தெடுத்து விட்டால் நீங்கள் அவர்களுடன் சேர்ந்து போகவும், அன்றி தனிகிலாபத்தை ஏற்படுத்திக்கோள்ளவும் உங்களுக்கு உரிமையுண்டு. நீங்கள் வேறு மாகாணங்களிடம் எதற்கும் தேவைப்பட்டிருக்கவில்லை. அவை யுங்களிடம் தேவைப்பட்டிருக்கின்றன" வெனக் கூறினான். இதைக் கேட்ட இராக்வாசிகள் "உங்களைத் தவிர வேறெவரையும்

கிலாபத்திற்குத் தக்கோரென நாங்கள் மதிக்கவில்லை. நீங்கள் உங்களுக்காக எம்மிடம் பைஅத் வாங்கிக்கொள் ளுங்கள் !'' எனக் கூறவும் அவன் மறுத்தான். அவர்கள் வற்புறுத்தினர்கள். இவ்விதமாக மூன்று தடவை மறுத்த பின்பு கரத்தை நீட்டினன். இராக்வாசிகள் பைஅத் செய் தார்கள். எனினும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று தமது கரங்களைச் சுவற்றில் தேய்த்துக்கொண்டு ''நாம் ஒற்றுமை, பிளவு இரண்டு நிலைமையிலும் அவனைப் பின் பற்றுவோமென இப்னுஜியாத் கருதுகிறனே ?'' வெனக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

பஸராவாசிகளிடம் பைஅத் வாங்கிக்கொண்ட பிறகு கூபாவாசிகளிடம் சென்றதற்கு அவர்கள் மறுத்துவிட் டார்கள். இதைச் செவியுற்று பஸராவாசிகளும் தமது பைஅத்தை மாற்றிக்கொண்டார்கள். அவன் பயந்துபோய் ஹாரித் பின் கைஸ் இடமும், பிறகு 'அஜ்த்' உடைய தலைவரான மஸ்ஊத் பின் அம்ரு இடமும் அடைக்கலம் புகுந்து, இதற்குப் பிறகு ஷாம் தேசத்திற்குச் சென்றுவிட் டான். பஸராவாசிகள் தமதபிப்பிராயப்படி அப்துல்லாஹ் பின் ஹாரித் அவர்களையும், கூபாவாசிகளும் இவ்விதமே வேறொருவரையும் தமக்குத் தலைவர்களாக நியமித்துக் கொண்டு, பிறகு இரண்டிடத்து ஜனங்களும் தமது தூதுக் கோஷ்டிகளை நியமித்து அப்துல்லாஹ் பின்ஜுபைர் (ரலி.) அவர்களிடம் பைஅத் செய்து கலீபாவாக ஏற்றுக்கொண் டார்கள். மிஸ்ர் வாசிகளும் அவர்களிடமே பைஅத் செய் தார்கள். தற்போது ஷாம்வாசிகளைத் தவிர்த்து முஸ்லிம் பொதுமக்கள் யாவரும் இவர்களின் கிலாபத்தை ஏகமன தாய் ஏற்றுக்கொண்டனர்.

ஷாம்வாசிகள்

திமஷ்கின் தலைவரான லஹ்ஹாக் பின் கைஸ் என்பாரும், ஹிம்மஸின் தலைவர் நுஃமான் பின்பஷீர் அவர்களும் கன்ஸரீன் உடைய தலைவர் ஜபர் பின் ஹாரித் அவர்களும் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களுக்காக பைஅத் வாங்கிக் கொண்டிருந்தார்கள். பாலஸ்தீன் உடைய அதிபரான ஹஸ்ஸான் பின் மாலிக் என்பார் மட்டும் பனீ உமையாக்களின் புறம் சேர்ந்திருந்தார். அவரிடமே பனீ உமையாக்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் யாவரினும் மர்வான் பின் ஹகம் அவர்களே பெரியாரா யிருந்தனர். அவர்களிடமே ஹி. 64-ம் ஆண்டு துல்கஅதா மாதத்தில் யாவரும் பைஅத் செய்தார்கள். கஸ்ஸான், கல்ப், ஸகாஸிக் இவர்க்கங்கள் யாவும் அவர்கள் கரத்திலேயே பைஅத் செய்தன. இந்நிலைமையை யறிந்த லஹ்ஹாக் பின் கைஸ் திமஷ்கிலிருந்து பாலஸ்தீன்மீது படையெடுத்தார். ஹி. 65-ம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் இருதரப்பு சேனைகளும் 'மர்ஜெராஹித்' என்னுமிடத்தில் யுத்தம் தொடுத்தன. இருபது தினங்கள் மும்முரமான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பெரிய யுத்தத்திற்குப் பிறகு பனீ உமையாக்கள் வெற்றிபெற்றார்கள். லஹ்ஹாக் கொல்லப்பட்டார். நுஃமான் பின்பஷீர் அவர்களும் ஹிம்மஸை விட்டு ஓடினார்கள். எனினும், அவ்விடத்து ஜனங்கள் பின்றொடர்ந்து சென்று கொன்றுவிட்டார்கள். ஜபர் பின் ஹாரித் கன்ஸரீனிலிருந்து 'கர்கீஸா' வுக்குச் சென்று கோட்டைக்குள் பதுங்கிவிட்டனர். பனீஉமையாக்கள் அதை முற்றுகையிட்டார்கள். எனினும் அவர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். தற்போது ஷாம் தேசம் முழுமையும் மர்வான் உடைய ஆதிக்கத்தில் வந்துவிட்டது. மிஸ்ர்வாசிகளும் அன்னாரின் கிலாபத்தை யொப்புக்கொண்

டார்கள். எனினும் அவர் காலம் மிகவும் குறுகியது. ஹி. 5-ம் ஆண்டு, ரம்லான் மாதத்தில் அவர்கள் காலஞ் சென்றார்கள்.

மர்வான்

மர்வான் ஹி. 6-ம் ஆண்டு ஜனித்தார். இவரது வம்ச பரம்பரையாவது:—"இவர் பிதா ஹகம். அவர் பிதா அபுல்ஆஸ். அவர் பிதா உமையா. அவர் பிதா அப்து ஷம்ஸ். அவர் பிதா அப்துமுனாப்" என்பதாம். அவரது அன்னையார் ஆமினா பின்து அல்கமா பின் ஸப்வான் என்பாராம். மர்வான் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் காலத்தில் அவர்களின் லிபியாகவும், ஆலோசனை கூறுவோராகவும் இருந்தார்கள். அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் அநேக தடவைகளில் மதினாவுக்குத் தலைவராய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யஜீதின் மரணத்திற்குப் பிறகு அநேகமாய் பனீ உமையாக் களின் கைவசத்திலிருந்து கிலாபத் பறிபோய்விட்டதென லாம். உபைதுல்லாஹ் பின் ஜியாத் என்பானே பைஅத் வாங்கும்படி இன்னாருக்கு யோசனை கூறினான். அவன் தைரியங் கொடுத்ததாலேயே முன்வந்தனர். இறுதியாக மர்ஜெராஹித் உடைய வெற்றிக்குப் பிறகு ஷாம், மிஸ்ர் இரு மாகாணங்களிலும் அவர்களின் கிலாபத் ஏற்பட்டது.

அப்துல்மலிக் பின்மர்வான்

மர்வான் தமது மரணத்திற்கு முன்பு தமது புத்திரர் அப்துல்மலிக் என்பாரை இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்தனர். அன்னாருக்குப் பிறகு இவரே கலீபாவாயினர். அப்துல்மலிக் ஹி. 26-ம் ஆண்டு மதீனாவில் ஜனித்தார். அவர் அன்னையார் ஆயிஷா பின்து முஆவியா பின் வலீத் பின் முகிரா பின் அபில்ஆஸ் பின் உமையா வென்பாராம். அப்துல்மலிக் மிக்க புத்திநுட்பமுடையோராயும், தூரதிருஷ்டியுடையோராயும், இலக்கிய இலக்கணப்பயிற்சியுடையோராயுமிருந்தார். கல்வியில் மதீனாவின் அறிஞர்களான ஸஈத் பின் முஸையப் (ரலி.), உர்வா பின்ஜுபைர் (ரலி.) இவர்களுக்குச் சமமாகக் கருதப்பட்டுவந்தார். இமாம் ஷஅபீ (ரஹ்.) அவர்கள் கூறுவதாவது:— "நான் எனது ஜீவியத்தில் கண்டவர்களெல்லாரையும்விட என்னையே கல்வியில் மேலானவனாகக் கண்டேன். ஆனால், அப்துல்மலிக் எனக்கு மேம்பட்டவராவர். அவர்முன்பு எந்த கவியோ, இதர பிரசினையோ பிரஸ்தாபிக்கப்பட்டால் அதனால் அவர் எனது கல்வியில் கொஞ்சமேனும் அபிவிருத்தி செய்தேதீருவார்" என்பதே.

இவரது கைவசம் கிலாபத்வந்ததும் இஸ்லாமிய நாடுகளில் பெரியதொரு குழப்பம் ஏற்பட்டது. ஹிஜாஸ்வாசிகள் அப்துல்லாஹ் பின்ஜுபைர் (ரலி.) அவர்களின் கரத்தில் பைஅத் செய்திருந்தார்கள். இராக்கில் ஜுபைரீ, ஷீஆ, கவாரிஜ் இம்மூன்று பிரிவுகளிருந்தார்கள். இவர்கள் யாவரும் பனீஉமையாக்களுக்கு விரோதிகளாகவேயிருந்

தார்கள். எனினும் அவர் தமது புத்திநுட்பத்தாலும், திடசித்தத்தாலும் இவ்வின்னல்களையெல்லாம் வெற்றி கொண்டார். இஸ்லாமிய நாடுகள் யாவற்றிலும் இவரின் கிலாபத்தை யொப்புக்கொள்ளப்பட்டது. மர்வான் ஒரு சேனையை இப்னுஜியாதுக்குக் கொடுத்து 'ஜஸீரா' வின்புறம் அனுப்பிவைத்து "நீங்கள் வெற்றிகொள்ளும் நாடுகளுக்கெல்லாம் நீங்களே அதிபராக நியமிக்கப்படுவீர்கள்" என வாக்களித்திருந்தனர். அவன் ஜஸீராவை வெற்றிகொண்டான். இதற்கிடையே மர்வான் காலஞ்சென்று போயினர். அப்துல்மலிக் இவ்வாக்கை நிறைவேற்றிவைத்து, "இராக்கின்புறம் முன்னேறி வாருங்கள்!" எனக்கட்டளையனுப்பினர்.

தௌவாபீன்கள்

இப்னுஜியாத் 'ஐனுல்வரதா' வென்னுமிடத்திற்கு வந்தபோது இராக்வாசிகளின் ஒரு கூட்டம் முன்னே வந்தது. அதை எந்த உத்தியோகஸ்தரோ, கலீபாவோ அனுப்பிவைக்கவில்லை. மேலும் இஃது இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் இரத்தத்திற்குப் பழிக்குப்பழி வாங்கக் கிளம்பிய ஷீஆக்களின் கூட்டமாம். இவர்களின் தொகை ஆறுயிரமாம். இவர்களின் தலைவன் கூபாவின் தலைவனான ஸுலைமான் பின் ஸரத் என்பானாயிருந்தான். இவர்கள் தமக்குத் "தௌவாபீன்கள்" எனச் சிறப்புப்பெயர் கொடுத்துக் கொண்டார்கள். இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் தம்மாலேற்பட்ட குறைகளுக்காக இவர்கள் வருந்தினார்கள். அதன்பேரில் "அதற்குப் பழிக்குப்பழி வாங்காதவரை அந்தக் குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக மாட்டாது" என முடிவுகட்டிக் கொண்டார்கள். ('தௌவாபீன்' என்பது 'தமது குற்றத்திற்காய் வருந்துவோர்' எனப் பொருட்படும்.) இதன் பேரில்

இரகசியமாக அக்காலந்தொடுத்து ஆயுதங்களைத் தயாரித்துக்கொண்டும், ஜனங்களைத் தம்முடன் சேரும்படித் தூண்டிக்கொண்டுமிருந்தார்கள். ஹி. 65-ம் ஆண்டில் சமயம் பார்த்துக் கிளம்பினார்கள். 'ஐனுல் வரதா' என்னுமிடத்தில் அக்குற்றத்திற்கே மூலபுருஷனான இப்னுஜியாத் உடனேயே யுத்தந்தொடுத்தார்கள். பெரிய யுத்தம் நிகழ்ந்ததில் ஸுலைமான் பின் ஸுரத் என்பாரும், அவரது சகாக்களிலனேகரும் கொல்லப்பட்டார்கள்.

முக்தார்

தௌவாபீன்கள் அழிந்துபட்ட பின்பு கூபாவில் முக்தார் பின் அபீஉபைத் தகபீ என்பான் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்காகப் பழிக்குப்பழிவாங்கத் தயாராய் " இமாம் மஹ்தீயான முஹம்மத் பின் ஹனபிய்யா என்னை இவ்வேலைக்காக நியமித்திருக்கிறார்கள்" எனப் பிரகடனப்படுத்தினன். இதுவே 'இமாம் மஹ்தீ' என்னும் சிறப்புப்பெயர் வெளியிடப்பெற்ற முதற்சமயமாம். இப்ராஹீம் பின் உஷ்தர் என்னும் வீரம்பொருந்திய தலைவனையும் இதில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென முக்தார் விரும்பினன். இதை யன்னவனிடம் கூறியபோது அன்னான் " என்னைத் தலைவனாக்கிக் கொண்டால் நான் இதற்குடன்படத் தயாராயிருக்கிறேன். இன்றேல் முடியாது" எனக்கூறிவிட்டான். மூன்று தினங்களுக்குப்பிறகு முக்தார் அவனிடம்சென்று இமாம் மஹ்தீயான முஹம்மத் பின் ஹனபிய்யா அவர்களெழுதியதாகப் பொய்யாக வெழுதப்பட்டதொரு கடிதத்தைக் காண்பித்தனன். அதில் "முக்தார் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் உதிரத்திற்குப் பழிவாங்க நியமிக்கப்பட்டிருப்பதால் நீரும் அவரைப் பின்பற்றும்" என்றெழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்த இப்ராஹீம் " எனக்கு முஹம்மத் பின் ஹனபிய்யா

அவர்களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் அவர்கள் 'இமாம் மஹ்தீ' யெனத் தமது சிறப்புப்பெயரைக் குறிப்பிடவில்லை. இதில்தான் அங்ஙனம் குறிப்பிடப்பட்டுளது" வெனக்கூறியதன்பேரில் அநேகர் அன்னார் இக்கடிதத்தைத் தமக்கு முன்னாலேயே வரைந்ததாகச் சாக்ஷியங்கொடுத்ததன்பேரில் அவன் மறுக்கக் கூடாதுபோயினன். இச்சாக்ஷியங்களை நம்பிய இப்ராஹீம் தனது ஆசனத்திலிருந்தெழுந்து, அதில் முக்தாரை அமரச் செய்து, தான் ஓரத்திலுட்கார்ந்தான். பிறகு ஆலோசனை செய்து ஒரு குறிப்பிட்ட தேதியில் பழிவாங்கப் புறப்பட வேண்டுமெனத் தீர்மானித்தனன். அதன்பிரகாரம் ஹி. 66-ம் ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதத்தில் இக்கூட்டம் புறப்பட்டு, அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களால் நியமிக்கப்பெற்ற அப்துல்லாஹ் பின் முதீஃ என்னும் கூபாவின் அதிபரை யோட்டிவிட்டு நகரைக் கைப்பற்றியது. பிறகு அவ்விடத்து ஜனங்களுடன் குர்ஆன், பெருமானாரின் முன்மாதிரி இவைகளின்படி நடப்பதாயும், இமாமவர்களது கொலைஞர்களைப் பழிக்குப்பழி வாங்குவதாகவும் பைஅத் வாங்கியது. பஸராவாசிகளும் இந்த பைஅத்தில் கலந்து கொண்டார்கள்.

இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களை எதிர்ப்பதற்காகச் சென்ற சேனையிற் கலந்திருந்த உமர் பின் ஸஅத் போன்றவர்களையெல்லாம் முக்தார் கொன்றுவிட்டு, அவர்களின் இல்லங்களைத்தோண்டி யெறிந்துவிட்டான். இதையறிந்த இப்னுஜுபைர் (ரலி.) சந்தேகத்தின்பேரில் முஹம்மத் பின் ஹனபிய்யா அவர்களைக் கைதுசெய்தனர். எனினும் முக்தார் சிலரையனுப்பி அவர்களை விடுவித்துவிட்டான். இதற்குப்பிறகு கூபாவிலிருந்து இப்ராஹீம் உஷ்தர் உடைய தலைமையின்கீழ் இப்னுஜியாதை எதிர்ப்பதற்கொரு

சேனையை யனுப்பினான். அவன் இராக்கின்புறம் சேனையுடன் வந்துகொண்டிருந்தான். 'காஜர்' என்னும் கிணற்றண்டை இருபுறத்துச் சேனையும் போர்தொடுத்தன. இப்ராஹீம் வெற்றிபெற்றனன். இப்னுஜியாத் கொல்லப்பட்டனன். அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) முக்தாரின் இக்குழப்பத்தை யொடுக்குதற்காய்த் தமது சகோதரர் முஸ்அப் (ரலி.) அவர்களையொரு சேனையுடன் அனுப்பினார்கள். அவர்கள் முதலாவதாக பஸ்ராவைக் கைவசப்படுத்தினார்கள். முக்தாருக்கு விரோதமாயிருந்த அநேக கூபாவாசிகளும் இவர்களுடன் கலந்துகொண்டார்கள். முஸ்அப் (ரலி.) தாமே சேனையுடன் கூபாவின்புறம் முன்னேறிச் சென்றார்கள். 'நதார்' என்னுமிடத்தில் முக்தார் எதிர்த்துத் தோல்வியுற்றனன். முஸ்அப் (ரலி.) அவனைப் பின்றொடர்ந்து சென்று கூபாவுக்குள் பிரவேசித்து அவனையும், அவனது சகாக்களையும் கொன்றுவிட்டார்கள். அவனது மனைவியும், நுஃமான் பின்பஷீர் என்பாரின் புதல்வியுமான உம்ரா வென்னும் பெண்மணியையும் கொன்றுவிட்டார்கள். பெண்களைக் கொல்வது சேனையொழுங்குமுறைக்குப் புறம்பானதே. இதற்குப்பிறகு இராக் முழுமையும் மீண்டும் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டது.

தற்போது சத்தியத்தில் நிலைத்திராத இராக் தலைவர்கள் அப்துல்மலிக் உடன் கடிதப்போக்குவரவு செய்தார்கள். அவர் இவர்களது ஆதரவின்பேரில் படையெடுத்தார். இரு சேனைகளும் போர்முனையில் இறங்கவே இராக்வாசிகள் முஸ்அப் (ரலி.) அவர்களைவிட்டு நழுவிவிட்டார்கள். இறுதியாக அவர்கள் தோல்வியடைந்து கொல்லப்பட்டார்கள். அப்துல்மலிக் கூபாவுக்குள் பிரவேசித்து அங்குள்ள ஜனங்களிடம் பைஅத் வாங்கிக்கொண்டு இராக்கின் ஒழுங்குமுறை

களுக்காய் அதிபர்களை நியமித்தார். "சரித்திரம் சம்பவங்களைத் திருப்பித் திருப்பித் தருகின்றது" என்பது முதுமொழி. எம்மாளிகையில் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் சிரம் துண்டிக்கப் பெற்று இப்னுஜியாத் முன்பு கொண்டுவரப் பெற்றதோ அதே மாளிகையில் இப்னுஜியாதின் சிரம் முக்தார் முன்பும், முக்தாரின் சிரம் முஸ்அப் (ரலி.) முன்பும், முஸ்அபின் சிரம் அப்துல்மலிக் முன்பும் கொண்டுவரப் பெற்றன. இம்மாறுதல்கள் யாவும் ஹி. 61 தொடுத்து 71வரை பத்தாண்டுகளுள் நடைபெற்றது. அப்துல்மலிக் அம்மாளிகையைப் பீடை பிடித்ததெனக் கொண்டு அதை இடித்து விட்டார்.

மக்காவின் முற்றுகை

இராக்கைக் கைப்பற்றிக்கொண்ட பின்பு ஹிஜாஸைத் தவிர்த்து வேறெந்த மாகாணமும் அப்துல்மலிக் உடைய ஆளுகையிலிருந்தும் வேறுபட்டிருக்கவில்லை. ஆதலால் அவர் கூபாவிலிருந்து ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் தகபீ என்பானின் தலைமையின்கிழ் ஹி. 72-ம் ஆண்டு, ஜமாதில் அவ்வல் மாதம் ஒரு சேனையை அந்தப்புறம் அனுப்பி வைத்தார். அவன் அங்கு போய்ச் சேர்ந்து மக்காவை முற்றுகையிட்டுக்கொண்டு, அதன்மீது கல்மாரி பொழியவாரம்பித்தான். இந்த முற்றுகை நீண்டகாலம் இருந்ததால் இப்னுஜுபைர் (ரலி.) அவர்களைச் சேர்ந்தோர் அடைக்கலம் பெற்றுக்கொண்டு ஹஜ்ஜாஜிடம் வரத்தொடுத்தனர். இப்னுஜுபைர் (ரலி.) அவர்களின் இருபுத்திரர்களான ஹம்ஜா, ஹபீப் இருவருங்கூட அவ்விதமே வந்துசேர்ந்துகொண்டனர். இதைக்கண்ட இப்னுஜுபைர் (ரலி.) தமது தாயார் அஸ்மா (ரலி.) அவர்களிடம் சென்று "தற்போது எனது இருபுத்திரர்களுட்பட எனது சகாக்கள் என்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டார்கள். எதிரிக்கு நான் வழிப்பட இசைந்தால்

எனக்கும் அபயமளிக்க அவன் தயாராகவே யிருக்கிறான். தங்களபிப்பிராயம் யாது?" எனக் கேட்கவும் அவர்கள் "நீர் சத்தியத்தின் மீது நிலைத்திருப்பதாய்க் கருதினால் உமது சகாக்களின் வழியைப் பின்பற்றி, உமது உயிரையும் அர்ப்பணம் செய்துவிடுவீராக! பனீஉமையாக்களுக்கு அடிமைப் பட்டுக்கிடக்க ஒப்புக்கொள்ளாதே. நீர் இகலோகத்தை முன்னிட்டு யுத்தம் புரிந்தால் நீர் செய்தது மிகவும் தீமையே. நீரும் அழிந்துபோய், உமது சகாக்களது உயிர்களையும் போக்கினீர். நீர் சத்தியத்தின்மீதே இருந்ததாயும், பாது காப்பாளர்களில்லாததால் தற்போது எதிரிக்கு அடங்கி விடுவது உசிதமானதாகக் காணப்படுகின்றதாயும் கூற முன்வந்தால் இஃது சத்தியசீலர்கள், சான்றோர்கள் இவர்கள் கைக்கொள்ளும் முறைமையன்று. இதைவிடக் கொல்லப்பட்டுவிடுவதே நன்று. இகலோக வாழ்வே சின்னாட்களாம். இறுதியாக நீர் எதுவரைக்கும் தான் இகலோகத்தில் வாழப்போகின்றீர்?" எனக் கூறினார்கள். இதன் பேரில் இப்னுஜுபைர் (ரலி.) "என்னைக் கொன்ற பின்பு ஷாம்வாசிகள் எனது சரீரத்தைத் துண்டுதுண்டாகச் செய்துவிடுவார்கள்" எனவும் அன்னையார் "அறுக்கப்பட்ட ஆட்டுக்குத் தனது தோல் உரிக்கப்படுவதால் என்னதான் கஷ்டம் ஏற்பட்டுவிடும்?" எனக் கூறிவிட்டனர்.

அப்துல்லாஹ் பின்ஜுபைர் (ரலி.) நேத்திரங்களின் பார்வை யிழந்த தமது அன்னையாரின் சிரசைத் தொட்டு முத்தமிட்டு "எனது யோசனையும் இதுவே. இதற்காகவே இன்று செல்கிறேன். எனினும், புறப்படுவதற்கு முன்பு எனதபிப்பிராயத்தைக் கூறித் தாங்களைக் கலந்தாலோசிக்க விரும்பினேன். தாங்கள் எனது அபிப்பிராயத்திற்குப் பக்கபலமளித்து, எனது தீரத்தைப் பெருக்கியதற்காக அல்லாஹு தஆலாவுக்கு நன்றி செலுத்துகிறேன். இன்று

நான் கொல்லப்பட்டுவிடுவேன். இதற்காய் எனக்காக மிக்க விசனமடையாதீர்கள்! என் விஷயத்தை அல்லாஹ்விடம் ஒப்புவித்துவிடுங்கள்! நான் எவ்வித தீமையையும் விழைந்து நிற்கவில்லை யென்பதையும், எந்த முஸ்லிம்மீதும் அதிக்கிரமம் புரியவில்லை யென்பதையும் ஒளிக்காது கூறுகிறேன். இன்னும் எத்தகைய உடன்படிக்கையையும் நான் முறிக்கவில்லை; நம்பித்துரோகமும் செய்யவில்லை. என்னுல் நியமிக்கப்பெற்ற உத்தியோகஸ்தரின் தீங்குகளைச் செவியுற்று, நான் அதை விருப்புடன் நோக்கியது கிடையாது. மேலும் அதற்காகக் கண்டித்தேயுள்ளேன். அல்லாஹ் தஆலாவின் சம்மதியைத் தவிர்த்து வேறெதையும் நான் விழைந்து நிற்கவில்லை. எனது ரக்ஷகா! நான் இதையெல்லாம் தற்புகழ்ச்சிக்காகக் கூறவில்லை. என தம்மையாருக்கு நிம்மதி ஏற்படுவதற்காகவே கூறுகிறேன்" என்றார்கள். ஹஸ்ரத் அஸ்மா (ரலி.) "அல்லாஹ் கருதினுல் நான் நல்லவிதமாய்ப் பொறுமையைக் கடைப்பிடிப்பேன்" என்றார்கள். இதற்குப் பிறகு அவர்கள் சென்று சண்டையிட்டு மடிந்தார்கள். ஹஜ்ஜாஜ் அவர்களின் சவத்தைத் தூக்கிலிட்டு மூன்று தினங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அஸ்மா (ரலி.) இடம் அனுப்பிவைத்தான். அவர்கள் நல்லடக்கம் செய்தார்கள். இச்சம்பவத்திற்கு இருபது தினங்களுக்குப் பிறகு அவர்களும் இறந்துபோனுர்கள்.

இப்னு ஜுபைர் (ரலி.)

அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் தந்தையார் ஜுபைர் பின் அவ்வாம் (ரலி.) அவர்களாவர். தாயார் அஸ்மா பின்து அபீபக்ர் (ரலி.) அவர்களாவர். பின்னவரின் சிறப்புப் பெயர் தாத்துன்னிதாகைன் என்பதாம். ஹிஜ்ரத்திற்குப் பிறகு இவர்களே முஸ்லிம்களுக்கு ஜனித்த முதற் குழந்தையாவார்கள். இவர்களின் ஜனனம் முஸ்லிம்

களுக்கொரு மங்களமாயது. ஹிஜ்ரத்திற்குப் பிறகு மதீனாவில் எந்த முஹாஜிருக்கும் குழந்தை ஜனிக்கவில்லை. மக்காவின் காபிர்கள் "எமது சுவாமிகளின் எதிரிகளுக்கு மக்களுண்டாகப் போவதில்லை" எனக் கூறிவந்தார்கள். அப்துல்லாஹ் (ரலி.) அவர்கள் ஜனித்ததும் அவர்கள் வாய்கள் அடைபட்டன. இவர்கள் ஸஹாபாக்களின் குழந்தைகளில் வீரம், தெய்வ பக்தி, வணக்கம் இவைகளில் தனிச் சிறப்புப் பெற்றிருந்தார்கள். 'கிலாபத்தை ராஷிதா' வின் காலத்தில் அநேக யுத்தங்களிற் கலந்திருந்தார்கள். அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் குஸ்தன்துனியாவின் எதிர்ப்பிலும் கலந்திருந்தார்கள். 'கஜர்' தேசம், ஆப்பிரிகா தேசம் இவைகளின் வெற்றியின்போது அநேக அரிய காரியங்களைப் புரிந்தார்கள். யஜீதின் கிலாபத்தின் போது இவர்களும், இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும் பைஅத் செய்யாது மக்காவுக்குச் சென்றுவிட்டார்கள். கர்பலாவின் சம்பவம் நடைபெற்ற பின்பு ஹிஜாஸில் தமக்காக பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். யஜீத் இவர்களை எதிர்க்கச் சேனையை யனுப்பினார். எனினும், முற்றுகையின் போதே யஜீத் மரித்துவிட்டதாய்ச் செய்தி கிடைக்கவே அச்சேனை திரும்பிவிட்டது. ஹி. 66-ம் ஆண்டு ஷாம் தேசத்தைத் தவிர்த்து ஏனைய இஸ்லாமிய மாகாணங்களிலும் இவர்கள் கிலாபத் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒன்பது வருடங்கள் கலீபாவாக விருந்து ஹி. 72-ம் ஆண்டில் கொல்லப்பட்டார்கள்.

ஹஜ்ஜாஜ்

இப்னுஜுபைர் (ரலி.) கொல்லப்பட்ட பிறகு அப்துல் மலிக் ஹிஜாஸுக்கு ஹஜ்ஜாஜை பிரதிநிதியாக நியமித்தார். இராக் வாசிகளின் குறும்புகள் அதிகமாய்விட்டதால் அப்துல் மலிக் இன்னல்களுக் கிலக்காய் அவர்களைச் சீர்திருத்து

வதற்காய் ஹஜ்ஜாஜை ஹிஜாஸைவிட்டும் நீக்கிவிட்டு பஸரா, கூபா இரண்டிற்கும் தலைவனாய் நியமித்தார். இவன் 12 குதிரை வீரர்களை மட்டும் தன்னுடனழைத்துக்கொண்டு கூபாவுக்குள் பிரவேசித்தான். இவனது சிரசின் மீது அச்சமயம் சிவப்புப்பட்டுத் தலைப்பாகையும், முகத்தில் அதே பட்டியும் இருந்தது. ஜாமிஉமஸ்ஜிதுக்குச் சென்று மிம்பர் மீதேறி நின்றார். கூபாவாசிகள் அங்குக் குழுமினார்கள். அவர்கள் தலைவர்களை இழிவாய்க் கொள்வதையே வழக்கமாய்க் கொண்டவர்களாதலின் அவர்களிற் சிலர் வில்லுடனும், அம்புடனும், மற்றும் பலர் ஹஜ்ஜாஜின்மீது எறிவதற்காக கைகளில் பொடிக் கற்களுடனும் வந்திருந்தார்கள். ஹஜ்ஜாஜ் தனது முகவாய்ப்பட்டியை யவிழ்த்து ஜனங்கள் நடுங்கிப்போகுமாறு பெரியதொரு பிரசங்கம் புரிந்தான். இதைக்கேட்ட ஜனங்களின் கரங்களிலிருந்த வில், அம்பு, பொடிக்கற்கள் யாவும் கீழே நழுவின. அவனது பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

“மகா ஜனங்களே! நான் இங்கு துண்டிக்கப்படும் அநேக தலைகளைக் காண்கிறேன். எனக்கு உதிரத்தில் தோயப்போகும் அநேக தலைப்பாகைகளும், தாடிகளும் காணக்கிடைக்கின்றன. அமீருல் மூமினீன் (கலீபா) தம்மிடமுள்ள அம்புகள் யாவையும் பார்த்து, அவைகளில் கடினமானதாகவும், இருதயத்தை ஊடுருவிப் பாய்வதாகவுமுள்ளதையே உங்கள் புறம் அனுப்பியுள்ளனர். நானே அந்த அம்பு. நான் உங்களின் குறும்புகளை யொடுக்கிவிடுவேன். உங்களின் குழப்பங்கள் யாவையும் அடக்கிவிடுவேன். நீங்கள் ஒரு காலமாய் குழப்பம் என்னும் படுக்கையில் சயனித்தும், வழிகெடுத்தல், பிளவுண்டாக்கல் என்னும் பள்ளியறையில் நித்திரை புரிந்தும் வருகிறீர்கள். தற்போது உங்கள் நேத்திரங்கள் திறக்கப்பட்டு, ‘நேர்மையான வழியாது?’ என்பதுகாண்பிக்கப்படும் நேரம் அண்மித்துவிட்டது. உங்களுக்குவமை குர்ஆனில் கூறப்பட்ட ஒரூர் வாசிகளையே குறிப்பிடலாம்.

அவர்கள் நிம்மதியுடனிருந்தார்கள். ஒவ்வொரு புறத்திலிருந்தும் அவர்களுக்கு ஊதியம் கிடைத்து வந்தது. எனினும் அவர்கள் இறைவனது நன்றிக்கு மாறு செய்ததால் அவர்கள் மீது பசி, அச்சம் என்னும் கொடுமைகள் அனுப்பப்பெற்றன. உங்கள் சம்பளங்களைக் கொடுத்துவிட வேண்டுமெனவும், நீங்கள் கவாரிஜ்களை எதிர்ப்பதற்கு முஹல்லப் பின் அபீஸுப்ரா இடம் அனுப்பப்பட வேண்டுமெனவும் அமீருல் மூமினீன் கட்டளையிட்டுள்ளனர். ‘சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்ட நான்காவது தினம் எவனும் முஹல்லப் இடம் செல்லாது, இங்கிருந்தால் கொல்லப்படுவா’னென நான் பறைசாற்றுகிறேன். ‘நான் கூறுவதையெல்லாம் நிறைவேற்றியே தீருவே’னென்பதையும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.”

இதற்குப் பிறகு அவர் தனது அடிமைக்கு அமீருல் மூமினீன் உடைய கட்டளையை வாசித்துக் காண்பிக்கும்படிக் கட்டளையிட்டார். அவன் வாசிக்கத் தொடுத்தான். துவக்கத்தில் “அப்துல் மலிக் இடமிருந்து கூபாவாசிகளுக்கு; அஸ்ஸலாமு அலைக்கும்” என்பதை வாசிக்கவும் ஒருவரும் ஸலாமுக்குப் பதில் கூறவில்லை. ஹஜ்ஜாஜ் அடிமையை வாசியாது தடுத்துவிட்டு ஜனங்களைப் பார்த்து “அமீருல்மூமினீன் உங்களுக்கு ஸலாம் சொல்கிறார்கள். நீங்கள் பதில் கூறாதிருக்கிறீர்கள். இவ்விடத்துத் தலைவர்கள் இதே பாடத்தையே யுங்களுக்குக் கற்பித்திருக்கிறார்கள். நான் உங்களைச் சீர்திருத்திவிடுகிறேன்” எனக்கூறவும் யாவரும் ஸலாமுக்குப் பதிலளித்தார்கள். இதற்குப் பிறகு ஹஜ்ஜாஜ் சம்பளத்தைப் பட்டுவாடா செய்யத் தொடுத்தான். தேக நடுக்கங்கொண்ட மிகவும் வயது முதிர்ந்த கிழவனொருவன் சம்பளம் பெற்றுக்கொண்டு “தற்போது நான் சண்டையிடத் தக்கோனாயிருக்கவில்லை. எனக்குப் பதிலாய் எனது புத்திரனைச் சண்டைக்கனுப்பிவிடுங்கள்!” என விண்ணப்பித்துக்கொண்டதை ஹஜ்ஜாஜ் ஒப்புக்கொண்டான்.

அப்போது அக்கூட்டத்திலொருவர் "இக்கிழவன் யாவனென்பதைத் தாங்களறிவீர்களோ? இவன் உமைர் பின்லாபீ புர்ஜுமீ என்பானவன். இவன் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) கொல்லப்பட்டபிறகு அவர்கள் நெஞ்சின்மீதேறி யுட்கார்ந்து, விலாவெலும்புகளை முறித்துவிட்டு அதன்பேரில் புகழ்க்கவி கூறியவன்" எனக் கூறவும் ஹஜ்ஜாஜ் அக்கிழவனைத் திரும்பவுமழைத்து "கிழவனே! அனியாயமாய்க் கொலை புரியப்பட்ட கலீபா அவர்களின் விலாவெலும்புகளை முறிப்பதற்காக உனக்குப் பதிலாய் வேறெவனையேனும் நீ ஏன் அனுப்பியிருக்கக்கூடாது?" எனக்கூறி, அவனைத் தனது முன்னிலையிலேயே கொன்றுவிட்டான். ஜனங்கள் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு சென்று, தமது பந்துக்களுக்குக் கொடுத்து, "நாங்கள் முஹல்லப் இடம் செல்கிறோம். நீங்கள் எங்களது சாமான்களைச் சரிப்படுத்தி அங்கனுப்பிவிட வேண்டியது" எனக்கூறத் தொடுத்தார்கள்

ஹஜ்ஜாஜின் பிரசங்கத்தையும், அவனது கிரியைகளையும் கவனிக்கப்புகின் அவன் கொடுமை, அதிக்கிரமம் இவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது வெள்ளிடை மலைபோல் விளங்கக் கிடக்கின்றது. இத்தகைய அரசுரிமையால் உண்மையான சீர்திருத்தம் ஏற்படவே போவதில்லை. பார்ப்பதற்கு நெருப்பு அணைக்கப்பட்டதாகத் தெரியவரினும் பிறகு காற்றுவீசத் தொடுக்கவே அந்நெருப்பு பற்றியெரிய வாரம்பிக்கும். தவிர, இராக் வாசிகள் அடிபணிந்ததிலிருந்தும் இஃது தெள்ளெனத் தெரிகின்றது. இவன் 12 குதிரை வீரர்களுடன் மட்டுமே அவர்களின் நகரத்தில் பிரவேசிக்கிறான். அங்குள்ள பெரிய பெரிய கண்ணியமிக்க பெரியார்களை மிரட்டுகிறான்; அவர்கள்மீது பல அதிக்கிரமங்களைப் புரிகிறான். அவர்கள் மௌனமாய் ஆடுமாடுகளை போன்று தலைகுனிந்து நிற்கிறார்கள். அவனது இன்னல்கள் யாவை

யும் சகித்துக்கொள்கிறார்கள். குழப்பத்தின் காலங்களில் இந்த ஜனங்களை சிங்கங்களாய் விளங்கினவர்கள். எனினும் கொஞ்சம் மேலே சென்றால் அவர்களின் இந்த வழிபாடும் சமயசந்தர்ப்பத்தை யனுசரித்து மேற்கொண்டதெனவும், பிளவு படுத்துதற்குச் சமயம் கிடைத்தபோது முன் போலவே ஆவேசத்துடன் அதில் பங்குகொண்டார்களென வும் கண்டறியலாம்.

ஹஜ்ஜாஜ் பஸராவுக்கும் சென்று, அங்கும் இதேவித மான பிரசங்கம் செய்தான். அங்கு சம்பளம் வாங்கியவ னொருவன் தனது சம்பளத்தைத் திருப்பிக்கொடுத்து "நான் வியாதியஸ்தனாவேன். இதே காரணத்தால் முந்திய தலைவரான பிஷ்ர்பின் மர்வான் என்பாரும் என்னைச் சேனையிற் கலந்துகொள்ளும்படி வற்புறுத்தவில்லை. தாங்களும் என்னை க்ஷமிக்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டும் ஹஜ்ஜாஜ் அவனைக் கொன்றுவிட்டான். இதனால் பஸரா வாசிகள் மிகவும் பயந்து போய் உடனே 'ராமிஹ்ராஜ்' என்னுமிடத்திலுள்ள முஹல்லபின் சேனையிற் கலந்து கொண்டார்கள். ஹி. 72-ம் வருடத்தில் அப்துல்லாஹ்பின் அபீபக்ரா என்பாரை ஹஜ்ஜாஜ் 'ஸீஸ்தான்' புறம் அனுப்பி வைத்தான். அவ்விடத்துத் தலைவனான ரத்பீல் என்பான் புரட்சிக்காரர்களுடன் சேர்ந்துபோய், அநேக முஸ்லிம் களைக் கொன்றுவிட்டான். அப்துல்லாஹ் அங்குசென்று சண்டையிட்டுக் கொண்டே தேசத்திற்குள் சென்று விட்டார். இதன் பயன் பகைஞர்களுக்கு மத்தியில் அவர்கள் அகப்பட்டுக்கொண்டதேயாம். இதனால் அவர்க ளின் சேனை மிகுந்த இன்னல்களுக் கிலக்காயது. ஹஜ்ஜாஜ் பஸராவிலிருந்து 20,000-பேர்கள் கொண்டதொரு சேனையை யும், கூபாவிலிருந்தும் அதேமாதிரியான சேனையையும் சகல தளவாடங்களுடனும் அப்துர்ரஹ்மான் பின் அஷ்அத் என்

பானின் தலைமையில் மீண்டும் அனுப்பிவைத்தான். அப் துர்ரஹ்மான் வெற்றிகொள்ளத் தொடுத்தான். எந்த நக ரத்தைக் கைப்பற்றினாலும், அதற்கான முழு ஏற்பாட்டை யும் செய்துவிட்டு முன்னேறிச் செல்வான். அநேக விடங் களைக் கைப்பற்றிய பின்பு "இந்த—கைப்பற்றப்பட்ட-நாடு களின் ஒழுங்கு முறைகளைக் கவனித்து, பிறகு அடுத்த வரு டம் முன்னேறிச் செல்வோம்" எனக்கூறி விட்டான். இதையறிந்த ஹஜ்ஜாஜ் "நீங்கள் இந்த யோசனையைச் சோம்பலாலும், பலவீனத்தாலுமே செய்திருக்கிறீர்கள். எதிரிகள் வாக்குத்தத்தத்திற்கு மாறுசெய்திருக்கிறார்கள். எல்லைப்புற பிரதேசங்களை யழித்துவிட்டார்கள். முஸ்லிம் களைக் கொன்றுவிட்டு அவர்களின் குடும்பத்தவரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களின் கோட் டைகளையும் நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டு, அவர்களுக் குத் தக்க சிக்ஷிதிப்பது நன்று. உங்களால் இஃது முடியாதெனின், உங்கள் சகோதரின் புதல்வரான இஸ் ஹாக் பின் முஹம்மத் பின் அஷ்அத் என்பாரைச் சேனாதி பதியாக்கிவிட்டு, நீங்கள் என்னிடம் திரும்பி வந்துவிடுங்கள்" என்றெழுதினான்.

இப்னு அஷ்அதின் குழப்பம்

இக்கட்டளை கிடைத்தபோது இராக்வாசிகளே முழுமை யாகவிருந்த சேனை ஏகமனதுடன் ஹஜ்ஜாஜுக்கு விரோத மாய் "நாங்கள் அவனைத் தலைவனாய் ஏற்றுக்கொள்ளமாட் டோம்" எனக் கூறிவிட்டு, அப்துர்ரஹ்மானைத் தலைவனா கத் தேர்ந்தெடுத்தார்கள். ரத்பீலுடன் சமாஸம் செய்து கொண்டு இவர்கள் ஹஜ்ஜாஜை நீக்குவதற்காகக் கூபாவுக்குத் திரும்பிச் சென்றார்கள். சேனையின் முன்னணியில் அஃஷா வென்னும் புலவன் ஹஜ்ஜாஜை இழிந்தும், அப்துர் ரஹ் மானைப் புகழ்ந்தும் கவிகூறிக்கொண்டே சென்றான். பாரிஸ்

மாகாணத்தை யடைந்த பின்பு இராக் வாசிகள் "நாம் ஹஜ்ஜாஜைத் தலைவனெனக் கொள்ளாதபோது அப்துல்மலிக் நமக்கு கலீபாவாகவு மாட்டார். எனவே, நாம் அப்துர் ரஹ்மானை நமக்கு கலீபாவாகத் தேர்ந்தெடுப்போம்" எனக்கூறிக் கொண்டு அச்சேனை முழுமையும் அவனையே கலீபாவாகத் தேர்ந்தெடுத்தது. ஹஜ்ஜாஜ் இச்செய்திகளை அப்துல்மலிக்குத் தெரிவிக்கவும் அவர் உதவிக்காகச் சேனையை யனுப்பினர். ஹஜ்ஜாஜ் "துஸ்தர்" என்னுமிடத்திற்கு அவர்களைக்கொண்டு சென்றபோது அங்கு இருதரப்பு சேனைகளும் போர்புரிந்தன. இராக்வாசிகள் அவனது சேனையின் முன்னணியைத் தோற்கச் செய்தார்கள். ஹஜ்ஜாஜ் அங்கிருந்து புறப்பட்டு "ஜாவியா" வென்னுமிடத்திற்கு வந்து தங்கினன். அப்துர் ரஹ்மான் பஸராவைக் கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்து சேனையைக் கொண்டுவந்தான். ஜாவியாவில் இருதரப்பாரும் போர்புரிந்தார்கள். கடுமையான யுத்தம் நடந்தது. முதலாவதாக ஷாம்வாசிகள் தோல்வியடைந்தார்கள். எனினும், ஹஜ்ஜாஜின் திறத்தினல் ஸ்திரமாக நின்று இராக்வாசிகளின் வலப்புறத்து சேனையைத் தோற்கச் செய்தார்கள். அப்துர் ரஹ்மான் சண்டைக்களத்தை விட்டுவிட்டு கூபாவுக்குச் சென்று அரசாங்க மாளிகையைக் கைப்பற்றிக்கொண்டான். ஹஜ்ஜாஜும் அவனைப் பின்பற்றிச்சென்று 'தீர்கரா' வென்னுமிடத்தில் கூடாரமடித்துத் தங்கினன்.

அப்துல் மலிக் சமாதானத்தைக்கருதியும், இராக்வாசிகளைச் சந்தோஷிப்பதற்காகவும் முஹம்மத் பின் மர்வான் என்பாரை யனுப்பிவைத்து இராக் தலைவர்களுக்கு "நீங்கள் ஹஜ்ஜாஜை எதிர்த்தால் நான் அவனை நீக்கிவிட்டு, அவனுக்குப்பதிலாக எனது சகோதரரை யுங்களுக்குத் தலைவராய் நியமிக்கிறேன்" என்றெழுதியிருந்தார். இதற்கு

இராக்வாசிகள் "நாங்கள் ஹஜ்ஜாஜைத் தலைவனாகவும், உங்களை கலீபாவாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றெழுதி விட்டார்கள். இதற்குப் பிறகு முஹம்மத் பின் மர்வான் ஹஜ்ஜாஜிடம் "தற்போது நீங்களே இவ்விடத்து அதிபராவீர்கள். உங்களால் கூடுமான வரையில் இதை முடியுங்கள்" எனக்கூறிவிட்டார். அப்துர் ரஹ்மான், ஹஜ்ஜாஜ் இவ்விருவரின் சேனைகளும் 'தீர்ஜமாஜிம்' என்னுமிடத்தில் நூறு தினங்கள் போர்புரிந்தன. இறுதியாக ஹி. 33-ம் வருஷம், ஜமாதில் ஆகிர் மாதம், 24-ந் தேதிக்கு அப்துர் ரஹ்மான் தோல்வியடைந்தான். ஹஜ்ஜாஜ் அவ்வமயம் ஓடுவோரைப் பின்றொடரக்கூடாதெனவும், திரும்பி வந்து விட்டோருக்கும், அன்றி 'ரை' தேசத்திலுள்ள 'கதீபா' வென்னுமிடத்திற்குச் சமீபமாகச் சேர்ந்து விட்டோருக்கும் அபயமளித்து விட்டதாகவும் பறையறிவித்தான். வெற்றிக்குப் பிறகு அவன் கூபாவுக்குள் பிரவேசித்து, பைஅத்தைப் புதுப்பிப்பதற்காக ஜனங்களை யழைத்தான். ஒவ்வொருவனையும் தான் முன்பு காபிரா (முஸ்லிமல்லாதாரு) யிருந்ததாகக் கூறச் செய்தபின்பே பைஅத் செய்யச் செய்வான். இவ்விதஞ் செய்யாதவனைக் கொன்றுவிடுவான். அஃஷாவென்னும் கவிஞனும் பிடிபட்டான். புரட்சிக்காரர்களுக்கு ஆவேசமூட்டிய கவிகளைப் படிக்கும்படி அவனிடம் ஹஜ்ஜாஜ் கூறவும் அவன் இலக்கணமும், இலக்கியமுமிருந்த கவியொன்றை ஹஜ்ஜாஜைத் துதிசெய்து படித்தான். இவனை யொருக்கால் ஹஜ்ஜாஜ் மன்னித்துவிடலாமெனவும் ஜனங்கள் நம்பினார்கள். எனினும், ஹஜ்ஜாஜ் அவனைத் தனக்கு முன்னிலையிலேயே கொன்றுவிட்டான்.

அப்துர் ரஹ்மானின் குழப்பம் இராக்வாசிகளின் இறுதியான குறும்பாயிருந்தது. இதில் அவர்கள் மிகவும் இன்னல் பட்டார்கள். இநிலையே அவர்களின் தலைவர்கள்

மிகுதியாக அழிந்துபட்டார்கள். இதற்குப்பிறகு அவர்கள் குழப்பமுண்டாக்கித் திரியமுடியாதொழிந்தார்கள். அப்துர் ரஹ்மான் ஓடி, ரத்பீல் இடம் புகலிடம் தேடினான். ஹஜ்ஜாஜ் அவனுக்குத் தனது குற்றவாளியை யனுப்பிவிடும்படியும், இன்றேல் தானே வருவதாகவும் எழுதினான். விடுதலை யடைவதற்கு வேறுவழியின்றி அப்துர் ரஹ்மான் கட்டடத்தின் மேலிருந்து கீழேகுதித்துத் தற்கொலை செய்து கொண்டான். ரத்பீல் அவனது சகாக்களின் சிரங்களைத் துணித்து ஹஜ்ஜாஜிடம் அனுப்பிவைத்தான். ஹி. 61-ம் வருஷந்தொடுத்து ஹி. 86-ம் வருஷம் வரைக்கும் 25 ஆண்டுகள் குழப்பத்திலும், கலகத்திலுமே கழிந்தன. பெரியபெரிய மனிதர்களெல்லாம் கிலாபத்தை விழைந்து நின்றதால் குழப்பமும், முஸ்லிம்களுள் உட்சண்டையும் ஏற்பட்டு வந்தன. "இகலோக வாழ்க்கையை விழைந்து நிற்பதையும், முஸ்லிம்களுள் பிளவையுண்டாக்குவதையும் மிகவும் இழிந்தகூறும் திருக்குர்ஆனைத்தான் அவர்கள் வாசித்திருக்கவில்லையா? முஸ்லிம்கள் தமது பலத்தைத் தமக்குள் சண்டையிட்டு இழந்துவிடச் செய்வதன் முடிவு யாதாகுமென்பதைத்தான் அவர்கள் ஆலோசிக்கவில்லையோ? தமது சுயநலத்திற்காக முஸ்லிம்கள் உதிரஞ்சிந்தச் செய்வதன் தீமையைத்தான் கருதிப் பார்க்கவில்லையோ?" என்பதைக் கருதிப் பார்க்கப்புகின் திகைத்து நிற்கவே ஏற்படுகின்றது. அக்காலத்திலுள்ள கலீபாக்களும் இத்தகைய குற்றங்களைவிட்டுந் தப்பிவிட வழியில்லை. பொது மக்கள் தமக்கு அடிமைகளாக நடப்பதற்காக அதிக்கிரமமான அரசியலை அவர்கள் நடாத்தி வந்தார்களேயல்லாது பொதுமக்களின் உள்ளங்களில் தம்மீது அன்பும், இரக்கமும் ஏற்படுவதற்கான மார்க்கத்தைத் தேடிக்கொள்ளவில்லை. இதே காரணத்தாற்றான் கலீபாவுக்கு எவரேனும் எதிரியாக ஏற்

பட்டால் பொதுமக்கள் அவரையாதரிக்க முற்பட்டு விடு பவர்களா யிருந்தார்கள்.

கவாரிஜ்கள்

யஜீத் உடையகாலத்தில் ஷாம்தேசத்துச்சேனை மக்காவை முற்றுகையிட்டபோது கவாரிஜ்களின் ஒரு கூட்டம் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) தமது கொள்கையை யாதரித்தால் அவர்களுக்குதவிபுரிவதாக முன்வந்தது. அவர்களின் தலைவர்கள் நஜ்தா பின் ஆமிர், நாபிஃபின் அஜ்ரக் என்னும் இருவராம். இவர்கள் அவர்களைச் சந்தித்து "இரு பெரியார்(அபூபகர், உமர்—ரலி—)களைப்பற்றித் தங்களது கொள்கையாது?" எனக் கேட்டதற்கு "அவ்விருவரும் சாலச்சிறந்த கலீபாக்களாயிருந்தனர்" என அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) பதிலளித்தார்கள். மீண்டும் கவாரிஜ்கள் "இஸ்லாமுக்கும், நீதிக்கும் புறம்பான வார்த்தைகளை வெளிட்ட காரணத்தால் அவர்களின் கிலாபத் முறிக்கப்பட்டுப் போனதுடன், இறுதியில் கொல்லப்படுவதே முக்கியமாகவும் போய்விட்ட ஹஸ்ரத் உத்மான் அவர்களைப்பற்றித் தங்களின் கொள்கை என்ன? அவர்களுக்குப்பிறகு தாம் பைஅத் வாங்கிக்கொண்டு; அல்லாஹு தஆலாவின் கட்டளைகளில் மனிதர்களை இடையே நிறுத்திவைத்தவர் விஷயத்தில் தாங்கள் எத்தகைய அபிப்பிராயங் கொண்டுள்ளீர்கள்? தங்கள் பிதா, ஹஸ்ரத் தல்ஹா (ரலி.) இவர்களின் விஷயமாய்த் தங்களின் கொள்கை யாது? இவர்கள் ஒரு கலீபாவுக்கு பைஅத் செய்தபின்பு இகலோகவாழ்வை முன்னிட்டே அவருக்கு எதிர்ப்பில் கிளம்பி, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு, சண்டைக்களத்திற்குக் கொண்டு வந்தார்களன்றோ? இத்தியாதி விஷயங்களில் தாங்கள் எமது கொள்கையை யாதரித்தால் அல்லாஹு தஆலாவிடம்

நற்கூலியைப் பெற்றுக்கொள்வீர்கள். நாங்களும் தங்களுக் குதவிபுரியத் தயாராயிருக்கிறோம். இன்றேல், இறுதிநா ளன்று அவமானமடைந்தோராகவும், இகலோகத்தில் இழிந் தோராகவும் கருதப்படுவீர்கள்" எனக்கூறினார்கள்.

இவைகளைச் செவியுற்ற அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) "அல்லாஹுத் தஆலா ஹஸரத் மூஸா, ஹாரூன் (அலை.......) இவர்களுக்கு பிர்அவ்ன் உடைய விஷயத்திலும் மிருதுவாகவே நடந்துகொள்ளும்படிக் கட்டளையிட்டான். "இறந்துபோனவர்களைப் பற்றிய தீமைகளை வெளியிட்டு, ஜீவித்திருப்பவர்களைக் கஷ்டங்களுக் கிலக்காக்காதீர்கள்" என எம்பெருமானார் (ஸல்.) கூறிப்போயிருக்கிறார்கள். அபூஜஹ்ல் உடைய திருப்புதல்வர் இக்ரிமா (ரலி.) அவர்க ளுக்கு மனவருத்தமேற்படக்கூடாதென அபூஜஹ்லையும் நிந்திப்பதைத் தடுத்தார்கள். பிர்அவ்ன், அபூஜஹ்ல் இவ் விருவரையுமே நிந்திப்பது விலக்கப்பட்டிருக்கும்போது நான் யாங்ஙனம் எனது பிதாவையும், அந்தப் பெரியார்களை யும் நிந்திக்க இசைவேன்? பிள்ளைகள் தகப்பனாருக்கு எவ்வ ளவு கடமைப்பட்டிருப்பார்களென்பதைத் தாங்களறிவீர் கள். "அதிக்கிரமக்காரர்களை நான் ஆதரியேன்" எனப் பொதுப்படையாக நான் கூறக்கூடும். இதில் எல்லா அதிக் கிரமக்காரர்களும் கலந்து போகிறார்களன்றோ?" எனக் கூறிவிட்டார்கள். மறுதினம் கவாரிஜ்கள் மீண்டும் அவர் களிடம் சென்று குறிப்பாகப் பெரியார்களை நிந்திக்கும்படிக் கேட்கவே அவர்கள் எழுந்துநின்று ஹஸரத் உத்மான், ஜுபைர், தல்ஹா (ரலி.......) இவர்களைத் துதிசெய்து ஒரு சொற்பொழி வாற்றினார்கள். அதில் கவாரிஜ்களின் கொள்கைகள் யாவையும் தக்கவாறு கண்டித்தார்கள். கவாரிஜ்கள் இவர்களிடம் தமது சாமர்த்தியம் பலிக் காதெனக் கண்டுகொண்டார்கள். அவர்களில் ஒரு கூட்

டம் 'யமாமா'வின்புறம் சென்றது. மற்ருெரு கூட்டம் நாபிஃ பின் அஜ்ரக் என்பானுடன் 'அஹ்வாஜ்' போய்ச்சேர்ந்து, கலீபாவால் நியமிக்கப்பெற்ற அதிபனை நீக்கிவிட்டு கிஸ்தி வசூலிக்க வாரம்பித்தது.

இதுவரை இந்தக்கூட்டம் ஒற்றுமையாயிருந்தது. எனினும், நாபிஃ என்பானை முன்னிட்டு அஃது பிளவுபட்டு விட்டது. அவன் இஸ்லாமிய நாடுகள் (தாருல் இஸ்லாம்) யாவையும் எதிரிகளின நாடுகளா(தாருல்ஹறப்)கக்கொண்டு குழந்தைகளைக் கொல்வதையும், அமானிதப்பொருட்களைச் சூறையிடுவதையும் அனுமதித்ததுடன் அவர்களை விவாகம் புரிவதும், அவர்களின் கரத்தால் அறுக்கப்பட்ட ஜீவன்களைப் புசிப்பதும் கூடாதெனக்கூறி மார்க்க உதவிக்காக வாளேந்திநிற்பவனே முஸ்லிமெனவும், ஏனையோர் முஸ்லிமல்லரெனவும், 'குழப்பத்திற்கு ஒதுங்கி நின்றுகொண்டு கத்தியன்னியில் இஸ்லாமின் பணிசெய்வோரும் இஸ்லாமல்லாதவர்களைப்போன்றோரே' எனவும் கூறினான். நஜ்தா பின் ஆமிர் இவனுக்கு மாறுபடவே இருவருக்குமிடையே கடிதமூலம் தர்க்கம் ஏற்பட்டது. ஹைஸம் பின் ஜாபிர், அப்துல்லாஹ் பின் அபால்போன்ற கவாரிஜ்களின் தலைவர்களும் நாபிஉக்கு மாறுசெய்தார்கள். இவர்களது கொள்கைப் பிரகாரம் இவர்களது கருத்துக்கு மாறுபட்டோர் பெருமானுருக்கு மாறுசெய்வோராகவே யிருப்பினும், அவர்கள் ஏகநாயகக்கொள்கையையும், குர்ஆனையும் ஒப்புக்கொள்வதால் அவர்களுடன் விவாக சம்பந்தம் செய்துகொள்ளலாமெனக் கொண்டார்கள். கவாரிஜ்களின் தலைவனுன அப்துல்லாஹ் பின் ஸபார் என்பானைப் பின்பற்றிய 'ஸபரிய்யா' வென்னும் கூட்டம் குழப்பத்தை விட்டொதுங்கி, மூலையிலிருப்போரை நிந்திப்பது கிடையாது. ஆதலால், இக்கூட்டம் முழுமையாக ஒதுங்கிவிட்டது.

டது. தவிர; கவாரிஜ்கள் யாவரினும் கொடுமைபூண்டிருந்த நாபிஃ என்பான் கைப்பற்றிக்கொண்டு சென்ற நாடுகள் 'அஹ்வாஜ்' தொடுத்து பஸராவரைக்கும் சென்றுவிட்டன. பதினாயிரம் பஸராவாசிகள் ஸலீம் பின் அபீஸ் என்பானின் தலைமையில் அவனுடன் சண்டையிடச் சென்றதில் நாபிஃ, ஸலீம் இருவரும் கொல்லப்பட்டனர். கவாரிஜ்கள் உபைதுல்லாஹ் பின்பஷீர் என்பானைத் தமக்குத் தலைவனாகவும், பஸராவாசிகள் ரபீஃ பின் அம்ரு என்பானைத் தலைவனாகவும் கொண்டார்கள். ஏறக்குறைய ஒருமாதம் சண்டை நடைபெற்றதில் இறுதியாக பஸராவாசிகள் தோல்வியடைந்தார்கள். இத்தோல்வியின் காரணமாக பஸராவாசிகள் கதிகலங்கிப்போனார்கள். அவ்விடத்து ஆலோசனையாளர்களும், தலைவர்களும் ஒன்றுகூடி முஹல்லப் என்பாரிடம் சென்று "உங்களையல்லாது வேறு எவராலும் கவாரிஜ்களின் இன்னல்களைத் தவிர்க்கமுடியாது" எனக்கூறவே அவர் மூன்று நிபந்தனைக் குறிப்பிட்டார்:—

(1) நான் அவர்களிடமிருந்து கைப்பற்றும் பிரதேசங்கள் யாவும் எனது அதிகாரத்தில் ஒப்புவிக்கப்படவேண்டும்.

(2) சண்டைக்கான சகல தளவாடங்களும் பொது நிதியின் பொக்கிஷத்தைக்கொண்டு வாங்கப்படவேண்டும்.

(3) பஸராவின் வீரர்களிலும், குதிரைவீரர்களிலும் நான் தேர்ந்தெடுப்போர் யாவரும் என்னுடன் வரவேண்டும்.

இம்மூன்று நிபந்தனைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் பேரில் முஹல்லப் எதிர்ப்பதற்காகச் சென்றார். ஒவ்வொரு விடத்திலிருந்தும் அவர்களைத் துரத்திக்கொண்டே 'அஹ்வாஜ்' வரைக்கும் சென்றுவிட்டார். அங்கு அவர்கள் ஒருங்கு சேர்ந்து எதிர்த்ததில் பஸராவாசிகள் எதிர்க்க

முடியாது போர்க்களத்திலிருந்து ஓடிவிடத் தலைப்பட்டார்கள். எனினும், முஹல்லபின் தீரத்தைக் கண்ணுற்றுத் திரும்பிவந்தார்கள். கவாரிஜ்களின் தலைவன் கொல்லப்படவும் அவர்கள் தோல்வியடைந்து ஓடினார்கள். பின்தொடர்ந்ததில் அநேகர் கொல்லப்பட்டனர். எஞ்சி நின்றோர் 'கிர்மான்' என்னுமிடத்தில் வந்து தங்கினார்கள். முஹல்லப் தனது சேனையுடன் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கொண்டேயிருந்தார்.

இராக்கிற்கு அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் சகோதரர் முஸ்அப் (ரலி.) அவர்கள் தலைவராகவும் முஹல்லபை 'மூஸல்' என்னுமிடத்தில் அதிபராக்கியதுடன், கவாரிஜ்களின் எதிர்ப்பில் உமர் பின் உபைதுல்லாஹ் பின் மஃமர் என்பாரை யனுப்பினார்கள். கவாரிஜ்கள் அப்போது 'அர்ஜான்' என்னுமிடத்தில் கூடியிருந்தார்கள். அவர்களின் தலைவன் ஜுபைர் பின் அலீ என்பானாயிருந்தான். உமர் அங்கு சென்று அவர்களைத் தோல்வியுறச் செய்யவும் அவர்கள் இஸ்பஹானுக்கு வந்துவிட்டார்கள். உமர் சேனையுடன் ஸாபூரில் தங்கினர். அவரிடம் மாலிக் பின் ஹஸ்ஸான் என்பார் "முஹல்லப் இராக் காலத்தில் காவலாளிகளை ஏற்படுத்துவார். "எதிரிகள் பின்புறமிருந்து வந்துவிடுவார்களோ!" வென்னும் எண்ணமே அதற்குக் காரணமாம்" என்றதற்கு உமர் "மரணம் வரும்போதுதான் வருமென்பதை நீரறியீரோ?" வெனக்கூறிவிட்டார். இதே ராத்திரியில் கவாரிஜ்கள் நெருங்கியதில் நஷ்டமடைந்து ஓடிப்போனார்கள். உமர் மாலிக்கிடம் "பார்த்தீர்களா?" வெனக் கேட்க அவரும் ஒப்புக்கொண்டு "முஹல்லபிடம் இத்தகைய தைரியமும் கூட அவர்களுக் கேற்படாது" என்றார். கவாரிஜ்கள் இஸ்பஹான் தொகுத்து அஹ்வாஜ் வரைக்கும், அங்கிருந்து இஸ்

தகர் வரைக்கும் அதம் செய்துகொண்டு திரிந்தார்கள். இறுதியாக முஹல்லபை யழைத்து முஸ்அப் (ரலி.) மீண்டும் கவாரிஜ்களை யொடுக்கும் விஷயத்திற்காக நியமித்தனர். இப்போது அவர்களின் தலைவன் கத்ரீ பின்புஜாத் என்பானு யிருந்தான். அவனையே அவர்கள் கலீபாவாகக் கொண்டிருந்தார்கள். முஹல்லப் சேனையுடன் அஹ்வாஜ் சென்ற போது அவர்கள் அங்கிருந்து ராமுஹ்ரஜ்புறம் சென்றுவிட்டார்கள். இதற்கிடையிலேயே முஸ்அப் (ரலி.) கொல்லப்பட்டு, அப்துல்மலிக் வெற்றிகொண்டார். இதைச் செவியுற்ற கவாரிஜ்கள் சப்தமிட்டு முஹல்லபின் சேனையிடம் "முஸ்அபை நீங்கள் எவ்விதம் கருதுகிறீர்கள்?" எனக் கேட்க "நேர்வழி காண்பிக்கும் தலைவராக"வெனப் பதிலளித்தார்கள். பிறகு "அப்துல் மலிக்கையோ?" வென்றதற்கு "வழிகேடனுகவும், வழிகெடுப்போனுகவுமே" எனப் பதிலளித்தார்கள். இருதினங்களுக்குப் பிறகு முஹல்லபுக்கும் இச்செய்தி கிடைத்தது. அவ்வமயம் கவாரிஜ்கள் "முஸ்அபை எவ்விதம் கருதுகிறீர்கள்?" எனக் கேட்கவும் இவர்கள் ஒன்றுமே கூறவில்லை. "அப்துல் மலிக்கையோ?" வெனவும் "நேர்வழி காண்பிக்கும் இமாமாகக் கருதுகிறோம்" என்றார்கள். இதன் பேரில் கவாரிஜ்கள் "நேற்று வழிகேடனுகவும், வழிகெடுப்போனுகவு மிருந்தவன் இன்று நேர்வழி காண்பிக்கும் இமாமாய் விட்டானே? ஓ இகலோக அடிமைகளா! உங்கள்மீது இறைவனது முனி(லஃனத்)வுண்டாவதாக!" வெனக்கூறினார்கள்.

அப்துல் மலிக் பஸராவின் அதிபாக காலித் பின் அப்துல்லாஹ் என்பாரை நியமித்தார். இவர் முஹல்லபை நீக்கிவிடக் கருதினர். இதையறிந்த பஸராவாசிகள் "இங்கு அமைதி நிலவியிருக்கின்றது முஹல்லப் அஹ்வாஜிலிருப்

பதை முன்னிட்டேயாம். நீங்கள் அவரை நீக்கிவிட்டால் கவாரிஜ்கள் முன்னேறி வருவார்கள்" எனக்கூறியதையும் காலித் பொருட்படுத்தாமல் முஹல்லபை தீர்வை வசூலிக்கும் பணியில் நியமித்துவிட்டு, தமது சோதரன் அப்துல் அஜீஜ் என்பானைச் சேனாதிபதியாக நியமித்துவிட்டார். கவாரிஜ்கள் 'தராப்ஜர்த்' என்னுமிடத்தில் அவனைத் தோற்கடித்தார்கள். காலிதுக்கு அப்துல் மலிக் "இஃது உமது குற்றத்தாலேயே நிகழ்ந்தது. முஹல்லபைப்போன்ற வீரதீரம் பொருந்திய தலைவரை நீக்கிவிட்டு, அப்துல் அஜீஜைச் சேனாதிபதியாக நியமிப்பது எவ்விதத்தாலும் உசிதமானதன்று. எனவே, நீரே இப்போது சேனையைக் கொண்டு சென்று முஹல்லபிடம் கலந்துகொண்டு, அவரது யோசனைப் பிரகாரம் கவாரிஜ்களுடன் சண்டைபிடுங்கள்! நான் கூபாவின் அதிபரும், எனது சகோதரருமான பிஷ்ர் பின் மர்வான் என்பாருக்கும் எழுதியிருக்கிறேன். அவர் உங்களுக்குதவிச் சேனையை யனுப்புவார்" என்றெழுதி யிருந்தார். காலித் இவ்வாக்ஞைப் பிரகாரம் முஹல்லபுடன் அஹ்வாஜின் புறம் சென்றார். கூபாவிலிருந்தும் உதவிக்காக 4,000-குதிரை வீரர்கள் வந்தார்கள். கவாரிஜ்கள் எதிர்க்கச் சக்திபெறாமல் அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். சேனை அவர்களைப் பின்றொடர்ந்ததெனினும், பாதையின் இன்னலால் சேனையிலுள்ள அநேகம் குதிரைகள் இறந்துவிட்டன. அநேகம் குதிரை வீரர்கள் கால் நடையாய்த் திரும்பி வந்தார்கள். இதேகாலத்தில் பஹ்ரைனில் அபூபுதைக் என்னும் கவாரிஜ்களிலொருவன் கிளம்பினான். காலித் அவனை எதிர்ப்பதற்குச் சேனையை யனுப்பினாரெனினும் அஃது தோல்வியடைந்து விட்டது. அப்துல் மலிக் இதையறிந்து காலிதை நீக்கிவிட்டு, அவருக்குப் பதிலாய் கூபாவின் அதிபர் பிஷ்ரை நியமித்து "கவாரிஜ்களின் விஷயத்தை முஹல்லபிடம்

முழுமையாக ஒப்புவித்து விடுங்கள். நான் அவரது வீரம், சேனைப்பயிற்சி, மக்கள் மீதுள்ள நல்லெண்ணம் இவைகளை நம்புகிறேன். அவருடன் பொறுக்கியெடுக்கப்பட்ட சேனையை யனுப்பி வையுங்கள்!" என்றெழுதினர். முஹல்லபை கலீபாவே நியமிப்பது பிஷ்ருக்குப் பொருத்தமா யிருக்கவில்லை. எனவே சுற்றத்தவரைச் சேர்ந்திருந்தும் தீய கருத்துபடைத்த இந்தத் தலைவன் சேனையை யனுப்பிவைத்தபோது அதன் தலைவன் அப்துர் ரஹ்மான் பின் அஹ்னப் என்பானுக்கு "நீங்கள் உங்களது ஆலோசனைப் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டியது. முஹல்லபின் கட்டளையைப் பின்பற்றவேண்டியது எவ்விதத்தாலும் உங்களுக்கு அவசியமில்லை. உங்களது வீரம், சிறப்பு இவைகளை முன்னிட்டு உங்களையே சேனாதிபதி யாக்க நான் விரும்பினேன். எனினும், கலீபா முன் பின் ஆலோசியாமல் முஹல்லபைச் சேனாதிபதியாக நியமித்தார்" எனக் கூறியனுப்பினான்.

இச்சேனை 'ராமுஹ்ரஜ்' போய்ச்சேர்ந்ததும் கவாரிஜ்கள் எதிர்க்கவந்தார்கள். இதிற்கிடையிலேயே பிஷ்ர் இறந்துவிட்ட செய்தியும் கிடைத்தது. இதைச் செவியுற்று கூபா, பஸரா இவ்விடங்களின் ஜனங்கள் போர்க்களத்தை விட்டுவிட்டு வந்துவிட்டார்கள். பிஷ்ருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட காலித் பின் அப்துல்லாஹ் அந்த ஜனங்களைப்பார்த்து "நீங்கள் சண்டையிற் கலந்துகொள்ளுங்கள்! கலீபா அவர்களின் கட்டளையைப் புறக்கணியாதீர்கள்" என எவ்வளவுதான் கூறினும் அந்த ஜனங்கள் பொருட்படுத்தவில்லை. அப்துல்மலிக் இவர்கள் மாறுபாடு செய்வதையறிந்து, நாம் ஏற்கனவே கூறிவந்ததேபோன்று ஹி. 75-ம் ஆண்டில் ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் என்பானை இராக்கிற்கு அதிபனாய் நியமித்தனுப்பினர். இவனது

கொடுமைகளால் கூபா, பஸரா இவ்விடங்களின் ஜனங்கள் மீண்டும் முஹல்லபிடம் வந்துசேர்ந்தார்கள். முஹல்லப் ஸாபூரில் தங்கியிருந்தார். ஏறக்குறைய ஒருவருடம்வரை கவாரிஜ்களுடன் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ‘கிர்மான்’ என்னுமிடத்தை கவாரிஜ்கள் கைப்பற்றிக் கொண்டுவிட்டதால் முஹல்லப் அந்தப்புறமே முன்னேறிச் சென்றார். ‘பாரிஸ்’ மாகாணத்திலும் ஏறக்குறைய ஒரு வருடம் வரையிலும் சண்டை நடைபெற்றுக்கொண்டு வந்தது. ஹஜ்ஜாஜ் பராபின் கபீஸாவின் தலைமையில் ஒரு உதவிச்சேனையை யனுப்பிவைத்து “நீண்ட நாட்கள் கழிந்துவிட்டனவாதலால் சீக்கிரத்தில் இதை முடித்துக்கொள்ளுங்கள்!” என்றெழுதினன். முஹல்லப் சேனைகள் யாவரையும் அழைத்துக்கொண்டு கவாரிஜ் களுக்கு எதிர்ப்பில் அணிவகுத்துத் தமது எழு புத்திரர் களில் ஒவ்வொருவனையும் சேனைகளின் ஒவ்வொரு பகுதிக் குத் தலைவனுய் நியமித்துவிட்டுத் தான் ஒரு மேட்டின்மீது நின்றுகொண்டு, சண்டையை நடாத்திக்கொண்டிருந்தார். பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. இராத்திரியில் சேனைகள் திரும்பிவந்தன. பரா முஹல்லபை விளித்து “உங்கள் புத்திரர்களைப் போன்ற வீரர்களையும், உங்களது குதிரைவீரர்களைப்போன்ற குதிரைவீரர்களையும் நான் நாளிதுவரை பார்க்கவில்லை. இத்தகைய பயங்கரமான யுத் தம் எனது நேத்திரங்களுக்கு முன்பு நடைபெற்றதுங் கிடையாது. எனினும், வெற்றிகிடைப்பது தெய்வசகாயத் தாலேயேயாம். மனிதனது முயற்சியால் ஏற்படுவது ஒன்றுமே இல்லை” எனக்கூறிவிட்டு அங்கிருந்து திரும்பி வந்து ஹஜ்ஜாஜிடம் உண்மைச் செய்தியை எடுத்துக்கூறு முகத்தான் “முஹல்லப்மீதோ, சேனையின்மீதோ எத்

தகைய குற்றமுமிலது. கவாரிஜ்களின் கூட்டத்தையொடுக்குவது எளியகாரியமன்று" எனக்கூறினர்.

முஹல்லப் 18-மாதங்கள்வரை சண்டையிட்டுக்கொண்டேயிருந்தார். கவாரிஜ்கள் தோல்வியடையும் வழியைக் காணவில்லை. எனினும் இதற்கிடையே கவாரிஜ்களுள் அவர்கள் கனவிலும் கருதியிராததொரு சம்பவம் நடைபெற்றுவிட்டது. அவர்களில் பிரசித்திபெற்ற குதிரை வீரனன முகஃதர் என்பான் தனது கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனை எதோவொரு சண்டையின் காரணமாகக்கொன்றுவிட்டான். கொல்லப்பட்டோனின் வாரிஸ்கள் கவாரிஜ்களின் தலைவனன கத்ரீ இடம் சென்று "கொலையாளியை எங்களிடம் ஒப்புவித்துவிடுங்கள்!" எனக்கேட்டதை அவன் ஒப்புக்கொள்ளாது "முகஃதர் கல்விமானும், சத்குணவானுமான ஒருநல்ல மனிதன். இவன் மார்க்கக் கட்டளை மீதே அவனைக்கொன்றிருக்கிறன். இவன்மீது ஏதேனும் பிழையிருக்குமாயின் இவன் மார்க்கக்கட்டளையை நன்கு தெரிந்துகொள்ளாத பிழையே யிருக்கும். இத்தகைய நிலைமையில் பழிக்குப்பழி வாங்குவது முக்கியமென நான் கருதவில்லை" எனக்கூறிவிட்டான். இதனல் கவாரிஜ்களுள்ளும் பிளவு ஏற்பட்டுவிட்டது. ஒரு கூட்டம் கத்ரீயின் பைஅத்தை முறித்துவிட்டு அப்துரப்பிஹில்கபீர் என்பானைத்தமக்குத் தலைவனய் நியமித்துக் கொண்டது. தற்போது இவ்விரண்டு கூட்டங்களுள் சண்டை ஏற்பட்டு, ஏறக்குறைய ஒருமாதம்வரை நடைபெற்றது. 'இதே நிலைமையில் அவர்களுடன் சண்டையிடவேண்டு'மென்பதே ஹஜ்ஜாஜின் நோக்கமாம். எனினும், முஹல்லப் இதை விரும்பாது மௌனியாயிருந்தார். இருபுறத்தவரும் நன்குயுத்தம்புரிந்து, கத்ரீ தோல்வியுற்றுத் தனது சகாக்களுடன் 'தபரிஸ்தான்'புறம் சென்றுவிட்டபோது முஹல்

லப் அப்துர்ரஹ்மானுக்கு அப்துர்ரப்பிஹியை எதிர்ப்பதற்காகச் சேனைகளை யனுப்பி, அவர்கள் யாவரையும் கொன்றுவிட்டார். இதற்குப்பிறகு முஹல்லப் கூபாவுக்குச் சென்றார். ஹஜ்ஜாஜ் ஆடம்பரமாக தர்பாரைச் சிங்காரித்து முஹல்லபைத் தனக்குச் சமதையாக அமர்த்தினன். புலவர்கள் முஹல்லபைத் துதிசெய்து கவிகள் கூறினார்கள். கவாரிஜ்களுக்கு எதிர்ப்பில் தீரத்தைக் காண்பித்தோர் தக்க சன்மானமளிக்கப்பட்டனர். அவர்கள் யாவரினும் மேன்மையாக முஹல்லபின் நான்கு புதல்வரேயிருந்தனர். அவர்களின் சம்பளத்தில் வருடத்திற்கு 2,000-திர்ஹம் (0—5—0 மதிப்புள்ள நாணயம்) அதிகப்படுத்தப்பெற்றது.

ஒரு உயரமான மனிதனான ரகாத் என்பானும் இச் சண்டையில் பிரசித்திபெற்றிருந்தான். ஹஜ்ஜாஜ் அவனுடன் சம்பாஷித்தபோது "நான் இதற்கு முன் அநேக யுத்தங்களிற் கலந்திருக்கிறேன். ஒரு சாதாரண குதிரை வீரனெனவே மதிக்கப்பட்டு வந்திருக்கிறேன். கவாரிஜ்களின் யுத்தத்தில் முஹல்லபுடையவும், அவரது புத்திரர்களுடையவும் தீரத்தைக் கண்டதும் எனக்கும் மிக்க தீரமேற்பட்டது. வேறு யுத்தங்களில் என்னாற்கூடாத காரியங்களைச் செய்து முடித்தேன்" எனக் கூறினன். ஹஜ்ஜாஜ் கத்ரீயை யொடுக்குதற்காகவும் ஒரு சேனையை யனுப்பினன். தபரிஸ்தானில் யுத்தம் நடைபெற்றது. கத்ரீ ஒரு மேட்டின் மீது வழுங்கால் குதிரையிலிருந்து வீழ்ந்து அழிந்துபட்டான். அவனது சகாக்கள் தோல்வியுற்று ஓடினார்கள். 'கூமிஸ்' வரை அவர்கள் பின்றொடரப்பட்டு, அங்கு யாவரும் கொல்லப்பட்டனர். நாபிஃ பின் அஜ்ரக் என்பானைப் பின்பற்றியதும், 'அஜாரிகா' வென்றழைக்கப்படுவதுமான கவாரிஜ்களின் ஒரு பகுதி ஒருகாலம் வரை முஸ்லிம்களைச் சண்டைக்குட்படுத்தி எத்தகைய பலனுமடைய வொட்

டாது தடுத்துவைத்துத்தாமும் எத்தகைய பலனுமடை யாமலேயே ஹி. 77-ம் ஆண்டில் அழிந்துபட்டது. கவா ரிஜ்களின் மற்றொரு பிரிவிலிருந்து ஸாலிஹ் பின் முஸர்ரஹ் என்பானும், அவனது தோழனான ஷபீப் பின் யஜீத் என் பானும் ஹி. 76-ம் ஆண்டு 'மூஸில்' பிரதேசத்தில் வெளிக்கிளம்பினார்கள். ஜஸீராவின் தலைவரான முஹம்மத் பின் மர்வான் என்பார் அவர்களை எதிர்ப்பதற்காக ஓராயிரம் குதிரை வீரர்களை யனுப்பினார். அவர்கள் இவர்களை யடித்துத் துரத்திவிடவே மீண்டும் 3,000-சிப்பாய்கள் அனுப்பப் பெற்றார்கள். தற்போது யுத்தம் நடைபெறவே கவாரிஜ்களின் தலைவனான ஸாலிஹ் என்பான் கொல்லப்பட் டான். அவர்கள் ஒருங்கு சேர்ந்து தெய்வபக்தி மிகுந்த ஷபீப் என்பானின் கரத்தில் பைஅத் செய்துகொண்டு, மதா யினுக்குச் சென்றுபட்டார்கள்.

ஹஜ்ஜாஜ் இவர்களைப் பின்தொடர்ந்து செல்ல சேனை களை யனுப்பிக்கொண்டே யிருந்தான். அவர்கள் ஓரிடத்தி லிருந்து மற்றோரிடத்திற்குச் சென்றுகொண்டே யிருந் தார்கள். அவர்கள் ஓராயிரத்திற்கு மேற்பட்டிருக்கவுமில்லை. இறுதியாக ஷபீப் தைரியமாய் கூபாவுக்குள் பிரவேசித் தான். அநேக நாட்கள் அங்கேயே யிருந்து அநேகரைக் கொன்றும், ஜனங்களை இன்னல்களுக் கிலக்காக்கியும் வந் தான். சமுகத்தலைவர்களுடன் ஹஜ்ஜாஜ் அவனை எதிர்ப்ப தற்குத் தயாரானதும் கவாரிஜ்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். அவர்களைப் பின்தொடரவும் யாராலும் கூடவில்லை. பிறகு ஹஜ்ஜாஜ் அவர்களை யழிப்பதற்காக 50,000-இராக்வாசிகளை யனுப்பியதில் அந்த ஓராயிரம் கவாரிஜ்கள் இவர்கள் யாவரையும் தோல்வியடையச் செய்து விட்டு, மீண்டும் கூபாவுக்கு வந்து விட்டார்கள். அங்கு 4,000-ஷாம்வாசிகள் இருந்துகொண்டு, நான்கு புறத்திலும்

அவர்களைச் சூழ்ந்துகொண்டு அம்புகளை யெறிந்தார்கள். ஷபீப் உடைய சகோதரனான மஸாதிர் என்பானும், மற்றும் அநேக கவாரிஜ்களும் கொல்லப்பட்டார்கள். எஞ்சியிருந்தோர் தப்பியோடினர். ஷாம்வாசிகள் பின்றொடர்ந்து சென்று 'அம்பார்' என்னுமிடத்தில் அவர்களைச் சூழ்ந்து கொள்ளவே ஷபீப் ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டான். அவனது சகாக்கள் யாவரும் கொல்லப்பட்டனர். இவ்விதமாக கவாரிஜ்களில் இக்கூட்டமும் முற்றுப் பெற்றது.

வெற்றிகள்

அப்துல் மலிக் உடைய காலத்தில் உட்குழப்பம் அதிகமாகவே வெளி வெற்றிகள்புறம் கவனம் செலுத்தச் சவகாசப் படவில்லை. எனினும், அக்காலத்தில் முஸ்லிம் பொது மக்களிடம் வெற்றிகொள்ளும் ஆவேசமுமிருந்ததால் சிற்சில பிரதேசங்களும் கைப்பற்றப் பட்டன. கவாரிஜ்களின் காரியாதிகளை முடித்துக்கொண்டு முஹல்லப் கீழ்ப்புறம் திரும்பினர். ஹி. 80-ம் ஆண்டில் 'ஜைஹூன்' நதியைக் கடந்து 'கிஸ்' என்னும் நகருக்குள் பிரவேசித்தார். 'துர்க்கிஸ்தான்' உடைய ஸபல் என்னும் தலைவனொருவன் எதிர்ப்பதற்காக முன்வந்தான். முஹல்லபின் புத்திரனான யஜீத் என்பான் அவனைத் தோற்கடிக்கவே அவன் கோட்டைக்குட் பதுங்கிவிட்டான். பிறகு சமரஸம் செய்து கொண்டான். 'புகாரா'வின் அரசன் 40,000-பேர்கள் கொண்ட சேனையுடன் வெளிக்கிளம்பவே முஹல்லபின் இரண்டாவது புத்திரனான ஹபீப் என்பான் அவனை எதிர்க்கச் சென்றான். பல யுத்தங்கள் நடைபெற்றும் எத்தகைய பலனும் ஏற்படவில்லை. முஹல்லப் அங்கு இரண்டாண்டுகள்வரை இருந்தார். இதே காலத்தில் அவர் புறத்தால் 'மர்ருத்' என்னுமிடத்திற்கு அதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த அவர் புத்திரனான முகீரா வென்பான் இறந்துவிட்

டதால் இவருக்கு மிக்க மனக்கிலேசமேற்பட்டது. தாமே மர்ருக்கு வந்து அங்கேயே ஹி. 84-ம் ஆண்டு துல்ஹஜ் மாதத்தில் இறந்துபோனார்.

அப்துல்மலிக் அவரது புத்திரனான யஜீத் என்பானை அவருக்குப் பதிலாக குராஸானுக்கு அதிபதியாய் நியமித்தார். சின்னாட்களுக்குப் பிறகு ஹஜ்ஜாஜ் யஜீதை நீக்கிவிட்டுத் தனது சகோதரனான முப்லல் என்பானை அவனுக்குப் பதிலாய் நியமித்தான். இவன் 'பாத்கைஸ்' என்னும் பிரதேசத்தைக் கைப்பற்றினான். பிறகு முப்லலையும் விலக்கிவிட்டு கதீபா பின் முஸ்லிம் பாஹிலீ என்பாரை யனுப்பினான். உட்குழப்பங்களின் காரணமாக வடபுறத்தில் ரூமீகளின் எதிர்ப்பு அதிகமாய்விட்டது. அப்துல்மலிக் ஷாம் தேசத்திலிருந்து இராக்கின்புறம் முஸ்அப் (ரலி.) அவர்களை எதிர்ப்பதற்குப் புறப்பட்டபோது ரூமீகள் ஷாம் தேசத்தின்மீது படையெடுத்தார்கள். அப்துல்மலிக் வேறு வழியின்றி தினமொன்றுக்கு 1,000 தினார் கொடுப்பதாகச் சமாதானம் செய்துகொண்டார். உட்சண்டை முற்றுப்பெற்று ஷாம் தேசத்தில் கோடைகால, குளிர்கால சேனைகள் தயாராயினதும் 'கைஸாரியா' வென்னுமிடத்தில் ரூமீகளுடன் பெரியதொரு யுத்தம் நடைபெற்றது. இதில் ரூமீகள் தோல்வியடைந்தார்கள். ஹி. 81-ம் ஆண்டில் காலீகலாவையும், ஹி. 84-ம் ஆண்டில் 'மஸீஸா' வையும் அப்துல்லாஹ் பின்அப்துல்மலிக் ரூமீகளின் கைவசத்திலிருந்து கைப்பற்றினார்.

கஃபாவைக் கட்டல்

பெருமானாரின் அவதாரத்திற்கு முன்பு குறைஷிகள் கஃபாவைக் கட்டியபோது பொருளில்லாததால் இப்ராஹீம் (அலை.) அவர்களின் அஸ்திவாரத்திலிருந்து வடப்புறத்தில் ஆறுகஜம் குறுக்கிக் கொள்ளப்பட்டது. யஜீதின் காலத்

தில் ஹுஸீன் முற்றுகையிட்டுக் கற்களை யெறியவே கஃபா வின் சுவர்கள் பலவிடங்களில் உடைந்துவிட்டன. அப்துல் லாஹ் பின்ஜுபைர் (ரலி.) ஹி. 65-ம் ஆண்டில் கஃபாவை இடித்துவிட்டுப் புதுப்பித்துக் கட்டத் தொடுத்தார்கள். "மக்கா வாசிகள் புதிய முஸ்லிம்களா யிராதுபோயின் நான் கஃபாவை இடித்து, இப்ராஹீம் (அலை.) அவர்களின் அஸ்திவாரத்தின் மீது கட்டிடம் கட்டுவேன்" எனப் பெருமானார் (ஸல்.) மொழிந்ததை அவர்கள் கேட்டிருந்ததால் புராதன அஸ்திவாரத்தின்மீதே அதைக்கட்டத்தொடுத்து, வடக்குப்புறத்தில் ஆறுகஜம் கூட்டிக்கொண்டார்கள். அப்துல்லாஹ் (ரலி.) கொல்லப்பட்டு, ஹஜ்ஜாஜ் மக்காவின் அதிபனாயினபோது அவன் மீண்டும் கஃபாவைக் குரைஷ்களின் அஸ்திவாரத்தின்மீது கட்டினான். தற்போதுள்ள அதன் கட்டடத்தில் ஒருபகுதி அப்துல்லாஹ் (ரலி.) அவர்களால் கட்டப்பட்டதும், எஞ்சியுள்ளது ஹஜ்ஜாஜால் கட்டப்பட்டதுமாம்.

ஹஜ்

தமது கிலாபத்தின் காலத்தில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) ஹஜ்ஜுக் காலத்திய தலைவராகவிருந்து கொண்டிருந்தார்கள். ஹி. 68-ம் ஆண்டு முஸ்லிம்களுள் ளிருந்த குழப்பத்தாலும், உட்பிரிவுகளாலும் 'அரபாத்' மைதானத்தில் ஒரே நேரத்தில் நான்கு கொடிகள் உயர்த்தப் பெற்றன. முதலாவது அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களுடையது. இரண்டாவது முஹம்மத் பின் ஹனபிய்யா அவர்களுடையது. மூன்றாவது நஜ்தா பின் ஆமிர் காரிஜீயுடையதும், நான்காவது பனீஉமையாக்களுடையதுமாம். எனினும், சண்டையேற்படாதொழிந்தது. அப்துல்லாஹ் (ரலி.) அவர்களுக்குப்பிறகு பனீஉமையாக்களின் ஏற்பாடுகள் மீதே ஹஜ் நடைபெற்று வந்தது.

இளவரசர்

மர்வான் தமது இருபுத்திரர்களாகிய அப்துல்மலிக் என்பாரையும், அவருக்குப் பிறகு அப்துல் அஜீஜ் என்பாரையும் இளவரசர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தார். ஹி.85-ம் ஆண்டில் அப்துல்மலிக் அப்துல் அஜீஜை நீக்கிவிட்டு, அவருக்குப் பதிலாய்த் தமது புத்திரர் வலீத் என்பாரை இளவரசராகத் தேர்ந்தெடுக்கக் கருதினர். இவ்விஷயத்தில் அவர் க்பீஸா பின் துவைப் என்பாரைக் கலந்தாலோசித்ததில் அவர் தடுத்து "இங்ஙனம் செய்தால் ஜனங்களுக்குத் தங்கள் மீது நம்பிக்கையிராது" எனக் கூறினர். இக்காலத்தில் அப்துல் அஜீஜ் இறந்துவிட்டார். எனவே அப்துல் மலிக் தமது கருத்துப் பிரகாரம் தமது இரு புதல்வர்களான வலீத், ஸுலைமான் இவ்விருவரையும் ஒருவருக்குப் பின் மற்றொருவராக இளவரசர்களாய்த் தேர்ந்தெடுத்தார். யாவரும் பைஅத் செய்தார்கள். எனினும், மதீனாவின் பெரியாரான ஸஈத் பின் முஸையப் (ரலி.) அவர்கள் மறுத்தார்கள். அதன்மேரில் அவர்களை அவ்விடத்துத் தலைவனாய ஹிஷாம் பின் இஸ்மாஈல் கைதுசெய்து விட்டான். இதைச் செவியுற்ற அப்துல் மலிக் ஹிஷாமை மிகவும் கோபித்துக் கொண்டு "ஸஈத் (ரலி.) பைஅத் செய்யாது போயினென்ன? அவர்களால் எத்தகைய பயமுமில்லை" என்றெழுதினர்.

மனைவி மக்கள்

அப்துல் மலிக் ஒன்பது மனைவியர்களை மணந்திருந்தார்:

(1) விலாதா பின்து அப்பாஸ். இவருக்கு வலீத், ஸுலைமான், மார்வானை அக்பர் ஜனித்தார்கள்.

(2) ஆதிகா பின்து யஜீதெ அவ்வல். இவருக்கு யஜீத், மர்வானின அஸ்கர், முஆவியா, உம்முகுல்தூம் இவர்கள் ஜனித்தார்கள்.

(3) உம்முஹிஷாம் பின்துஹிஷாம் பின் இஸ்மாஈல். இவருக்கு ஹிஷாம் ஜனித்தார்.

(4) ஆயிஷா பின்துமூஸா பின்தல்ஹா. இவருக்கு பிகார் ஜனித்தார்.

(5) உம்மு ஐயூப் பின்து அம்ரு பின் உத்மான். இவர் 'ஹகம்' உடைய அன்னையாராவார்.

(6) பின்துமுகீரா பின் காலித். இவருக்கு பாத்திமா வென்னும் புத்திரி ஜனித்தார்.

(7) ஷாஹ்ரா பின்து ஸல்மா தாயீ.

(8) ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் புதல்வியார்.

(9) பின்து அப்துல்லாஹ் பின் ஜஃபர்.

இவர்களைத் தவிர்த்து அடிமைப் பெண்கள் மூலமாக அப்துல்லாஹ், முஸ்லிமா, முன்திர், உத்பா, முஹம்மத், ஸஈதுல்கைர், ஹஜ்ஜாஜ் போன்ற பல மக்கள் ஜனித்தார்கள்.

மரணம்

கி. பி. 705-ம் வருடம், அக்டோபர் மாதம், 19-ந் தேதிக்குச் சரியான ஹி. 86-ம் வருஷம், ஷவ்வால் மாதம் 15-ந்தேதி வியாழக்கிழமை அப்துல்மலிக் திமஷ்கில் ஆவி பிரிந்தார். அவரது வயது 60. கிலாபத்தை நிர்வகித்து 21 வருஷங்கள், ஒரு மாதம், 15-தினங்களாம்.

குணாதிசயங்கள்.

அப்துல்மலிக் கல்வி, வீரம், ஊக்கம் இவைகளில் பிரசித்திபெற்றிருந்தார். அவர் தமது தளரா ஊக்கத்தின் காரணமாய் முஸ்லிம்களின் அரசியற்பகுதிகளையொழித்துவிட்டு ஹி. 74-ம் ஆண்டில் அவர்களை மீண்டும் ஒருகொடியின் நிழலில் ஒருங்குசேர்த்தார். தம்மைத்

தவிர்த்து வேறுயாரும் தம் காலத்தில் கிலாபத்தை நிர்வகிக்கத் தக்கோர் கிடையாதென்பது அவர் அடிக்கடிக் கூறிவந்ததாம். அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களைப் பற்றி இவரது அபிப்பிராயம் "அன்னார் பெரிய தொழுகையாளராகவும், தெய்வபக்தி மிகுந்தோராகவுமிருப்பினும் அன்னார் கருமித்தனம் நிரம்பப்பெற்றிருப்பதால் கிலாபத்திற்குத் தக்கோரல்லர்" என்பதே. இவர் தனது நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற்காய்க் கொடுத்துவந்த இன்னல்களைப்பற்றி "அபூபக்ர், உமர் (ரலி.......) அவர்கள் காலத்திலும் நமது காலத்தைப்போன்ற மூடர்களிருந்திருப்பின் அவர்களும் நாம் கையாளும் முறைகளையே மேற்கொள்வார்கள்" எனக் கூறுவார்.

இவர்மீது ஏற்படும் பெரியதொரு குற்றம் "இவர் அம்ருபின் ஸஈத் என்பாருக்கு அபயமளித்து உடன்படிக்கைக்கு மாற்றமாய்க் கொன்றுவிட்டார்" என்பதாம். இஃது முஸ்லிம்களின் கலீபாவினால் ஏற்பட்ட முதலாவதான மாறுபாடாம். இவர்மீது சாட்டப்படும் மற்றொரு குற்றச்சாட்டு "ஒருதடவை இவர் மிம்பர்மீதேறி நின்றுகொண்டு "இச்சமயத்தில் என்னிடம் எவனேயாயினும் "அல்லாஹ்வுக்குப் பயப்படு" எனக்கூறினால் நான் அவனைக் கொன்றுவிடுவேன்" எனக்கூறினர்" என்பதாம். இதைப்பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது "அநேகர் தாம் பிரசித்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தால் பிரசங்கத்தில் இடைமறிக்கிறார்களாதலால் நான் அவர்களைத் தடுத்தேன்" என்றார். எனினும் இஃது சரியான பதிலன்று.

முந்திய வலீத்

வலீத் பின் அப்துல்மலிக் விலாதா பின்து அப்பாஸ் என்பாரின் வயற்றில் ஹி. 50-ம் ஆண்டில் ஜனித்தார். அப்துல்மலிக் தமது ஜீவியத்திலேயே அவரை இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்தார். அவரை நல்லடக்கம் செய்துவிட்டுவந்து வலீத் திமஷ்கின் ஜாமிஃமஸ்ஜிதில் ஒரு சொற்பொழிவாற்றினர். ஜனங்கள் அவரது கரத்தில் கிலாபத்திற்காக பைஅத் செய்தார்கள். வலீதின் காலம் அமைதியான காலம். கவாரிஜ்களின் பலம் முறிந்துபோயிருந்தது. ஷீஆக்கள் முழுமையாக ஒடுங்கிவிட்டார்கள். ஆதலால் எத்தகைய குழப்பமும், விரோதமும் தலைகாட்டவில்லை. இவர் சீர்திருத்தத்தின்மீது தனது கவனத்தைச் செலுத்தினர். அவரது காலத்தில் பெரியபெரிய வீரர்களும் முன்வந்து பற்பல அரிய வெற்றிகளைப் புரிந்தார்கள்.

உள் சீர்திருத்தம்

வலீத் முஸ்லிம்களது நன்நிலைமையை மிகவும் விழைந்து நின்றார். அவர் இஸ்லாமிய நாடுகளில் ரஸ்தாக்களைப் போட்டார். பலவிடங்களில் ஆறுகளின்மீதும், வாய்க்கால்கள் மீதும் பாலங்களைக்கட்டினர். ரஸ்தாக்களை யொழுங்குபடுத்தி ஆங்காங்கு கிணறுகளை வெட்டினர். ஒருபயமுமில்லாது ஜனங்கள் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். அரசாங்க அதிபர்களுக்கு பாட்டைகளில் பாதுகாப்பு ஏற்படும்படியானதும், குடிகளுக்குச் சௌகரியத்தை யளிக்கவல்லதுமான ஏற்பாடுகளைச் செய்யும்படிக் கட்டளை பிறப்பித்தார். அவர் வியாதியஸ்தர்களுக்கு வைத்திய

சாலைகளையும், யாசகர்களுக்கு அன்னசாலைகளையும், குஷ்ட ரோகிகளுக்குத் தனியான விடுதிகளையும் ஏற்படுத்தினார். இவ்விடங்களில் அன்னதானமும், வைத்தியமும், வஸ்திர தானமும், பிணியாளர்களுக்குத் தக்கபணியும் செய்யப்பட்டன. மதீனாவில் தண்ணீர்ப் பஞ்சமிருந்ததால் ஒரு வாய்க்கால் தோண்டி, அக்குறையையும் நீக்கிவைத்தார். வலீதுக்குக் கட்டிடத்திலும் பிரியமதிகம். திமஷ்கின் பிரம்மாண்டமான பள்ளிவாசல் அவரால் கட்டப்பட்டதேயாம். இதைக் கட்டி முடிந்த பின்பு பெரிய கொண்டாட்ட விழா நடத்தினார்.

ஹி. 85-ம் ஆண்டில் அவர் மதீனாவுக்கு 'மஸ்ஜிதுந் நபவி'யை விஸ்தீரணப் படுத்தும்படியும், பெருமானாரின் மனைவியருக்குச் சொந்தமாயிருந்த அறைகளையும் அத்துடன் சேர்த்துக் கொள்ளும்படியும் ஒரு கட்டளையனுப்பினார். பெருமானாரின் இவ்வறைகள் அவ்விதமே வைக்கப்பட வேண்டுமெனவும், நானு பக்கங்களிலிருந்தும் இங்கு வரும் முஸ்லிம்கள் தமது நபியவர்கள் எத்தகைய எளிய வாழ்க்கையை நடாத்திச் சென்றார்களென்பதை யறிந்து கொள்ளவேண்டுமெனவும் மதீனாவாசிகள் விரும்பினார்கள். இவர்களின் கோரிக்கையை யொருவருமே கேட்கவில்லை. பெருமானாரின் கப்ர் (கல்லறை) இருந்த அறையான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களின் அறையைத் தவிர்த்து எஞ்சியிருந்த அறைகள் யாவும் மஸ்ஜிதில் சேர்க்கப்பட்டு விட்டன. வலீத் மஸ்ஜிதுந் நபவியைக் கட்டுவதற்காக ரூம் தேசத்தரசனிடமிருந்தும் உதவி கோரியிருந்ததால் அவர் 1,00,000-தங்க நாணயங்களையும், 40-ஒட்டகங்களின் சுமையுள்ள பல பல நிறங்களுடைய கற்களையும், 100-வேலைக்காரர்களையு மனுப்பினார். பெருமானார் (ஸல்.) அவர்களும், அபூபக்ர், உமர் (ரலி..........) இவ்விருவரும் நல்லடக்கம்

செய்யப்பட்டிருந்த ஆயிஷா (ரலி.) அவர்களின் அறை தொழுகையின்போது முன்னுலிருக்கக்கூடாதென்னும் நோக்கத்துடன் மஸ்ஜிதிலிருந்து வேருய்ப் பிரித்துவிடக் கருதினார்கள். எனினும் அக்காலத்தில் மதீனுவின் தலைவராயிருந்த ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்கள் நன்காலோசித்து, மஸ்ஜிதின் வடப்பாகத்தை முக்கோண வடிவமாகச் செய்துவிட்டார். இதனுல் முற் கூறப்பெற்ற அறை அதன் ஒரு மூலையில் வந்துவிட்டதால் தொழுகையாளர்களுக்கு முன்னுலிருக்காது ஒதுங்கி விட்டது.

மஸ்ஜித் கட்டப்பெற்ற பிறகு வலீத் தாமே அதைப் பார்வையிட வந்தார். உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்கூட விருந்தார்கள். வலீத் உள்நுழையும்போது யாவரும் மஸ்ஜிதெ நபவீயிலிருந்து வெளியேற்றப் பட்டனர். எனினும் மதீனுவின் கல்விமானுயை ஸஈத் பின் முஸையப் (ரலி.) அவர்கள் மட்டும் தமதிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ஒருமனிதன் அவர்களிடம் “ தாங்கள் இச்சமயம் வெளியே சென்றுவிடுங்கள்!” எனக் கூறவும் அவர்கள் “ தினந்தோறும் நான் எழுந்து செல்லும் நேரத்திற்கு முன்பு நான் செல்லமாட்டேன் ” எனக்கூறிவிட்டார்கள். அவன் “ கலீபாவான வலீத் மஸ்ஜிதுக்கு வந்திருக்கிருர். எழுந்து அவருக்கு ஸலாம் செய்யுங்கள்!” எனவே அதற்கும் இசையாமல் நிம்மதியாய்த் தமதிடத்தில் அமர்ந்திருந்து தமது சுலோகத்தை யோதிக்கொண்டிருந்தார்கள். ‘ வலீத் இவர்களைப் பார்த்து, கடுமையான கட்டளை பிறப்பித்து விடுவாரோ!’ வென்னும் எண்ணத்தினுல் உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) வலீதை அவர்களுக்குத் தூரமாகவே அழைத்துச் சென்றுகொண்டிருந்தார்கள். இறுதியாக மிம்பருக்குப் பக்கமாய்ச் சென்றபோது அவர்களைப்

பார்த்த வலீத் "இவர்கள் ஷைக் (பெரியார்) ஸாத் அவர்களா?" வெனக் கேட்க உமர் பின் அப்துல் அஜீஜ் "ஆம்" எனக்கூறிவிட்டு, அவர்களைத் துதிசெய்து, "வயது முதிர்ந்துவிட்டதால் அவர்களுக்கு சரியாய்ப் பார்வை தெரியவில்லை. இன்றேல் தங்களுக்கு ஸலாம் செய்வார்கள்" என்றதும் வலீத் "நாமே அவர்களுக்கு ஸலாம் செய்து, அவர்களைச் சந்திப்போம்" எனக்கூறிவிட்டு அவர்களுக்குச் சமீபமாக வந்து ஸலாம் செய்தார். அவர்கள் பிரதிஸலாம் செய்துவிட்டு, சௌக்கியத்தைப்பற்றி விசாரித்தார்கள். எனினும், தமது இடத்தைவிட்டு அசையவேயில்லை. வலீதும் அவர்களின் திரேக சௌக்கியத்தை விசாரித்துவிட்டுச் சென்றுவிட்டார். செல்லும்போது உமர் பின் அப்துல் அஜீஜ்(ரஹ்.) அவர்களிடம் "இவர்கள் சென்றுபோன பெரியார்களின் ஞாபகார்த்தமானவர்களாயிருக்கிறார்கள்" எனக் கூறினர்.

வெற்றிகள்

வலீதின் காலத்தில் முஹம்மத் பின் காஸிம், குதீபா பின் முஸ்லிம், மூஸா பின் நுஸீர், முஸ்லிமா பின் அப்துல் மலிக் இந்நான்கு சேனாதிபதிகளும் மிகப்பிரபல மடைந்துள்ளார்கள். அவர்களின் காரியாதிகளை நாம் வரிசைக் கிரமமான வரைவாம்.

முஹம்மத் பின் காஸிம்

சரந்தீப் (சிலோன்) உடைய அரசன் சில காணிக்கைகளையும், தனது தீவில் இறந்துபோன முஸ்லிம்களின் அனாதையான குழந்தைகளையும், கைம்பெண்களையும் ஒரு கப்பலில் ஹஜ்ஜாஜிடம் அனுப்பியிருந்தான். இடைவழியில் 'தீபல்' என்னுமிடத்தில் சிந்து தேசத்தின் அரசனான 'தாஹர்' என்பான் அக்கப்பல்களைக் கொள்ளையடித்து,

முஸ்லிம் அனாதைப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும் சிறைப்பற்றிவிட்டான். இவ் விஷயத்தைக் கேள்விப்பட்ட ஹஜ்ஜாஜ் தாஹர் அரசனுக்கு "உங்கள் சிப்பாய்கள் சிறை வைத்திருக்கும் எங்களது மனிதர்களை எங்களிடம் அனுப்பி விடுங்கள்" என்றெழுதியதற்கு அவன் "சிறைப்படுத்தி வைத்திருக்கும் ஜனங்களிடமிருந்து நீங்களே விடுவித்துக் கொண்டு செல்லுங்கள்" எனப் பதிலெழுதிவிட்டான். ஹஜ்ஜாஜ் கலீபாவின் அனுமதி பெற்று 6,000-சிப்பாய்களை அப்துல்லாஹ் அஸ்லமீயின் தலைமையின்கீழ் அனுப்பிவைத்தான். இதை எதிர்த்த தாஹர் அரசனின் சேனைகள் இதைத் தோற்கடித்துவிட்டன. அப்துல்லாஹ் கொல்லப்பட்டார். இதற்குப் பிறகு மீண்டும் 6,000-சிப்பாய்களை ஹஜ்ஜாஜ் அனுப்பினான். அச்சேனையும் தோல்வியடைந்துவிட்டது. இதற்குப் பிறகு ஹஜ்ஜாஜ் தனது சகோதரது புத்திரரான முஹம்மத் பின் காஸிம் என்னும் 17-வயது நிரம்பப்பெற்ற வாலிபரை 6,000-ஷாம் தேச சிப்பாய்களுடன் ஸிந்து தேசத்தின் அலுவல்களைக் கவனிப்பதற்காக அனுப்பி வைத்தான். இவர் முஸ்லிம்களின் பிரதேசமாயிருந்து, தாஹரின் சேனைகள் கைப்பற்றிக்கொண்ட மக்ரான் என்னும் மாகாணத்தைக் கைப்பற்றினார். அதற்குப் பிறகு ஸிந்தின் எல்லைப்புறத்திற்கு வந்தார். ஹஜ்ஜாஜின் ஏற்பாட்டின்பிரகாரம் மூன்று நாட்களுக்குள் ஒருவரது நிரூபம் மற்றொருவருக்குக் கிடைத்துவந்தது.

முஹம்மத் தீபலை முற்றுகையிட்டார். எதிரிகள் இக்காலத்தில் ஒருதரம் வெளிவந்து அணி வகுத்தார்கள். முஹம்மத் எதிரிகளைத் தோற்கடிக்கச்செய்து, கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கு ஒரு மஸ்ஜிதையும் கட்டினார். பின்னும் 4,000-சிப்பாய்களைத் தருவித்து, அங்கு வைத்தார். பிறகு அங்கிருந்து முன்னேறிச் சென்றதில் வெளி

பூர்வாசிகள் முன்வந்து சமாஸம் செய்துகொண்டார்கள். ஸிந்தின் நதிக்குச் சமீபமாகச் சென்றபோது 'ஸரீப்தஸ்' உடைய தலைவர்கள் வந்து சமாஸம் செய்துகொண்டு தீர்வை செலுத்தச் சம்மதித்தார்கள். அங்கிருந்து 'ஸஹ்வான்' புறம் முன்னேறிச் சென்று அதை வெற்றிகொண்டார். தற்போது தாஹர் அரசன் சேனைகளைத் தயாரித்துக் கொண்டு, தானே எதிர்ப்பதற்கு வந்தான். மும்முரமான யுத்தம் நடைபெற்றது. யானைகளின் காரணமாக குதிரைகள் வசப்படாது போய்விட்டன. முஸ்லிம்கள் சவாரிகளில்லாமலே சண்டையிட்டார்கள். தாஹர் கொல்லப்பட்டான். அவனது சேனைகள் தோல்வியடைந்து ஓடிப்போய் 'பிரஹ்மனுபாத்' என்னுமிடத்தில் தங்கின. முஹம்மதும் அந்தப்புறமே முன்னேறிச் சென்றதில் துவக்கமாக 'ராவர்' என்னுமிடத்தில் யுத்தம் நடைபெற்றது. அதை வெற்றிகொண்டு பிரஹ்மனுபாத் போய்ச் சேர்ந்து எதிரிகளைத் தோற்கடித்து, அங்கு தமது அதிபதியை நியமித்துவிட்டு, 'ஸாவிந்தரீ'யை முற்றுகையிட்டார். அவ்விடத்து மக்கள் சரண் புகுந்தார்கள். பிறகு 'பஸ்மத்', 'ரூர்' இவ்விடங்களின் தலைவர்கள் சமாஸ உடன்படிக்கை வரைந்தார்கள். முஹம்மத் ரூரிலும் ஒரு மஸ்ஜிதைக் கட்டினார். பிறகு நதியைக் கடந்து சென்று முல்தானை முற்றுகையிட்டார். அதை வெற்றிகொண்டதில் அநேக கொள்ளைப் பொருட்கள் கிடைத்தன. முல்தானிலிருந்து பலவிடங்களுக்கும் சேனைகளை யனுப்பி, மிகச் சிறிய காலத்தில் ஸிந்து தேசம் முழுமையும் வெற்றி கொண்டுவிட்டார்.

கதீபாபின் முஸ்லிம் பாஹிலீ

கதீபாவை ஹஜ்ஜாஜ் ஹி. 86-ம் ஆண்டில் குராஸானுக் கதிபதியாக நியமித்தான். இவர் அங்கு சென்று, சேனைக்கு

முன்பு ஒரு அழகிய சொற்பொழிவாற்றினர். இதற்குப் பிறகு 'மர்ருத்' என்னுமிடத்தில் ஒருவனைத் தமக்குப் பிரதிநிதியாய் நியமித்துவிட்டு, தாம் சேனையை 'தால்கான்' புறம் கொண்டுசென்றார். 'ஜைஹூன்' நதியைக் கடந்ததும் 'ஸகானியான்' என்னுமிடத்தரசன் முன்வந்து, காணிக்கைகளைச் சமர்ப்பித்தான். அங்கிருந்து முன்னேறிச் சென்றதும் 'கப்தான்', 'தகாரிஸ்தான்' உடைய அரசர்களும் வந்து, சமரஸம் செய்துகொண்டார்கள். கதீபா சேனைக்குத் தமது பிரதிநிதியை நியமித்துவிட்டு, மர்ருதுக்கு வந்து சேர்ந்தார். ஹஜ்ஜாஜ் இவருக்கு "சேனையை விட்டுவிட்டு வந்துவிடல் சேனையின் ஒழுங்கு முறைக்கு மாறாகும். எங்கேனும் படையெடுத்துச் சென்றால் சேனைக்கு முன்னாலும், திரும்பி வரும்போது சேனைக்குப் பின்னாலும் இருங்கள்!" என்றெழுதினர். ஹி. 87-ம் ஆண்டில் தூரானியத் தலைவனான நேஜக் என்பான் முன்வந்து சமரஸம் செய்துகொண்டான். அவனிடம் முஸ்லிம் கைதிகள் அநேகரிருந்தனர். அவர்கள் யாவரையும் அவன் விட்டுவிட்டான். 'ஜைஹூன்' நதிக்குப் பக்கத்திலுள்ள 'பீகந்த்' என்னும் நகரத்தின் தலைவன் 'ஸகத்'வாசிகளிடம் உதவி பெற்று பெரிய சேனையைத் தயாரித்திருந்தான். கதீபா இந்தப்புறம் முன்னேறிச் சென்றபோது அவர்கள் நாலுபுறத்துப் பாட்டைகளையும் மறித்துக் கொண்டார்கள். இரண்டு மாதங்கள்வரை யுத்தம் நடைபெற்றுக்கொண்டே யிருந்தது. இக்காலத்தில் கதீபாவின் எச்செய்தியும் ஹஜ்ஜாஜுக்குக் கிடைக்காததால் அவன் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தான். ஒரு தினம் முஸ்லிம்கள் மனமுறிந்து இறுதியாக எதிர்க்கவே அல்லாஹு தஆலா அதே தினம் வெற்றி யளித்தான். எதிரிகள் 'ஓடிச் சென்று நகரத்திற்குள் புகுந்துவிடவேண்டு'மெனக் கருதி

னார்கள். எனினும் கதீபா ஸ்தாவைத் தடுத்துவிட்டார். வேறு வழியின்றி அவர்கள் வலதுபுறமும், இடதுபுறமும் சிதறி விட்டார்கள். நகரவாசிகள் முன்வந்து சமாஸம் செய்து கொள்ளவே அங்கு ஒரு அதிபதியை நியமித்துவிட்டுத் திரும்பி வரும்போது 'பீகந்த்' வாசிகள் சதிசெய்து விட்டதாயும், அதிபதியையும், முஸ்லிம்களையும் கொன்று விட்டதாயும் செய்தி கிடைத்தது. கதீபா திரும்பிவந்து மீண்டும் நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டு, குற்றவாளிகளுக் குச் சிகைஷ விதித்துவிட்டு, மர்ருக்குத் திரும்பிவந்தார். பிறகு வசந்த காலத்தில் சேனைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு புகாராவுக்குச் சமீபமாகவுள்ள 'நௌஷ்கத்' என்னுமிடத்தைக் கைப்பற்றிக்கொண்டு முன்னேறிச் சென்றார். இடைவழியில் 'ஸுகத்'வாசிகள், 'பர்கான்'வாசிகள், துர்க்கியர்கள் இவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந் தெதிர்த்துத் தோல்வியடைந்தார்கள். நேஜக் என்பானும், இஸ்லாமைத் தழுவிபிராதவனுமான தலைவனும் முஸ்லிம்களுக் குதவி செய்து, பெரிய யுத்தம் புரிந்தான். கதீபா அங்கிருந்து 'திர்மத்' என்னுமிடத்திற்குப் போய்ச் சேர்ந்து, ஆற்றைக் கடந்து, மர்ருக்கு வந்துவிட்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு புகாராவை முற்றுகையிட் டார். எனினும், கருத்து நிறைவேறாமலேயே திரும்பிவந்தார். டார். ஹஜ்ஜாஜ் இதைக் கேள்விப்பட்டு கதீபாவிடமிருந்து புகாராவின் படத்(Plan)தைத் தருவித்துப் பார்த்துவிட்டு இன்ன புறத்திலிருந்து அதைப் படையெடுக்கவேண்டு மென்பதை வரைந்தான். கதீபா அவனது ஆணைப் பிரகா ரம் ஹி. 90-ம் ஆண்டில் மீண்டும் முன்னேறிச் சென்றார். புகாராவின் அதிபதி துர்க்கியர்களிடமும், ஸுகத்வாசிகளிட மும் உதவி தேடியதில் அவர்கள் உதவிக்கு வந்தார்கள். புகாராவாசிகளும் நகரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். முற்

றுகையிட்டிருந்த முஸ்லிம்கள் நடுவே யகப்பட்டுக்கொண்ட தால் முஸ்லிம்கள் அதிகமாய் முன்னேறிச் செல்லமுடியாது போயினர். அநேகர் களைத்தும் போயினர். இச் சமயத் தில் எதிரிகள் முஸ்லிம்களின் சேனைக்குட் புகுந்து முஸ் லிம்கள் தங்கியிருந்த இடம்வரைக்கும் வந்துவிட்டார்கள். அரபி மாதர்கள் ஓடிச் செல்லும் முஸ்லிம்களைத் தடுத்துச் சப்தமிட்டதால் திரும்பினார்கள். கதீபா "இன்று எதிரி களை முறியடித்துத் திரும்பிச் செல்லும்படிச் செய்யத்தக்க வர்க்கம் யாது?" எனக் கேட்க ஒருவரும் ஒன்றுமே கூற வில்லை. எனினும், 'பனீதமீம்' வர்க்கத்துத் தலைவரான வகீஃ முன்வந்து, தமது வர்க்கத்துடன் மறுபுறத்தால் ஆற் றைக் கடந்தார். 'தமீம்' வர்க்கத்தைச் சேர்ந்த மற்றொரு தலைவரான ஹரீம் என்பாரும் குதிரை வீரர்களுடன் அவ ரைப் பின்றொடர்ந்தார். வகீஃ ஆற்றைக் கடக்கும்போது "ஆவியைத் தியாகம்செய்ய விரும்புவோரே என்னைப் பின் றொடரலாம். மற்றையோர் வேண்டாம்" எனக் கூறிவிட் டார். 800-பேர்கள் அவருடன் சென்றார்கள். அவர்கள் பின்புறத்தால் வீராவேசத்துடன் எதிரிகள்மீது பாய்ந்து சண்டை செய்ததில் எதிரிகள் சமாளிக்கமுடியாது போயி னர். காகான் என்பானும், அவனது இருபுதல்வரும் காயப்பட்டார்கள். இதற்குப் பிறகு கதீபா எதிர்த்து நக ரத்திற்குள் பிரவேசித்து, புகாராவைக் கைப்பற்றினார். இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு சுற்றுப்புறத்து அர சர்கள் கதிகலங்கிப்போய் ஆள்வரி கொடுப்பதாய் சமாஸம் செய்துகொண்டார்கள்.

ஹி. 93-ம் ஆண்டில் 'கவார்ஜம்' நகரத்தைக் கைப் பற்றினார். பிறகு ஸமர்கந்தில் யுத்தம் நடைபெற்றது. இதில் புகாரா, கவார்ஜம் இவ்விடங்களின் முஸ்லிம்களல்லா தார் முஸ்லிம்களுக்குதவி செய்தனர். இஃது கைப்பற்

றப்பட்டவுடன் கதிபா அங்கொரு மஸ்ஜிதை நிர்மாணித்தார். அதில் தொழுதுவிட்டு, தமது சோதரர் அப்துல்லாஹ் என்பாரை யவ்விடத்துத் தலைவராய் நியமித்துவிட்டு, மர்ருதுக்கு வந்துசேர்ந்தார். ஹி. 94-ம் வருடம் 'ஷாஸ்', 'பர்கானு' இவைகளைக் கைப்பற்றிக்கொண்டு சென்று 'குஞ்சத்', 'காஷான்' வரை வெற்றிகொண்டார். ஹி. 96-ம் வருஷத்தில் 'காஷ்கர்' நகரத்தைக் கைப்பற்றினர். அங்கிருந்து ஹபீரா பின் மிஷ்மரஜ் கிலாபீ என்பாரைச் சில பேருடன் சீன தேசத்தரசனிடம் தூதுவராய் நியமித்தனுப்பினர். சம்பாஷணைக்கிடையே சீனதேசத் தரசன் "கதீபாவிடம் குறைந்த சேனையும், பேராசையுமிருக்கின்றது. அவரைத் திரும்பிவிடும்படி நா சொன்னதாய்ச் சொல்லுங்கள்! இன்றேல், அவரது அடையாளமே தெரியாதுசெய்யத்தக்க சேனைகளை நான் அனுப்பிவைப்பேன்" என்றான். ஹபீரா இதற்குப் பதிலளிக்குமுகத்தான் "ஒரு கடைசி உங்களது தேசத்திலும், மற்றொரு கடைசி ஷாம் தேசத்து எல்லைப்புறத்திலுமிருக்கும் சேனையை நீங்கள் எவ்வாறு மதிக்கிறீர்கள்? உலகத்தையே கைப்பற்றச் சக்தி படைத்திருந்தும் விட்டுவிட்டிருக்கும் மனிதரைப் 'பேராசையுள்ளவ'ரென நீங்கள் எவ்வாறு கூறலாம்?" என்றார். இறுதியாக சீன தேசத்தரசன் அவர்களுக்குச் சன்மானங்களையளித்துத் திருப்திசெய்தனுப்பினன்.

மூஸாபின் நஸீர்

மூஸாபின் நஸீர் கைர்வான் பிரதேசத்தின் தலைவராயிருந்தார். அவர் 'உந்துலுஸ்' மீது படையெடுக்க அனுமதிக்கும்படி வலீதிடம் விண்ணப்பித்திருந்தார். இதற்கு துவக்கத்தில் பரிசீலனைக்காகச் சிறியதொரு சேனையையனுப்பி, அங்குள்ள நிலைமையை யறிந்துகொள்ளும்படி வலீத் எழுதியிருந்தார். மூஸா தமது அடிமையான தரீப் என்

பானை 400-சிப்பாய்களுடன் இரண்டு கப்பல்களில் அனுப்பி வைத்ததில் அவன் 'உந்துலுஸ்' என்னும் பெயரால் தற்போது வழங்கிவரும் அத்தீவின் தென்மேற்குக் கடற்கரையில் இறங்கி, 'கல்ரா'வை யழித்துவிட்டு, கொள்ளைப் பொருட்களுடன் திரும்பிவந்தான். ஹி. 91-ம்ஆண்டில் மூலா தாரிக் பின்ஜியாத் என்னும் தமது மற்றொரு அடிமையை 7,000-பேர்களுடன் அனுப்பினர். அதில் காட்டுமிராண்டிகளே அதிகமாக விருந்தனர். இவன் கடலைத் தாண்டிச் சென்று கீழ்க்கடற்கரையிலுள்ள மலைப் பிரதேசத்தைக் கைப்பற்றினன். அஃது இவனது பெயரைக் கொண்டே 'ஜபலேதாரிக்' என வழங்கிவருகின்றது. அங்கிருந்து கீழிறங்கி கல்ராவைக் கைப்பற்றினன். உந்துலுஸ் உடைய அரசனை ராட்ரிக் என்பான் செய்தியையறிந்து 1,00,000 சிப்பாய்களுடன் யுத்தத்திற்கு முன்வந்தான். தாரிக் இச்செய்தியை மூஸாவுக்கெழுதி, உதவிதேடவே மூஸா 5,000 பேரை மீண்டுமனுப்பி, சேனையின் தொகையை 12,000 ஆக்கினர். இத்தொகையையே எப்பொழுதும் முஸ்லிம்கள் பெரிய பெரிய சண்டைகளில் வெற்றியடைவதற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ராட்ரிக்குடன் சண்டையிடத் தொடுக்கவே மும்முரமான யுத்தம் நடைபெற்றது. முஸ்லிம்கள் திரும்பிவரும் கருத்தையகற்றி விட்டுத் தமது கப்பல்களுக்குத் தீவைத்து விட்டதால் ஒன்று வெற்றி பெறவேண்டும்; அல்லது இறந்து போகவேண்டும். எனவே, அல்லாஹ்வின் திருநாமத்தை யுச்சரித்துக்கொண்டு வீராவேசத்துடன் போர் புரிந்து வெற்றிபெற்றனர்கள். ராட்ரிக் ஆற்றின் மூலையில் கடலில்வீழ்ந்து இறந்துபட்டான். இவ்வெற்றியின் செய்தியை யறிந்த மூஸா ஹி. 92-ம் ஆண்டில் சேனையுடன் அங்குவந்து சேர்ந்து உந்துலுஸ் முழுமையுமே கைப்பற்றி

ஞர். 'குர்துபா'வை அதற்குத் தலைநகராக்கித் தமது புத்திரர் அப்துல்அஜீஜ் என்பாரை யதற்குத் தலைவராக்கி ஞர். உந்துலுஸின் கீழ்ப்பகுதியான 'பர்ஷலூனு'வைக் கைப்பற்றிய பிறகு ஐரோப்பாவுக்கு நடுவே சென்று குஸ்துன் துனிய்யாவைக் கைப்பற்றிக்கொண்டு கிலாபத்தின் தலைநகரத்திற்குச் சென்றுவிடக் கருதினுர். இதையறிந்த வலீத் இதிற் சம்பவிக்கும் இன்னல்களைக் கருதி, அவ்விதம் செய்வதற்கு அனுமதியாமல் ஆப்பிரிக்காவின் வழியாகத் தம்மிடம் வரும்படி யழைத்தார். இவர் அநேக காணிக்கைகளையும், சன்மானங்களையும் கொண்டுசென்றுர். எனினும், கிலாபத்தின் தலைநகருக்குச் செல்வதற்குள் வலீத் இறந்து போனுர்.

மூஸ்லிமாபின் அப்துல்மலிக்

இவர் எப்பொழுதும் ரூமீகளை எதிர்த்தே வந்தார். ஒவ்வொரு வருஷமும் அவர்கள்மீது படையெடுத்து, பெரிய பெரிய கோட்டைகளையும் அவர்கள் கைவசத்திலிருந்து கைப்பற்றினுர். அவர் கைப்பற்றிய கோட்டைகளின் நாமங்கள் துவானு, அம்வானு, மர்கலா, கமூனியா, ஸதிய்யா, தர் ஸூஸ் என்பனவாம்.

ஹஜ்ஜாஜின் மரணம்

ஹஜ்ஜாஜ் ஹி. 95-ம்ஆண்டில் கூபாவில் மரணமடைந்த போது அவன் வயது 54. அவன் மூன்றுண்டுகள் மக்காவின் அதிபதியாக விருந்தான். பிறகு இருபதாண்டுகள் பஸரா, கூபா, இதர கீழ்நாடுகள் இவைகளில் இராஜப் பிரதிநிதியாக விருந்தான். அவன் இகலோக ஆடம்பரத்தையும், பெருமையையும் விரும்புவோனுயும், அதிக்கிரமம் புரிவோனுயு மிருந்தான். மூர்க்கத்தனத்தில் ஹலாகூ

போன்றவர்களைப்போலவே இவனது பெயரும் வழங்கிவருகின்றது. "நான் பொறுமையும், கபடமும் நிரம்பப் பெற்றவன்" என அவனே கூறிக்கொள்வதுமுண்டு. இத்துடன் அவனிடம் சிலநன்மைகளும் காணப்பட்டன. அவன் பெரிய பிரசங்கியாயிருந்தான். குர்ஆனையறிவதில் இமாம் ஹஸன் பஸரீ அவர்களைத் தவிர்த்து வேறெவரையும் இவனுக்கு நிகராய்க்கொள்ள முடியாது. வீரம், யுத்தம், உண்மை பேசுதல், கருதிய காரியத்தைச் சாதித்தல் இவைகளில் தனிச் சிறப்புப் பெற்றிருந்தான். இராக் தேசத்தில் இவன் தனது வன்மையால் அமைதி நிலவச்செய்தான். அப்போது அவனால் சிந்தப்பட்ட உதிரத்தின் காரணமாக அவனது காரியாதிகள் புகழுக்குரியனவாய்க் கொள்ளப் படுவதில்லை.

இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்

அப்துல் மலிக் வலீத், ஸுலைமான் என்னும் தமது இருபுதல்வர்களைத் தமக்குப்பிறகு அரசியலை ஏற்றுக் கொள்ளும் அரசர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தார். வலீத் அரசுரிமையை ஏற்றுக்கொண்டதும் சுலைமானுக்குப் பதிலாய்த் தமது புத்திரர் அப்துல்அஜீஜ் என்பாரை இளவரசராகத் தேர்ந்தெடுக்கக் கருதினர். அதிபர்களிடம் கலந்தாலோசித்தபோது கதீபா, ஹஜ்ஜாஜ் இவர்களைத்தவிர்த்து வேறு யாவரும் இதற்குச் சம்மதிக்கவில்லை. இதற்கு ஏதேனும் ஒருவழியைக் கண்டுபிடிக்கும் யோசனையிலிருக்கும்போதே வலீத் இறந்துபோயினர்; ஸுலைமான் அரசராயினர்.

வலீதின் மரணம்

கி. பி. 715-ம் வருஷம், பிப்ரவரி மாதம், 25-ந் தேதிக்குச் சரியான ஹி. 96-ம் வருஷம், ஜமாதில் ஆகிர் மாதம்

15-ந் தேதியில் வலீத் ஷாம் தேசத்திலுள்ள ‘ தீர்மரான் ’ என்னுமிடத்தில் மரணமடைந்தார். அப்போது அவரது வயது 64. அவர் 9-ஆண்டுகளும், 8-மாதங்களும் கலீபாவாக விருந்து, தமக்குப் பிறகு 19-குழந்தைகளை விட்டு விட்டுக் காலஞ் சென்றார்.

ஸுலைமான் பின் அப்துல்மலிக்

ஸுலைமான் ஹி. 54-ம் ஆண்டில் ஜனித்தார். வலீத் இறந்துபோயினபோது அவர் ரமலாவி லிருந்தார். ஹி. 96-ம் ஆண்டு, ஜமாதில் ஆகிர் மாதம் அவர் காத்தில் பைஅத் செய்யப்பட்டது. ஸுலைமான் இளவரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு விரோதமாய் வலீதுடன் ஹஜ்ஜாஜ் சேர்ந்திருந்ததால் ஸுலைமான் ஹஜ்ஜாஜுடையவும், அவனது சகாக்களுடையவும் விரோதியாக விருந்தும் ஹஜ்ஜாஜின் தோழரான யஜீத் பின் முஹல்லபைத் தமது அந்தியந்த நண்பராய்க் கொண்டிருந்தார். இதே காரணத்தால் 'வலீதுக்குப் பிறகு ஸுலைமானது கைவசத்திற்கு அரசாங்கம் மாறிவிடின் அதிகமான இன்னல்களுக் கிலக்காகவேண்டும்' என ஹஜ்ஜாஜ் பயந்திருந்தான். எனினும், வலீத் மரிப்பதற்கு ஓராண்டுக்கு முன்பே ஹஜ்ஜாஜ் இறந்துவிட்டான். ஸுலைமான் கிலாபத்தை ஏற்றுக்கொண்ட பிறகு செய்த முதற்காரியம் முஹம்மத் பின் காஸிம் என்பாரைக் கைது செய்தனுப்பும்படி யஜீத் பின் அபீகப்ஷா என்பானை ஸிந்து தேசத்திற்குத் தலைவனாய் நியமித்தனுப்பியதேயாம். அவன் 'வாஸித்'நகரத்தில் அவரைக் கைதுசெய்து, ஸாலிஹ் பின் அப்துர்ரஹ்மான் என்பானிடம் ஒப்புவித்தான். அவனிழைத்த இன்னல்களால் அவர் இறந்தேவிட்டார். இக்கபடமிருந்த கலீபா அந்த வாலீபவீரரின் அரியகாரியாதிகளைக் கவனியாது, ஹஜ்ஜாஜின் நண்பராயிருந்ததைமட்டும் காரணமாய்க்கொண்டு தனது மூர்க்கத்தைத் தணித்துக் கொள்வதற்காய் அவரைக்கொல்லச் செய்து, முஸ்லிம் பொதுமக்கள், கிலாபத் இவைகளின் மதிப்பையே போக்கி

விட்டார். இத்தகைய பேர்பெற்ற ஜயசீலரை இக்கதிக்குள்ளாக்கிய அரசாங்கத்திற்காக பின்பெவனே அரிய காரியங்களைச்செய்ய முன் வருவான்?

குராஸானின் அதிபரும், புகாரா, துர்க்கிஸ்தான் இவைகளை வெற்றிகொண்டவருமான கதீபா பின் பாஹிலீ என்பார் முஹம்மத் பின் காஸிம் உடைய இக்கதியைக் கண்டதும் பயந்துபோய், தமது சேனைகள் யாவையும் திரட்டிக்கொண்டு ஸுலைமானின் கிலாபத்தை மறுக்கக் கருதினார். எனினும் 'பனீதமீம்' வர்க்கத்துத் தலைவரான வகீஃ என்பார் இதை யொப்புக்கொள்ளவில்லை. அபிப்பிராய பேதம் அதிகமாகவே அவர் கதீபாவைக் கொன்றுவிட்டார். உந்துலுஸைக் கைப்பற்றிய மூஸா பின் நஸீர் என்பாரும் இத்தகைய முடிவுக்கே ஆளானார். இவரைத் தமது சமுகத்திற்கு வலீத் அழைத்திருந்தார். இவர் திமஷ்க் போய்ச் சேர்ந்தபோது வலீத் காலஞ்சென்றுவிட்டார். ஸுலைமான் இவரைக் கைது செய்து இவருக்கு அபாரமான தொகையை அபராதம் விதித்தார். இவர் அதைக் கொடுக்க முடியாமல் அரபித் தலைவர்களிடம் யாசித்துக் கொடுத்தார். ஸுலைமானது துவக்கமான காலம் இந்த ஜயசீலர்களுடன் இத்தகைய முடிவைக் கைக்கொண்டதனால் முஸ்லிம் பொதுமக்களுக்குக் கெட்ட காலமாகவே நிகழ்ந்தது.

வெற்றிகள்

கதீபாவுக்குப் பிரதியாய் குராஸானுக்கு யஜீத் பின் முஹல்லப் அனுப்பப்பட்டான். அவன் தெஹிஸ்தானை முற்றுகையிட்டு, அதைக் கைப்பற்றிக்கொண்டு 'ஜுர்ஜான்' புறம்சென்றான். அவ்விடத்துமக்கள் சமாஸம்செய்துகொண்டனர். பிறகு 'தப்ரிஸ்தான்' புறம் சென்றான். அவ்விடத்துச் சேனதிபதி கோட்டைக்குட் பதுங்கிவிட்டான். இங்கு ஜுர்ஜான் வாசிகள் சதிசெய்து, அவ்விடத்து முஸ்லிம்களைக்

கொன்றுவிட்டதாய்ச் செய்தி கிடைக்கவே மீண்டும் திரும்பி வந்து அதை வெற்றிகொண்டு, குற்றவாளிகளுக்குத் தண்டனை விதித்துவிட்டுத் திரும்பிச் சென்று தப்ரிஸ்தானைக் கைப்பற்றினன். அவ்வமயம் கிடைத்த கொள்ளைப் பொருட்களில் ஐந்திலொரு பாகம் 60,00,000-திர்ஹமாம். ஹி. 98-ம் ஆண்டில் ஸுலைமான் ரூமீகளுக்காக ஏற்படுத்தப் பெற்றிருந்த தமது சகோதரர் முஸ்லிமா வென்பாருக்குப் பெரியதொரு சேனையை யளித்து, குஸ்துன்துனிய்யாவின் புறம் அனுப்பிவைத்தார். அவர் ஒரு வருடம்வரை அதை முற்றுகையிட்டிருந்தார். இதற்கிடையே ஸுலைமான் இறந்துவிட்டதாய்ச் செய்தி கிடைத்தது.

இளவரசர்

ஸுலைமான் தமது புதல்வர் ஐயூப் என்பாரை இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்தார். எனினும், அவர் இறந்து விடவே உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களை இளவரசராக்கும் விஷயமாய் ரஜா பின் ஹயாத் என்பாரிடம் யோசனை கேட்டதற்கு அவர்கள் அதையாமோதித்தார்கள். எனவே, அவர்களையே இளவரசராகத் தேர்ந்தெடுத்ததாய் ஒரு லிகிதம் வரைந்து, தமது வர்க்கத்தவர் யாவரையும் ஒருங்கே சேர்த்து, நாமத்தை வெளியிடாமல் முத்திரையிட்ட கடிதத்துடன் அவர்களிடம் "இக்கடிதத்தில் எவரைக் குறித்திருக்கிறேனே, அவரே இளவரசராவார்" என பைஅத் வாங்கிக்கொண்டார்.

மரணம்

ஹி. 99-ம் ஆண்டு, ஸபர் மாதம், 21-ந் தேதி வெள்ளிக்கிழமை ஸுலைமான் கன்ஸரீனுக்குச் சமீபமாகவுள்ள 'வாபிக்' என்னுமிடத்தில் காலஞ்சென்று போயினர். அவ்வமயம் அவரது வயது 45. அவர் கிலாபத்தை நிர்வகித்தது இரண்டு வருடங்கள், எட்டு மாதங்கள், ஐந்து தினங்களாம்.

ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.)

உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்கள் ஹி. 62-ம் ஆண்டில் ஜனித்தார்கள். அவர்களின் பிதா அப்துல்அஜீஜ் பின் மர்வான் அப்துல்மலிக் என்பாருக்குப் பிறகு அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும் இளவரசராக விருந்தார்கள். எனினும், அவர் காலத்திலேயே இறந்துவிட்டதால் கலீபாவாக முடியவில்லை. இவர்களின் அன்னையார் ஹஸ்ரத் உமர்(ரலி.) அவர்களது திருப்புதல்வர் ஆஸிம் (ரலி.) அவர்களின் புத்திரியாவர். குழந்தைப்பருவத்தில் இவர்களின் தகப்பனார் இவர்களை மதீனாவுக்கனுப்பிவிட்டார்கள். அங்கேயே இவர்கள் பயிற்சிபெற்றார்கள். அங்குள்ள அறிஞர்களிடம் கல்விபயின்றார்கள். மார்க்கக்கல்வியில் இவர்களுக்குள்ள ஆற்றலுக்கு இவர்கள் கிலாபத்தில் தலையிட்டிராதுபோயின் மார்க்கத்தலைவர்(இமாம்)களில் ஒருவராய் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பார்கள். மைமூன் பின் மிஹ்ரான் என்பார் "எல்லா அறிஞர்களும் உமர்பின் அப்துல்அஜீஸ் (ரஹ்.) அவர்கள்முன்பு அவர்கள் சிஷ்யர்களாகவே காணப்பட்டார்கள்" எனவும், முஜாஹித் (ரஹ்.) "நாம் உமர் (ரஹ்.) இடம் கற்றுக்கொடுக்க வந்தோம். எனினும், நாமே அவரிடமிருந்து கற்றுக்கொள்ள நேர்ந்தது" எனவும் கூறிப்போந்தனர். சத்குணங்களைக் கவனிக்கப்புகின் அவைகளிலும் அவர்கள் மேம்பட்டோராகவே காணப்பட்டார்கள். அவர்கள் தாமே ஒருதடவையில் "பொய்யை மனிதனுக்கு இடர்செய்யுமொரு செய்கையாகக் கண்டேனாதலின், அது தொடுத்து நான் பொய் சொன்னதில்லை" எனக் கூறியிருக்-

கிறார்கள். வலீத் உடையகாலத்தில் மதீனாவுக்கு அதிபராக நியமிக்கப்பட்டிருந்தபோது அறிஞர்களும், ஆன்றோரும் இவர்களுடன் கலந்துகொண்டிருப்பார்கள். மதீனாவுக் கதிபராயிருந்தகாலத்தில் அநேகதடவைகளில் ஹஜ்ஜின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கிலாபத்

ஹி. 99-ம் ஆண்டில் ஸுலைமான் மரணமடைந்து விட்டபிறகு ரஜாபின் ஹயாத் பனீ உமையாக்களை 'வாபிக்' உடைய ஜாமிஃ மஸ்ஜிதில் ஒருங்கு சேர்த்து, அவர்களிட மிருந்து இளவரசரைத் தேர்ந்தெடுத்துள்ள கட்டளையின் மீது பைஅத் வாங்கினார்கள். பிறகு கலீபாவின் மரணத் தைப் பகிரங்கப்படுத்திவிட்டு, பிறகு முத்திரையிடப்பட் டிருக்கும் அக்கட்டளையைப்பிரித்து வாசித்தார்கள். அதில் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களின் திருநாமம் குறிக்கப்பட்டிருந்தது. அவர்களை மிம்பர்மீது அமரச் செய்தார்கள். அவர்களோ "இந்தச்சுமை என்மீது யாங்ங னம் சுமத்தப்பட்டது?" என வருந்திக்கொண்டிருக்கும் போது ஹிஷாம் பின் அப்துல்மலிக் "கிலாபத் எனக்கேன் கிடைக்கவில்லை?" என வருந்திக்கொண்டிருந்தான். பைஅத் முடிந்தபிறகு அரசாங்க வாகனம் வந்தது. எனினும், அவர்கள் ஆடம்பரத்தை விரும்பாமல் தமது அசுவத்தின் மீது ஏறிக்கொண்டு சென்றார்கள். ஜனங்கள் அவர்களை அரசாங்க மாளிகைக்குக் கொண்டுசெல்லக் கருதினார்கள். இவர்களோ "அங்கு ஐயூப் உடைய குடும்பத்தா ரிருக்கின் றனர். அவர்கள் வேறிடத்திற்குச் செல்லும்வரை நான் எனது குடிசையிலேயே யிருப்பேன்" எனக் கூறிவிட் டார்கள்.

சீர்திருத்தங்கள்

உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) ஜனநாயகத்துவத்தை மீண்டும் முஸ்லிம்களிடம் புகுத்தி, இஸ்லாமின் ஆக்ஞைப் பிரகாரம் இஸ்லாமிய அரசுரிமையை நிறுவினார்கள். இத னாலேயே மார்க்க அறிஞர்கள் இவர்களை "குலபாயெராஷி தின் (நேர்வழியடைந்த கலீபாக்)"களுள் சேர்த்திருப் பதுடன், 'இரண்டாவது நூற்றாண்டின் முஜத்தித் (சீர்திருத்த புருஷர்)' எனவுங்கொள்கிறார்கள். மாகாணங்களின் தமது சுயநலத்திற்காக அதிக்கிரமமான காணிக்கைகளைச் செலுத் தும்படி அதிபர்கள் செய்திருந்ததை ஒரே நடவையில் நிறுத்திவிட்டார்கள். அதிக்கிரமுமுடைய அதிபர்கள் யாவரையும் நிறுத்திவிட்டார்கள் சிறப்பாக அதிக்கிரமம் புரிவதையே வழக்கமாகக் கொண்டிருந்த ஹஜ்ஜாஜின் சுற்றத்தவர் யாவரையும் உத்தியோகத்திலிருந்து நீக்கி விட்டு, யமன் தேசத்தில் பலபாகங்களுக்கும் பிரித்தனுப்பி விட்டார்கள். குராஸான் உடைய அதிபதியான யஜீத் பின் முஹல்லப் தான் இரண்டுகோடி திர்ஹம் வசூலித்திருப் பதாய் ஸுலைமான் காலத்தில் எழுதியிருந்தான். இவர்கள் அவனையழைத்து, அந்தக் கணக்கைக் கேட்டபோது அவன் "நான் 'பிரசித்தியடையவேண்டு' மென்னும் கருத்தினு லேயே அங்ஙனமெழுதியிருந்தேன். 'ஸுலைமான் அந்தத் தொகையை என்னிடமிருந்து கேட்கமாட்டா' ரென்பதை நான் நன்கறிவேன்" என்றான். அவர்கள் "இஃது முஸ் லிம்களின் பொருளாதலால் இதை நீர் கொடுத்தே தீர வேண்டும்" என்றார்கள். அதை அவன் கொடாதுபோகவே அவனைக் கைதுசெய்து விட்டார்கள். ஸமர்கந்தில் முஸ்லிம்களின் ஆட்சிக் குட்பட்டிருந்த பிறமதஸ்தர்கள் இவர்களின் திருச்சமுகத்திற்கு வந்து "கதீபாபின் முஸ் லிம எங்கள் நிலங்களை எங்களிடமிருந்து அபகரித்து, முஸ்

லிம்களுக்குக் கொடுத்துவிட்டார். தாங்கள் இவ்விஷயத்தில் எங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யுங்கள்'' என விண்ணப்பித்துக் கொள்ளவே அவர்கள் அவ்விடத்து அதிபரான ஸுலைமான் பின் அபிஸ்ஸரா வென்பாருக்கு 'ஸமர்கந்த்'வாசிகள் முறையிட்டிருப்பதைக் குறிப்பிட்டு, "இவர்கள் விஷயத்தை நன்கு விசாரித்தறிய ஒரு நீதிபதியை நியமியுங்கள்! உண்மையிலேயே அவர்களின் நிலங்கள் அதிக்கிரமமாக அபகரிக்கப்பட்டு சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பின், நீங்கள் அவர்களை சேனைக்கே மீண்டும் அழைத்துக்கொண்டு, அந்த நிலங்களை அவைகளின் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்!'' என்றெழுதினார்கள். ஸுலைமான் 'ஜமீஃ பின் ஹாலிர்' என்னும் நீதிபதியை இதை விசாரிப்பதற்காக நியமித்தார். அன்னார் தமது தீர்ப்பில் கதீபா செய்தது சட்டத்திற்குப் புறம்பானதெனவும், எனவே அவரது உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல வெனவும், சிப்பாய்கள் சேனைக்குத் திரும்பிவிடவேண்டுமெனவும், இதற்குப் பிறகு வெற்றியோ, உடன்படிக்கையோ புதிதாகக் கொள்ளப்பட வேண்டுமெனவும் எழுதியிருந்தார். ஸமர்க்கந்த்வாசிகள் மீண்டும் யுத்தமோ, உடன்படிக்கையோ செய்யப்படுவதை யுசிதமாகக்கொள்ளாததால் எதிர்ப்பதை விட்டுவிட்டார்கள்.

கொல்வதும், கைகளைத் துணித்துவிடுவதும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக இஸ்லாம் விதித்திருக்கும் குறிப்பிட்ட தண்டனைகளாம். அதிக்கிரமம் நிரம்பப்பெற்ற அதிபர்கள் எடுத்ததற்கெல்லாம் இத்தகைய தண்டனைகளை விதிக்க வாரம்பித்தார்கள். உமர் பின் அப்துல்அஜீஜ (ரஹ்.) "கலீபாவுக்குத் தெரிவிக்காமல் இத்தகைய தண்டனைகள் விதிக்கப்படக்கூடாது'' என்ற பொதுவான கட்டளை பிறப்பித்தார்கள். கலீபாவாயின பிறகு இவர்கள் குரைஷ்

களையும், ஏனைய வர்க்கங்களையும் ஒருங்கேயழைத்து "பிதக் (ஒரு நிலம்) பெருமானாரின் கைவசத்திலிருந்தது. பிறகு அபூபக்ர் (ரலி.) அவர்களும், அவர்களுக்குப் பிறகு உமர் (ரலி.) அவர்களும் அதற்கான ஏற்பாட்டைச் செய்துவந்தார்கள். இறுதியாக மர்வான் அதைத் தமது ஜாகீருடன் சேர்த்துக்கொண்டார். அதற்குப் பிறகு அஃது எனக்குக்கிடைத்தது. தற்போது நான் உங்களது சாக்ஷியத்திற்கு முன்னிலையில் 'நான் அதை பெருமானாரின் காலத்திலிருந்த அதன் சொந்தக்காரர்கள் கைவசத்திலேயே ஒப்புவித்துவிடுகிறேன்' என உறுதிமொழி கூறுகிறேன்" எனக் கூறிவிட்டுத் தமது அடிமையான மஜாஹிம் என்பாரை யழைத்து "எனக்கு ஜாகீரில் கிடைத்த நிலங்கள் எனக்குக் கொடுத்தோருக்கும், எனக்கும் பாத்தியதை யில்லாதவை. எனவே, அவைகளை நான் விட்டுவிடக் கருதுகிறேன்" என்றார்கள். மஜாஹிம் "அங்ஙனமாயின் தங்கள் குடும்பத்தவரின் கதியாதாகும்?" எனக் கேட்கவே அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டு "அவர்களை அல்லாஹ்விடம் ஒப்புவிக்கிறேன்" என்றார்கள். மஜாஹிம் அங்கிருந்து வந்து அவர்களின் நற்குணங்களையே பூண்டிருந்த வாலிபப் புத்திரர் அப்துல்மலிக் (ரஹ்.) அவர்களிடம் "கலீபா அவர்கள் தமது நிலங்களைக் கொடுத்துவிடக்கருதினார்கள். உங்களையனுசரித்து நான் அவர்களைத் தடுத்தேன்" எனவும் அந்தச் சற்புத்திரர் "நீர் கலீபாவுக்குத் தீயகருத்தைப் புகட்டினீர்" எனக்கூறிவிட்டுத் தந்தையாரிடம் சென்று மஜாஹிமிடம் தாம் செவியுற்றதைக் கூறிவிட்டு, அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். அவர்கள் "இன்று மாலைநேரத்திற்குள் இன்ஷாஅல்லாஹ் (இறைவனது விருப்பமிருக்குமாயின்) இந்த வேலையை முடித்துவிடுவேன்" என்றார்கள். அப்துல்மலிக் (ரஹ்.) "சீக்கிரம் செய்து முடியுங்கள்! இராத்திரிக்குள் என்ன

தான் நடந்துவிடுமோ? தாங்கள் தாம் மனம்மாறிவிடுவீர்களோ?" வென்றார்கள். தமது சத்புத்திரரின் நேர்மையான குணத்தைக்கண்டு உமர் (ரஹ்.) அவர்கள் "எனக்கு நன்மையான விஷயத்தில் ஆதரவளிக்கும் குழந்தையை யருளிச் செய்ததற்காய் இறைவனைத் துதிக்கிறேன்" எனக்கூறிவிட்டு, அந்த நிலங்களை அவைகளின் சொந்தக்காரர்களிடம் ஒப்புவித்துவிட்டார்கள். இதற்குப்பிறகு தமது வர்க்கத்வரான பனீஉமையாக்கள் தமக்குப் பாத்தியதையில்லாமல் கைப்பற்றிக்கொண்டிருந்த நிலங்களையும் அவைகளின் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். இஃது பனீ உமையாக்களுக்கு மிகவும் கஷ்டமானதொரு விஷயமாய்த் தெரிந்தது. அவர்கள் ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களின் அத்தையாரும், அவர்களின் மரியாதைக்குப் பாத்திரமானவர்களுமான பாத்திமா பின்து மர்வான் என்பாரை யழைத்துக்கொண்டு வந்தார்கள். அம்மாது சிரோன்மணியார் வந்ததும் ஹஸ்ரத் உமர்பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்கள் அன்னாரிடம் கூறியதாவது:—

"அல்லாஹுத் தஆலா பெருமானார் (ஸல்.) அவர்களை உலகத்திற்குக்கருணையாயனுப்பினான். அவர்கள் மக்கள் யாவரும் பொதுவாக ஜலமருந்தத்தக்க கிணற்றை விட்டுவிட்டுப் போனார்கள். பிறகு அபூபக்ர் (ரலி.) அவர்களும் அக்கிணற்றை அவ்விதமே வைத்தார்கள். உமர் (ரலி.) அவர்களும் அவர்களைப் பின்பற்றி நடந்தார்கள். அதற்குப்பிறகு யஜீத், மர்வான், அப்துல்மலிக், வலீத், ஸுலைமான் இவர்களின் கைவசம் அக்கிணறு வந்தபோது இவர்கள் அதிலிருந்து ஆறுகளைத் தோண்டினதனால் அக்கிணற்றில் ஜலமற்றுப்போய்விட்டது. தற்போது அதைப் புராதன நிலைமைக்குக் கொண்டுவராவிட்டால் அதில் குடிப்பதற்கே ஜலம் கிடைக்காது"

என்பதே. இதைக்கேட்ட பாத்திமா அவர்கள் "உங்கள் சகோதரர்களின் தூண்டுதலின்மீதே உங்களுக்குப் போதிப்

பதற்கு நான் வந்திருந்தேன். உங்களது கருத்து இங்ஙனமிருக்கும்போது நான் ஒன்றுமே கூறமுடியாது” எனக்கூறி விட்டுப் பிறகு பனீஉமையாக்களிடம் சென்று இவ்வார்த்தைகளை யவர்களிடம் எடுத்துக்காட்டிவிட்டு “குற்றம் உங்களுடையதே. நீங்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி.) அவர்களின் பௌத்திரியை மணந்துகொண்டீர்கள். அவருக்குப்பிறந்த குழந்தை ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களைப்போலவேயிருக்கின்றது” எனக்கூறிவிட்டார்கள். உமர் பின் அப்துல்அஜீஜ் அதிபராயிருந்தகாலத்தில் மிகவும் ஆடம்பரத்துடனிருந்துகொண்டிருந்தார்கள். எனினும், கிலாபத்தை ஏற்றுக்கொண்டபிறகு தமது தினச்செலவை இரண்டு திர்ஹமாக்கிக்கொண்டார்கள். உணவு, உடை இவைகளில் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களது எளியவாழ்க்கையையே பின்பற்றினார்கள்.

வெற்றிகள்

இவர்கள் காலத்தில் எதிரிகள் ‘ஆதர்பீஜான்’ மீது படையெடுத்து, முஸ்லிம்களைக் கொன்றுவிட்டதன்னியில், சூறையாடவுந்தொடுத்தார்கள். இவர்கள் இப்னுஹாதிம் பாஹிலீ என்பாரைச் சேனையுடன் அனுப்பியதில் அவர் அங்கு சென்று எதிரிகளைத் துரத்திவிட்டு, அவர்களுக்குத் தக்க சிக்ஷைவிதித்தார். உந்துலுஸுக்கும் சகல தளவாடங்களுடன் கூடிய உதவிச்சேனையை யனுப்பினார்கள். ஸுலைமானுடைய காலத்திலிருந்து குஸ்துன்துனிய்யாவை முற்றுகையிட்டுக்கொண்டும், இன்னல்களடைந்துகொண்டுமிருந்த முஸ்லிமா வென்பாரையும், அவருடனிருந்த சேனைகளையும் அழைத்துக்கொண்டார்கள். ‘தரிந்தா’ வென்னுமிடத்தில் ரூமிகள் படையெடுத்துவந்ததால் அங்கிருந்த சேனைகளை ‘மலீதா’வுக்கழைத்துக்கொண்டு, தரிந்தாவின் மீதிருந்த ‘சேனை’ யென்னும் நிழலை எடுத்துவிட்டார்கள்.

கவாரிஜ்கள்

இவர்களின் நேர்மையையும், நீதியையும் கண்ணுற்று கவாரிஜ்கள் "இத்தகைய கலீபா அவர்களுக்கு மாறு செய்வது வீண்வேலையே" எனக் கூறத்தொடுத்தார்கள். இராக்கில்மட்டும் அவர்களில் ஒரு கூட்டம் தலைதூக்கியது. அங்குள்ள அதிபருக்கு ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) "ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருடன் அவர்களைக் காவல்புரியவும், அவர்கள் அதிக்கிரமம் புரியாது தடுக்கவும் ஒரு சேனையை யனுப்பிவைத்து, அத்தலைவரிடம் "அவர்கள் எவரையும் கொல்லாதவரை அவர்களை யொன்றுமே செய்யவேண்டாம்" எனக்கூறிவிடுங்கள்!" என்றெழுதினார்கள். இதன் பிரகாரம் முஹம்மத் பின் ஜரீர் பின் அப்துல்லாஹ் வென்பார் 2,000-சிப்பாய்களுடன் அவர்களிடம் அனுப்பப்பட்டனர். ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) தாமே புஸ்தாம் லுஷைகரீ என்னும் பெயருள்ள கவாரிஜ்களின் தலைவனுக்கு

> "நீங்கள் அல்லாஹ்வுடையவும், அவனது தூதர் பெருமானார் (ஸல்.) அவர்களுடையவும் பாதுகாப்பை நம்பிப்புறப்பட்டிருப்பதாயறிகிறோம். உங்களைவிட அதிகமாய் நாங்கள் அவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே. நீங்கள் நம்மிடம் வாருங்கள்! நாமிருவரும் தர்க்கம் புரிவோம். நாங்கள் சத்தியத்தின் மீது நிலைபெற்றிருந்தால் எங்களுடன் சேர்ந்துகொள்ளுங்கள்! நீங்கள் நேர்மையான பாதையிலிருப்பதாகத் தெரிந்தால் நாம் உங்கள் வார்த்தைகளை யொப்புக்கொள்ளுகிறோம்"

என்றெழுதியதை புஸ்தாமும் ஒப்புக்கொண்டுத் தனது புறத்தால் இருவரையனுப்பியிருந்தான். தர்க்கமும் ஆரம்பித்தது. அது வருமாறு:—

உமர்பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.):—"நீங்கள் பொது மக்களை ஏன் விட்டுப்பிரிந்தீர்கள்? எங்களது எந்தக் கொள்கைகளை நீங்கள் விரும்பாதிருக்கிறீர்கள்?"

காரிஜீ:—“தாங்கள் நீதிநெறிவழுவாத சத்குணசாலியாயிருக்கிறீர்கள். தங்களைப்பற்றி எங்களுக்கு எத்தகைய முறையீடுங்கிடையாது. எனினும் ‘தாங்கள் பொதுமக்களின் ஆலோசனைப்பிரகாரம் கலீபாவானீர்களா; அன்றி பலத்தைக் காரணமாகக்கொண்டு கலீபாவானீர்களா?’ வெனக்கேட்கிறேன்.”

உமர் (ரஹ்.):—“நான் கிலாபத்தை விழைந்து நிற்கவுமில்லை; வன்மையால் அதையடையவுமில்லை. எனக்கு முன்பு கலீபாவாகவிருந்த மனிதர் என்னை இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்தார்; நான் அதையேற்றுக்கொண்டேன். உங்களைத்தவிர வேறெவரும் அதை எதிர்க்கவும் முன்வரவில்லை. நீங்கள் ‘நீதிநெறி வழுவாத முஸ்லிம் கிலாபத்தை ஏற்றுக்கொள்வதை ஆமோதிக்கிறீர்களாதலால் என்னை எனது நிலைமையில் விட்டுவிடுங்கள். நான் நீதியின்படி நடந்தால் நன்று. இன்றேல், நீங்கள் எனக்கு வழிபட வேண்டாம்!”

காரிஜீ:—“நாங்கள் ஒரே விஷயத்தை விண்ணப்பித்துக்கொள்கிறோம்: தாங்கள் காலஞ்சென்ற பனீஉமையாக்கள் அதிக்கிரமத்தால் கைப்பற்றியிருந்தவைகளைத் திருப்பிக்கொடுத்துவிட்டதுடன் அதற்கு “அதிக்கிரமமானவைகள்” எனவும் பெயரிட்டழைத்தீர்கள். அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி தருவானாக! எனவே, நீங்கள் நேர்வழியைப் பின்பற்றுகிறீர்கள். அவர்கள் வழிகெட்டிருந்தார்களாதலால் அவர்களைச் சபிப்பீர்களாக!”

உமர் (ரஹ்.) “நீங்கள் இகத்திற்காக வல்லாமல் பரத்திற்காகவே பொதுமக்களைவிட்டுப் பிரிந்திருப்பதாய் நான் நம்புகிறேன். எனினும், அந்தோ! நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொண்ட பாதையோ நேர்மையற்றதாயுளது. “நான் சாபமிடுவதற்காக அனுப்பப்படவில்லை” என எம்பெரு

மானார் (ஸல்.) மொழிந்திருப்பதை நீங்களேயறிவீர்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்களின் திருச்சரிதையில் "என்னைப் பின்பற்றுவோன் என்னைச்சேர்ந்தோனாவன். எனக்கு மாறுசெய்வோனைப்பற்றியோ இறைவா! நீ மிகவும் பொறுத்தருள்பவனாகவும், கிருபையாளனாகவுமிருக்கிறாய்" எனக்கூறியதாய் திருக்குர்ஆனில் இறைவன் குறிக்கிறான். நபிமார்களைப் பின்பற்றுதல் முஸ்லிம்களின் கடமையன்றோ? நான் அவர்களின் காரியங்களை "அதிக்கிரமமானவைகள்" எனப்பெயரிட்ட இழிவொன்றே அவர்களுக்குப் போதும். 'பாவிகள்மீது சாபமிடுவதும் முக்கிய கடமை' என்பதாய் எங்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது? 'நீங்கள் பிர்ஔன் மீது சாபமிட்டதுண்டா?' வெனக் கேட்கிறேன்."

காரிஜீ:—"நான் எப்பொழுதாவது அவனைச் சபித்த தாய் ஞாபகமில்லை."

உமர் (ரஹ்.):—"அங்ஙனமாயின், நீங்கள் இறை வனது சன்மார்க்கத்திற்கு முற்றிலும் மாற்றமாயொழுகிய பிர்ஔனையே சபிக்காது முஸ்லிம்களாகவும், மார்க்கக் கட்டளைப்படி யொழுகுவோராகவுமிருந்த எனது மூதாதை கள் மீது சாபமிடக் கட்டளையிடுகிறீர்களா?"

காரிஜீ:—"அதிக்கிரமங்களின் காரணமாய் அவர்கள் முஸ்லிம்களாயிருக்கவில்லை."

உமர் (ரஹ்):—"அஃது சரியன்று. பெருமானார் (ஸல்.) இஸ்லாமைப் பிரசாரம் செய்தார்கள். அதையொப் புக்கொண்டவன் முஸ்லிமாவன். அவன் குற்றம் புரிந்தால் இஸ்லாமைவிட்டும் புறம்பே சென்றுவிடமாட்டான். மேலும், தனது குற்றங்களுக்கேற்ற தண்டனைக்குப் பாத் திரவானாவன்."

காரிஜீ:—பெருமானாருடையவும், அல்லாஹ்வுடையவும் வழிப்பாடும் சேர்ந்தே "இஸ்லாம்" எனப்படும். அவர்

களின் கட்டளைப் பிரகாரம் ஒழுகாதவன் இஸ்லாமுக்குப் புறம்பானவனே."

உமர் (ரஹ்) :—"எனது மூதாதையர்களில் எவனும் "நான் அல்லாஹ்வுக்கும், பெருமானாருக்கும் வழிபடமாட்டேன்" எனக்கூறவில்லை. எனினும், துரதிர்ஷ்டத்தால் இஸ்லாமின் கட்டளைகள் யாவையும் ஒன்றுவிடாது எடுத்து நடக்கவில்லை."

காரிஜீ :—மார்க்கத்துக்கு விரோதமான காரியங்களை அவர்கள் செய்ததால் அவர்களைப் புறக்கணியுங்கள் !"

உமர் (ரஹ்) :—"ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) மதம் மாறியோருடன் சண்டையிடத் தொடுத்தபோது அன்னாரின் குடும்பத்தவரையும் கைது செய்ததை யறிவீர்களா ?"

காரிஜீ :—" ஆம் !"

உமர் (ரஹ்):—" ஹஸ்ரத் உமர் (ரலி.) தமது காலத்தில் மதம்மாறியவர்களின் குடும்பத்தவரைச் சிறையில் வைத்திருப்பதை நன்றெனக் கொள்ளாது, நஷ்டயீடுபெற்றுக்கொண்டு அவர்களை விட்டுவிட்டதையுமறிவீர்களா ?"

காரிஜீ :—" ஆம் !"

உமர் (ரஹ்.) :—" அங்ஙனமாயின், ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களை அவர்களின் செய்கைகள் காரணமாய்ப் புறக்கணித்தார்களோ ?"

காரிஜீ :—" இல்லை."

உமர் (ரஹ்.) :—" இந்த அபிப்பிராயபேதத்தின் காரணமாய் நீங்கள் அவ்விருபெரியாரையும் புறக்கணிக்கிறீர்களா ?"

காரிஜீ :—" இல்லை."

உமர் (ரஹ்.) :—"உங்களது மூதாதையர்களான 'நஹ்றவான்' வாசிகளில் கூபாவாசிகள் எவரையும் கொள்ளையடிப்பதையும், கொல்வதையும் அனுமதிக்கவில்லை. எனினும்,

பஸராவாசிகள் அப்துல்லாஹ் பின் ஜனுப் என்பாரையும், கர்ப்பவதியாயிருந்த அவரது மனைவியையும் கொன்று விட்டார்கள். கூபாவாசிகள் இவர்களைப் புறக்கணித்தார்களோ?''

காரிஜீ :—'' இல்லை.''

உமர் (ரஹ்.) :—'' இவ்வளவு அபிப்பிராய பேதங்களுடைய இரு கூட்டத்தவரையும் நீங்கள் புறக்கணிக்கிறீர்களா?''

காரிஜீ :—'' இல்லை.''

உமர் (ரஹ்.):—'' நீங்கள் அபூபக்ர், உமர் (ரலி..........) இவ்விரு பெரியாரையும், இராக்வாசிகளையும் ஆதரித்துக் கொண்டு, எனது மூதாதையர்களைப் புறக்கணிக்கும்படிக் கூறுகிறீர்கள். நீங்கள் ஒன்றுமே அறியாதிருக்கிறீர்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் முன்பு இஸ்லாமை யங்கீகரித்தவனது பொருள், ஆவி, மரியாதை இவைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. இதற்கு மாற்றமாய் நீங்கள் முஸ்லிம்களைக் கொல்லுகிறீர்கள். முஸ்லிம்களல்லாதாரின் ஆவி, பொருள், மரியாதை இவைகளைக் காப்பாற்றுகிறீர்கள்.''

காரிஜீ :—'' நல்லது. இன்னுமொரு விஷயம்: ஒரு மனிதன் அரசனுயினன். அவன் நீதிநெறிவழுவாது அரசுரிமையை நடாத்தியும் வந்தான். எனினும், தனக்குப் பிறகு 'நீதியின் பிரகாரம் ஒழுகமாட்டான்' எனப் பயப்படத்தக்க ஒருவனை இளவரசனுகத் தேர்ந்தெடுக்கிறுன். 'அவன் தனது கடமையைச் செய்துவிட்டா'னெனத் தாங்கள் நம்புகிறீர்களா?''

உமர் (ரஹ்.):—'' இல்லை.''

காரிஜீ :—'' பிறகு தாங்கள் இந்த கிலாபத்தை நீதியை நம்பவழியில்லாதபடி யஜீத் பின் அப்துல்மலிக் வசம் ஒப்புவித்துவிட்டால், தாங்கள் கண்டிக்கத் தக்கோராக மாட்டீர்களா?''

உமர் (ரஹ்.) :—" எனினும், இஃது எனது வேலையன்று. எனக்குமுன்பு ஸுலைமான் என்னையும், எனக்குப் பிறகு யஜீதையும் இளவரசர்களாய்த் தேர்ந்தெடுத்தார்."

காரிஜீ :—" ஸுலைமானின் இக்காரியங்களை 'உசிதமானவை' யெனத் தாங்கள் கொள்கிறீர்களா?"

ஹஸ்ரத் உமர் (ரஹ்.) இதற்குப்பதிலளிக்காமல் மௌனமாயிருந்து, இரண்டு நாட்கள் தவணை கேட்டார்கள். இத்தர்க்கத்தால் அவ்விரு கவாரிஜ்களில் ஒருவன் தமது கூட்டத்தைவிட்டுப் பிரிந்து நேர்வழியைப் பின்பற்றிவிட்டான். கவாரிஜ்களும் மௌனமாயிருந்துவிட்டார்கள்.

குடும்பத்தவர்

ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்கள் மூன்று மனைவியரை மணந்திருந்தார்கள் :—

(1) பாத்திமா பின்து அப்துல்மலிக். இவர்களுக்கு இஸ்ஹாக், யஃகூப், மூஸா இம்மூன்று புதல்வர்கள் ஜனித்தார்கள்.

(2) லமீஸ் பின்து அலீபின் ஹாரித். இவருக்கு அப்துல்லாஹ், பக்ர் என்னும் இரு புதல்வர்களும், அம்மாராவென்னும் ஒரு புதல்வியும் ஜனித்தார்கள்.

(3) உம்முஉத்மான் பின்து ஷுஐப். இவர் வயிற்றில் இப்ராஹீம் என்னும் ஒரு புதல்வர்மட்டும் ஜனித்தார்.

அப்துல்மலிக், வலீத், ஆஸிம், யஜீத், அப்துல்லாஹ், அப்துல்அஜீஜ், ரையான் இவர்கள்தவிர இரு புதல்விகளும் அடிமைப் பெண்களுக்கு ஜனித்தார்கள்.

மரணம்

இரண்டாண்டுகள், ஐந்து மாதங்கள், நான்கு தினங்கள் மட்டுமே கிலாபத்தை நிர்வகித்து, ஹி. 101-ம் வருஷம், ரஜப் மாதம், 25-ந்தேதி 'தீர்ஸம்ஆன்' என்னுமிடத்தில் காலஞ்சென்றார்கள். வயது 39.

சொத்து

ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்கள் விட்டுப்போயின சொத்து 21-தீனர் மட்டுமே. இதிலேயே அவர்களை நல்லடக்கம் செய்வதற்கான செலவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ளது வாரிஸ்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டது. அப்துர்ரஹ்மான் பின் காஸிம் பின் முஹம்மத் பின் அபூபக்ர் அவர்கள் கூறுவதாவது:—"உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) தமக்குப்பின் பதிஞெரு புத்திரர்களை விட்டுச் சென்றார்கள். அவர்களின் சொத்து புத்திரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தீனர் வீதம் கிடைத்தது. ஹிஷாம் பின் அப்துல்மலிக்கும் பதிஞெரு புத்திரர்களைவிட்டுச் சென்றார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 10,00,000-திர்ஹம் கிடைத்தது. எனினும் உமர் (ரஹ்.) அவர்களின் புத்திரர்களில் ஒருவர் ஒருதினம் மத யுத்தத்திற்காக நூறு குதிரைகளைக் கொடுத்ததையும், ஹிஷாமுடைய புத்திரர்களிலொருவர் யாசித்துத் திரிந்ததையும் கண்டிருக்கிறேன்" என்பதே.

உமர் (ரஹ்.) அவர்களின் சரிதை

ஹஸ்ரத் உமர்பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அரசாங்க தடபுடல்களையும், ஆடம்பரமான வாழ்க்கையையும் விட்டு ஒதுங்கியிருந்ததன்றியில் அவைகளை வெறுத்தும் வந்தார்கள். அவர்கள் தமது கிலாபத்தின் காலத்தில் 'கிலாபதே ராஷிதா'வின் சமத்துவத்தையும், நீதியையும் மீண்டுமொருமுறை உயிர்ப்பித்தார்கள். பிரஜைகளின் பொருளையும், உரிமையையும் காப்பாற்றினர்கள். தகப்பன் தனது குழந்தைகள்மீது கொள்ளும் அன்பையே அவர்கள் தமது பிரஜைகள்மீது கொண்டார்கள். பிரஜைகளின் சௌகரியத்திற்காகப் பலவிடங்களில் சத்திரங்களையும், விருந்து மண்டபங்களையும் நிறுவினர்கள். சென்றுபோன அரசர்

களின் காலத்தில் நடந்த அதிக்கிரமங்களேயும், அட்டூழியங்களேயும் சீர்திருத்தம் செய்தார்கள். இவர்களின் நீதியை முன்னிட்டு பிரஜைகளடைந்த சௌகரியத்தால் தருமம் வாங்குதற்கு ஏழைகளைத் தேடியலேந்தும் ஏழைகள் கிடைப்பது அருமையாகிவிட்டது. அவர்கள்காலத்தில் முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பிரமதஸ்தர்கள் அதிகமாய் இஸ்லாமைத் தழுவினூர்கள். 'மாவராவுன்னஹர்' பிரதேசங்களின் அதிபர்களும், ஸிந்துதேசத்தின் அரசர்களும் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். இவர்கள் தமது கடமைகளே ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களேபோன்று கண்காணித்து வந்தார்கள். இதேகாரணத்தாலேயே கிலாபத்தை நிர்வகித்ததுமுதல் பலவீனமடைந்துகொண்டே சென்ருர்கள். இரண்டரை வருஷகாலம் பூர்த்திபெறுவதற்குள் ஆவி பிரிந்தும் விட்டார்கள். அவர்கள் எப்போதும் சௌகரியமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தும் கிலாபத்தை ஏற்றுக்கொண்டதும் இறைவனது பயபக்தியின் காரணமாக பாதேசிக்கோலத்தை மேற்கொண்டார்கள். கலீபா அப்துல் மலிக் உடைய புத்திரியான தமது தர்மபத்தினியார் பாத்திமா அவர்களுக்கு "இகலோகத்திலுடைய கொஞ்சநாட்களின் கஷ்டங்களேச் சகித்துக்கொண்டுவிடுவது பரலோகத்தில் நரகத்தின்கஷ்டங்களே மேற்கொள்வதைவிட பன்மடங்கு எளிதாகும்" எனப் போதிப்பார்கள்.

அவர்களுக்கு சகலவிதத்திலும் ஊன்றுகோலாய்ப் பரிமளித்தவர் பதினேழு வயதுடைய அவர்களின் திருப்புதல்வர் அப்துல்மலிக் என்பாராவர். அவர் இறக்குந்தருவாயில் அவரிடம் உமர்பின் அப்துல்அஜீஸ் (ரஹ்.) "மகனே! எனது கிரியைகளேக் குறிக்கும் கணக்குகளில் நீயிருப்பதைவிட (எனக்குப்பிறகு நீயிருந்து, எனது கிரியைகளில் உம்மையும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டிருப்பதைவிட) நான்

உமது கிரியைகளில் சேர்க்கப்படுவதே நன்று" எனவும் அந்தச் சத்புத்திரர் "எனது ஆதரவைவிடத் தங்களது விருப்பத்தையே நான் அதிகமாக விரும்புகிறேன்" என்றனர். உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களது கிலாபத்தின் காலம் மிகக்குறைவானதாகவே யிருப்பினும், அவர்கள் அநேக சீர்திருத்தங்களைச் செய்தார்கள். முன்னோர்களின் காலத்திலிருந்த நிலைமைக்கு கிலாபத்தைக் கொணர்ந்தார்கள். பனீஉமையாக்கள் தங்களது பகைமையின் காரணமான மிம்பர்கள்மீது குத்பாக்(பிரசங்கங்)களில் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களைச் சபிப்பதையும், நிந்திப்பதையும் கைக்கொண்டார்கள். இதுவே அவர்களது பழக்கவழக்கமாய் மாறிவிட்டது. உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) தமது காலத்தில் இத்துர்ப் பழக்கத்தை யழித்துவிட்டு, அதற்குப்பிரதியாய்க் கீழ்க்கண்ட திருக்குர்ஆனின் அமுதமொழியை யோதும்படிச் செய்துவிட்டார்கள். அஃது வருமாறு:—"உண்மையாகவே அல்லாஹ் நீதியையும், கருணையையும், சுற்றத்தினருடன் நல்விதமாயொழுகலையும் ஏவுகின்றான். இன்னும் நாணமின்மை, தீமை, சதி இவைகளை விலக்குகிறான். அவன் உங்களுக்குப்போதிக்கிறான். நீங்கள் இவைகளை ஞாபகத்தில் வைக்கக்கூடுமென்றே?" (அல்—குர்ஆன்)

இரண்டாவது யஜீத்

யஜீத் பின் அப்துல்மலிக் ஹி. 65-ம் ஆண்டில் ஜனித்தார். ஸுலைமான் பின் அப்துல்மலிக் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களுக்குப் பிறகு இவரையே இளவரசராகத் தேர்ந்தெடுத்திருந்ததால் அவர்களுக்குப் பிறகு இவரே கலீபாவாக நியமிக்கப் பெற்றார். யஜீத் கலீபாவாயினவுடன் ஹஸ்ரத் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்கள் காலத்திலேற்பட்ட சீர்திருத்தங்கள் யாவற்றையும் அழித்துவிட்டு, பனீஉமையாக்கள் காலத்திலேற்பட்ட அரசியல் முறைமையையே அனுஷ்டானத்திற் கொணர்ந்தார். மதுபானத்தை மேற்கொண்டு, தாசிகளின் பாட்டுகளைக் கேட்பதில் காலத்தை வீணே கழிக்க வாரம்பித்த முதல் கலீபா இவரே.

இப்னுமுஹல்லபின் குழப்பம்

யஜீத் பின் முஹல்லப் என்னும் குராஸான் தேசத்துத் தலைவனை உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) கிஸ்தித் தொகையைச் செலுத்தாத குற்றத்திற்காகச் சிறைவைத்திருந்தார்கள். அவன் சிறையில் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) மரண வியாதியில் வீழ்ந்து விட்டதைச் செவியுற்றபோது "யஜீத் பின் அப்துல்மலிக் இடம் அகப்பட்டுக்கொண்டால், அவர் நம்மைக் கொன்று விடுவார்" என்னும் எண்ணத்தின் பாற்பட்டு சிறையிலிருந்து வெளிப்பட்டு பஸராவுக்கு ஓடி வந்தான். இவ்விடத்துத் தலைவனுயிருந்த அதீ பின் அர்தாத் என்பாரை நீக்கிவிட்டு, பஸராவைத் தன் கைவசப்படுத்திக்கொண்டு பாரிஸ், அஹ்வாஜ் வரைக்கும் தனது அரசியலை ஏற்படுத்திக்கொண்டான். பிறகு ஷாம்வாசிகளை எதிர்ப்பதற்குச் சேனைகளையும் தயாரித்து "ஷாம் வாசிகளுடன் யுத்தம் தொடுப்பது தூக்கி, வீலம் இவ்விடங்க

னுடன் யுத்தம் புரிவதைவிட மேன்மையானது" எனவும் கூறத்தொடுத்தான். இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்.) இதை எதிர்த்தார்கள். எனினும் "இப்னுமுஹல்லப் இதைச் செவியுற்ருல் கொன்று விடுவான்" எனக் கூறி, ஜனங்கள் அவர்களைத் தடுத்துவிட்டார்கள். அவன் இச்சேனைகளைக்கொண்டு 'வாஸித்'புறம் வந்தான். யஜீத் பின் அப்துல்மலிக் இதை எதிர்ப்பதற்காகத் தமது சகோதரர் முஸ்லிமா என்பாருடன் சேனைகளை யனுப்பியதில் இருபுறத்துச் சேனைகளும் யுத்தம் புரிந்தன. போர்க்களத்தில் யஜீத் (இப்னுமுஹல்லப்), அவனது சகோதரன் ஹபீப் இருவரும் கொல்லப்பட்டனர். முஸ்லிமா வெற்றி கொண்டார்.

எஞ்சியிருந்த முஹல்லபின் கிளையார் கப்பல்களிலேறிக் கொண்டு கீழ்ப்புறமாக ஓடினர்கள். அவர்களைப் பின்ருெடர்ந்து ஒரு சேனை அனுப்பப்பட்டது. கிர்மானுக்குச் சமீபமாக அவர்கள் கப்பலைவிட்டிறங்கி, தரைமார்க்கமாகச் செல்ல வாரம்பிக்கவே 'கந்தார்பீல்' என்னுமிடத்தில் இச்சேனை அவர்களை எதிர்க்கத் தொடுத்தது. அது சமயம் அபூஉத்பா பின் முஹல்லப், உத்மான் பின் முப்லல் பின் முஹல்லப் என்னும் இரு சிறுவர்களைத் தவிர்த்து வேறெவரும் உயிருடன் விடப்படவில்லை. முஸ்லிம்களுக்குப் பெருமையையளித்த அரிய காரியாதிகளைப் புரிந்த முஹல்லப் என்னும் தளகர்த்தரின் வம்சம் இவ்விதமாக அழிந்துபட்டது. முஸ்லிமா சின்ஞட்கள் இராக் தேசத்தின் தலைவராயிருந்தார். பிறகு அம்ரு பின் ஹபீரா பஜ்ஜாரீ அவ்விடத்து அதிபராய் நியமிக்கப்பட்டார்.

வெற்றிகள்

ஸமர்க்கந்திலுள்ள துர்க்கியர்களும், 'ஸகத்'வாசிகளும் சதி செய்தார்கள். அம்ரு பின் ஹபீரா ஸஈத் ஹர்ஷீ என்பானை குராஸானின் தலைவனுய் நியமித்து, அவன் கைவசம்

சேனைகளை யனுப்பியதில் இவன் அச்சதியாளர்களுடன் யுத்தங்கொடுத்து, அவர்களை மீண்டும் கைவசப்படுத்தினான். கஜர், ஆர்மீனியா இப்பிரதேசங்களின் நதிக்கரையில் தபீத் நியமிக்கப்பட்டிருந்தான். கஜர்வாசிகள் 'கப்சாக்' போன்றோரிடம் உதவிபெற்று, மாஜெஹஜாராவில் முஸ்லிம்களுடன் யுத்தங் கொடுத்து, இஸ்லாமிய சேனையில் அதிகபாகத்தை யழித்துவிட்டுச் சூறையாடினார்கள். தோல்வியடைந்த சேனை ஷாம் தேசத்திற்கு ஓடிவந்தது. யஜீத் பின் அப்துல்மலிக் ஜர்ராஹ் பின் அப்துல்லாஹ் ஹாக்மீயிடம் ஒரு சேனையைக் கொடுத்து, அப்பக்கத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் 'புஜ்ஆ'வுக்குச் சென்று, பிறகு கஜருக்குச் சென்றார். 'குர்' நதியைக் கடந்து அவர்களின் பலநகரங்களைக் கைப்பற்றினார். கஜர் வாசிகள் தமது இளவரசனின் தலைமையின் கீழ் எதிர்ப்பதற்கு வந்து தோல்வியடைந்தார்கள்; முஸ்லிம்கள் மகத்தான வெற்றியடைந்தார்கள். அங்கிருந்து முன்னேறிச் சென்று அவர்களின் உறுதியானதொரு கோட்டையைக் கைப்பற்றினார்கள். பிறகு 'பிலிஞ்ர்'மீது படையெடுத்தார்கள். கடுமையான யுத்தம் நடைபெற்றதில் அல்லாஹுதஆலா முஸ்லிம்களுக்கு வெற்றியளித்தான். அவ்விடத்து அரசரிடம் ஓடிப்போய்ச் சேர்ந்துவிட்டோரின் குடும்பத்தவரை அவர்களிடமே ஜர்ராஹ் அனுப்பிவிட்டார். இக்கருணையைக்கண்டு அவ்வரசனே பிரசன்னமாயினான். பிறகு அவனது பொருட்கள் யாவையும், நகரத்தையும் அவன் வசமே ஒப்புவித்தார். "அவர்கள் எப்பொழுதும் முஸ்லிம்களுக்கு அத்தியந்த நண்பர்களாகவும், எதிரிகளின் நிலைமைகளைத் தெரிவிப்போராகவுமிருக்கவேண்டும்" என்னும் நிபந்தனையையும் விதித்தார்.

இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்

யஜீத் தமக்குப்பிறகு தமது சகோதரர் ஹிஷாம் என்பாரையும், அவருக்குப்பிறகு தமது புதல்வர் வலீத் என்பாரையும் இளவரசர்களாக நியமித்தார்.

மரணம்

ஹி. 105-ம் வருஷம், ஷஃபான் மாதம் 25-ந் தேதி யஜீத்பின் அப்துல் மலிக் 'பல்கா' வென்னுமிடத்தில் காலகதியடைந்தார். அவரது வயது 48. 4-வருஷமும், ஒரு மாதமும் கலீபாவாக விருந்தார்.

ஹிஷாம்பின் அப்துல்மலிக்

ஹிஷாம்பின் அப்துல்மலிக் ஹி. 72-ம் ஆண்டில் ஜனித்தார். அவ்வமயம் அப்துல்மலிக் இராக்கில் முஸ்அப் பின் ஜுபைர் (ரலி.) அவர்களுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தார். ஹிஷாமின் அன்னையார் ஆயிஷா பின்து ஹிஷாம் பின் இஸ்மாயீல் மக்ஜூமீ என்பாராம். தமது சகோதரர் யஜீத் இறக்குங்காலத்தில் இவர் ஹிம்ஸில் இருந்தார். அங்கே ஆள்மூலமாய் கிலாபத்தின் மோதிரமும், கைப்பிரம்பும் இவருக்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்து திமிஷ்கிற்குவந்து கிலாபத்திற்காக பைஅத் வாங்கினார். ஹிஷாம் அமைதி நிரம்பியவராயும், புத்திநுட்பம் மிகுந்தவராயுமிருந்தார். ஒருதடவை அவர் மதிப்புவாய்ந்த ஒருவரை நிந்தித்து விட்டார். அவர் "நீங்கள் கலீபாவாயிருந்தும் இத்தகைய கெட்ட வார்த்தைகளை யாடுவதற்கு வெட்கமடையவில்லையா?" வெனவும் ஹிஷாம் வெட்கத்தினால் தலைகுனிந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

உட்செய்திகள்

பனீஉமையாக்களின் காலத்தில் அரபிகளுள் இஸ்லாமுக்கு முந்தியகாலத்தைப்போன்று வம்சவித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. ஹிஷாம் 'கஹ்தான்' வம்சத்தவரையே ஆதரித்துவந்தார். இதனால் அவர் இப்னுஹுபைராவை நீக்கிவிட்டு, அவருக்குப்பதிலாக கஹ்தான் வம்சத்துத் தலைவரான காலித் பின் அப்துல்லாஹ் குஸ்ரீ என்பாரை இராக்கின் அதிபராய் நியமித்தார். காலித் தமது புறத்தால் தமது சகோதரர் அஸத் பின் அப்துல்லாஹ் என்பாரை

குராஸானுக்கும், ஜுனைத் பின் அப்துர்ரஹ்மான் என்பாரை ஸிந்துக்கும் அதிபர்களாய் நியமித்தார். அஸத்பின் அப்துல்லாஹ் வீரம் செறிந்தவராவர். அவர் ஹிராத், கௌர் இப்பகுதிகளின் மலைப்பிரதேசங்களில் அநேக யுத்தங்கள் புரிந்து வெற்றிபெற்றார். ஹி. 107-ம் ஆண்டில் அவர் பல்கை ஏற்படுத்தினார். 'பர்மகீ' என்னும் பிரசித்திபெற்ற வம்சத்தின் மூல புருஷனை பர்மக் என்பானே அந்நகரத்தின் கட்டிடங்களைக் கட்டினவன். இதற்குப் பிறகு புர்த்கானிலிருந்து சேனைகளை இங்கு கொண்டுவந்துவிட்டார். அஸத்பின் அப்துல்லாஹ் வம்ச துவேஷம் அதிகம் பூண்டிருந்ததால் கஹ்தான் வம்சத்தை யாதரிப்போராகவும், 'முலர்' வம்சத்தை விரோதிப்பவராகவுமிருந்தார். இதனால் முலர் வம்சத்துப் பெரிய பெரிய தலைவர்களான நஸ்ர் பின்ஸையார், அப்துர்ரஹ்மான் பின் நஈம், ஸூரா பின் ஹுர், பக்தரீ பின் அபீ திர்ஹம் இவர்களை யவமானப்படுத்தி தமது சகோதரரும், இராக்கின் அதிபருமான காலிதிடம் அனுப்பிவிட்டார். ஒரு தினம் தமது பிரசங்கத்தினிடையே அவர் "நான் முலர் வம்சத்தைச் சேர்ந்த நயவஞ்சகமும், குழப்பமும், துர்க்குணமும் நிரம்பியவர்களின் முகத்தைப்பார்க்க விரும்பவில்லை" எனவுங்கூறியதுண்டு.

இதையறிந்த ஹிஷாம் "நீர் உமது சகோதரர் அஸதை நீக்கிவிடும்" என காலிதுக்கெழுதினார். ஹிஷாமே அவருக்குப் பதிலாய் அஷ்ரஸ் பின் அப்துல்லாஹ் ஸலமீ என்பவரை குராஸானுக் கதிபராய் நியமித்தனுப்பினார். எனினும் "நீர் என்ன செய்தாலும் காலித் மூலமாய்ச் செய்ய வேண்டும்" எனவும் கட்டளையிட்டிருந்தார். அஷ்ரஸ் கல்விமானும், சத்குணவானுமாயிருந்ததால் குராஸான் வாசிகள் அவரை 'சம்பூரணமானவர்' எனக்குறிப்பார்கள். அவர்

'மாவராவுன்னஹர்' பிரதேசத்தில் இஸ்லாமிய பிரசாரத்திற்காக அபூஸைதா ஸாலிஹ்பின் தரீப் என்பாரை யனுப்பினார். இன்னாரதுபிரசாரத்தின்பயனாய் ஆள்வரி(ஜிஸ்யா)கொடுத்து வந்த பிறமதஸ்தர்கள் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். இதனால் ஜிஸ்யாவின் வருமானம் குறைந்துவிட்டது. பொது நிதியிலிருந்து அஷ்ரஸ் மூலமாய் குராஸானின் தலைவருக்கு "இவ்வருஷம் உங்களிடமிருந்து மிகக் குறைந்த தொகையே ஜிஸ்யாவின் மூலம் வசூலாயிருக்கின்றது. ஸகத்வாசிகள் மனப்பூர்வமாய் இஸ்லாமை யங்கீகரிக்கவில்லை யெனவும், ஜிஸ்யா கொடுப்பதைவிட்டும் தப்புதற்கே இஸ்லாமைத் தழுவியிருப்பதாகவும் தெரியவருகின்றது. எனவே, அவர்களில் விருத்தசேதனம் (கத்னு) செய்துகொண்டும், குர்ஆனை வாசித்துக்கொண்டும், இஸ்லாமின் கட்டளைகளை யனுஷ்டித்துக்கொண்டுமிருப்போரிடம் மட்டும் ஜிஸ்யாவை வசூலிக்கவேண்டாம். ஏனையோரிடமிருந்து வசூல்செய்ய வேண்டியது" என்ற கட்டளை கிடைத்தது.

இக்கட்டளை இஸ்லாமின் மூலக் கொள்கைகளுக்குப் புறம்பானதாகவும், அதிபர்களின் பணத்தாசையையே மேற்கொண்டதாகவும், பணத்தை முன்னிட்டு இஸ்லாமிய பிரசாரத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகவுமிருந்ததால் யாவருக்கு முன்பு அபூஸைதாவே இதை எதிர்க்கத் தொடுத்து, புதிய முஸ்லிம்களிடம் "நீங்கள் ஒருபோதும் 'ஜிஸ்யா' கொடுக்காதீர்கள்" எனக் கூறினர். சில முஸ்லிம் தலைவர்களும் இதை யாதரித்தார்கள். அஷ்ரின் சேனைத் தலைவர் அவர்களைக் கைது செய்ததன்னியில், ஸகத்வாசிகளை ஜிஸ்யாவுக்காக இம்சிக்கவுந் தலைப்பட்டார். இதையறிந்த அவர்கள் இஸ்லாமை விட்டுவிட்டு, புரட்சிக்காரர்களாய் மாறிப்போய்த் துர்க்கியர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். அவர்களை எதிர்ப்பதற்காக அஷ்ரஸே சேனையைக் கொண்டு சென்று ஆமிலை

யடுத்துள்ள நதியைக் கடந்தார். அங்கேயே இருதரப்பு சேனைகளும் போர்புரிந்தன. முஸ்லிம்களிலனேகர் கொல்லப் பட்டனர். தோல்வியடைவதற்குச் சமீபமாகவே யிருந் தது. எனினும் அஷ்ரஸ் ஸ்திரமாய் நின்றிருந்தார். போர்க் களத்தைவிட்டு அசையவேயில்லை. இறுதியாக எதிரிகள் நகர்ந்து 'பேகந்த்' புறம் சென்றுவிட்டார்கள். அஷ்ரஸூம் அவர்கள்புறம் முன்னேறிச் சென்றார். துர்க்கியர்கள் நாலு பக்கங்களிலும் ஜலத்தைத் தடைசெய்துவிட்டதால் தாகத் தின் காரணமாய் முஸ்லிம்கள் மிகவும் இன்னல்களுக் கிலக் கானார்கள். இறுதியாக ஒரு கூட்டம் தீரத்துடன் முன் சென்று கிணற்றிலிருந்து எதிரிகளை யப்புறப்படுத்தி, குடிப் பதற்கு ஜலம் கொணர்ந்தது. பிறகு நடந்த சண்டை யில் முஸ்லிம்கள் வெற்றிபெற்றார்கள். இதையறிந்த காகான் குராஸான் தேசத்தில் அக்காலத்துப் பெரிய நகரமான 'கமர்ஜா'வை எதிர்த்தான். அங்கு சில முஸ்லிம்களும், ஏனையோர் முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஸகதீ, நஸபீ, பர்கானீ, அப்ஷீனீ இவர்களுமிருந்தார்கள். முஸ் லிம்கள் நகரத்தின் வாயிலை யடைத்துக்கொண்டு, சிறு தொகையினராயிருந்தும் எதிர்ப்பதற்குத் தயாரானார்கள். பெண்களும், சிறுவர்களுங்கூட அதிற்கலந்துகொண்டார்கள். காகான் என்னதான் மிரட்டியும் "எங்களில் சிறு குழந்தை யும் உயிருடனிருக்கும்வரை நாங்கள் எதிர்த்தே தீருவோம்" எனச் சொல்லி யனுப்பினார்கள். வேறு வழியின்றி "நாங்கள் முற்றுகையை விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறோம். நீங்களும் உங்களது பொருட்களுடன் 'தபூஸியா'வுக்குச் சென்றுவிடவேண்டும்" என்னும் நிபந்தனையின்பேரில் காகான் சமரஸம் செய்துகொண்டான். இருபுறத்தவரும் இவ்வொப்பந்தத்திற்காக ஒவ்வொருவரை ஜாமீனாக வைத் தார்கள். காகான் சென்றுவிட்டான். முஸ்லிம்கள் அங்கி

ருந்து புறப்பட்டு தபூலியாவுக்குச் சென்றுவிட்டார்கள். பிறகு இருபுறத்தவரும் தத்தம்மிடம் ஜாமீனாக வைக்கப்பட்டிருந்தவரை விடுவித்துவிட்டார்கள்.

ஹி. 111-ம் ஆண்டில் அஷ்ரஸை ஹிஷாம் நீக்கிவிட்டு ஜுனைத் பின் அப்துர்ரஹ்மான் என்பாரை குராஸானின் அதிபராய் நியமித்தார். அவர் கஹ்தான் வம்சத்தவரை ஒருமிக்க நீக்கிவிட்டு, முலர் வம்சத்தவரைப் பொறுக்கியெடுத்து அதிபர்களாய் நியமித்தார். ஹி. 112-ம் ஆண்டில் ஜுனைத் தகாரிஸ்தான்புறம் 18,000-பேர்கள் கொண்டதொரு சேனையையும், 12,000-பேர்கள் கொண்டதொரு சேனையை வேறொரு பக்கத்திற்கும் அனுப்பிவைத்தார். இதற்கிடையில் ஸமர்கந்தின் அதிபரான ஸூரா பின் ஹுர் என்பார் காகான் எதிர்ப்பதாயும், தம்மிடம் அவனை எதிர்ப்பதற்குத் தகுந்த சேனையில்லாததால் உதவிச் சேனையையனுப்பவேண்டுமெனவும் எழுதியிருந்தார். அச்சமயம் ஜுனைதிடம் சிறிய சேனையேயிருந்தது. ஜனங்கள் அவரிடம் "50,000-பேர்களில்லாதவரை குராஸான் தலைவர் ஆற்றைக்கடக்கக்கூடாது" என விண்ணப்பித்துக்கொண்டதற்கு அவர் "ஸூரா கஷ்டங்களி லகப்பட்டிருக்கிறார். இங்கு நாம் ஐம்பதாயிரம்பேரை வழிபார்த்திருக்கவேண்டுமா?" வெனக் கூறிவிட்டு, முன்பின் யோசியாமல் 'ஜைஹூன்' நதியைக்கடந்து முன்சென்றார். ஸமர்கந்த் நான்கு பர்ஸக் (ஒரு குறிப்பிட்ட தூரம்) தூரத்திலிருக்கும்போது காகான் பெரியதொரு சேனையுடன் வழிமறித்தான். ஜுனைத் மலையைத் தமது முதுகுப்புறமாக்கிக்கொண்டு எதிர்த்தார். நீண்டநாட்கள் மும்முரமான யுத்தம் நடைபெற்றது. சிறுதொகையினராயிருந்தும் முஸ்லிம்கள் வீராவேசத்துடன் எதிர்த்தார்கள். யுத்தத்தின் கொடுமையைக்கண்டு ஸூராவுக்கு "நீங்களும் ஸமர்கந்திலிருந்து வெளி

வந்து சண்டையிடுங்கள்" என ஜுனைத் எழுதினார். அவரிடம் 12,000-பேர்கள் கொண்ட சேனைமட்டுமேயிருந்தது. அவர்களைக்கொண்டு அவர் முன்னேறி வந்தார். இரு இஸ்லாமிய சேனைகளுக்குமிடையே ஒரு பர்ஸக் தூரமிருக்கும் போது துர்க்கியர்கள் நடுவேயகப்பட்டுக்கொண்டார்கள். ஸுறா மிகவும் வீராவேசத்துடன் போர்புரிந்தார். இறுதியாக துர்க்கியர்கள் தோல்வியடைந்து போர்க்களத்தை விட்டு நழுவினார்கள். எனினும் தூசியின் காரணமாக ஒன்றுமே தெரியவில்லை. மலையில் ஒரு குகையில் இருதாப்பிலும் அநேகர் வீழ்ந்திறந்து போனார்கள். ஸுறாவும் வீழ்ந்ததில் அவருடைய தொடையெலும்பு முறிந்துவிட்டது. இதனால் முஸ்லிம்கள் உள்ளமுடைந்து விட்டார்கள். துர்க்கியர்களில் சில சிறுவர்களுட்பட அநேகர் கொல்லப்பட்டனர். ஜுனைத் மறுபுறத்திலிருந்து எதிரிகளை யெதிர்த்துத் தோற்கச்செய்துவிட்டு, ஸமர்கந்திற்குள் பிரவேசித்தார். அங்கிருந்து முஸ்லிம்களின் குடும்பங்களை யழைத்துக்கொண்டு மர்ருதுக்கு வந்தார். நான்கு மாதங்களுக்குப் பிறகு காகான் மீண்டும் புகாராவின்மீது படையெடுத்தான். ஜுனைத் முன்னேறிச் சென்று வழிமறித்துத் துரத்திவிட்டார்.

ஹி. 116-ம் ஆண்டில் ஜுனைத் குராஸானின் அதிகாரத்தைவிட்டும் நீக்கப்பட்டார். இதற்குக் காரணம் அவர் யஜீத் பின் முஹல்லபின் புதல்வி பாலிலாவை மணந்துகொண்டதேயாம். இதன் பேரில் ஹிஷாம் கோபங்கொண்டு, ஆஸிம் பின் அப்துல்லாஹ் ஹிலாலீயை குராஸானுக்கதிபதியாக்கி, "ஜுனைத் மரணத்தருவாயிலிருக்கும் போது கிடைத்தாலும் அவனது கழுத்தை நெறித்துவிடவேண்டும்" எனக் கட்டளையிட்டனுப்பினார். எனினும், அல்லாஹுதஆலா இக்கபடமிருந்த கலீபா ஜுனைத்மீது

வஞ்சந்தீர்த்துக்கொள்வதற்குள் இகலோகத்திலிருந்தே பிரிந்து செல்லும்படிச் செய்துவிட்டான். ஆஸிம் குராஸான் போய்ச்சேர்ந்து அவரைக் காணாது போகவும் அவரால் நியமிக்கப்பெற்ற அதிபர்கள் யாவரையும் நீக்கிவிட்டார். ஆஸிம் "கிலாபத்தின் தலைநகரம் இங்கிருந்து வெகு தூரத்திலிருப்பதால் குராஸான் இராக்குடன் பிணைக்கப் பட்டுவிடல் நன்று. சமீபமாயிருப்பதால் இங்கிருந்து வேண்டும்போது சேனைகள் துரிதத்தில் வந்துவிடக்கூடும்" என ஹிஷாமுக் கெழுதினதற்கு ஹிஷாமும் உடன்பட்டார். பிறகு ஆஸிமை நீக்கிவிட்டு அஸத் பின் அப்துல்லாஹ்வை மீண்டும் குராஸானுக்கனுப்பி, அவரை அவரது சகோதரரும், இராக்கின் அதிபதியுமான காலிதுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிச் செய்தார். ஆஸிம் புரட்சிசெய்யக் கருதினார். எனினும் சிப்பாய்கள் அவருக்குடன்படவில்லை. அஸத் அவரைக் கைதுசெய்து, சிறைவைக்கப்பட்டிருந்த ஜுனைதின் அதிபர்களை விடுவித்துவிட்டார்கள்.

காகான் மீண்டும் வெளிவந்தான். அஸத் ஜோஸ்ஜானில் அவனைத் தோற்கடித்து, அவனது சொத்துக்கள் யாவையும் கைப்பற்றிக்கொண்டு, தன்னால் நிர்மாணிக்கப்பட்ட பல்கைத் தனது தலைநகராக்கிக்கொண்டார். இவர்காலத்தில் கீழ்த் தேசத்தில் மீண்டும் இஸ்லாமுக்கு வன்மையேற்பட்டது. அமைதியாய் பிரஜைகள் வாழத் தொடுத்தார்கள். ஹி. 119-ம் ஆண்டில் 'கதல்' மீது அஸத் படையெடுத்து, அவ்விடத்துக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு, சுற்றுப்புறத்தில் சேனைகளை யனுப்பியதுடன் அவ்விடங்களின் தலைவர்களையும், அதிகாரிகளையும் தமக் கடிபணியச் செய்தார். ஹி. 120-ம் வருடத்தில் அவர் பல்கில் மரணமடைந்தார். அவருக்குப்பதிலாய் நஸ்ர் பின் ஸையார் என்பான் குராஸானுக் கதிபதியானான். நஸ்ர் கீழ்த் தேசங்களில் அநேக யுத்

தங்களைப்புரிந்து, ஒவ்வொன்றிலும் வெற்றியடைந்து வந்தான். ஏற்கனவே யிருந்த குழப்பங்களுக்கெல்லாம் மூலக் காரணமாகத் திகழ்ந்த புதிய முஸ்லிம்களின் ஜிஸ்யாவையும் இவன் நீக்கிவிட்டதால் அங்கு அதிகமாய் ஜனங்கள் இஸ்லாமை யங்கீகரிக்கத் தொடுத்தார்கள். ஹி. 120-ம் வருஷத்தில் காலித் பின் அப்துல்லாஹ் குஸ்ரீயை ஹிஷாம் நீக்கிவிட்டு, அவருக்குப் பதிலாய் யூஸுப் பின் உமர் தகபீ என்பானை இராக்கின் அதிபதியாய் நியமித்தார். இம்மனிதனிடம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டுவிதமான குணங்கள் காணப்பெற்றன. ஒருபுறத்தில் அவன் தெய்வ பக்தி, தாழ்மை இவைகள் நிரம்பப்பெற்ற மதுரபாஷிணியாக விருந்தான். இறைவனிடம் மிகவும் பக்தியுடனும், அழுகையுடனும் பிரார்த்தித்துக்கொண்டிருப்பான். காலைத் தொழுகைக்குப் பிறகு வணக்கத்திலேயே யிருந்து இஷ்ராக் (சூர்யோதயத்திற்குப் பிறகுள்ள தொழுகை) தொழுது விட்டே வெளிவருவான். மறுபுறத்தில் அவனிடம் அறியாமை, மௌட்டிகம், மடமை, வன்னெஞ்சம் இவைகள் குடிகொண்டிருந்தன. இவனது மடமையை விளக்கும் அநேக சம்பவங்கள் சரித்திர கிரந்தங்களில் காணக்கிடைக்கின்றன. துணிகளை வாங்குவதற்கு விரும்பினால் முதலில் அதைக் கையால் தடவிப் பார்ப்பான். அதன் நூல் நகத்தில் சிக்கினால் அத்துணிக்குச் சொந்தக்காரனைக் கைது செய்துவிடுவான்; அல்லது அவனது கரத்தைத் துணித்துவிடுவான்.

இமாம் ஜைத்

யூஸுப் பின் உமர் தகபீயின் காலத்தில் ஹி. 122-ம் வருஷத்தில் இமாம்ஜைத் பின் அலீ பின் ஹுஸைன் (ரஹ்.) அவர்கள் விரோதக்கொடி நாட்டினார்கள். அவர்கள் கரத்தில் கூபாவில் 15,000-பேர் இரகசியத்தில் பைஅத்

செய்தார்கள். இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் இவர்களை யாதரிப்போரில் ஒருவராவார்கள். சிலர் ‘கூபாவாசிகள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்கள்’ எனக்கூறி, இமாம் ஜைத் (ரஹ்.) அவர்களைத் தடுத்தும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. யூஸுப் எதிர்ப்பதற்காகச் சேனையைக் கொண்டு சென்றபோது கூபாவாசிகள் இமாம் ஜைத் (ரஹ்.) அவர்களிடம் “ அபூபக்ர், உமர் (ரலி....) இவ்விரு பெரியார்கள் விஷயமாய்த் தாங்கள் என்ன சொல்கிறீர்கள் ?” எனக்கேட்கவும் அவர்கள் “ அல்லாஹ் அவர்கள் மீது கிருபைசெய்வானாக ! நான் எனது குடும்பத்தில் யாரும் அப்பெரியார் விஷயமாய் ஏதும் குறை கூறியதைக் கேட்டதில்லை. எமது கூட்டத்தைச் சேர்ந்தோர் கூறுவதெல்லாம் “ நாங்கள் கிலாபத்திற்குப் பாத்தியதையுடையவர்களாயிருந்தோம். அவர்கள் எங்களைக் கவனியாது தாமே அதை மேற்கொண்டார்கள்” என்பதே. இதனால் அவர்கள் இஸ்லாமுக்குப் புறம்பாய்ச் சென்று விடவில்லை. அவர்கள் நீதிநெறியையும், திருக்குர்ஆனையும், பெருமானாரின் முன்மாதிரியையும் கடைபிடித்து வந்தார்கள்” எனப் பதிலளித்தார்கள். கூபாவாசிகள் இதைக்கேட்டு “ அவர்கள் தங்களிடமிருந்து கிலாபத்தைப் பிடுங்கிக் கொண்டதினிமித்தம் இஸ்லாமுக்குப் புறம்பாய் விடாதுபோயின், பனீ உமையாக்களுடன் யுத்தம்புரியும்படி நீங்கள் ஏன் கூறுகிறீர்கள் ?” எனக்கேட்டதற்கு அவர்கள் “ இவர்களின் நிலைமைக்கும், அவர்களது நிலைமைக்கும் மிக்க வித்தியாசமுளது. இவர்கள் எம்மீதும், உங்கள் மீதும், தங்கள்மீதும் அதிக்கிரமம் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நான் குர்ஆனின் படியும், பெருமானாரின் முன்மாதிரியின்படியும் ஒழுகும்படி உங்களையழைக்கிறேன். நீங்கள் என்னையாதரித்தால் உங்களுக்கு நல்லது. இல்லையேல் நீங்களே உங்களுக்கு

ஜவாப்தாரியாவீர்கள்'' என்றார்கள். இதைக்கேட்டு கூபா வாசிகள் அவர்களை விட்டுச் சென்றுவிட்டார்கள். இதனால் இமாம் ஜைத் (ரஹ்.) அவர்கள் அன்னாருக்கு 'ராபிலீகள்' எனப் பெயரிட்டார்கள். அந்தத் தினத்திலிருந்து அவர்களுக்கு அதேபெயர் ஏற்பட்டுவிட்டது. இமாம் ஜைத் (ரஹ்.) அவர்களிடம் 200-பேர்களே எஞ்சியிருந்தார்கள். இறுதியாக அவர்கள் கொல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப் பட்டார்கள். யூஸுப் கல்லறை(கப்ர்)யிலிருந்து அவர்கள் சவத்தைத் தோண்டியெடுத்துத் தூக்கிலிட்டான். பிறகு சிரசைத் துண்டித்து ஹிஷாமிடம் அனுப்பினான். அவர் அதை திமஷ்கின் வாயிலில் தொங்கவிட்டார். யமன்வாசிகளில் ஒரு கூட்டம் அவர்களைப் பின்பற்றியதால் 'ஜைதீகள்' என்றழைக்கப்படுகிறார்கள்.

ஆர்மீனியா, ஆதர்பீஜான் இப்பிரதேசங்களில் ஜர்ராஹ் பின் அப்துல்லாஹ் சேனாதிபதியாக விருந்தார். அவர் 'பிலிஞ்சர்' வரை வெற்றிகொண்டார். ஹி. 107-ம் வருஷத்தில் ஹிஷாம் அவரை நீக்கிவிட்டுத் தமது சகோதரர் முஸ்லிமாவை அங்கனுப்பினார். அவர் தனது புறத்தால் ஹாரித் பின் உமர் தாயீ என்பாரைத் தனது பிரதிநிதியாக எல்லைப் புறத்தில் நியமித்தார். ஹாரித் பல நகரங்களைக் கைப் பற்றினார். ஹி. 110-ம் வருஷத்தில் முஸ்லிமாவே படையெடுத்துச் சென்று 'லான்' என்னுமிடத்திற்குச் சமீபமாக துர்க்கியர்களுடன் யுத்தம் புரிந்து அவர்களைத் தோற்கடித்தார். ஹி. 111-ம் ஆண்டில் ஹிஷாம் முஸ்லிமாவைத் திருப்பியழைத்துக்கொண்டு மீண்டும் ஜர்ராஹை யனுப்பினார். அவர் 'தப்லீஸ்' புறமாக 'கஜர்' பிரதேசங்கள் மீது படையெடுத்தார். கஜர்வாசிகள் ஒன்று சேர்ந்து எதிர்த்தார்கள். துர்க்கியர்களும் உதவிக்கு வந்தார்கள். மும்முரமான யுத்தம் நடைபெற்றது. இறுதியாக

'உர்த்பீல்' என்னுமிடத்தில் ஜர்ராஹ் ஆவி துறந்தார். அவரது சேனை தோல்வியடைந்து ஓடியது. இவ்வெற்றியால் கஜர்வாசிகள் தீரம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் முஸ்லிம்கள் கைப்பற்றிய நாடுகள்மீது படையெடுத்துக் கொண்டே மூஸில் வரைக்கும் வந்துவிட்டார்கள். இதனால் முஸ்லிம்களுள் பரபரப்பேற்பட்டது.

எற்கனவே குராஸானின் அதிபதியாயிருந்த ஸஈத் ஹர்ஷீ என்பானுக்குப் பட்டாளங்களைக்கொடுத்து ஹிஷாம் அனுப்பிவைத்தார். பிறகு உதவிக்குமேல் உதவி அனுப்பிக்கொண்டேயிருந்தார். 'அஜ்ரன்' என்னுமிடத்தில் தோல்வியடைந்த ஜர்ராஹின் சேனையும் கிடைத்தது. ஸஈத் அதையும் அழைத்துக்கொண்டு ஒவ்வொரு நகரத்தையும், ஒவ்வொரு கோட்டையையும் விட்டு எதிரிகளைத் துரத்திக்கொண்டே உர்த்பீல் வரை சென்றான். அங்கு சென்ற பிறகு எதிரிகளின் ஒரு சேனை சில மைல்கள் தூரத்திலிருப்பதாகவும், அதனிடம் 5,000- முஸ்லிம் கைதிகளிருப்பதாகவும் தெரிந்துகொண்டு இராக்காலத்தில் அவர்கள்மீது பாய்ந்தான். எதிரிகளில் ஒருவரும் தப்ப வழியில்லாது போயினர். முஸ்லிம் கைதிகள் யாவரும் விடுதலையடைந்தார்கள். அவர்களையும் அழைத்துக்கொண்டு 'பாஜர்வான்' என்னுமிடத்திற்குச் சென்று தங்கினான். கஜர்வாசிகள் மீண்டும் ஒருங்குசேர்ந்து எதிர்க்க முன்வந்தார்கள். எனினும், ஸஈதின் எதிர்ப்பினால் அவர்கள் மீண்டும் திரும்பியோடினர்கள். அவர்கள் கைப்பற்றிய பிரதேசங்கள் யாவையும் விட்டுவிட்டார்கள். ஹிஷாம் மீண்டும் முஸ்லிமாவை ஸஈதுக்குப் பதிலாயனுப்பினார். அவரை எதிர்ப்பதற்காக கஜர்வாசிகள் தயாராய் வந்தார்கள். இஸ்லாமிய சேனைகள் மிகவும் குறைவுபட்டிருப்பதைக் கருதிய முஸ்லிமா சொத்து சுதந்திரங்கள் யாவையும் விட்டுவிட்டு, பெண்டு பிள்ளைகளை

முன்னும், சேனையைப் பின்னுமாகக் கொண்டுசென்று 'தர்பந்த்' வந்து சேர்ந்தார். அங்குவந்து சேர்ந்தவுடன் அவர் இறந்து விட்டார்.

ஹி. 114-ம் ஆண்டில் மர்வான் பின் முஹம்மத் என்பாருக்கு ஹிஷாம் 1,00,000 சிப்பாய்களைக்கொடுத்து பிலிஞ்சருக் கனுப்பினார். இவரது வன்மையை யறிந்த கஜர் கடற்கரைப் பிரதேசத்திலுள்ள தலைவர்கள் முன்வந்து சண்டையிடாமலேயே சமரஸம் செய்துகொண்டார்கள். சண்டைகளெல்லாம் இவ்வாறு ஒழிந்துபட்டன. வடப் பிரதேசத்தில் ரூமிகளுடன் யுத்தம் நடைபெற்றுக்கொண்டே யிருந்தது. கோடைகால, குளிர்கால சேனைகள் சரியாக அவர்களை எதிர்ப்பதற்குச் சென்றுகொண்டேயிருந்தன. அவைகளின் சேனாதிபதிகள் அநேகமாய் கலீபாக்களின் வம்சத்தைச் சேர்ந்தோராகவே யிருப்பார்கள். அவர்களுள் முஸ்லிமா பின் அப்துல் மலிக், மர்வான் பின் முஹம்மத், அப்பாஸ் பின் வலீத், முஆவியா பின் ஹிஷாம், ஸாத் பின் ஹிஷாம், ஸுலைமான் பின் ஹிஷாம் இவர்களை முக்கியமாய்க் குறிப்பிடலாம். இவர்கள் ரூமிகளைப் பலதடவைகளில் வென்றிருக்கிறார்கள். இச் சண்டைகளில் யாவரையும்விட அதிகமாகப் பிரசித்தி பெற்றவர் அப்துல்லாஹ் பத்தால் என்பாராம். இவருக்கு ஜஸீரா,ஷாம் இப் பிரதேசங்களின் 10,000 பேர்கள் கொண்டதொரு சேனையை அப்துல்மலிக் கொடுத்து, தமது புதல்வர் முஸ்லிமாவைச் சேனையின் முன்னணியில் நியமித்தார். இத்துடன் பிரசித்திபெற்ற குதிரைவீரரான அப்துல்வஹ்ஹாப் பின் பக்த் என்பாரும் இருந்தார். இவ்விருவருடையவும் தீரத்தினால் ரூமிகள் ஒடுங்கிப் போயிருந்தார்கள். இவர்கள் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் நடுங்குவார்கள். இவர்களைப்பற்றி பற்பல விசித்திரமான கதை

களையும் அவர்கள் கூறிக் கொள்வார்கள். ஹி. 113-ம் வருஷத்தில் அப்துல்வஹ்ஹாபும், ஹி. 122-ம் வருஷத்தில் பத்தாலும் ஆவி துறந்தார்கள். 'அமீர் ஹம்ஜாஜங்க்' என்னும் கற்பிதக் காதையே போன்று அவ்விருவரின் தீரத்தைப்பற்றி 'துல்ஹமா' வென அரபியில் பிரசித்தி பெற்ற கற்பிதக் காதை யொன்றுமுளது.

கடற்படையும் சரியாகச் சென்றுகொண்டிருந்தது. அப்துர்ரஹ்மான் பின் முஆவியா பின் குதைஜ் என்பார் அதன் தலைவராயிருந்தார். ஆப்பிரிக்காவில் பனீ உமையாக்களின் பெரிய வீரரான அப்துல்லாஹ் பின் உக்பா வென்பாரிருந்தார். இவரே உந்துலுஸ் விஷயத்தையும் கவனித்து வந்தார். ஹிஜாஜின் அதிபர் முஹம்மத் பின் ஹிஷாம் மக்ஜூமீ என்பாராயிருந்தார். இவரே யநேகமாய் ஹஜ்ஜின் தலைவராய் நியமிக்கப்பட்டுவந்தார். ஹிஷாமின் காலத்தில் இஸ்லாமிய நாடுகளின் சுருக்கமான செய்தி இதுவே. எல்லைப்புறவாசிகளும் இஸ்லாமிய வன்மைக் கடங்கியே யிருந்தார்கள். ஹிஷாமின் காலத்தில் மிகப் பெரியதொரு தீமையும் ஏற்பட்டது. அஃது அரபியர்களிடையே வம்ச துவேஷத்தைப் புகுத்துவிட்டதேயாம். இதுவே பனீ உமையாக்களது கிலாபத்தின் அழிவுக்கு மூலக்காரணமாய்த் திகழ்ந்தது.

இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்

யஜீத்பின் அப்துல்மலிக் உடைய மரணவாக்குமூலப் பிரகாரம் ஹிஷாமுக்குப்பிறகு வலீத் பின் யஜீத் கிலாபத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஹிஷாம் இவனுக்குப் பதிலாய்த் தமது புதல்வரை இளவரசராகத் தேர்ந்தெடுக்கக்கருதி, அநேக தலைவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொண்டும் அவரது நோக்கம் பூர்த்திபெறவில்லை. இதனல்

அவர் வலீதுடன் நல்லவிதமாயொழுகுவதில்லை. இதனுல் வலீத் கோபமுடையவனுய் மாறிப் போய்விட்டான்.

மரணம்

ஹி. 125-ம் வருஷம், ரபீஉல் ஆகிர் மாதம், 6-ந்தேதி ஹிஷாம் மரணமடைந்தார். அவர் 19-வருடங்கள், 6-மாதங்கள், 11-தினங்கள் கலீபாவாக விருந்தார்.

இரண்டாவது வலீத்

வலீத் பின் யஜீத் பின் அப்துல்மலிக் பின் மர்வான் உடைய அன்னையார் உம்முல் ஹஜ்ஜாஜ் பின்து முஹம்மத் பின்யூஸுப் தகபீ என்பாராவர். ஹிஷாமுக்குப் பிறகு இவன் கலீபாவானதும் தனது முன்னோர்களைப் பின்பற்றி, எதிரிகள்மீது வஞ்சந் தீர்த்துக்கொள்ளத் தலைப்பட்டான். முதலாவதாக ஹிஷாமின் சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டான். பிறகு தன்னை இளவரசு பதவியிலிருந்து நீக்கிவிட அனுமதித்த அதிபர்களை முன்னேக்கினுன். மதீனாவின் அதிபரான ஹிஷாம் பின் இஸ்மாயீல் மக்ஜூமீயின் இருபுதல்வர்களான முஹம்மத், இப்ராஹீம் இவ்விருவரையும் பிடித்துச் சாட்டையால் அடித்தான். பிறகு அவர்களை இராக்கின் அதிபதியான யூஸுப் பின் உமர் தகபீயின் வசம் ஒப்புவித்தான். இவனது இம்சையைச் சகியாது அவர்கள் இறந்துவிட்டார்கள். ஸுலைமான் பின் ஹிஷாம் என்பானுக்கு நூறு கசையடி கொடுத்து தலையையும், தாடியையும் மொட்டையடித்து ஷாம் தேசத்திலிருந்து 'உம்மான்' பகுதிக்குப் பிரஷ்டம் செய்துவிட்டான். யஜீத் பின்ஹிஷாம், வலீத் பின் அப்துல் மலிக் இவர்களின் புதல்வர்களில் அநேகரைக் கைது செய்தான். ரூஹ் பின் வலீத் என்பானையும், அவனது மனைவியையும் பிரித்துவிட்டான். காலித் குஸ்ரீயைக் கைது செய்து, இராக்கின் அதிபதியான யூஸுப் பின் உமரிடம் அனுப்பியதில் அவன் இன்னல்களிழைத்துக் கொன்றுவிட்டான்.

வலீதின் இக்கொடுமைகளைக் கண்ணுற்று யமன்வாசிகளும், 'குலாஆ' வர்க்கத்தவரும் மனமுடைந்து போனார்கள். இவர்களே அதிகமாக சேனையிலிருந்தவர்கள். பனீ உமையாக்களும் இவனுக்கு விரோதிகளாய் மாறிவிட்டார்கள். இவனைப்பற்றி அவர்கள் பலபலவிதமான வதந்திகளைக் கிளப்பிவிட்டார்கள். யஜீத் பின் வலீத் பின் அப்துல் மலிக்கே இவனை அதிகமாய்த் தூற்றிவந்தார். அவர் தெய்வ பக்தி நிரம்பிய மனிதராயிருந்ததால் ஜனங்கள் அவரது வார்த்தைகளை அதிகமாக நம்பிவந்தார்கள். ஆதலால் பொதுவாக எல்லா ஜனங்களும் வலீதுக்கு விரோதிகளாய் மாறி, அந்த யஜீதுக்கே அந்தரங்கத்தில் பைஅத் செய்து வந்தார்கள். அவர் கிலாபத்தின் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். வலீத் அரண்மனையில் முற்றுகையிடப்பட்டு விடவே திருக்குர்ஆனை ஓதத் தொடுத்து "அதிக்கிரமமாய்க் கொல்லப்பட்ட கலீபா உத்மான் (ரலி.) அவர்களின் நிலைமையே இன்று எனக்கேற்பட்டுளது" எனக் கூறத் தொடுத்தான். ஜனங்கள் உள் நுழைந்து அவனது சிரசைத் துணித்து விட்டார்கள். பிறகு அதை ஈட்டியின் மீது கோர்த்துக்கொண்டு நகரத்தில் வலம் வந்தார்கள். இவன் கொல்லப்பட்டது ஹி. 126-ம் வருஷம், ஜமாதில் ஆகிர் மாதம் 28-ந் தேதியாம். கிலாபத்தை நிர்வகித்து ஒரு வருஷம், மூன்று மாதங்களாம். இவன் கொல்லப்பட்டதிலிருந்து பனீஉமையாக்கள்மீது இன்னல்கள் ஏற்படத் தொடுத்தன.

மூன்றாவது யஜீத்

யஜீத்பின் வலீத்பின் அப்துல்மலிக்பின் மர்வான் உடைய அன்னை பைரோஜ் என்பார் ஈரான் தேசத்தரசனை 'யஜ்தக்ரூர்த்' என்பானது புதல்வன் ஷாஹ்ஆப்ரீத் என்பானது புத்திரியாவர். வலீத் கொல்லப்பட்டபிறகு இவர் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது சிறப்புப்பெயர் 'யஜீதே நாகிஸ்' என்பதாம். வலீத் அதிகப்படுத்தியிருந்த ராணுவச் சம்பளத்தை இவர் குறைத்துவிட்டதால் இப்பெயர் இவருக்குவந்தது. ('நாகிஸ்' என்னும்பதம் "குறைந்தவன்", "குறைப்பவன்" எனப் பொருட்படும்.) யஜீத் நல்லெண்ணம் படைத்தவராகவேயிருப்பினும், பனீஉமையாக்கள் அவர்மீது வலீதைக்கொன்ற குற்றத்தைச் சுமத்தினர்கள். யாவருக்குமுன்பு ஹிம்ஸின் தலைவனாயிருந்த மர்வான் பின் அப்துல்லாஹ் பின் அப்துல்மலிக் ஹிம்ஸ்வாசிகளை வலீதின் கொலைக்குப் பழிக்குப்பழிவாங்கத் தூண்டிவிட்டு, அவர்களை முஆவியா பின் யஜீத் பின் ஹஸீன் என்பானின் தலைமையில் கிலாபத்தின் தலைநகருக்கனுப்பினன். அவர்களுக்கு தான் தனக்காக கிலாபத்தை விழைந்து நிற்கவில்லையெனவும், பொதுமக்கள் தேர்ந்தெடுக்கும் கலீபாவை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும் யஃகூப் பின் ஹானீயின் மூலமாய் யஜீத் சொல்லியனுப்பி, அவர்களைச் சண்டையிடாதிருக்கும்படி வேண்டினர். எனினும், ஹிம்ஸ்வாசிகள் இதையொப்புக்கொள்ளாது வலீதின் கொலைக்குப் பழிக்குப்பழி தேடினர்கள். வேறுவழியின்றி ஸுலைமான் பின் ஹிஷாம்

என்பானைச் சேனையுடன் அவர்களை எதிர்ப்பதற்காக அனுப்பினான். ஹிம்மஸ் வாசிகள் அநேகமாய்க் கொல்லப்பட்டார்கள். எஞ்சியிருந்தோர் யஜீதின் கரத்தில் பைஅத் செய்தார்கள். பாலஸ்தீன் வாசிகளும் ஹிம்மஸ் வாசிகளைப் பின்றொடர்ந்து தமது அதிபரை நீக்கிவிட்டு, யஜீத் பின் ஸுலைமான்பின் அப்துல்மலிக்கைத் தமக்கு அதிகாரியாக நியமித்துக் கொண்டார்கள்: அர்தன் வாசிகளும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். அவர்களின் தலைவன் முஹம்மத் பின் அப்துல்மலிக் என்பானாயிருந்தான். இவ்விரண்டு கூட்டங்களுடையவும் மொத்தத்தொகை 84,000. எனினும், இவர்களுள் அபிப்பிராயபேதம் மேற்பட்டுவிட்டதால் இவர்களும் தோல்வியடைந்து யஜீதிடம் பைஅத் செய்யும் படியே நேர்ந்தது.

ஷாம் தேசம் இவ்வாறு பிளவுபட்டிருந்தபொழுதினின், மறுபுறத்தில் கீழ்த்தேசங்களை யெடுத்துக்கொண்டாலோ இன்னும் மோசமாகவே யிருந்தது. கூபாவின் அதிகாரி யூஸுப் பின் உமரை யஜீத் நீக்கிவிட்டு, மன்ஸூர் பின் ஜும்ஹூர் என்பானை நியமித்திருந்தார். இவன் இராக் வாசிகளிடம் பைஅத் வாங்கிக்கொண்டு, தனது புறத்தால் கீழ்த்தேசங்களின் அதிபர்களை நியமித்தான். குராஸானின் தலைவனான நஸ்ர் பின் ஸையார் தன்னைத் தனிப்பட்ட தலைவனெனக் கூறிக்கொண்டு மன்ஸூரால் நியமிக்கப் பெற்ற அதிபர்களைத் திருப்பியனுப்பிவிட்டான். கிர்மானில் ஜனித்ததை முன்னிட்டு 'கிர்மானீ' யென வழங்கி வரும் ஜதீஃ பின் அலீ யென்னும் யமன்வாசி யொருவன் நஸ்ர்பின் ஸையாரை எதிர்ப்பதற்குக் கிளம்பினான். அரபிகளில் 'கஹ்தான்' வம்சத்தவர் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். 'முலர்' வர்க்கத்தவர் வம்சத்துவேஷத்தை முன்னிட்டு நஸ்ரின் புறம் சேர்ந்தார்கள். நஸ்ர் கிர்மானீ

யைக் கைது செய்தான். எனினும், 'கஹ்தான்' வர்க்கத்தவர் அவனை விடுவித்துக்கொண்டு சென்றனர். இவ்விரு கூட்டத்துள்ளும் யுத்தம் மூண்டுவிடும் நிலைமையிலிருந்தது. எனினும் சிலரின் முயற்சியால் சமாஸம் ஏற்பட்டது. அந்த சமாஸமும் ஒருவருக்கொருவர் பயந்து செய்துகொள்ளும் சமாஸமேயாம்.

இளவரசரைத் தேர்ந்தெடுத்தல்

யஜீத் தமது சகோதரன் இப்ராஹீம் பின் வலீதையும், பிறகு அப்துல் அஜீஜ் பின் ஹஜ்ஜாஜ் பின் அப்துல் மலிக்கையும் ஒருவருக்குப் பின் மற்றொருவராக கிலாபத்தை நிர்வகிக்கும் இளவரசர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தார்.

மரணம்

யஜீத் 5-மாதங்களும், 22-தினங்களும் மட்டுமே கிலாபத்தை நிர்வகித்து, ஹி. 126-ம் வருஷம், துல்ஹஜ் மாதம், 21-ந் தேதி மரணமடைந்தார். இவரது மரண வாக்குமூலப்பிரகாரம் இப்ராஹீம் கலீபாவானன். எனினும், ஜஸீராவின் அதிகாரியாகவிருந்த மர்வான் பின் முஹம்மத் இவனது கிலாபத்தை யொப்புக்கொள்ளாமல் சேனைகளுடன் ஷாம்தேசத்திற்குச் சென்றுபட்டான். ஹிம்மஸ், கன்ஸரீன் இவைகளைக் கைப்பற்றிக்கொண்டு திமஷ்கின்புறம் சென்றான். சொற்ப எதிர்ப்பிற்குப்பிறகு அதையும் கைப்பற்றிக்கொண்டு தனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கினன். இப்ராஹீம் பயத்தினல் ஓடிவிட்டானெனினும் மர்வான் அவனுக்கு அபயமளித்தான். இப்ராஹீமின் கிலாபத் மர்வானின் காரணத்தில் ஏற்படாமலே போயினதை முன்னிட்டு சரித்திராசிரியர்களிலனேகர் அவனை கலீபாக்களுள் சேர்ப்பதில்லை.

இரண்டாவது மர்வான்

மர்வான் பின் முஹம்மத் பின் மர்வான் பின் ஹகம் உடைய அன்னை குர்துஸ்தான் உடைய ஒரு அடிமைப்பெண். முதலில் இவர் இப்ராஹீம் உஷ்துரிடம் இருந்தார். அவன் கொல்லப்பட்டபிறகு முஹம்மத் அவரை வாங்கிக்கொண்டார். அவரது வயிற்றிலேயே ஹி. 70-ம் ஆண்டில் மர்வான் ஜனித்தான். மர்வான் மிகவும் பலசாலியான மனிதன். எனினும் அவனது கொடுமையின் காரணமாக ஜனங்கள் அவனை 'ஹிமார் = கழுதை' எனக்குறிப்பிடுவார்கள். இவன் பனீஉமையாக்களுள் வீரத்திலும், சேனைகளை நடாத்துவதிலும் தனிச்சிறப்பு பெற்றிருந்தான். அநேக யுத்தங்களில் வெற்றிபெற்றான். கஜர் பிரதேசங்கள் இவனதுகாலத்திலேயே முழுமையாக முஸ்லிம்களின் ஆதீனத்தில் வந்தன. ஹி. 127-ம் ஆண்டில் இப்ராஹீமை வெற்றிகொண்டு திமஷ்கிற்குள் பிரவேசித்தபோது அங்கு அவனது பைஅத் நடைபெற்றது. இவனது காலம் துவக்கத்திலிருந்து கடைசிவரை குழப்பகாலமாகவேயிருந்தது. இதிலேயே கிலாபத்தும் பனீஉமையாக்களை விட்டும் போய்விட்டது.

முதலாவதாக அப்துல்லாஹ் பின் முஆவியா பின் அப்துல்லாஹ் பின் ஜஃபர் பின் அபீதாலிப் கூபாவில் தான் கிலாபத்தை நிர்வகிப்பதாய் வாதாடினான். அவனுடன் ஷீஆக்களின் ஒரு பெருங்கூட்டமிருந்தது. அக்காலத்தில் உமர்பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்களின் திருப்புதல்வர் அப்துல்லாஹ் (ரஹ்.) இராக்கின் அதிபராயிருந்தார்கள். அவர்களை ஜனங்கள் மிக்க கண்ணியமாய் நடத்திவந்தார்கள்.

அவர்கள் அப்துல்லாஹ்வைத் தோற்கடித்துக் கைதுசெய்து இராக்கிலிருந்து துரத்திவிட்டார்கள். பிறகு ஷாம் தேசத்தில் பனீஉமையாக்களின் தலைவர்கள் காரணமாகவே மர்வானுக்கு விரோதமாய்ப் புரட்சிக்குமேல் புரட்சி ஏற்படத் தொடுத்தது. ஹிம்மஸ் வாசிகள் யாவருக்கும் முதலாவதாக எதிர்க்க முன்வந்தார்கள். மர்வான் மும்முரமான யுத்தத்திற்குப் பிறகு அவர்களைத் தோர்க்கடித்தான். அதற்குப் பிறகு 'கௌதா' வாசிகள் எதிர்த்தார்கள். அவர்களும் இன்னலடைந்தார்கள். பிறகு பாலஸ்தீன் வாசிகளும் எதிர்த்தார்கள். அவர்களும் இதே முடிவை யடைந்தார்கள். இறுதியாக ஸுலைமான் பின் ஹிஷாம் பின் அப்துல் மலிக் தன்னை கலீபாவெனக் கூறிக்கொண்டு கிளம்பினான். ஷாம்வாசிகளில் அநேகர் அவனை யாதரித்தார்கள். அவ்வமயம் மர்வான் 'கர்கீஸா'விலிருந்தான். அங்கிருந்து சேனைகளுடன் வந்து சண்டையிடவும் ஸுலைமான் தோல்வியடைந்து, போர்க்களத்தில் 30,000-சவங்களைப் போட்டுவிட்டு ஹிம்மஸ்புறம் ஓடிவிட்டான். மர்வான் பின்தொடரவும் அவன் 'தத்மீர்'புறம் ஓடிவிட்டான். அகப்படவில்லை.

கவாரிஜ்கள்

இங்கு இந்த உட்சண்டைகள் நடந்துகொண்டிருக்கும் போது மறுபுறம் இராக்கில் கவாரிஜ்கள் தலைதூக்கினார்கள். அவர்கள் தலைவன் லஹ்ஹாக் பின் கைஸ் ஷைபானீ என்பானு யிருந்தான். அவன் கூபாவைக் கைப்பற்றிக் கொண்டான். இராக்கின் அதிபரான அப்துல்லாஹ் பின் உமர் பின் அப்துல் அஜீஜ (ரஹ்.) அங்கிருந்து ஓடிவந்து 'வாஸித்' வந்து சேர்ந்து விட்டார்கள். எனினும், லஹ்ஹாக் அங்கேயே சென்று அவர்களைப் பிடித்துக்கொண்டு, வற்புறுத்தி பைஅத் வாங்கினான். ஸுலைமான் பின் ஹிஷாமும் மர்வானை விட்டுவிட்டு லஹ்ஹாக் உடன் சேர்ந்துகொண்டான்.

தற்போது அவனது வன்மை அதிகமாய்விடவே மூஸில் மீது படையெடுத்தான். மர்வான் ஜஸீராவின் அதிகாரியான தனது புத்திரன் அப்துல்லாஹ்வுக்கு லஹ்ஹாக் இந்தப்புறம் வராதவாறு தடுக்கும்படி எழுதினான். அவன் 7,000-பேர்கள் கொண்ட சேனையுடன் 'நஸீபைன்' புறம் வந்தான். லஹ்ஹாக் இடம் 1,00,000-பேர்களிருந்தார்கள். அவன் நஸீபைனை முற்றுகையிட்டுக்கொண்டான். இதையறிந்த மர்வான் தனது சேனைகள் யாவையும் திரட்டிக்கொண்டு அந்தப் பக்கம் சென்றான். மும்முரமான யுத்தத்திற்குப் பிறகு லஹ்ஹாக் கொல்லப்பட்டான். கவாரிஜ்கள் ஸஈத் பின் பஹ்தல் என்பானைத் தமக்குத் தலைவனாகக் கொண்டார்கள். அவன் மர்வானின் சேனையை எதிர்த்து நடுவில் புகுந்து சண்டையிட்டுக்கொண்டே மர்வானின் கூடாரம்வரை வந்துவிட்டான். எனினும், அங்கேயே கொல்லப்பட்டான். இவனுக்குப் பிறகு ஷைபான் பின் அப்துல் அஜீஜ் கவாரிஜ்களின் சேனாதிபதியாயினன். இவன் தனது கூட்டத்தவர்கள் தனித்தனியே பிரிந்து செல்வதைக்கண்டு மூஸிலுக்கு வந்துவிட்டான். மர்வானும் அவனைப் பின்தொடர்ந்தான். ஆறு மாதங்கள் வரை மூஸிலில் யுத்தம் நடைபெற்றது.

மர்வான் இக்காலத்தில் யஜீத் பின் உமர் பின் ஹுபீரா வென்பானை இராக்கின் அதிபதியாய் நியமித்தனுப்பியதில் அவன் அங்கிருந்த கவாரிஜ்களைத் துரத்திவிட்டு, அவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டான். பின்னும் ஷைபானை எதிர்ப்பதற்காக ஒரு சேனையையும் அனுப்பியிருந்தான். இதையறிந்த ஷைபான் இராக், ஷாம் இவ்விரு தேசங்களின் சேனைகளுக்கிடையே யகப்பட்டுக்கொள்ளக் கூடாதென்னும் கருத்தினால் மூஸிலைவிடுத்து பாரிஸ்புறம் சென்றுவிட்டான். இடைவழியில் 'ஜீரப்த்' என்னுமிடத்

தில் அவன் எதிர்க்கப்பட்டுத் தோல்வியடைந்து ஸீஸ்தான் புறம் ஓடினான். அவன் அங்கேயே ஹி. 130-ம் வருஷத்தில் அழிந்துபட்டான். இதே காலத்தில் அபூஹம்ஜா முக்தார் பின் ஔப் அஜதீ புரட்சி செய்தான். 'ஹலமொளத்'தின் தலைவனான அப்துல்லாஹ் பின் யஹ்யாவும் அவனுடன் சேர்ந்துகொண்டான். அபூஹம்ஜா துவக்கத்தில் மதீனாவைக் கைப்பற்றினான். பிறகு ஷாம் தேசத்தை முன்னோக்கிச் சென்றான். இப்னுஅதிய்யா ஸஅதீ என்பானை 4,000-குதிரைவீரர்களுடன் அவனை எதிர்ப்பதற்காக மர்வான் அனுப்பினான். 'வாதில்குரா' வென்னுமிடத்தில் இருதரப்பாருக்கும் யுத்தம் மூண்டது. அபூஹம்ஜா கொல்லப்பட்டான். இப்னு அதிய்யா அங்கிருந்து புறப்பட்டு அப்துல்லாஹ் பின்யஹ்யாவை யொடுக்குதற்காக யமன்புறம் சென்றான். அங்கு சென்று அவனைக் கொன்றுவிட்டு, அவனது தலையை மர்வானிடம் அனுப்பினான்.

முடிவு

'பனீ அப்பாஸ்' வர்க்கத்தினர் குராஸான் தேசத்தில் நீண்டநாட்களாய்த் தமது முயற்சியிலீடுபட்டிருந்தனர். பனீ உமையாக்களின் உட்சண்டையாலும், கவாரிஜ்களின் குழப்பங்களாலும் அவர்களுடைய முயற்சி பலிதமடைந்தது. எனவே, பனீ அப்பாஸ்களின் பெரியதலைவரான அபூமுஸ்லிம் குராஸானீ அதைக் கைவசப்படுத்திக்கொண்டு, பிறகு கஹத்பா பின்ஷைபாவை கூபாவின் புறம் அனுப்பினார். அங்கு ஹி. 132-ம் வருஷம், ரபீஉல் அவ்வல் மாதத்தில் "அப்பாஸீ = பனீ அப்பாஸ் (அப்பாஸ் (ரலி.) அவர்களின் சந்ததிகள்)" கலீபாக்களுள் முதல்வரான அபுல்அப்பாஸ் ஸப்பாஹ் என்பாரின் கரத்தில் பைஅத் செய்யப்பட்டு, அவர் கலீபாவானதாகப் பறையறிவிக்கப்பட்டது. அவர் அப்துல்

லாஹ் பின் அலீயின் தலைமையின் கீழ் பெரியதொரு சேனையை மர்வானை எதிர்ப்பதற்காக வனுப்பினர். 'ஜாப்' நதிக்கரையில் யுத்தம் நடைபெற்றது. மர்வான் தோல்வி யடைந்து மிஸ்ர்புறம் சென்று பட்டான். ஸாலிஹ் பின் அலீ அவனைப் பின்தொடர்ந்தான். மிஸ்ர் தேசத்தைச் சேர்ந்த 'பூஸீர்' என்னும் ஒரு கிராமத்தின் மாதாக் கோவிலில் மர்வான் தங்கியிருந்தான். ஸாலிஹ் அங்கு சேர்ந்து, அவனைப்பிடித்து ஹி. 132-ம் வருஷம், துல்ஹஜ் மாதம், 28-ந் தேதி அவனைக்கொன்றுவிட்டான். அந்நாளை பனீஉமையாக்களது கிலாபத்தின் இறுதிநாளாகவும் பனீ அப்பாஸ்கள் கிலாபத்தின் துவக்கநாளாகவும் இருந்தது.

"சொல்வீராக: தேசங்களின் அதிபதியான அல்லாஹ்வே! தேசத்தை நீ கருதியோருக்குக் கொடுப்பாய். நீ கருதியோ ரிடமிருந்து தேசத்தைப் பிடுங்கிக்கொள்வாய். நீ கருதி யோருக்குக் கண்ணியமளிப்பாய். நீ கருதியோரை இழிவு படுத்துவாய். நன்மையாவும் உன் கைவசமுளது. உண்மை யாகவே நீ எல்லாம் வல்லவனுவாய்" (அல்—குர்ஆன்)

பனீஉமையாக்களது கிலாபத்தின் அழிவுக்கான மூலக்காரணங்கள்

1. பனீஉமையாக்கள் பொதுமக்களின் சம்மதத்தாலும், ஆலோசனையாலும் கிலாபத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் வன்மையாலேயே அதைக் கைப்பற்றினார்கள். அமீர்முஆவியா (ரலி.) ஷாம் தேசத்துச் சேனைகளின் காரணமாக இராக், ஹிஜாஸ் இவைகளில் பைஅத் பெற்றார்கள். அக்காலத்தில் வெளிப்பார்வைக்கு யாவரும் அவர்களின் பைஅத்தை யொப்புக்கொண்டுவிட்டதாய்க் காணப்பட்டாலும் அநேக முள்ளங்களில் எதிர்ப்பென்னுந்தீ மறைந்துகொண்டிருந்தது. முஸ்லிம்களில் கவாரிஜ்கள், பனீஹாஷிம் குலத்தவர் இவ் விருகூட்டங்களும் அவர்களுக்கு விரோதிகளாயிருந்தார்கள். இவ்விரண்டில் முந்திய கூட்டம் அஞ்சாநெஞ்சமும், தமது கொள்கைகளுக்காக உயிரையும் அர்ப்பிக்கும் தீரமும் நிரம்பியது. இராக்கில் அதிகமாயிருந்த இரண்டாவதுகூட்டம் பெருமானாரின் சந்ததியே கிலாபத்தை யடையவேண்டுமெனவும், அவர்களைத் தற்காக்கவேண்டுமெனவும் வாதாடி வந்தது. இஃது 'பெருமானாரின் பாந்தவ்வியம்' என்னும் சிறப்புப்பெற்றிருந்ததால் பொதுமக்களிலனேகரைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும் ஆற்றல்பெற்றிருந்தது. இத்தகைய நிலைமையில் பனீஉமையாக்கள் தமது கிலாபத்தை நிர்வகிப்பதற்காக தூரதிருஷ்டி, நீதம், கருணை, மிதம் இவைகளை முக்கியமாகக் கையாண்டுவரல் முக்கியம். இதனால் பொதுமக்களுள்ளங்களில் அவர்களிடம் அன்

பும், மதிப்பும் ஏற்படலாம். எக்கூட்டத்துடையவும் எதிர்ப்பினால் அவர்களின் அஸ்திவாரத்தில் பலவீனம் ஏற்படாது. அமீர்முஆவியா (ரலி.) இதை யறிந்திருந் தார்கள். அவர்கள் பனீஹாஷிம் தலைவர்களை மிகவும் போற்றிவந்தார்கள். இதனால் எதிர்ப்பு குறைந்தது; வெறுப்பு ஒடுங்கிவிட்டது. எனினும் கல்வி, புத்திநுட்பம், தூரதிருஷ்டி இவைகளை யடையப்பெற்றிருந்தும் மிம்பர்கள் மீது செய்யப்படும் பிரசங்கங்களில் ஹஸ்ரத் அலீ(ரலி.) அவர்களை நிந்திப்பதையும், சபிப்பதையும் அனுமதித்தார் கள். இந்தக் குற்றம் மறைக்கப்பட முடியாதது. இதனால் எத்தகைய பலனுமேற்படாது போவதன்றியில் பொது வாக முஸ்லிம்களுடையவும், சிறப்பாக ஷீஆக்களுடையவும் கோபம் விருத்தியடைந்துவந்தது. இதனால் அதைச்சகிக்க வியலாத சிலர் எழுந்துநின்று கலீபாக்களையும், தலைவர் களையும் நேருக்குநேர் கண்டிக்கத் தொடுப்பார்கள். இதன் பேரில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதன் காரண மாய் பொதுமக்கள் கபடமிருந்து விடுவார்கள். இஃது அரசியல் குறைப்பிரகாரமாம். மார்க்கக்கட்டளைப்பிரகாரம் கவனிக்கப்புகினும் இறந்துபோனவர்களை நிந்திப்பதைப் பொதுவாக இஸ்லாம் அனுமதிப்பதில்லை. அங்ஙனமிருக்க, இஸ்லாம் வெளியாயின காலந்தொடுத்து அதற்குதவி புரிந்துவந்த ஹஸ்ரத் அலீ(ரலி.) போன்ற தலைவர்களை இழிந்துகூறுவதை யாங்ஙனம் இஸ்லாம் அனுமதிக்கும்? அமீர்முஆவியா (ரலி.) அவர்களுக்குப்பிறகு அவர்கள் ஸ்தா னத்தை வகித்தவர்கள் தமது அதிகாரத்தில் மருண்டு விட்டதன் காரணமாக எதிரிகளைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளும் கருத்தையே மேற்கொள்ளவில்லை. மேலும், அதிகாரத்தினால் அவர்களை அடக்கியே வந்தார்கள். யாவருக்குமுன்பு இமாம் ஹுஸைன்(ரலி.), பிறகு இமாம்

ஜைத், அப்துல்லாஹ் பின் முஆவியா (ரஹ........) இவர்களது சம்பவங்கள் காரணமாக ஷீஆக்களின் உள்ளங்களில் 'பழிக்குப்பழி வாங்கவேண்டும்' என்னும் தீ சுடர் விட்டெரிந்தது.

2. பொதுவாக பனீஉமையாக்களும், சிறப்பாக ஹிஷாமும் அரபிகளுள் இஸ்லாமால் அழிந்துவிடப்பெற்ற வம்ச துவேஷத்தை உயிர்ப்பித்துவிட்டார்கள். முதலாவதாக இந்த மர்வான் உடைய காலத்திலேற்பட்டது. "மர்ஜெ ராஹித்" என்னுமிடத்தில் ஒரு புறத்தில் லஹ்ஹாக் உடன் 'கைஸ் ஐலான்' என்னும் வர்க்கமிருந்தது. மற்றொரு புறத்தில் மர்வானுடன் 'பனீகல்ப்' வர்க்கத்தவரிருந்தனர். அக்காலத்தில் மர்வான் வெற்றியடைந்துவிட்டானெனினும் இப்னுஜியாதுடன் இராக்கின்புறம் முக்தார் பின் அபீஉபைதை எதிர்ப்பதற்காக அனுப்பி, அச்சேனையின் இடது பகுதிக்கு 'கைஸ்ஐலான்' வர்க்கத்தைச் சேர்ந்த உமைர் பின் ஹிஸாப் ஸலமீயைத் தலைவனாய் நியமிக்கவும் இப்னுஜியாத் வெற்றிகொள்ளப்போகும் நேரத்தில் அவன் வம்சதுவேஷத்தை முன்னிட்டு போர்க்களத்தை விட்டுச்சென்று "நாம் 'மர்ஜெராஹித்' வாசிகளைக் கொன்றோருடன் சேரமாட்டோம்" எனக் கூறிவிட்டான். இறுதியாக இப்னுஜியாத் வெற்றிக்குப்பதிலாய்த் தோல்வியடையும்படி நேர்ந்தது. அவனுடன் அநேக ஷாம்வாசிகள் கொல்லப்பட்டார்கள். அக்காலத்தின் கவிஞர்களான ஜரீர், பர்ஜதக், அக்தல் போன்றோர் தமது கவிகளால் 'வம்சதுவேஷம்' என்னும் மௌட்டிய காலத்துப் பழக்கத்திற்கு ஆவேசமூட்டி வந்தனர். பிளவுபடுத்தும் ஷைத்தான் அவர்களின் நாவின் மூலமாய் தனது காரியத்தைச் சாதித்து வந்தான். குராஸானில் இந்த வம்சதுவேஷம் அதிகமாகக் காணப்பெற்றது. அங்கு 'கஹ்தான்' வம்சத்து அரபிகளுக்கும், நஜார் வம்சத்து அரபிகளுக்கும் விரோதமிருந்து

வந்தது. நஜார் வம்சத்தவரிலும் 'ரபீஆ', 'முலர்' இப் பிரிவுகளுள்ளும், முலர் வர்க்கத்தின் 'கைஸ்ஜலான்', 'தமீம்' இப்பிரிவுகளுள்ளும் விரோதப்பான்மை ஏற்பட்டிருந்தது. கலீபாக்களும், அதிபர்களும் தமது அரசியல் சுயநலத்தை முன்னிட்டு இத்துர்ப் பழக்கத்தை யழியாது பாதுகாத்துவந்தார்கள். அவர்கள் ஒரு தடவை 'யமன்' வாசியை நியமித்து விடுங்காலத்து அவன் 'நஜார்' வர்க்கத்தவரை நீக்கிவிடுவான். அவன்மீது மனஸ்தாபம் ஏற்பட்ட காலத்தில் அவனுக்குப் பதிலாய் 'முலர்', அல்லது 'நஜார்' இவ்வர்க்கங்களைச் சேர்ந்த அதிபதியை நியமிப்பார்கள். அவன் தனது வர்க்கத்தைச் சேர்ந்திராதோரை யழித்துவிடுவான். அந்தோ! அவர்கள் இஸ்லாமுக்கு முந்திய மௌட்டிய காலத்திய இத்துர்ப்பழக்கத்தை மேற்கொள்வதால் கிலாபத்துடையவும், அரபிப் பொது மக்களுடையவும் சுண்ணியத்தையும், வன்மையையும் பாழ்ப்படுத்துவதைச் சற்றேனும் கருதிப் பார்த்தார்களல்லர்.

3. பனீஉமையாக்களிடம் தமக்குப்பின் கிலாபத்தை ஏற்றுக்கொள்ளும் இளவரசரைத் தேர்ந்தெடுக்கும் பழக்கமும் அவர்களது கிலாபத் அழிந்துபடுவதற்குப் பெரியதொரு காரணமாய்த் திகழ்ந்தது. அவர்கள் அநேகமாய் இருவரை ஒருவனுக்குப்பின் மற்றொருவனை இளவரசர்களாய் நியமிப்பதுமுண்டு. அவ்விருவரில் முந்தியவன் கிலாபத்தை ஏற்றுக்கொண்டதும் பிந்தியவனை நீக்கிவிட்டுத் தனது புத்திரனையோ, தனது நண்பனையோ இளவரசனுக்கும் முயற்சியில் ஈடுபட்டுவிடுவான். இதனால் பனீஉமையாக்களின் வர்க்கத்துள்ளும் உட்சண்டை ஏற்பட்டுவிடும். யாவருக்கு முந்தி அப்துல்மலிக், அப்துல்அஜீத் இவ்விருவரையும் முந்திய மர்வான் இளவரசர்களாய்த் தேர்ந்தெடுத்திருந்தார். அப்துல்மலிக் கிலாபத்தை ஏற்றுக்கொண்ட

தும் அப்துல்அஜீஜுக்குப் பதிலாய் தனது புத்திரர் வலீத் என்பாரை இளவரசராக்கக் கருதினர். அவர் இம் முயற்சியிலிருக்கும்போதே அப்துல்அஜீத் இறந்துவிட்டார். இரண்டு இளவரசர்களை ஏற்படுத்துவதன் தீமைகளைக் கவனித்த பிறகும் அப்துல்மலிக் உணர்ச்சி பெறவில்லை. தாம் வலீதையும், ஸுலைமானையும் இளவரசர்களாக நியமித்துச் சென்றார். வலீத் கலீபாவானவுடன் ஸுலைமானுக்குப் பதிலாய்த் தமது புதல்வரை இளவரசராக்கக் கருதினர். எனினும் அவர் இறந்து விட்டதால் ஸுலைமான் கலீபாவாயினர். ஸுலைமானும் உணர்ச்சிபெறாது உமர்பின் அப்துல்அஜீஜ் (ரலி.), யஜீத் பின் அப்துல் மலிக் இருவரையும் இளவரசர்களாக நியமித்தார். உமர் பின் அப்துல் அஜீஜ் (ரலி.) கலீபாவாயினதும் யஜீத் மட்டல்லாமல் பனீ உமையாக்களிடமிருந்தே கிலாபத்தை எடுத்துவிடவேண்டுமெனக் கருதினர்கள். இதைக் கவனிக்கும்போது "உமர் பின் அப்துல் அஜீஜ (ரலி.) தமது வர்க்கத்திற்கே கிலாபத் இல்லாதபடிசெய்ய விரும்புகிறார்களென் பதையறிந்த பனீ உமையாக்கள் அவர்களது உணவில் விஷத்தைக் கலந்துவிட்டார்கள். அதனாலேயே அவர்கள் ஆவி துறந்தார்கள்" எனச் சில சரித்திராசிரியர்கள் கூறுவதும் ஏன் உண்மையாக விருக்கக்கூடாது? பிறகு யஜீதும் இக்குற்றத்தை விட்டொழியாது தமக்குப் பிறகு ஹிஷாமையும், தமது புதல்வன் வலீதையும் இளவரசர்களாகத் தேர்ந்தெடுத்தார். ஹிஷாம் கிலாபத்தை ஏற்றுக்கொண்டதும் வலீதுக்குப் பதிலாய்த் தமது புதல்வரை இளவரசராக்கக் கருதினர். இதனால் இருவருக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வலீத் கோபங்கொண்டவனாய் மாறிவிட்டான். அவன் கலீபாவாயினதும் இதனால் தீயவிளைவுகள் ஏற்பட்டன.

4. பனீ உமையாக்களின் கலீபாக்கள் வஞ்சந் தீர்த்துக்கொள்ளும் ஆவேசத்தினால் அநேக தலைவர்களுடன் கெட்டவிதமா யொழுகி வந்தார்கள். முஸ்லிம்களில் அநேக சேனாதிபதிகளையும், வீரர்களையும் தம்முடைய இந்தத்தீய உணர்ச்சிக்கு அர்ப்பணம் செய்தார்கள். ஸுலைமான் பின் அப்துல்மலிக் கலீபாவாயினதும் ஹஜ்ஜாஜ் தன்னை இளவரச பதவியிலிருந்து நீக்கிவிடும் விஷயத்தில் வலீதின் யோசனையை ஆமோதித்ததற்காக அவனது சுற்றத்தார்களையும், அவனால் நியமிக்கப்பெற்ற அதிபர்களையும் சிக்ஷித்தார். ஸிந்தைக் கைப்பற்றிய முஹம்மத் பின் காஸிம் என்பாரைக் கொன்றுவிட்டார். கிலாபத்திற்கு மகத்தான தொண்டாற்றிய வரும், இஸ்லாமியக் கொடியை ஐரோப்பாவில் நாட்டியவருமான மூஸா பின் நஸீர் என்னும் வீரருக்கு அவருடைய சக்திக்குமேற்பட்ட அபராதத்தையும், தண்டனையையும் விதித்தார். இத்துடனும் நின்றுகொள்ளாமல் அவரது புதல்வரும், உந்துலுஸின் அதிபருமான அப்துல்அஜீஜ் என்பாரின் சிரசைத்துணித்தனுப்பும்படித் தவருவித்து, அப்போர்வீரருக்கு முன்பு காணிக்கையாகச் சமர்ப்பித்தார். பிறகு யஜீத் பின அப்துல்மலிக்கின் கைவசம் கிலாபத் வந்தபோது அவர் ஹஜ்ஜாஜின் வம்சத்தவரை யாதரித்து முஹல்லப் பின் அபீஸுப்ரா வென்னும் பிரபலமானபோர் வீரரின் வம்சத்தையே யழித்துவிட்டார். வலீத் பின் யஜீத் என்னும் கலீபா காலித் பின் அப்துல்லாஹ் குஸ்ரீ என்பாரிடம் தமது புதல்வரை இளவரசராகத் தேர்ந்தெடுப்பதில் உதவி தேடியதற்கு அன்னார் மறுத்துவிட்ட குற்றத்தையே காரணமாகக்கொண்டு, அவரை அவரது ஜன்மவிரோதியான யூஸுப் பின் உமர் தகபீயிடம் 5,00,00,000-திர்ஹம் விலைக்குவிற்றுவிட்டார். யூஸுப் அவரைக் குட்டைமரத்திலிட்டு இரம்பரத்தினால் அவரது நெஞ்சத்தை ராவினான்.

அவர் ஒரு வார்த்தையையும் கூறவில்லை. இதே கொடுமையால் அதிர்ந்துபட்டார். அவர் 'கஹ்தான்' வம்சத்துள் மா பெருந்தலைவராகவும், யமன் தேசத்துத் தலைவராகவும், பதினைந்து வருடங்கள் வரை இராக்கின் அதிபராகவும், கிலாபத்தின் பணியாளராகவுமிருந்தார். பனீ உமையா கலீபாக்களின் இத்தகைய நன்றிமறந்த கொடுமைகளைக் கண்ணுறும் பொதுமக்கள் அவர்களை வெறுத்துவந்தனர். கலீபாக்களைத் தவிர்ந்து அவர்கள் காலத்திலேற்பட்ட ஜியாத், இப்னுஜியாத், ஹஜ்ஜாஜ், யூஸுப் பின் உமர் போன்ற அதிபர்களும் கொடுங்கோலர்களாக விருந்தமையால் பொதுமக்கள் அவர்களின் கொடுமையின் காரணத்தால் அந்த கிலாபத்தையே வெறுத்தார்கள்.

5. பனீ உமையாக்களது வம்சத்தலைவர்கள் ஒருவருக்கொருவர் எதிரியாய் மாறி, தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். மூன்றாவது யஜீதுக்கு விரோதமாய் ஷாம்தேசம் முழுமையிலிருந்து பனீ உமையா தலைவர்களை படையெடுத்தார்கள். பிறகு இரண்டாவது மர்வானுக்கு எதிர்ப்பிலும் இவர்களை நாலுபக்கங்களிலிருந்தும் முன்னேறிவந்தார்கள். இப்பிளவின் காரணமாக அவர்களின் வன்மை முறிந்துவிட்டது.

6. பனீ உமையாக்களின் இந்த உட்சண்டையின் காரணமாக எப்பொழுதும் அவர்களுக்கு விரோதிகளாயிருந்த ஷீஆக்களுக்கு அவர்களது கிலாபத்தை யொழித்துவிடும் தமது கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான மார்க்கம் கிடைத்தது. இவர்கள் இரகசியமாகப் புரட்சியைக் கிளப்பிவிட்டு, மர்வானின் வர்க்கத்தாரிடமிருந்து கிலாபத்தைப் பிடுங்கிக்கொண்டார்கள்.

பனீ உமையாக்களின் காலத்தில்

இஸ்லாமிய நாகரிகம்

இம் மகுடத்தின்கீழ் நாம் ஒன்றிரண்டு வரிகள் வரைவதற்கு முன்பு ஒருவிஷயத்தைக் குறிப்பிடல் உசிதமெனக் கொள்கிறோம்: 'பனீ அப்பாஸ்' வர்க்கத்தவர் பனீஉமையாக்களுக்கு எதிரிகளா யிருந்ததாலும், பனீஉமையாக்களின் கிலாபத்தை யொழித்துவிட்டுத் தமக்கு கிலாபத்தை ஏற்படுத்திக்கொண்டதாலும் அவர்களின் சமுகங்களில் பனீ உமையாக்களை நிந்திப்பதிலும், அவர்களின் நன்மைகளை மறைத்துவைப்பதிலும் முயற்சிகள் நடைபெற்றுவந்தன. தவிர, பனீஉமையாக்களுடன் மதவிஷயமான விரோதத்தை யும் கொண்டிருந்த சில குழாத்தினரும் அவர்களை இழிவு படுத்துவதில் வரம்புகடந்து சென்றனர். சரித்திர நூல்கள் பனீஅப்பாஸ்களின் காலத்தில் வரையப்பட்டன வாதலின் அக்கிரந்தங்கள் பனீஉமையாக்களின் சம்பவங்கள் அவர்களது எதிரிகளாலோ, அல்லது 'பனீஅப்பாஸ்' கலீபாக்களிடம் 'நல்லபிள்ளைக'ளெனப் பெயரெடுக்கக் கருதும் பேர்வழிகளாலோ எடுத்துக்கூறப்படும் ஆதாரங்களையே மேற்கொண்டு வரையப்பட்டுள்ளன. எனவே, பனீ உமையாக்களின் சரித்திரம் ஒருதலைப் பக்ஷமாகவே நமக்குக்கிடைத்துள்ளன. அவைகளில் கிடைக்கும் விஷயங்களையே ஈண்டு குறிப்பிடுகின்றோம்:

பனீ உமையாக்களின் கிலாபத் அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் கரத்தில் பொதுவான பைஅத் செய்யப்பட்ட தினமான ஹி. 41-ம் ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதம், 25-ந் தேதி துவக்கமாயது. இதன் முடிவு இரண்டாவது மர்வான் கொல்லப்பட்ட ஹி. 132-ம் வருஷம், துல்ஹஜ் மாதம் 27-ந் தேதி ஏற்பட்டது. இவ்வர்க்கத்தில் 91-வருஷங்கள், 9-மாதங்கள் கிலாபத் இருந்துவந்தது.

கிலாபத்

பனீ உமையாக்களின் காலத்தில் கிலாபத் அரசாங்க தடபுடல்களையும், ஆடம்பரத்தையும் மேற்கொண்டுவிட்டது. குலபாயெராஷிதீன்கள் வாயிற்காப்போனையோ, மெய்க்காப்பாளனையோ வைத்திருக்கவில்லை. எனினும், பனீ உமையாக்களின் கலீபாக்களுக்காகப் பள்ளிவாசல்களிலும் அறைகள் கட்டப்பட்டிருந்தன. அவர்கள் தொழும்போது வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் ஆயுதபாணிகளான சிப்பாய்கள் நின்றிருப்பார்கள். ஹஸ்ரத் உமர்(ரலி.) அவர்கள் தமது பிரசங்கத்தில் "என்னிடம் குற்றங்காணுவோன் என்னைச் சீர்திருத்தம் செய்யவேண்டும்" எனக் கூறினார்கள். ஆனால் பனீ உமையாக்களின் கலீபாவான அப்துல்மலிக் மிம்பர்மீது நின்றுகொண்டு "இன்றுதொடுத்து இவ்விடத்தில் என்னைப்பார்த்து "அல்லாஹ்வுக்குப் பயப்படு" எனக் கூறுவோனை நான் கொன்றுவிடுவேன்" என்றார். குலபாயெராஷிதீன்கள் பொதுமக்களைப் போன்று கடைத்தெருவுக்குச் செல்வார்கள். யாவருடனும் சேர்ந்து பள்ளிவாசலுக்குச்சென்று தொழுவார்கள். யாவருடனும் சேர்ந்துட்காருவார்கள். எனினும், பனீ உமையாக்களின் கலீபாவான வலீத்பின் அப்துல்மலிக் மஸ்ஜிதெநபவீயைப் பார்க்கச் சென்றபோது அங்கிருந்து யாவரும் வெளியேற்றப்பட்டனர். மதீனாவின்

அறிஞரான ஸஃத்பின் முஸையப்(ரலி.) அவர்களின் கண்ணியம் மட்டும் கவனிக்கப்படாது போயின் அவர்களும் வெளியேற்றப்பட்டே யிருப்பார்கள். குலபாயெராஷிதீன்களுக்காக எத்தகைய தனிப்பட்ட அடையாளமுமிருக்கவில்லை. பனீஉமையாக்களின் காலத்தைக் கவனிக்கப்புகின் "கிலாபத்தின் கைப்பிரம்பு", "கிலாபத்தின் மோதிரம்" இவைகள் குறிக்கப்படுவதையும் காணலாம்.

குலபாயெராஷிதீன்கள் சாதாரண பிரஜைகளைப்போல் காலங்கழித்து வந்தார்கள். பொதுநிதியைத் தமது சொத்தைவிட அதிகமாகக் காப்பாற்றி வந்தார்கள். இத்துடன் "இறுதி தினத்தில் கிலாபத்தின் பணியை முன்னிட்டு நன்மையோ, பாபமோ ஒன்றுமில்லாமல் போய்விட்டால் மகத்தான வெற்றியடைந்தோராவோம்" எனக் கூறுவார்கள். எனினும் பனீஉமையாக்களின் கலீபாக்கள் அரசர்களின் தடபுடலை மேற்கொண்டிருந்தார்கள். பொதுநிதியைத் தமக்குச் சொந்தமான சொத்தாகவே கொண்டிருந்தார்கள். பின்னும் அவர்களில் யஜீத் பின் அப்துல் மலிக், வலீத் பின் யஜீத் போன்றோர் மதுபான மருந்தியதையும், தாசிகளின் பாட்டுக்கச்சேரிகளில் கலந்துகொண்டிருந்ததையும் காண்கிறோம். கிலாபதெராஷிதாவில் அரசுரிமை பெருமானாருடைய முன்மாதிரியையும், திருக்குர்ஆனையும் மேற்கொண்டிருந்தது. பனீஉமையாக்களின் காலத்தில் வன்மை, அடக்குமுறை இவைகளால் அரசுரிமை நடந்து வந்தது. அப்துல்மலிக் பின் மர்வான் ஜனங்களிடம் வெளிப்படையாக "நாங்கள் இருபெரியார் (அபூபக்ர், உமர்-ரலி........) அவர்களைப் பின்பற்றி நடக்கும்படி விரும்புகிறீர்கள்? அவர்கள் காலத்திலிருந்த மக்களைப் போல் நீங்கள் மாறிவிடுங்கள்" எனவுங் கூறிவிட்டார். இவ்வளவுடன் பனீஉமையாக்கள் அரப் தேசத்திய

எளிய வாழ்க்கையை ஒருவகையில் நிலை நாட்டினார்கள். அவர்கள் அரபிகளல்லாதாரின் குணங்களை மேற்கொண்டு விடவில்லை. அவர்களது அரசியலின் அஸ்திவாரம் தந்திரோபாயங்களால் நிலைத்திருக்கவில்லை. மேலும் வன்மை, அடக்குமுறை இவைகள் மீது நிலைத்திருந்தது. அவர்கள் கிலாபத்தை நிர்வகித்த ஏறக்குறைய நூறுவருஷ காலத்திற்குள் இஸ்லாமிய நாடுகள் யாவற்றையும் ஒரு கொடியின் கீழ் வைத்திருந்தார்கள். இவ்விதம் பனீ அப்பாஸ்கள் ஒருநாளும் வைத்திருக்க முடியவில்லை.

கலீபாவைத் தேர்ந்தெடுத்தல்

குலபாயெராஷிதீன்களில் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்த முறைமையும் வெவ்வேறாகவிருந்தது. எனினும் கலந்தாலோசித்தல், ஜனநாயகத்துவம் இவைகள் ஒவ்வொன்றிலும் காணக்கிடைத்தன. பனீஉமையாக்கள் தமது வர்க்கத்தில் தாம் கருதியோரை மட்டுமே இளவரசர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். பனீஉமையாக்களின் பதின்மூன்று கலீபாக்களில் ஒன்பது கலீபாக்கள் இவ்விதமே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எஞ்சியிருக்கும் அமீர் முஆவியா (ரலி.), மர்வான் பின் ஹகம், யஜீத் பின் வலீத், மர்வான் பின் முஹம்மத் இந்நால்வரும் வன்மையால் கிலாபத்தை யடைந்தார்கள். இதேகாரணத்தாற்றான் பனீ உமையாக்கள் வம்சபரம்பரையாக கலீபாக்களாய்க் கொண்டிருந்தார்கள்.

சேனை

பனீஉமையாக்களின் காலம் வெற்றி, இஸ்லாமின் வன்மை இவைகளின் காலமாகவிருந்ததில் தனிச்சிறப்பு பெற்றிருந்தது. அவர்களின் காலத்தில் உட்குழப்பங்களும் மிகுதியாக விருந்தன. சில சமயங்களில் ஷீஆக்கள்

தலை தூக்கினார்கள்; சில சமயங்களில் கவாரிஜ்கள் கிளம்பினார்கள். எனினும், அக்காலத்துச் சேனையின் வன்மையால் இவ்வளவு தடைகளுடனும் வெற்றிகள் படிப்படியாகக் கொள்ளப்பட்டே வந்தன. வலீத் பின் அப்துல்மலிக் உடைய காலத்தில் உட்குழப்பம் சிறிதே ஒடுங்கிப்போயிருந்ததால் எங்கிருந்து எங்குவரை வெற்றிகொள்ளப் பட்டுவிட்டது! கீழ்ப்பகுதிகளில் ஸிந்து, சீன துர்க்கிஸ்தானம் வரைக்கும், வடப்பகுதிகளில் 'கஜர்' கடற்கரை, ஆதர்பீஜான், ரூம் தேசம் இவைகள் வரைக்கும், மேற்பகுதிகளில் உந்துலுஸ் வரைக்கும் கைப்பற்றப்பட்டன. இவைகள் யாவும் யுத்தத்தால் வெற்றிகொள்ளப் பட்டனவாதலின் அக்காலத்தில் எப்பொழுதும் ஞாபகார்த்தமாய்க் கொள்ளத் தக்க அநேக சேனாதிபதிகள் உண்டானார்கள். நாம் ஏற்கனவே அவர்களின் முழுவிவரங்களையும் எடுத்தோதி வந்திருப்பினும், இவ்விடத்தில் அவர்களின் சுருக்கமான அட்டவணையைக் குறிப்பிடுதலும் உசிதமெனக் கொள்கிறோம்:

(1) முஹல்லப் பின் அபீஸுப்ரா. இவர் இராக், பாரிஸ் இப்பகுதிகளில் கவாரிஜ்களுடன் ஏற்பட்ட யுத்தங்களில் மிகவும் தீரமாகப் போர்புரிந்து, ஒப்பற்ற கண்ணியத்தையும், பிரசித்தியையும் அடைந்தார்.

(2) கதீபா பின் முஸ்லிம் பாஹிலீ. இவர் 'மாவராவுன்னஹர்' பிரதேசத்தில் ஒப்பற்ற காரியாதிகளைச் சாதித்தார்.

(3) யஜீத் பின் முஹல்லப். ஜுர்ஜான், தப்ரிஸ்தான் இவைகளை வெற்றிகொண்டவரிவர். தமது தந்தையைப் பார்க்கினும் வீரம் செறிந்தவர். எதிலும் இவர் பின்வாங்கியது கிடையாது.

(4) அஸத் பின் அப்துல்லாஹ் குஸ்ரீ. 'மாவராவுன் னஹ்ர்' பிரதேசங்களில் இவருக்கிருந்த பயபக்தியின் காரணமாக அப்பகுதியிலுள்ள தலைவர்கள் இவரை 'அரபி களின் அரசர்' எனக்குறிப்பதுண்டு.

(5) முஹம்மத் பின் காஸிம் தகபீ. ஸிந்தை வெற்றி கொண்ட 17-வயதுடைய இவருக்கு நிகர் சரித்திரத்தில் காணமுடியாது.

(6) முஹம்மத் பின் மர்வான். இவர் ஆர்மீனியா, ஆதர்பீஜான் இப்பகுதிகளிலேற்பட்ட பயங்கரமான யுத் தங்களில் எதிரிகளை வென்றவர்.

(7) ஜர்ராஹ் பின் அப்துல்லாஹ் ஹகமீ. 'கஜர்' பிரதேசங்களில் இவர் பல வெற்றிகளைக் கைக்கொண்டு அங்கேயே ஆவிதுறந்தார்.

(8) முஸ்லிமா பின் அப்துல்மலிக். பனீ உமையாக் களில் யாவரினும் தீரவான். இவர் குஸ்துன்துனிய்யா வின் மீது படையெடுத்தார். ரூம், கஜர் இப்பிரதேசங்களை வெற்றிகொண்டார். இவரது அன்னையார் அடிமைப் பெண் ணாவார். துவக்கத்தில் பனீஉமையாக்கள் அடிமைப் பெண்களின் புதல்வர்களை கிலாபத்திற்குத் தகுதியற்றவர் களாய்க் கொண்டிருந்தார்கள். இன்றேல், இவர் கலீபாவா யிருப்பார்.

(9) மர்வான் பின் முஹம்மத். பனீஉமையாக்களின் இறுதி கலீபா. இவரே ஆர்மீனியாவின் எல்லைப்புறம், கஜர் கடற்கரைப் பிரதேசம் இவைகளைக் கைப்பற்றினார்.

(10) அப்துல்லாஹ் பத்தால். இவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ரூமீகள் நடுங்கி வந்தார்கள். இவரது

யமத்தைக் கொண்டு வரையப்பெற்ற கற்பிதக்காதை ' அமீர் ஹம்ஜா ஜங்க் ' போன்ற ' துல்ஹமா ' என்னும் பெயரால் வழங்கி வருகின்றது.

(11) அப்பாஸ் பின் வலீத். இவர் முஸ்லிமா பின் அப்துல்மலிக்குக்குத் தோழராயும், அவருக்குச் சமதையான வராயுமிருந்தார். அநேக தடவைகளில் இவர் ரூமிகளை வென்றிருக்கிறார்.

(12) உக்பா பின் நாபிஃ. இவர் மூராகிஷை வெற்றி கொண்டவர். கைர்வானின் சேனாதிபதி. இவர் கருங்கட லில் தமது குதிரையைச் செலுத்தியவர். காட்டுமிராண்டி களுடன் இவரது யுத்தங்கள் பிரசித்தி பெற்றவை. அங்கேயே ஆவிதுறந்தார்.

(13) மூஸா பின் நஸீர். உந்துலுஸை வெற்றி கொண்டவர்.

(14) தாரிக் பின் ஜியாத். மூஸா பின் நஸீரின் அடிமை. இவர் ஆலக்கத்தில் உந்துலுஸுக்குச் சென்று 12,000-பேர்கள் கொண்டதொரு சேனையுடன் ராட்ரிக் உடைய 1,00,000-பேர்கள் கொண்ட சேனையைத் தோற் கடித்தார். இவர்களைத் தவிர இன்னும் பலபோர்வீரர்கள் ஏற்பட்டனர். எனினும், இத்தகைய தனிச்சிறப்புப் பெற வில்லை. பொதுவாக எல்லா மாகாணங்களிலும், சிறப்பாக ஆப்பிரிகா தேசத்திலும் சேனையின் தொகை பெருக்கப்பட் டது. இராக்கும், ஷாமும் அவைகளின் தலை நகரங்களா யிருந்தன. தரைப்படையைத் தவிர கடற்படையும் வன்மை பொருந்தியதாகவே யிருந்தது. 1,700-யுத்தக் கப்பல்கள் யுத்த தளவாடங்களுடன் அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் தயாரிக்கப்பெற்றிருந்தன. அவர்களுக்குப் பிறகு

இன்னும் பெருக்கப்பட்டுக் கொண்டே வந்தன. அப்துல்லாஹ் பின் கைஸ் ஹாரிதீ, ஜுனதா பின் அபீஉமையா இவர்கள் கடற் சண்டைகளின் மிகப் பிரசித்தி பெற்றிருந்தார்கள். ரூமீகளை அநேக தடவைகளில் கடலில் வென்றார்கள். கப்ரஸ், ரூதஸ், கிரேட் இத்தீவுகளைக் கைப்பற்றினார்கள். குஸ்துன்துனிய்யாவின மீது அநேக தடவைகளில் படையெடுத்தார்கள். ஆப்பிரிகாவின் கடற்கரையைக் காப்பதற்காக ஒரு கடற்படை நியமிக்கப்பட்டிருந்தது. பனீஉமையாக்களின் காலத்தில் தேச அரசியலும், தரை, கடல் இவ்விரு சேனைகளின் ஒழுங்குமுறையும் அரபிகளின் கைவசத்திலேயே யிருந்தன.

பனீஉமையாக்களின் அதிபர்கள்

பனீஉமையாக்களின் அதிபர்கள் பொதுவாக முஸ்லிம்கள், முஸ்லிம்களல்லாதார்கள் இவர்கள்மீது கிருபையுடனும், தயாளமாயும் ஒழுகிவந்தார்கள். முஹம்மத் பின் காஸிம் தமக்கு வசப்பட்ட ஸிந்து தேசத்தின் ஹிந்து மன்னர்களுக்குத் தமது ஆசனத்தில் தமக்குச் சமமான ஆசனமளித்து, அவர்களுக்குக் கண்ணியமளித்து வந்தார். இதனால் அவர்கள் இவருக்கு உடன்பட்டார்கள். இவர் முல்தான்மீது படையெடுக்கும்போது தாஹர் அரசனது சிறிய தகப்பனாரின் குமாரனே இவர் சேனையின் தளகர்த்தனாகவிருந்தான். குராஸானின் அதிபரான கதீபாவின் நல்லொழுக்கத்தின் காரணமாக ஸகதீ, தௌரானீ தலைவர்கள் அவரது சேனையிற் கலந்துகொண்டார்கள். நேஜக் என்னும் தலைவன் முஸ்லிம்களுக்கு மிகவும் உதவியளித்துவந்ததை நாம் ஏற்கனவே விவரித்து வந்துள்ளோம். உட்சண்டையின் காரணமாக வகீஃ கதீபாவைக் கொன்றுவிட்டபோது குராஸான் தேசத்திய ஒருதலைவன்

"முஸ்லிம்களா! நீங்கள் உங்கள் தலைவர்களை மதிப்பதில்லை. கதீபா இங்கு புரிந்துள்ள அரியகாரியாதிகளைப்போன்று ஒருவனும் செய்யக்கூடவில்லை. அவர் எங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவராயிருந்தால் அவரிறந்த பிறகு அவரது சவத்தை நாங்கள் ஒரு இரதத்தில்வைத்து, எந்தச்சண்டைக்குச் செல்லும் போதும் மங்கள அறிகுறியாக அதை முன்கொண்டு செல்வோம்"

என்றான். ஜர்ராஹ் ஹகமீயென்னும் 'கஜர்' பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தவர் பிலிஞ்சரை வெற்றிகொண்ட போது ஓடிவிட்ட அவ்விடத்து அரசனின் குடும்பத்தவரை கண்ணியத்துடன் அவனிடம் அனுப்பினார். இக்கருணையைக் கண்டு அவனே நேரிற் பிரசன்னமாயினன். ஜர்ராஹ் அவனுக்கு அவனது தேசத்தையும், நகரத்தையும் திருப்பிக் கொடுத்து "எதிரிகள் இப்புறம் வருவதற்கு ஏற்பாடு செய்தால் நமக்குத் தெரிவிக்கவேண்டும்" என்ற நிபந்தனையை மட்டும் விதித்தார். மூஸாபின் நஸீர் என்பாரின் நல்லொழுக்கம் ஆப்பிரிக்காவின் காட்டுமிராண்டிகளைத் தமக்கு வழிபடும்படிச் செய்ததன்னியில் தமது மார்க்கத்தைத் தழுவிய சகோதரர்களாகவும் மாறும்படிச் செய்தது. அவர்களின் உதவியைக்கொண்டே இவர் கடலைக் கடந்து சென்றும் வெற்றிகொண்டார்.

தேசங்களின் ஒழுங்குமுறை

கலீபாக்கள் தேசவொழுங்குமுறைக்கான சகல அதிகாரங்களுமுடைய தமது பிரதிநிதிகளாக அதிபர்களை நியமித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வதிபர்கள் தத்தம மாகாணங்களின் சர்வாதிகாரிகளா யிருந்துகொண்டு, தமக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளைத் தாமே நியமித்து வந்தார்கள். பனீ உமையாக்களின் காலத்தில் இஸ்லாமிய நாடுகள் யாவும் ஆறு அரசாங்கங்களாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன:

(1) மக்கா, மதீனா, தாயிப் முதலியவைகள் சேர்ந்த ஹிஜாஸ் சர்க்கார். யமன் சிலகாலம் ஹிஜாஸுடன் இணைக்கப்பட்டிருந்தது; சிலகாலம் தனிப்பட்ட அதிபருக்குக் கீழ்ப்பட்ட சர்க்காராக விருந்தது.

(2) கூபாவிலிருந்து கீழ்க்கேதசங்கள் முழுமையும் சேர்ந்த இராக் சர்க்கார். குராஸானும் இதே அரசாங்கத்தைச் சேர்ந்திருந்தது. சிலசமயங்களில் இதன் அதிபர் கலீபாவாலேயே நியமித்தனுப்பப் படுவதுண்டு. 'யமாமா' பிரதேசம் சிலசமயங்களில் ஹிஜாஸுடனும், சிலசமயங்களில் இராக்குடனும் இணைக்கப்பட்டுவந்தது.

(3) ஜஸீரா—ஆர்மீனியா சர்க்கார். இஃது மூஸில் தொடுத்து ஆர்மீனியா, ஆதர்பீஜான் வரைக்குமுள்ள பிரதேசங்கள் சேர்ந்தது.

(4) அர்தன், ஹிம்மஸ், திமஷ்க், கன்னஸ்ரீன் இந்நான்கு பிரதேசங்களும் சேர்ந்த ஷாம் சர்க்கார்.

(5) மிஸ்ர் சர்க்கார். இவ்வரசாங்கத்துடன் வட ஆப்பிரிக்காவும் சேர்ந்திருந்தது. இங்கு சில சமயங்களில் இரண்டு அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒருவர் மிஸ்ருக்கும், மற்றவர் கைர்வானுக்குமாம்.

(6) உந்துலூஸ் சர்க்கார். சில சமயங்களில் இங்கு தனிப்பட்ட அதிபர் நியமிக்கப்படுவார். சில சமயங்களில் கைர்வானின் அதிபருக்கடிபணிந்தவராகச் செய்யப்படுவார். அவர் தமது புறத்தால் அதிபரை நியமித்தனுப்புவார்.

ஒவ்வொரு சர்க்காரின் அதிபரும் உள்நாட்டு விஷயங்களில் தாமே சர்வாதிகாரியாவார். வெளிநாட்டு விஷயங்களில்மட்டும் கலீபாவின் அனுமதியைப் பெறக் கடமைப்பட்

டிருப்பார். பனீ உமையாக்களின் இந்த அதிபர்கள் யாவரினும் இராக்கின் தலைவனும், கீழ்த் தேசங்களின் மந்திரியுமான ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் என்பானே கலீபாக்களின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான சர்வாதிகாரியாக விருந்தான்.

அரசாங்கமன்றம்

அரசாங்க பதிவுகள் (Records) மூன்று பிரிவுகளாயிருந்தன:—

(1) சேனைகளின் பதிவு. இதை ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் காலத்திலிருந்து அவர்களின் கட்டளைப்படியே ஹஸ்ரத் அகீல் பின் அபீ தாலிப், மக்ரமா பின் நௌபல், ஜுபைர் பின் முத்இம் (ரலி ....) இவர்கள் தயாரித்து வந்ததால் இது துவக்கத்திலிருந்தே அரபி பாஷையி லிருந்து வந்தது.

(2) ஆக்கினைகள். இப்பதிவாலயத்திலிருந்து அதிபர் களுக்குக் கட்டளைகள் பிறபிக்கப்பட்டு வந்தன. இது அரபியைத்தவிர வேறுபாஷையில் ஏற்படுவதற்கு வழி யில்லை.

(3) கிஸ்தி. இப்பதிவாலயத்தில் அரசாங்க பொக்கிஷக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. ஈரான் தேசத்தின் பொக் கிஷக்கணக்கு பாரஸீகத்திலும், ஷாம்தேசத்துடையது 'ஸுர்யானீ' பாஷையிலும், மிஸ்ருடையது 'கிப்தி' பாஷையிலும் வரையப்பட்டு வந்தன. துவக்கத்தில் முஸ் லிம்கள் இப்பாஷைகளை யறிந்திருக்கவில்லை யாதலின் இவை களை யந்தந்த பாஷையிலேயே வைத்து, அந்தந்த தேசங் களின் அதிபர்களை அதற்கு நியமித்து வந்தார்கள். இராக் கின் அதிபதியான ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் உடைய காலத் தில் 'ஸீஸ்தான்' யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்ட அப்துர் ரஹ்மான் உடைய புத்திரனை "ஸாலிஹ்" என்பார்

இவ்வேலைக்கு நியமிக்கப்பட்டார். அவர் அரபி, பாரஸீகம் இவ்விரண்டையும் கற்றிருந்ததால் அக்கணக்கை பாரஸீகத்திலிருந்து அரபியில் மொழிபெயர்க்கும்படி ஹஜ்ஜாஜ் கட்டளையிட்ட பிரகாரம் அவர் செய்து வந்தார். இதையறிந்த அரபிகளல்லாத தலைவர்கள் 1,00,000-திர்ஹங்களை அவருக்குக் கொடுத்து "உமக்கு அதிபர் இதைவிட அதிகமாகக் கொடுக்கப்போவது கிடையாது. இதைப் பெற்றுக்கொண்டு "அரபியில் மொழிபெயர்க்க முடியாது" எனக் கூறிவிடும்" எனக் கேட்டுக்கொண்டதை அவர் மறுத்துவிட்டார். அக்காலத்திலிருந்தே ஈரானின் பதிவுகள் அரபி பாஷையில் வந்து விட்டன. அப்துல்ஹமீத் பின் யஹ்யா என்னும் மந்திரி "ஸாலிஹூக்கு அல்லாஹ் நற்கூலி தருவானாக! அவர் இஸ்லாமிய அரசாங்கத்திற்குப் பெரியதொரு நன்மை செய்தார்" எனக் கூறுவதுண்டு.

ஷாம் தேசத்தில் வலீதின் காலத்தில் அவ்விடத்து இலிபியான ஸுலைமான் பின் ஸஃத் அவ்விடத்துக் கணக்குகளை அரபியில் மொழி பெயர்த்தார். இதை வாசித்துப்பார்த்த பதிவதிகாரி(Secretary)யான ஸர்ஜூன் இம்மொழிபெயர்ப்பு மிகவும் சரியானதாயிருப்பது கண்டு அங்கு வேலைப்பார்த்துக்கொண்டிருந்த ரூமீகளிடம் "இன்று தொடுத்து கணக்கு உங்களிடமிருந்து மாறிவிட்டது. நீங்கள் வேறு வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள்" எனக்கூறினான். மிஸ்ரிலிருந்த அதிபர் அப்துல்லாஹ் பின் அப்துல்மலிக் என்பார் வலீதின் காலத்தில் ஹி. 33-ம் ஆண்டில் இப்னுயர்பூஃ பஜ்ஜாரீ யென்னும் ஹிம்மஸ் வாசியின் மூலமாய் கிப்தி பாஷையிலுள்ள கணக்குகளை அரபியில் மொழிபெயர்த்தார். இவ்விதமாக இஸ்லாமிய கணக்குகள் யாவும் அரபி பாஷையில் வந்துவிட்டன.

நீதிமன்றம்

பனீ உமையாக்களின் காலத்திலும் இம்மன்றம் குலபாயெராஷிதீன்களின் காலத்திலிருந்த எளிய நிலைமையிலேயேயிருந்தது. நீதிபதிகளை நியமிப்பது அநேகமாக அதிபர்களின் அதிகாரத்திலிருந்தது. சில சமயங்களில் கலீபாக்களே இவர்களை நியமித்தனுப்புவார்கள். கிலாபத்தின் தலைநகரத்திலிருக்கும் நீதிபதி எப்பொழுதும் கலீபாவால் நியமிக்கப்படுவார். எனினும், ஏனைய நீதிபதிக்கும், இவருக்குமிடையே எத்தகைய வித்தியாசமும் கிடையாது. மார்க்கக் கட்டளைகள் அக்காலத்தில் கிரந்தங்களில் ஒருங்கு சேர்க்கப்படாமலும், அரசாங்கத்தின் மூலமாக சட்ட புத்தகங்கள் தயாரிக்கப்படாமலும் இருந்தமையால் இந்நீதிபதிகள் தமது ஆற்றலாலும், அந்நகரங்களிலுள்ள மார்க்க நிபுணரின் ஆலோசனைப்படியும் தீர்ப்பளித்து வந்தார்கள். இவர்களின் வருஷ சம்பளம் 120-தீனர் தொடுத்து, 200-தீனர் வரை இருந்தது. தரும சொத்துக்கள், அனாதைகளின் சொத்துக்கள் இவைகளைப் பாதுகாப்பதும் இவர்களின் கடமையாகவே யிருந்தது. கைகளைத் துணித்துவிடல், பழிக்குப் பழி வாங்கல் போன்ற மார்க்கத்தண்டனைகளை அமுலுக்குக் கொணர்தல் கலீபாக்கள், அதிபர்கள் இவர்களின் அதிகாரத்திலிருந்தது.

இஸ்லாமிய பிரசாரம்

'கிலாபத்தெராஷிதா'வின் காலத்தில் ஈரான், ஷாம், மிஸ்ர் இவைகளிலுள்ள வர்க்கங்களில் பொதுவாக இஸ்லாம் பரவியிருந்தது. பனீஉமையாக்களின் காலத்தில் இஸ்லாமிய ஆக்ஷிக்குட்பட்ட நாடுகளிலும் இதேநிலைமை ஏற்பட்டது. குராஸான், மாவராவுன்னஹர், கஜ்வீன் கடற்கரை இவை

களிலும், மேற்கேசத்தில் தராபுல்ஸ், தூனிஸ், முராகிஷ் இவைகளிலுமுள்ளவர்கள் அதிகமாய் இஸ்லாமை யங்கீகரித் தார்கள். குறிப்பாக உமர்பின் அப்துல்அஜீஜ் (றழி) அவர்களின் காலத்தில் 'ஸகதீ' தலைவர்களும், ஸிந்துதேசத் திய ராஜாக்களும் இம்மதத்தைத் தழுவினார்கள். இதனால் பொதுநிதியில் ஆள்வரி (Poll-tax) வருமானம் குறைந்து போயினதும் அங்கிருந்து குராஸானின் தலைவருக்கு "ஜிஸ்யா (ஆள்வரி) கொடாமலிருப்பதற்காகவே ஜனங்கள் இஸ்லாமைத் தழுவுகிறார்கள். எனவே கத்னா செய்து கொண்டும், குர்ஆனை வாசித்துக்கொண்டும், மார்க்கக் கட்டளைகளை எடுத்து நடந்துகொண்டு மிருப்பவர்களின் ஜிஸ்யாவைமட்டும் விட்டுவிடுங்கள். ஏனையோரிடமிருந்து வசூல் செய்யுங்கள்" என்று கட்டளையுமிடப்பெற்றது. இந்த இஸ்லாமின் விதிகளுக்குப் புறம்பானதால் அங்கு இஸ்லாமிய பிரசாரம் புரிந்துவந்த அபூஸைதா அவர்களே இதை முதன்முதலாக மறுத்தார்கள். இச்சண்டை அதி கப்பட்டது. இறுதியாக குராஸானின் அதிபதியான நஸர் பின்னையார் புதிய முஸ்லிம்களின் தீர்வையைக் குறைக் கும்படியே கோரிட்டது. பிறகு பர்கானீ, அப்ஜீனீ, துராணீ, வர்க்கங்கள் அதிகமாக இஸ்லாமைத் தழுவின. மேல்நாடுகளிலுள்ள காட்டுபிராண்டிகள் அதிகமாக இஸ்லா மைத் தழுவினார்கள். எனினும் அடிக்கடி மதம்மாறி வந்தார்கள். இறுதியாக முஸாபின் நஸீர் உடைய காலத் தில் 12-ந் தடவையாக இஸ்லாமை யங்கீகரித்தார்கள். இதுவே இறுதியாக அவர்கள் இஸ்லாமை யங்கீகரித்ததாம். இதற்குப்பிறகு அவர்கள் மதம் மாறிவிடவில்லை. அவர் களின் உதவியைக்கொண்டு இவர் உந்துலுஸையும் கைப் பற்றினார்.

அமைதி

தேசத்தில் உட்குழப்பங்களும், வெளிச்சண்டைகளும் மலிந்திருந்தனவாயினும் அதிபர்களின் ஒழுங்குமுறையால் பொதுவான அமைதி நிலவியிருந்தது. திருட்டு, வழிப்பறிக் கொள்ளை இவைகள் நடைபெறுவது மிகக்குறைவு. பிரயாணிகள் பயமின்றி பிரயாணம் செய்துவந்தார்கள். பிரஜைகளின் நந்நிலைமையைக் கவனிக்கப்புகின் உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்களின் காலத்தில் ஜனங்கள் தருமம் வாங்குவதற்கு ஆட்களைத் தேடியலைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஜியாத், ஹஜ்ஜாஜ் போன்ற கொடுங்கோலர்களின் கொடுமைகளும் விரோதிகளிடமே காண்பிக்கப்பட்டு வந்தன. தேச ஒழுங்கு முறைகளில் அவர்களுக்கிருந்த ஆற்றலை எவரே மறுக்கவல்லவர்? ஜியாத் கூபாவில் "எவனுடைய பொருளும் திருட்டுப்போய்விடின் அதை என்னிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம்" எனப் பறையறிவித்திருந்தனர். இவரின் காலத்தில் குழப்பங்களுக்கிருப்பிடமான கூபாவிலேயே இராக்காலங்களில் ஜனங்கள் தங்கள் வீட்டுக் கதவுகளை மூடுவது கிடையாது. ஹஜ்ஜாஜின் கொடுமைகள் பிரசித்தி பெற்றது. எனினும் இப்னு அஷ்அத் உடைய குழப்பத்தால் கூபாவின் கலைமத்துவம் அவனது காத்தைவிட்டும் பறிபோய் மீண்டும் சின்னாட்களுக்குப்பிறகு அவன் அதைக் கைப்பற்றியபோது இமாம் ஷஃபீ (ரஹ்.) அவர்களிடம் "நமக்குப் பிறகு அரசியல் எவ்வாறிருந்தது?" எனக் கேட்டதற்கு அவர்கள் "உமக்குப் பிறகு அச்சமென்னும் விரிப்பின்மீது சயனித்தோம்; விழிப்பென்னும் மையையிட்டுக் கொண்டிருந்தோம்" எனப் பதிலளித்தார்கள்.

கல்வி

அமீர் முஆவியா (ரலி.) அவர்களுக்கு சரித்திரத்தில் பிரியமதிகம். அவர்கள் சம்பளத்திற்கு ஆட்களை நியமித்து அவர்களிடமிருந்து சென்றுபோன சம்பவங்களைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களின் ஆணைப்பிரகாரம் உபைதா பின் ஷர்பா வென்னும் யமன் வாசியொருவர் புராதன சம்பவங்களை யொரு புத்தகமாய்ச் சேகரித்திருந்தார். பனீ உமையாக்களின் வர்க்கத்திலுள்ள காலித் பின் யஜீதே அவ்வல் பெரிய அறிஞராயிருந்தார். அவர் யூனான் தேசத்திய (Greece)கலைகளைக் கற்று கீமியா (Alchemy), வைத்தியம் இவைகளில் கிரந்தங்களையும் இயற்றினார். அல்லாமா இப்னு ஜபீர் (ரஹ்.) அப்துல் மலிக்கின் வேண்டுகோளுக்கிணங்கி தப்ஸீரி (பாஷ்யம் = commentary)ல் முதல் கிரந்தத்தை இயற்றினார்கள். இதேகாலத்தில் மூஸா பின் உக்பா, வஹப் பின் முனப்பஹ் (ரஹ்....) போன்ற ஏனைய அறிஞர்களும் தமது கிரந்தங்களை இயற்றினார்கள். ஹஸரத் உமர் பின் அப்துல் அஜீஜ் (ரஹ்.) அவர்களின் காலத்தில் அவர்களாணைப்படி அறிஞர்கள் பெருமானாரின் அமுதமொழிகளை யொருங்கு சேர்த்தார்கள். ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் அரபிகளல்லாதார் பிழையின்றி வாசிப்பதற்காக குர்ஆனின் இஃராப் (எழுத்துகளைச் சப்திக்கும் முறையைக் காண்பிக்க மெய்யெழுத்துக்களுக்குப் (Vowels) பதிலாக அரபியில் உபயோகிக்கப்படும் அடையாளங்)களை வரைந்தார். ஹிஷாம் பின் அப்துல் மலிக் ஈரானின் சரித்திரத்தை பாரஸீகத்திலிருந்து அரபியில் மொழிபெயர்த்தார்.

போதனை

வெற்றிகள், படையெடுப்பு இவைகள் காரணமாக பனீ உமையாக்களின் கலீபாக்கள் போதனா முறையில்

அதிகமாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை. எனினும் கோடிக்கணக்கான மேதாவிகளும், அறிஞர்களும் ஒவ்வொரு மூலையிலும் இப்பணியையாற்றி வந்தார்கள். மக்காவில் அதா பின் ரிபாஹ் (ரஹ்.), மதினாவில் ஸஈத் பின் முஸையப் (ரஹ்.), ஷாமில் இமாம் மக்ஹூல் (ரஹ்.), பஸராவில் இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்.), கூபாவில் இமாம் ஷஃபீ, இப்ராஹீம் நஹ்ஈ (ரஹ்....), இவர்கள் முக்கியமாய்க் குறிப்பிடப்படக் கூடியவர்கள். இமாம் அஃலம் அபூஹனீபா (ரஹ்.) மார்க்கச்சட்டங்களைத் திரட்டிக் கொண்டிருந்தார்கள். இமாம் கலீல் பின் அஹ்மத் (ரஹ்.) அணியிலக்கணத்தையும், அபுல்அஸ்வத் (ரஹ்.) இலக்கணத்தையும் நிறுவினார்கள். சுருங்கக்கூறுமிடத்து அப்பாஸிய்யாக்களின் காலத்தில் பூத்துக்காய்த்துப் பழுத்திருந்த 'இஸ்லாமியக் கல்வி' யென்னும் தோட்டத்திற்கு பனீ உமையாக்களின் காலத்திலேயே வித்து நாட்டப்பட்டது. ஜரீர், பர்ஜதக், அக்தல் போன்ற இஸ்லாமிய நாட்களின் சிறப்புப் பெற்ற கவிகள் பனீ உமையாக்களின் சமுகத்தில் பயின்றுவந்தார்கள்.

பொதுநலம்

அமீர் முஆவியா (ரலி.) அவர்களின் காலத்தில் அவர்களின் ஆணைப்பிரகாரம் மதினாவைச்சுற்றி கிணறுகள் தோண்டப்பெற்றன. மலைக்கணவாய்களில் ஜலத்தைத் தேக்கிவைக்கப்பட்டு, அங்கிருந்து வயல்கள், தோட்டங்கள் இவைகளுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சப்பட்டது. வலீத் திமஷ்கின் ஜாமிஃ மஸ்ஜிதைக் கட்டினார். மஸ்ஜிதே அக்ஸா (பைத்துல் முகத்தஸ்), மஸ்ஜிதெ நபவீ இவைகளைப் பெரிதாக்கிப் புதிப்பித்தார். அக்காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் கட்டிடவேலை பொதுவானதாய்விட்டது. ஒவ்வொரு நகரத்திலும் அதிபர்களும், தலைவர்களும் பெரிய

பெரிய கட்டிடங்களை நிர்மாணித்தார்கள். வலீத் பாட்டைகளையும் சரிப்படுத்தி, அவைகளில் பிரயாணஞ் செய்வதிலிருந்த அச்சத்தை யகற்றினர். பிரயாணிகள் தங்கியிருக்க சத்திரங்களைக் கட்டினர்கள்; கிணறுகளைத் தோண்டினர். நகரங்களில் விருந்து மண்டபங்களையும், வைத்தியசாலைகளையும் கட்டினர். ஏழைகளுக்கு அன்ன சாலைகளைக் கட்டினர். குருடர்களுக்கு வழிகாட்டிகளையும், சப்பாணி, குஷ்டரோகி இவர்களுக்குப் பணிமக்களையும் நியமித்து, இவர்களுக்கு உபகாரச் சம்பளத்தையும் நியமித்தார். ஹிஷாம் தமது காலத்தில் மக்காவின் பாதையில் பிரயாணிகளுக்காக கிணறுகளையும், குளங்களையும் நிறுவினர். பனீஉமையாக்களின் காலத்தில் பல நகரங்களும் நிர்மாணிக்கப்பட்டன. உக்பாபின் நாபிஃ 'கைர்வான்' நகரையும், ஹஜ்ஜாஜ் 'வாஸித்' நகரையும், அஸத் பின் அப்துல்லாஹ் 'பல்க்' நகரையும், ஸுலைமான் பின் அப்துல்மலிக் 'ரமலா' நகரையும் நிறுவினர்.

நாணயம்

நாம் ஏற்கனவே கிலாபதெராஷிதாவின் காலத்தில் ஹஸ்ரத் உமர், உத்மான் (ரலி...) இவர்கள் தமதுகாலத்தில் ஈரானிய நாணயத்தின் வடிவத்தில் இஸ்லாமிய கோலத்துடன் திர்ஹம் நாணயத்தைத் தயாரித்தார்களென்பதைக் கூறிவந்துள்ளோம். அமீர் முஆவியா (ரலி.) தமது காலத்தில் திர்ஹம் உடைய இடையைக் குறைத்து, அதன் வடிவத்தையும் மாற்றினர்கள். முலாம்பூசப்பெற்ற நாணயமான தீனர் நாணயத்தின் ஒருபுறத்தில் கழுத்தில் வாளுள்ள மனித உருவம் செதுக்கப்பட்டிருந்தது. மக்காவில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களும், இராக்கில் அவர்களின் சகோதரர் முஸ்அப் (ரலி.) அவர்களும் வட்டவடிவமான

திர்ஹம் தயாரித்தார்கள். அப்துல்மலிக் ஹி. 72-ம் ஆண்டில் மிக்க சிரமத்துடன் கணக்குப்பிரகாரம் திர்ஹம், தீனார் இவைகளின் எடையை நிர்ணயித்து நாணயம் தயாரித்தார். தீனாரில் உருவமிருந்தது. இஃது மதீனாவுக்குப் போய்ச் சேர்ந்தபோது அங்கிருந்த சில ஸஹாபாக்கள் அவ்வுருவமிருப்பதை யனுமதிக்கவில்லை. எனினும் ஸஈத் பின் முஸையப் (ரஹ்.) என்னும் மதீனாவின் அறிஞர் எத்தகைய ஆக்ஷேபணையும் செய்யாமல் அதே நாணயங்களை யுபயோகித்துக்கொண் டிருந்தார்கள். இதற்குப் பிறகு இராக், வாஸித், ஜஸீரா இவைகளில் தங்கசாலைகள் நியமிக்கப்பட்டு அங்கு இஸ்லாமிய நாணயங்கள் அடிக்கப்பட்டு வந்தன.

மூன்றாம் பாகம் முற்றிற்று.

நான்காம் பாகம் விரைவில் வெளிவரும்

(இன்ஷா அல்லாஹ்.)

SINGARAM
PRESS,
TRICHINOPOLY.

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—

ஹிலால் பப்ளிஷிங் ஹௌஸ்,

பாளையங்கோட்டை,

திருநெல்வேலி.